தினமுரசு

அக்டோபர் - டிசம்பர்

1994

1.10.1994 -- 1.12.1994.


SL
1211 - IV70-TA
IV. 25. 11
19010

# தமிழரசு

1.10.1994 ரூ.3

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
9 1994
எழும்பூர், சென்னை-600 008






# இந்த இதழில்...


தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . 2

ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர் . . . . . 11

நல்ல தமிழ்ச் சொற்கள் . . . . . . . . . . 12

ஒப்பற்ற தலைவர் . . . . . . . . . . . 13

வேலூரில் நடந்த வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . . . . 14

மாமனிதர் பேரறிஞர் அண்ணா . . . . . . . 17

காந்தியடிகள் வாழ்விலே . . . . . . . . . 21

அறிவொளி காண . . . . . . . . . . . 23

சமூகநீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சாதனைகளுக்காக மாற்றுக் கட்சியினர் அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை . . . . . 24

பைந்தமிழ்க் கவிஞர் பாரதி வசித்த இல்லங்கள் . 29

தமிழ் வளர்த்த பெரியார்: பேரறிஞர் அண்ணா . 38

படமும்-செய்தியும் . . . . . . . . . . 41

மாணவர் பக்கம் . . . . . . . . . . . 42

இராமநாதபுரம்: கட்டட மையம்-சீர்மிகு பணிகள் . . . . . . . . . . . 43

கணகவர் வண்ணப் பொம்மைகள் . . . . . . 47




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது (8)

* அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது.




தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

புரட்டாசித் திங்கள்: 15

மலர்:25 இதழ்:7

1.10.1994

விலை: ரூ. 3


தமிழரசு
வெள்ளிவிழா
ஆண்டு

196103

# கடமையுணர்வும் துணிவுடைமையும்

# காவல் துறையின் இரு கண்கள்

நான்காம் அட்டை சொல்லும் செய்தி

## தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (19.9.1994)

அமிழ்தினும் இனிய அருந்தமிழையும் உயிரினும் மேலான நனி நாகரிகத்தையும், முத்தமிழ்ச் சங்கங்கள் வைத்து, முறையோடு வளர்த்த, சரித்திரச் சிறப்புப்பெற்ற முக்கூடல் திருநகர், இந்த மதுரை மாநகர். தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றைக்கும் நினைவுகூரும், அருள்மிகு மீனாட்சி எழுந்தருளி இருக்கும், இந்தக் கூடல் மாநகருக்கு, இன்று வருகை தந்து, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, பெருந்திரளாகக் கூடி இருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில், நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏற்றமிகு இந்த விழாவில், பதக்கங்களையும், விருதுகளையும் பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், எனது இதயம் கனிந்த பாராட்டுக்களையும், நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும், உரித்தாக்கிக் கொள்கிறேன்.

வீர உணர்வுடனும், தியாக மனப்பான்மையுடனும், சீரிய முறையில் கடமையாற்றுபவர்களுக்கு, ஆண்டு தோறும் வழங்கப்படுகின்ற, பெருமை வாய்ந்த இந்தப் பதக்கங்கள், ஆறு கோடி தமிழக மக்களின் பாராட்டுக்களையும், ஆசிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது என்று சொன்னால், அது மிகை ஆகாது.

நாட்டு மக்களின் உயிர், உடைமை ஆகியவற்றைப் பாதுகாக்க, அமைதியும், ஒழுங்கும் சமுதாயத்தில் நிலவ, தங்கள் உழைப்பு, ஆற்றல், நேரம் ஆகியவற்றை அர்ப்பணிக்கும் காவல் துறையினருக்கு, மக்கள், தாங்கள் தேர்ந்தெடுத்த அரசின் வாயிலாகச் செலுத்துகின்ற நன்றிக் காணிக்கை தான், இந்த விருதுகளும், பதக்கங்களும்.

கடமை உணர்வும், துணிவுடைமையும், மக்கள் நலன் காக்கும் பணியில், ஈடுபட்டு இருக்கும் காவல் துறையினருக்கு, இரண்டு கண்கள் போன்றவை. கொடுத்த பணிகளை எப்பாடு பட்டாகிலும், நியாயமான வழியில், திறமையோடு முடிக்க வேண்டும், என்று முயற்சிப்பது தான் கடமை. தனது உயிரையும் துச்சமென மதித்து, கொடியவர்களிடமிருந்து, மக்களைக் காக்கின்ற மன உறுதி தான், துணிவுடைமை.

கடமையுணர்வுடனும், துணிவுடனும் செயலாற்றி, மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும், நல்லவர்களை, வல்லவர்களை, பதக்கங்கள் கொடுத்து, கௌரவிப்பதன் மூலம், இந்த அரசு, கடமையுணர்வு மிக்க பணியாளர்களை, எந்த அளவிற்கு மதிக்கின்றது என்பதை, நாம் உலகிற்கு உணர்த்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, காவல் துறைக்கு உரித்தான, முக்கியத்துவத்தையும், மதிப்பையும், அளித்து வருகின்ற ஒரே மாநிலம், தமிழ்நாடு தான் என்பதை என்னால் உறுதியுடன் கூற முடியும்.

சுதந்திரம் அடைந்த பின்பு, எத்தனையோ அரசாங்கங்கள், இந்த மாநிலத்தில் ஆட்சி புரிந்திருந்தாலும், நாங்கள் பதவிக்கு வந்த பின்பு தான், காவல் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, காவல் துறையைச் சீரமைத்து, மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டோம்.

இன்று தமிழகக் காவல் துறையின் Image-இல் ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. காவல் துறையின் அணுகுமுறையிலும், அடிப்படை எண்ணங்களிலும், விரும்பத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. காவல் துறையினர், உற்சாகத்துடனும், பணி ஆர்வத்துடனும் செயல்பட, பல புதிய திட்டங்கள், செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும். அதே நேரத்தில், மனிதாபிமானமிக்க இயக்கமாக மாற்ற வேண்டும் ....Modernise and Humanise the Police Force.. என்பது உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள, தமிழக அரசின் தாரக மந்திரம். நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களும், நடைமுறைப்படுத்தி வரும் நலத் திட்டங்களும் மற்ற மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டிய, முன்னோடித் திட்டங்கள் என்று, நம்மைப் பிடிக்காதவர்கள் கூடப் பாராட்டுகிறார்கள். பல மொழிப் பத்திரிகைகளும், புகழ்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றன.

குறை சொல்வது மிக மிக எளிது. ஆனால், ஒரு பணியைச் செய்து காட்டுவது கடினம். எதற்கு எடுத்தாலும், காவல் துறையைக் குறை கூறி, அவர்கள் மீது பழியைப் போட்டு, தங்கள் நிர்வாகத் திறமையின்மையை, மறைக்கப் பார்க்கின்ற முயற்சிகள் தான், இதுவரை ஏராளமாக நடந்து உள்ளன. ஆனால், என்னைப் பொருத்த வரையில், குறை கூறுவதைத் தவிர்த்துவிட்டு, அந்தக் குறைகளுக்கான, அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைத் துணிவுடன் களைவது தான், எனக்குப் பிடிக்கும்.

காவல் துறை போன்ற ஒரு அமைப்பை நாம் எந்த அளவிற்கு உயர்வாகக் கருதி, மதிப்பளிக்கின்றோமோ, அந்த அளவிற்குத் தான் அந்த அமைப்பும், அதன் அங்கத்தினர்களும், எண்ணத்தால் உயர்ந்து, உன்னதமாகவும், உற்சாகமாகவும் செயல்படுவார்கள். ஒரு சாதாரணமான இயந்திரமாக இருந்தாலும் கூட, அதனை நன்முறையில் பராமரிக்க, பல்வேறு முயற்சிகளையும் நடவடிக்கைகளையும், நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு இயந்திரத்திற்கே, இத்தனைச் சிரத்தை என்றால், காவல் துறையைப் போன்ற, ஒரு மாபெரும் அமைப்பிற்கு, அரசாங்கம் எத்தகையதொரு முக்கியத்துவத்தையும், நன்மதிப்பையும், அளிக்க வேண்டும் என்று, நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இயக்கத்தில், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு, ஆபத்தான பணிகளில், அனுதினமும் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு, இந்த அரசு, மிகுதியான உற்







சாகத்தையும், ஆர்வத்தையும், தூண்டி விடவேண்டும் என்பது தான் எனது எண்ணம். இந்தப் புதிய சிந்தனைகளின் வெளிப்பாடாகத்தான், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, ஒரு புதிய அணுகுமுறையுடன், காவல் துறையை நவீனமயமாக்கவும், அதே சமயத்தில், காவல் துறையினரின் பணி ஆர்வத்தை, ஊக்குவிக்கவும், பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். காவல் துறையின் மீது படிந்துள்ள, சில அழுக்குகளை நீக்கி, இதனை ஒரு மனிதாபிமானமிக்க, மக்கள் நல இயக்கமாக, உருவாக்க வேண்டும் என்று, நான் ஏற்கெனவே உறுதி எடுத்துக் கொண்டேன்.

காவல் பணி என்பது, கடுமையான பணி. ஆபத்துக்குறைவான பணிகளில் சேர்வதற்கு, முயற்சிகள் மேற்கொண்டு, அவற்றில் சேர வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலையில் தான், காவல் துறையில் வந்து சேருவார்கள். இது தான் நாங்கள் ஆட்சிக்கு வரும் வரை, இருந்து வந்த நடைமுறை. ஆனால், இன்று, அந்த நிலையை மாற்றி உள்ளோம்.

அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்ற, இன்றைய உலகில், காவல் துறையின்றி, ஒரு சமுதாயம் அமைதியாக இயங்க முடியாது. பொது அமைதியும், சட்ட ஒழுங்கும், சரிவரக் காக்கப்படவில்லை என்றால், அந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, முட்டுக்கட்டை ஏற்பட்டு, அதன் சீரழிவிற்குக் காரணமாகிவிடும் என்று பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். எனவேதான், தமிழகக் காவல் துறைக்கு, ஒரு புதிய முகவரியைத் தேடித் தருவதற்காக, எங்கள் அரசு, பல்வேறு அதிரடி நடவடிக்கைகளையும், மேற்கொண்டு வருகின்றது.

திறமையுடனும், சிறப்புடனும், காவல்துறை கடமையாற்ற, தேவையான வாகனங்கள், உபகரணங்கள், நவீன ஆயுதங்கள், கட்டடங்கள், தளவாடங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், ஆகிய அனைத்தையும் வழங்கி வருகின்றோம்.

தவறு செய்யும் காவலர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் அதே நேரத்தில், நல்ல முறையில், சேவை உணர்வு மனப்பான்மையுடன், பணியாற்றும் காவலர்களை, ஊக்குவிக்க வேண்டும் என்ற எனது கருத்திற்கு, மாற்றுக் கருத்து நிச்சயமாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். அதன் விளைவாக இன்று, தமிழகக் காவல் துறை, அனைவராலும் போற்றி, மதிக்கப்படுகின்ற ஒரு துறையாக அனைவரும் விரும்பிச் சேர்ந்து, பணியாற்றி வரும் ஒரு துறையாக விளங்குகிறது. காவல் துறையில் சேர்ந்து பணியாற்றுவதை, ஒரு கௌரவமாகக் கருதுகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலை, ஏற்பட்டிருப்பதை எண்ணி, எனது மனம் ஆனந்தம் அடைகின்றது.

நமது மாநிலத்தைப் பொருத்த வரையில், முதலமைச்சர்களே பெரும்பாலும், காவல் துறையை, நேரடியாக நிர்வகித்து வந்திருந்தாலும், இந்தத் துறை, ஒரு ஒதுக்கப்பட்ட துறையாக, கவனிப் பாரற்றுக் கிடந்தது. எங்கள் மூன்றாண்டு ஆட்சிக் கால முடிவில், காவல் துறையை இன்று, மக்கள் மதிக்கின்ற, அனைவரும் விரும்புகின்ற ஒரு துறையாக மாற்றி உள்ளோம், என்பதைச் சுட்டிக் காட்டுவதில், மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரிய அளவில், காவலர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்வது என்பது, ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் ஒரு சவாலாகவும் சில நேரங்களில், அந்த அரசாங்கத்திற்குச் சோதனையை உண்டாககுகனற ஒரு விஷயமாகவும், மாறிவிடுவது வழக்கம். இதை யாரும் மறுக்க முடியாது. காவலர்கள் தேர்வு செய்ய, விளம்பரங்களை வெளியிட்டு, தேர்வு செய்யும் நேரத்தில், தேர்வு நிறுத்தப்பட்டும் சில சமயங்களில், தேர்வு செய்யப்பட்ட• காவலர்கள், பண்ணியின் சேரவிடாமல் தடுக்கப்பட்ட சம்பவங்களும், நமது மாநிலத்திலேயே நிகழ்ந்துள்ளன.

இருப்பினும், கடந்த மூன்று ஆண்டுகளில், 10,000-க்கும் மேற்பட்ட காவலர்களை, நாங்கள் பதவிக்கு வந்த பின்பு தோற்றுவித்த, சீருடைப் பணியாளர்கள் தேர்வாணை வாரியத்தின் மூலமாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்துள்ளோம். இந்தப் பணியில், எவரும் நம்மைக் குறை கூற முடியாத வண்ணம், அனைவரது பாராட்டுக்கவளயும் பெற்று, சிறப்பான முறையில் செயலாற்றி இருக்கின்றோம். முதன் முதலில், 5000 காவலர்களை நியமனம் செய்தால் போதும், என்ற எண்ணத்துடன், எங்கள் அரசு விண்ணப்பங்களை வரவேற்றது. ஆனால், தேர்வாணைக்கு வந்து சேர்ந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை, 70,000 க்கும் மேல். அதில் அதிகமான கல்வித் தகுதியைப் பெற்றவர்கள், ஏராளமாக இருந்தார்கள். எனவே, தகுதி உடையவர்கள், நிறையப் பேர் போட்டியிட்ட காரணத்தால், 10,000 காவலர்களை நியமனம் செய்ய, ஆணை பிறப்பித்தோம். எந்த விதமான பாரபட்சமுமின்றி, தகுதியுடைய 10,000 பேரை, அதாவது அப்போது உள்ள காவலர்களின் மொத்த எண்ணிக்கையில், ஆறில் ஒரு பங்கினை, கூடுதலாக நியமனம் செய்திருக்கிறோம் என்ற சாதனையை எண்ணிப் பார்க்கும் போது என் ம்னம் மகிழ்ச்சி அடைகின்றது.

அடுத்த கட்டமாக, 500 உதவி ஆய்வாளர்கள் தேவை என்று, நாங்கள் கொடுத்த விளம்பரத்திற்கு, 22,000 பட்டதாரிகளும், முதுநிலைப் பட்டதாரிகளும், மனு செய்துள்ளார்கள்.இறுதிப் புகலிடம் தான் காவல் துறை, என்ற நிலை மாறி, இன்று காவல் துறையில் சேர்ந்து பணியாற்றுவதை, ஒரு கௌரவமாக, ஒரு மகத்தான பேறாக நினைக்கின்ற ஒரு மனப்பான்மை, இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்பதைத் தான் இது காட்டுகின்றது. அந்த வகையில், காவலர்களின் பொற்காலம் தான், தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் போது, தமிழ்நாட்டிலுள்ள 1125 காவல் நிலையங்களில், 30 காவல் நிலையங்களுக்கு மட்டும் தான், ஜீப்புகள் வழங்கப்பட்டு இருந்தன. ஆனால் கடந்த மூன்றாண்டுகளில், 663 காவல் நிலையங்களுக்கு, ஜீப்புகள் வழங்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள காவல் நிலையங்களுக்கு, 1995-ஆம் ஆண்டு, மார்ச் மாத இறுதிக்குள், ஜீப்புகள் வழங்கப்பட்டு விடும். அதற்கான ஆயத்த நடவடிக்கைகள், துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப, காவல் துறையில் புதிய பிரிவுகளை, அதாவது Specialised Branches ஏற்படுத்தி, ஒரு சாதனையைப் படைத்துக் காட்டியதும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான்.

நமது நாட்டின் இறையாண்மைக்கும், அமைதிக்கும், ஊறு விளைவிக்க நினைக்கும், அந்நியச் சக்திகளின் ஊடுருவலை, அடியோடு தடுக்க கடலோரப் பாதுகாப்புப் படைCoastal Security



Force; தொன்மையும், பழமையும் மிக்க, நமது கலைப் பொக்கிஷங்களை, திருக்கோயில்களைப் பாதுகாக்க, திருக்கோயில் பாதுகாப்புப் படை Temple Protection Force; தனித் திறமை வாய்ந்த, கடினமான பணிகளை மேற்கொள்ள, சிறப்பு அதிரடிப் படை, Special Security Group, போன்ற பல்வேறு சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு, ஒரு முன்னோடியாக விளங்கி வருகின்றது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. இந்தப் பிரிவுகளின் செயல் திறனையும், செயல்பாட்டையும், மற்ற மாநிலத்தவர் வியந்து பாராட்டி இதுபோல அங்கும் அமைப்பதற்கு, அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், ஏன்- பயிற்சியையும், நமது காவல் துறையினரிடம் இருந்து, பெற்றுக் கொண்டு செல்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்க, 80 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு புதிய திட்டங்கள், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய வாகனங்கள், புதிய பணியிடங்கள், அதி நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், கணிப்பொறிகள் Computers, குற்றப் புலனாய்வுப் பிரிவில் விஞ்ஞான மயமான உத்திகள், புதிய சீருடைகள் இவற்றை எல்லாம் கொடுத்து, காவல் துறைக்கு ஒரு புதிய பொலிவினை, ஏற்படுத்தி வருகின்றோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கலைக்கப்பட்ட, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை, மீண்டும் உயிர் பெறச் செய்தோம். நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி, சுறுசுறுப்புடன் செயல்பட வைத்தோம். அதன் விளைவாக, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், இந்த கழகம், 25 கோடி ரூபாய் செலவில், 2000 வீடுகளையும், குடியிருப்புகளையும் கட்டி, காவலர்களுக்கு வழங்கியுள்ளது.

பதவி உயர்வு இன்றித் தேங்கிக் கிடந்த, 12,409 பேருக்கு, அடுத்த கட்டப் பதவி உயர்வை, இந்த மூன்று ஆண்டுக் காலக் கட்டத்தில் வழங்கி, புதிய சாதனையைப் படைத்துள்ளது உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையின் அமைந்த, இந்த அரசு.

காவலர் முதல், ஆய்வாளர் நிலை வரை, உள்ள அனைவருக்கும், நிரந்தரமாக, 50 சதவிகித மானியத்துடன், முக்கிய உணவுப் பொருட்கள்; Kit Allownce; Maintenance Allownce; Food Allowance என்று காவலர்களின் நலன் காக்கத் தேவைப்படுகின்ற எல்லா நியாயமான படிகளையும், நாங்கள் அதிகப்படுத்தி வழங்கி இருக்கின்றோம்.

காவலரின் மருத்துவ வசதிக்கு என, தனித் திட்டம் ஒன்றைத் தீட்டி, தனியார் மருத்துவ மனைகளிலும், அவர்கள் சிகிச்சை பெற, ஏற்பாடு செய்துள்ளோம். ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில், அமைந்துள்ள காவல் நிலையங்களுக்கு, Heater வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதியில் பணியாற்றும் காவலர்களுக்கு மட்டுமின்றி, ஒரு தனிப் படியை வழங்க வேண்டும் என்று, சமீபத்தில் நான் ஆணையிட்டுள்ளேன்.

எந்த ஒரு படையானாலும், தொடர்ந்து அது சிறப்புடன் பணியாற்ற, பயிற்சி அவசியம் என்பதை, எங்கள் அரசு அறிந்து வைத்துள்ளது. தற்போதுள்ள காவல் பயிற்சி நிலையங்களின், தரத்தை உயர்த்துவதற்கும், நல்ல பயிற்சியாளர்களை ஏற்பாடு செய்யவும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல், சென்னை ஆவடிக்கு அருகே, 170 ஏக்கர் நிலப்பரப்பில், Police Academy- காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று, விரைவில் உருவாக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், என் சிந்தனையில் உதித்த எண்ணங்கள் ஆகும். ஆண்டாண்டுக் காலமாக, சமுதாயத்தில் பல்வேறு கொடுமைகளை அனுபவித்து வந்த, என் அன்புக்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், தங்களுடைய பிரச்சினைகளை, மனம் விட்டு, பகிர்ந்து கொள்ள, ஒரு அமைப்பு இல்லாத காரணத்தால், பல கொடுமைகளுக்கு ஆளாகி வந்துள்ள நிலையை,



இன்று நாம் மாற்றி அமைத்துள்ளோம். பெண்கள் நலன் காக்க, சட்ட ரீதியாக அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்க, இன்று ஒரு அமைப்பை அவர்களுக்கு என்று, ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சிறப்பாகப் பணியாற்றுவதைக் கண்டு, நம்மைக் குறை கூறியவர்களே, இன்று, நம்மை வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது, உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த விஷயத்தில், நாம் இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கு மட்டும் அல்ல, உலக நாடுகளுக்கே, முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகக் காவல் துறையை, உலகமே போற்றுகின்ற காவல் துறையாக, மக்கள் நலப் பேரியக்கமாக உருவாக்கிட, நான் உறுதி பூண்டுள்ளேன். தமிழகத்தில் பொது அமைதியையும், சட்ட ஒழுங்கையும் நிலை நாட்ட, காவல் துறையினர், நல்லவர்களுக்கு நண்பனாகவும், தீயவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், விளங்கச் செய்ய வேண்டும் என்ற, எனது எதிர்பார்ப்புகளுக்கும், இலட்சியங்களுக்கும், ஈடு கொடுத்து காவல் துறையினர், கடமையுணர்வோடு, தொடர்ந்து செயலாற்றுவார்கள் என்ற நம்பிக்கை, எனக்குப் பரிபூரணமாக உண்டு. எனது நம்பிக்கை, இதுவரை வீண் போனது இல்லை. பொது மக்களுக்கு நண்பர்களாக விளங்கி, பொது அமைதியைக் காக்கும் புனிதப் பணியில், காவல் துறையினர், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில், மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழகக் காவல் துறை, தொடர்ந்து, சீரோடும் சிறப்போடும், பல புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

காவல் துறையினரோடு, தீயணைப்புத் துறையினரும், சிறைத் துறையினரும், ஊர்க்காவல் படையினரும், மக்கள் நலன் காக்கும் தங்கள் கடமையை, மென்மேலும் சிறப்புடன் ஆற்ற வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில், கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் பணியாற்றும் நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற, எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகக் காவல் துறையினரின், "ஆண்டுத் திருவிழா", என்று எண்ணும் அளவிற்கு, மிகப் பிரம்மாண்டமான அளவில், இந்தப் பதக்கம் அளிக்கும் விழாவை, ஏற்பாடு செய்துள்ள, காவல் துறை இயக்குநர் திரு, எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கும் வீர விளையாட்டுக்களைக் கண்கவர் முறையில், வடிவமைத்துக் கொடுத்த, காவல் துறை கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



உலகத்திலேயே, இதுவரை, யாரும் செய்யாத ஒரு முயற்சியாக, யாரும் சாதிக்காத ஒரு சாதனையாக, மோட்டார் சைக்கிளில் ஏறி, வீர விளையாட்டுக்களை, வியக்கத்தக்க அளவில், நிகழ்த்திக் காட்ட உள்ள பெண் காவலர்கள், தமிழகத்துப் பெண்கள், எந்த விதத்திலும் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக்காட்ட உள்ளார்கள். ஆபத்தான விளையாட்டை, அழகோடும் துணிவோடும், நடத்திக் காட்டவுள்ள அவர்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவிருக்கும் காவல் துறை அலுவலர்களுக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் அலுவலகம், தற்போது மக்கள் புழக்கம், மிக அதிகமாக உள்ள ஒரு பகுதியில், பல்வேறு இடர்ப்பாடுகளுடன், செயல்பட்டு வருகிறது. மதுரை நகர் வாழ் மக்களின் நலன் கருதி, அழகர் கோயில் சாலையில் அமைந்துள்ள, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லமாக, முன்பு பயன்பட்டு வந்த கட்டடம், காவல் துறை ஆணையாளர் அலுவலகம் செயல்படுவதற்காக வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் இந்தப் புதிய கட்டடத்தில், ஆணையர் அலுவலகம் செயல்படத் துவங்கும்.

இந்தப் பதக்கம் அளிப்பு விழாவில் கலந்துகொள்ள, இங்கே பெருமளவில் குழுமியுள்ள பொது மக்கள் அனைவருக்கும், எனது வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# வீரப்பதக்கம் வழங்கும் விழா

## உள்ளங் கொள்ளை கொண்ட வண்ணக் கலை நிகழ்ச்சிகள்

காவல்துறையில் தீரச் செயல் புரிந்தவர்களுக்கும், சிறந்த சேவை செய்தவர்களுக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மதுரையில் நடைபெற்ற எழில்மிகு விழாவில் வீரப்பதக்கங்களை வழங்கினார்.

வீரப்பதக்கம் வழங்கும் விழா , மதுரையில் உள்ள எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்தில் 19.9.1994 அன்று நடைபெற்றது. விழா மைதானம் மிகப் பிரம்மாண்டமாக அலங்காரம் செய்யப்பட்டு, அதன் கிழக்கு வாயிலும் வடக்கு வாயிலும் கோட்டை வாசல் போல் வண்ணமுடன் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், விழா நடக்கும் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கத்திற்கு வருகை தந்ததும், மைதான வாசலில் அவரைக் குதிரைப்படை வீரர்கள் எதிர்கொண்டு வரவேற்று அழைத்து வந்தார்கள். முன்னும் பின்னும் குதிரைப் படையினர் அணிவகுத்து வர, டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மைதானத்திற்குள் நுழைந்தவுடன் அங்கு கூடியிருந்த மக்கள் உற்சாகம் பொங்க "புரட்சித்தலைவி வாழ்க", "சமூக நீதிகாத்த வீராங்கனை வாழ்க" என விண்ணை முட்ட வாழ்த்துக்குரல் எழுப்பினார்கள். அரங்கில் அமைந்திருந்த 'சல்யூட்' மேடைக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வருகையளித்து அம்மேடை மீது ஏறி நின்றார். அப்போது அரங்கில் அணிவகுத்து நின்றிருந்த நீலகிரி மாவட்டக் காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, மதுரை மாநகரக் காவல்படை, மகளிர் காவலர்கள், முதலமைச்சரின் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் 'சல்யூட்' அடித்ததை ஏற்று, பதிலுக்கு டாக்டர் புரட்சித்தலைவியும் 'சல்யூட்' அடித்தார்.

தொடர்ந்து வெள்ளைநிற திறந்த ஜீப் காரில் ஏறி நின்றபடியே, போலீசாரின் அணிவகுப்பைப் பார்வையிட்ட பின், மீண்டும் 'சல்யூட்' மேடைக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வந்ததும், அரங்கில் நின்றிருந்த 5 படையினரும் அணிவகுத்து வந்து முதலமைச்சருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் ஏற்றுக்கொண்டார்.

அடுத்து இந்த ஆண்டு காவல்துறையில் வீரச் செயல் புரிந்த 6 பேருக்கும், சிறந்த சேவை புரிந்ததற்காக 59 பேருக்கும், ஊர்க்காவல் படை 5 பேருக்கும், தீயணைப்புப் படை வீரர்கள் 9 பேருக்கும், சிறைத்துறையைச் சார்ந்த 10 பேருக்குமாக- மொத்தம் 89 பேருக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதக்கங்களை வழங்கினார்.





இந்த நிகழ்ச்சி முடிந்ததும், அரங்கில் இருந்த 5 படையினரின் விழா நிறைவு அணிவகுப்பு நடந்தது. அவர்களுடன் குதிரைப்படையும், நாய்ப்படையும் அணிவகுத்து வந்தன. துப்பறியும் நாய்ப்படை இதுவரை எந்த அணிவகுப்பிலும் கலந்து கொண்டதில்லை. இந்த ஆண்டுதான் முதன்முறையாக நாய்ப்படை அணிவகுப்பில் கலந்துகொண்டது.

அடுத்து, காவலர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சாகச நிக்ழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கட்டுடல் கொண்ட காவலர் நால்வர், ரஷ்ய நாட்டு 'கொஸாக்' அழகு நடை அணிவகுப்புடன் ராட்சஸத் திறவுக்கோல் ஒன்றை ஏந்தி வந்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடம் அளிக்க அவர்கள் அதைத் தொட்டு, குதிரை வீரர்களிடத்தில் தர- கலைநிகழ்ச்சிகள் தொடங்கலாம் என்ற கட்டளையை இதன் மூலம் பெற்று அவ்வீரர்கள், திறவுகோலால் அலங்கரிக்கப்பட்ட கோவில் வாயில் வடிவைத் திறந்தவுடன் மனம் கொள்ளை கொள்ளும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அரங்கேறத் தொடங்கின.

முதல் நிகழ்ச்சி, ஒருபுறம் பார்த்தால் உடற்பயிற்சி மறுபுறம் பார்த்தால் கலைநிகழ்ச்சி; ஆம். சின்னஞ்சிறு மனிதப் புறாக்கள் கலைந்தும் இணைந்தும் நமக்குக் காட்டிய கலை வடிவங்கள் பலப்பல.

பிரமிக்கத்தக்க மனிதப் பிரமிடுகள் உருவாக்கி நமது இதயத்தை ஈர்த்துவிட்டது, இக்கலை நிகழ்ச்சி. அதிலே ஒரு வடிவம் 6 ரதங்கள் அதிலே 6 மன்னர்கள், குதிரைகள், அந்த ரதங்களை இழுத்துவர, மாண்புமிகு முதல்வர் அருகே வந்து அம்மன்னர்கள் தங்கள் வாழ்த்தையும், வரவேற்பையும் அளித்த எழில்காட்சி வெறும் மனித உடல்களே இவ்வளவு அழகு வடிவங்களை அளிக்க முடியுமா என வியப்பின் விளிம்புக்கு நம்மை விரட்டியது இந்நிகழ்ச்சி.

அடுத்து, மோட்டார் சைக்கிள் சாகசங்கள், 'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பிள்ளை காண்' எனச் சொல்லி 30 பெண்கள் மோட்டார் சைக்கிளில் ஆற்றிய சாகசங்கள். அடடா! அதைக் காணக் கண் கோடி வேண்டும். புரட்சித்தலைவியின் நெருப்புக் கணைகள் - Jaya's Flaming Arrows என்னும் இந்த வீரசாகசப் பிரிவு, இந்தியாவிலேயே ஒன்றிரண்டு இராணுவப் பிரிவுகளைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு தனிச் சிறப்புப் பிரிவாகும்.

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிகமிகக் கொடியது—மோசமானது அச்சம் என்னும் நோய் தான்.

—அன்னை சாந்தியடிகள்

உலகில் சாகசம் செய்கின்ற பெண்கள் இருக்கலாம். ஆனால் ஒரு குழுவாகச் சாகசம் செய்கின்ற நிழ்ச்சி உலகிலேயே இதுவே முதன்மையானது என அடித்துக் கூறலாம். இந்தச் சாகச நிகழ்ச்சியில் பங்கேற்ற பல பெண்கள் திருமணமானவர்கள். குழந்தைகளை ஈன்றெடுத்தவர்கள். சாதனைகள் படைக்க வயதோ, திருமண நிலையோ தடையில்லை என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. இவர்களில் பலர் இந்த ஆண்டே பழகி உரிமம் பெற்றுச் சாகசம் நிகழ்த்தினார்கள் என்றால்- பெண்ணின் பெருமையை என்னவென்று சொல்வது!

அடுத்து, நெருப்பு வளையங்களிடையே பாய்ந்து நுழைந்து துப்பறியும் நாய்கள் நடத்திக் காட்டிய சாகசச் செயல்களும், தொடர்ந்து குதிரைப்படை வீரர்கள், குதிரையிலிருந்தபடியே பாய்ந்து வந்து கூடார முனைக் கொம்புகளை அகற்றிய அழகிய சாகசங்களும் எனக் காவல்துறைக்கு உற்றுழி உதவும் உயிரினங்களின் சாகசச் செயல்கள் இடம்பெற்றன.

பின்னர், தமிழகம் முழுவதிலும் இருந்து வருகை தந்திருந்த கரகம், காவடி குழுவினரின் ஆட்டம் கண்களைக் கொள்ளை கொண்டது. 56 பெண்கள் உட்பட 400 பேர்கள் அரங்கம் முழுமையாக இடம்பிடித்து கரகம், காவடி, பொய்க்கால் குதிரையாட்டம் என ஆடி நமது இதயங்களையும் முழுமையாக வெற்றி கொண்டனர்.

தொடர்ந்து வெளிச்சப் புள்ளிகளால் வித்தை வடிவங்களை வகுத்துக்காட்டிய தீப்பந்த அணிவகுப்புக் காட்சி அரங்கம் முழுமையும் மிக மெல்லியதான வெளிச்சம் பரவிக் கிடக்க, தங்களது இரு கரங்களாலும் தீப்பந்தங்களை ஏந்தி, அதன்மூலம் மாண்புமிகு முதலமைச்சருக்கு வரவேற்பு, நீடூழி வாழ்க என வாழ்த்தி பல்வேறு வடிவங்களால் படைத்தது எல்லோரையும் பரவசப்படுத்தியது.

இறுதியாக, வானவெளியில் வண்ணங்களை இறைத்துக் கொட்டியது போல வாணவெடி வேடிக்கை நிகழ்ச்சிகளுடன் கலைநிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

அனைத்து நிகழ்ச்சிகளையும், ஆர்வத்துடன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கண்டு ரசித்தார்கள் என்பதே இந்நிகழ்ச்சிகளின் சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் அல்லவா!

- ஸாரதி



# ஆதி திராவிடர் மேம்பாடு: அரசு நிதி ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 13,172 ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு (1994–95) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மொத்தம் 36.55 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி ஆணை பிறப்பித்துள்ளார். மேலும் இந்த நிதி ஒதுக்கீட்டினை 'தாட்கோ' TADHCO நிறுவனம் மூலமாகச் சிறப்பு மைய நிதி உதவியுடன் Special Component Plan செயல்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதன் வாயிலாக, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஆதி திராவிடர்கள் 3 கோடி ரூபாய் நிதி உதவியினையும் 5,872 ஆதி திராவிடர்கள் பல்வேறு விவசாயக் கருவிகளான மின் விசைப் பம்பு. பம்ப்செட், டீசல் பம்பு செட், விவசாயக் கிணறு, உழவு மாடு, டயர் வண்டி மற்றும் இரண்டு வண்டி மாடுகள் ஆகியவற்றை, 6.05 கோடி ரூபாய் அளவிலும் பெறுவார்கள். மேலும் ஆதி திராவிட இன மக்களிடையே இருக்கும் படித்த வேலையில்லாத இளைஞர்களும், தொழில்முறைக் கல்வி கற்றவர்களும் பயன்பெறும் வகையில், சிறு தொழில்கள் முதலியவற்றை நடத்த ஏதுவாக, மொத்தம் 1,500 பேருக்கு வங்கிக் கடன் உட்பட 26.5 கோடி ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படும். இவை மட்டுமன்றி, 2,800 ஆதி திராவிட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் ஆகியோருக்குத் தொழிற்பயிற்சி (TRYSEM) ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கவும் இத்திட்டம் வழிவகை செய்யும். இந்தத் தொழிற்பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் பயிற்சி உதவித் தொகையும், பயிற்சி முடிவில் 600 ரூபாய் மதிப்புள்ள கருவிகளும் வழங்கப்படும்.

ஆதி திராவிட இன மக்களின் விரைந்த முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்கள் அனைத்தும் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## வ.உ.சிதம்பரனார்



சீர்மிகு நெல்லைப் பூமி
சிறப்பினை எய்து தற்கே
பேர்மிகத் தந்தார் நாட்டில்
பெருமையை நாளும் சேர்த்தார்
வேர்என விளங்கி நின்றார்
வேளிரின் குலத்தைச் சார்ந்தார்
ஊர்எலாம் போற்று கின்ற
உயர்சிதம் பரனார் ஆவார்!

–புலவர் தமிழ்ப்பித்தன்





# ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்

'மகாத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர்; இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக் கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர், வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னலமற்ற வழியில், பொதுநலச் சேவைக்காகச் சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

'சத்தியாக்கிரகம்'என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண்பாடல்ல, அது உண்மைக்கும் - பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் - கெட்டவைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம், என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.

# நல்ல தமிழ்ச் சொற்கள்

—கோ. முத்துப்பிள்ளை

Main Road - தலைமைச் சாலை

Margin Money - விளிம்புத் தொகை

Master Plan - முழுமைத் திட்டம்

Matriculation School - பதின்நிலைப் பள்ளி

Mechanic - எந்திரர்

Merit - தகுதிப்பாடு

Metal detector - உலோக உணர்வி

Method - வகைப்பாட்டு முறை

Mixie - கலவைக் கருவி

Mood - மனவோட்டம்

Mortality of livestock - கால்நடைகளின் இறப்புக் கணக்கு

Motel - உந்துணவகம்

Moving Space - நடவை

Mudguard - மட்காப்பு

Multiple Choice Question - பன்முகத் தெரிவு வினா

Network Programme - நிலையப் பிணைப்பு நிகழ்ச்சி

Non Committal reply - பிடி கொடுக்கா விடை

Non-recurring expenditure - தொடராச் செலவினம்

Numerology - எண் கணியம்

Nuisance - தொல்லை

Nursery School - மழலையர் பள்ளி

Office-bearers - அலுவல் பொறுப்பாளர்கள்

Officers' Colony - ஆளர் குடியிருப்பு

Omission - செய்வன செய்யாமை

Opthalmic Ward - கண்ணியல் பகுதி

Optimism - ஆர்வ மனப்பான்மை

Orphange - இலியர் இல்லம்

Outright sale - அற விலை

Paper weight - காகிதக் காப்பு

Passage - உரைப்பகுதி

Pass Book - கைச்சிட்டை

Ledger - பேரேடு.

Perfect market - நிறைசீர் அங்காடி

Pessimism - சோர்வு மனப்பான்மை

Photographer - ஒளிப்படக் கலைஞர்

Photostat Centre - ஒளி நகலகம்

Pilgrim - சமயப்பணி

Pilot - வலவன்

Plot - மனை, மனைக்கட்டு

Plus point - இனிமைக் கூறு

Podium - உரைமேசை

Port of call - கலந்தொடு துறை

Postal Index Number - அஞ்சல் குறியீட்டு எண் (அ.கு.எண்)

Preamble - முகப்புரை

Preface - முகவுரை

Preference - முன்னுரிமை

Priority - முந்துரிமை

Prefix - முன்னொட்டு

Suffix - பின்னொட்டு

Prestige - பீடுணர்வு

Probation Officer - நன்னடை நல்குநர்

Profession - செய்தொழில்

Proficiency Certificate - வல்லமைச் சான்றிதழ்





# ஒப்பற்ற தலைவர்

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பு அளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டும் அது சாத்தியம். அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிறபோது தள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேசமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

*'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.*



# “சமூக நீதி காக்கும் போராட்டத்தில் பெற்ற வெற்றியைத் தமிழக மக்களுக்கே காணிக்கையாக்கி மகிழ்கிறேன்!”

## 10.9.1994 அன்று வேலூரில் நடந்த வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழகத்து வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற, வரலாற்றுத் தொன்மையும், சிறப்பும் மிக்க, இந்த வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகை தந்து, ஒரு புதிய எழுச்சியோடும், புத்துணர்ச்சியோடும், காட்சி அளிக்கின்ற, இலட்சக்கணக்கான அன்பு நெஞ்சங்களைச் சந்திப்பதில், நான் பேருவகையும், பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எனது அன்பிற்குரிய தமிழகத்து மக்களின் வாழ்க்கை, மேம்பாடு அடையவும் தமிழகம் மேலும் பல சிறப்புக்களை எய்தவும் நான் ஆற்றி வருகின்ற மக்கள் பணிக்கு, நீங்கள் எத்தகையதொரு ஆதரவையும், ஒத்துழைப்பையும், கொடுத்து வருகின்றீர்கள் என்பதை, நான் செல்லுகின்ற எல்லா மாவட்டங்களிலும், கண்கூடாகக் கண்டு வருகிறேன். நான் செல்லும் இடமெல்லாம், தமிழகத்து மக்கள், என் மீது காட்டி வருகின்ற அன்பையும், பாசத்தையும் கண்டு, நான் உண்மையிலேயே நெகிழ்ந்து போகின்றேன். இந்த மாபெரும் மக்கள் சக்தி, எனக்கு உறுதுணையாக, பக்க பலமாக இருப்பதால் தான், எத்தனை இடர்ப்பாடுகள், இன்னல்கள் வந்தாலும், அவற்றையெல்லாம் எதிர்கொண்டு, வெற்றி பெறுகின்ற ஒரு புதிய ஆற்றலை, நான் நாளும் பெற்று வருகின்றேன்.

தமிழகத்து மக்கள் எந்த எதிர்பார்ப்புகளுடன், 1991 ஆம் ஆண்டு, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்களோ, அந்த எதிர்பார்ப்புகளை, அவர்களின் கனவுகளை, நனவாக்கிக் கொண்டு வருவதையே, எனது முழு மூச்சாகக் கொண்டு, செயல்பட்டு வருகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர், எத்தகைய ஜாதி, சமய பேதமற்ற, சமதர்ம சமத்துவச் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்று, தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்களோ, அந்த இலட்சியங்களை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உங்கள் அரசு செயல்படுத்தி வருகிறது. ஜனநாயகம் என்பது, ஏதோ ஒரு அரசியலமைப்புத் திட்டம், என்று மட்டும் கருதாமல் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், ஒருவர் மீது மற்றொருவர், அன்பு செலுத்தி வாழ்கின்ற, ஒரு சமுதாய வாழ்வு, என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான், ஆட்சி செய்து வருகின்றோம். அந்த எண்ணத்தின் வெளிப்பாடாகத் தான், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், இதுவரை பெற்று வந்த, இட ஒதுக்கீட்டு உரிமைக்குக் குந்தகம் ஏற்பட்டபோது, மக்களின் பேராதரவுடன், இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டேன்.

சமூக நீதி காக்கின்ற இந்தப் போராட்டத்தில், எனக்கு இரண்டு சக்திகள் துணையாக இருந்தன. ஒன்று, திராவிடத் தலைவர்களின் இலட்சியங்கள், மற்றும் அவர்களின் ஆசிகள். இரண்டு, என் உயிரினும் மேலான, எனது அன்பிற்குரிய தமிழக மக்களின், பேராதரவும் பேரன்பும் தான். இந்த இரண்டு சக்திகளும், இணைந்திருந்ததால், தான், இந்த மாபெரும் இமாலய வெற்றியை, நாம் பெற முடிந்தது. எனவே தான், அந்த வெற்றியைத் தமிழக மக்களுக்கே காணிக்கையாக்கி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும் போது, சங்க காலத்திலே, ஜவ்வாது மலைப் பகுதிகளில், மன்னன் நன்னன் என்பவர், நல்லாட்சி புரிந்து வந்ததை, அறிய முடிகிறது. 13 ஆம் நூற்றாண்டு முதல், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியம், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், வியாபித்து இருந்த காலம் வரை, வேலூர் பகுதி, ஒரு நிரந்தர குருஷேத்திரமாக, போர்க்களமாக அமைந்து இருந்ததை, வரலாறு இன்றும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. களங்கள் பல கண்ட இடம் தான், இன்று நாம் விழா நடத்திக் கொண்டிருக்கின்ற, இந்த வேலூர்க் கோட்டை.



20-க்கும் மேற்பட்ட கோட்டைகள் இந்த மாவட்டத்தில் இருந்தாலும், அந்தக் கோட்டைகளுக்கு எல்லாம் சிறந்தவையாக, வற்றாத அகழியுடன், தமிழகத்திலேயே தலைசிறந்த தலைக் கோட்டையாக, இன்று வேலூர்க் கோட்டை விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்திய விடுதலைப் போரில், 1857 இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம், முதல் சுதந்திரப் போர் என்று, சரித்திர ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்டாலும் 1806 ஆம் ஆண்டிலேயே, இதே கோட்டை வளாகத்தில் நடைபெற்ற, சிப்பாய்க் கலகம் தான், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக எழுப்பப்பட்ட, முதல் உரிமைக் குரல்; இந்தியரின் முதல் போர்க் கொடி.

இத்திய இராணுவ வீரர்கள், தங்கள் வழக்கப்படி, நெற்றியில் நீறும் குங்குமமும் இட்டு, காதணி அணிவதை, ஆங்கிலேயர்கள் தடுத்து ஆணையிட்டார்கள். முதல் முறையாகக் கொதித்து எழுந்து- இந்தியர்கள் பொறுமைசாலிகள் தான், ஆனால் பொம்மைகள் அல்ல; கொதித்து எழுந்தால், யாராலும் அடக்க முடியாத எரிமலை என்பதை, 1806 இல் நடைபெற்ற, சிப்பாய்க் கலகத்தின் மூலம், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எடுத்துக்காட்டியவர்கள், இந்தப் பகுதி வாழ் மக்கள்.

எத்தனை எத்தனைப் போராட்டங்கள், ஆதிக்கப் போர்கள் போர்க் களங்கள் ஆகியவற்றைக் கண்ட பூமி இது, என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமக்குள் ஒரு வீர உணர்வு, தன்னிச்சையாக உண்டாகின்றது. அந்த வீரம், இந்த மாவட்டத்தில் இன்றும் குறையவில்லை என்பதற்கு, இந்த மாவட்டத்தில் இருந்து, இராணுவத்தில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, மற்ற மாவட்டங்களை விட, அதிகமாக இருப்பதே, சாட்சியாகும். பணி ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள், அதிகம் வாழ்கின்ற ஒரே மாவட்டம், தமிழ்நாட்டில் இந்த மாவட்டம் தான் என்பதையும், பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பாரதத்தின் எல்லைகளைக் காக்கின்ற புனிதப் பணியில், தங்கள் இன்னுயிரை ஈந்த, தியாக சீலர்களின் தியாகங்களை எண்ணி, நமது மனம் அவர்களுக்குத் தலை வணங்குகிறது.

ஜாதி, சமயம், மொழி இவற்றையெல்லாம் கடந்து, ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டிய, திப்பு சுல்தானும், ஹைதர் அலியும் வீரச் செயல்கள் புரிந்த பகுதி இது. பல நூற்றாண்டுகளாக இந்துக்களும், முஸ்லீம்களும் ஒற்றுமை உணர்வினால் வாழ்ந்து, இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வரும் பெருமையையும் படைத்தது இந்தப் பூமி. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியங்களைச் செயல்படுத்தி வரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உங்கள் அரசு; முகம்மதிய பெருமக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அனைத்துத் தரப்பு மக்களும், சகோதர மனப்பான்மையுடன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே, எங்கள் அரசின் குறிக்கோள் ஆகும்.

தமிழகத்தின் ஆன்மீக வளர்ச்சியிலும், தனக்குரிய பங்கை, இந்த மாவட்டம் ஆற்றியிருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியவர்கள், அப்பய்ய தீட்சிதரும், அருணகிரிநாதரும், நாம் வாழ்கின்ற காலத்திலே நம்மோடு வாழ்ந்து, இறைத் தொண்டாற்றி மறைந்த திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்த காங்கேயநல்லூர் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. தமிழ்த்தாய்க்கு, தனது இலக்கியங்களால் ஆராதனை செய்த, மு. வரதராசனார் அவர்களும், இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டுவதில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறு புராதனச் சிறப்புகள் பெற்ற திருக்கோயில்களையும் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொலைநோக்கி Telescope ஐயும் அன்னியச் செலாவணியைப் பெருமளவிற்கு ஈட்டித் தருகின்ற, தோல் தொழிற்சாலைகளையும் கொண்ட மாவட்டம் இது. 'தொண்டை மண்டலம் சான்றோருடைத்து',

(தொடர்ச்சி. 33 ஆம் பக்கம் பார்க்க)





# மாமனிதர் பேரறிஞர் அண்ணா

சிலர் - பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடுவார்கள்.
சிலர் - பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக்காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ்பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல; தமிழுக்கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', - என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று; அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று. ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்புதான், பேரறிஞர் அண்ணா.

-'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செல்வமாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு
**2%**
சிறப்பு ஊக்கத்தொகை.




தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சபா மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

## அஞ்சல்வழிப் பாடம்

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் தொடர்பு நிலையத்திலிருந்து ஆகஸ்டு '94 முதல் அக்டோபர் '94 வரை கீழ்க் கண்ட அஞ்சல்வழிப் பாடங்கள் நடத்தப்பட உள்ளன.

*பழக்கன்றுகள் உற்பத்தி முறைகள்:*

இப்பாடத்தில் பழ மரங்கள் பயிர் செய்வதற்குண்டான தரமான செடிகளை விதைமூலமாகவும் ஒட்டுக் கட்டுதல், பதியம் போடுதல், மொட்டுக்கட்டுதல் மற்றும் குச்சிகள் மூலமாகச் செடிகள் தயாரிப்பதும் எவ்வாறு என விவசாயிகள் மட்டும் அல்லாமல் படித்த இளைஞர்களும் விரிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. மேலும் தங்களுக்குத் தேவையான பழமரக்கன்றுகளைத் தாங்களே தயார் செய்து கொள்வதோடு மட்டுமல்லாமல், கன்றுகள் உற்பத்தி செய்த சுயவேலைவாய்ப்பை அதிகரித்துக்கொள்ள வாய்ப்புள்ளது. ஆகவே, விவசாயிகள் இப்பாடத்தில் சேர்ந்த நல்ல பயன் பெறலாம்.

*பண்ணைக்கழிவு உரம் தயாரித்தல் ஆகஸ்டு அக்டோபர் '94:*

இப்பாடத்தின் மூலம், எந்தப் பயனும் இல்லாமல் வீணாக்கப்படும் பண்ணைக்கழிவுகளை எவ்வாறு ஒரு சிறந்த பயனுள்ள இயற்கை உரமாக மாற்றலாம் என்பதை அனைத்து விவசாயிகளும், படித்து வேலையற்ற இளைஞர்களும் தெரிந்து கொள்ளலாம். தென்னை நார் பிரித்து எடுக்கும் ஆலைகளில் இருந்து கிடைக்கும் தென்னை நார்க் கழிவை வியாபார ரீதியில் ஒரு சிறந்த இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். வீணாக, தீ வைத்து எரிக்கப்படும் கரும்புத் தோகையையும் ஒரு பயனுள்ள இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். மண்புழுவைக் கொண்டு குப்பைக்கூளங்களையும், பண்ணைக்கழிவுகளையும் ஒரு சிறந்த இயற்கை உரமாகத் தயாரிக்கலாம். பச்சைத் தாவர இலைகளையும் ஒரு சிறந்த உரமாகத் தயாரிக்கலாம். தொழு உரத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றலாம்.

எனவே விவசாயிகளும், வேலையற்ற இளைஞர்களும் இப்பாடத்தில் சேர்ந்து பயன் பெறலாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட இயற்கை உரங்களை நிலத்தில் இட்டு மண்ணின் வளத்தையும் அதிகரிக்கலாம்.

# சோயா மொச்சை கோ. 1 இரகம்

***தரமான விதைகளைப் பெற, சில வழி முறைகள்***

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை நுட்பவியல் துறையில் சோயா மொச்சைப் பயிரில் விதை உற்பத்தித் தொழில் நுட்பத்திற்கான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்கண்ட முடிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

* கோவை மாவட்டத்தில் பெங்களூர் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்கள் தரமான சோயா விதைகளை உற்பத்தி செய்ய ஏற்றவை.

* ஒரு காயில் உள்ள விதைகளை ஆராய்ந்ததில் இரண்டு விதைகளைக் கொண்ட காயில் கணுவிற்கு அருகில் உள்ள விதையும், மூன்று விதைகளைக் கொண்ட காயில் நடுவில் உள்ள விதையும் தரமானதாக உள்ளன.

* கோயம்புத்தூர் சோயா விதைகள் அதிக நாட்கள் சேமித்து வைக்க ஏற்றது.

* குறைந்த அளவு நீர்ப்பாசனத்துடன் (0.04 டபிள்யுசி.பி.யி. விகிதம், தொழு உரத்தை உபயோகிக்கும் போதும் அதிக அளவு நீர்ப்பாசனத்துடன் 0.6 ஐ டபிள்யுசி.பியு விகிதம் தேங்காய் நார் அல்லது மக்கிய தேங்காய் நார் போன்றவைகளை உயோகிக்கும் போதும் தரமான விதைகளை உருவாக்குகின்றன.

* ஈரமேற்றிய மணல் கொண்டு நீரேற்றம் செய்யும் முறையே சிறந்தது.

### சோயா மொச்சையின் முதல் எதிரி சுருள் பூச்சி

மிகச் சிறந்த எண்ணெய்வித்தாகவும் புரதச்சத்து மிகுந்த பயிராகவும் கருதப்படும் சோயா மொச்சை தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

சோயா மொச்சையைத் தாக்கும் பூச்சிகளுள் இலைகளைத் தாக்கும் சுருள் பூச்சி முக்கியமானது. இது நிலக்கடலையிலும் பெருத்த சேதத்தை விளைவிக்கின்றது. இதன் தாய் அந்துப்பூச்சி சாம்பல் நிறத்துடன் முன்னிறக் கையில் ஓர் வெண்ணிறப் புள்ளியுடன் இருக்கும். தாய் அந்துப்பூச்சி இளந்தளிர்களின் மீது அழகிய வேலைப் பாடுடன் கூடிய பளபளப்பான முட்டைகளைத் தனித் தனியே இடுகின்றது. முட்டையிலிருந்து வெளிவரும் சாம்பல் நிறப்புழுக்கள் இரண்டு மூன்று இலைகளை ஒன்றாகப் பிணைத்தோ, அல்லது ஒரே இலையை நீளவாக்கில் மடித்தோ சேதம் விளைவிக்கின்றன. புழுக்கள் இலைத் திசுக்களிடையே ஊடுருவிச் சென்று உள்ளிருந்து கொண்டு பச்சையத்தைச் சுரண்டித்தின்னும். சுருள் பூச்சியின் தாக்குதலால் இலைகள் காய்ந்துவிடும். அதிகமாகத் தாக்கப்பட்ட பயிர் தீயினால் எரிக்கப்பட்டது போல் காணப்படும். முழுவளர்ச்சியடைந்த புழுக்கள் இலைச் சுருள்களுக்குள்ளேயே கூட்டுப்புழுவாக மாறுகின்றன.

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

1. இறவைப் பயிரில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. சுருள் பூச்சி தாக்கப்பட்டுள்ள பயிரில் தரை மட்டத்தில் விளக்குப்பொறிகளை வைப்பதன் மூலம் தாய் அந்துப்பூச்சிகள் கவரப்பட்டு அழிக்கப்படும். அந்துப்பூச்சிகள் எல்லாவித விளக்குப்பொறிகளினாலும் கவரப்பட்டாலும் தரைமட்டத்தில் வைக்கப்பட்டுள்ள பொறிகளில் அதிக அளவில் கவரப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இம்முறையினை விவசாயிகள் பின்பற்றலாம்.

3. தாக்கப்பட்டுள்ள பயிரில் உடனடியாக டைக்குளோரோ மருந்தினை ஏக்கருக்கு 250 மில்லி அளவில் பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இம்மருந்து தொடு, குடல் மற்றும் வாயு நஞ்சாகச் செயல்படுவதால் உடனடியாகச் சுருள்பூச்சிகள் கொல்லப்படும். பின்னர் ஒரு வாரம் கழித்து பூச்சிப்பெருக்கத்தை மேலும் குறைக்க கீழ்க்காணும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மோனோகுரோட்டோபாஸ் | 36 | சதம் | 300 | மில்லி/ ஏக்கருக்கு |
| 2. பாஸ்பாமிடான் | 85 | " | 150 | " |
| 3. பாசலோன் | 35 | " | 300 | " |
| 4. எண்டோசல்பான் | 35 | " | 300 | " |

விவசாயிகள் மேற்கூறிய முறைகளில் பயிர் பாதுகாப்புச் செய்து சுருள் பூச்சிகளினால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கலாம்

**–வேளாண் தகவல் மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோவை-3.**

## பழவேற்காடு படகுக் குழாமை முக்கிய சுற்றுலாத் தலமாக்க அரசு முடிவு

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்த சுற்றுலா அபிவிருத்தி கொள்கைக்கு ஏற்ப, பழவேற்காடு படகுக் குழாமை முக்கியச் சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வது குறித்து மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலர், சுற்றுலாத் துறை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் மற்றும் வனத்துறையின் உயர்-அதிகாரிகளுடன் 19.7.1994 அன்று அவ்விடத்தைப் பார்வையிட்டார்கள்.

பார்வையிட்ட பின்னர் அந்த மையத்தை முக்கியச் சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும், இதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்காகப் படகுக் குழாம், சிற்றுண்டி விடுதி ஆகிய அடிப்படை வசதிகளைக் கொண்ட பெருந்திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும், அந்த மையத்தில் பாதுகாப்பாகப் படகுச் சவாரி செய்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்ய வேண்டுமென்றும் வனத்துறையும், சுற்றுலாத் துறையும் சேர்ந்து உடனடியாக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் படகுச் சவாரி, படகுக் குழாம், தங்குமிடம் போன்றவற்றை, ஏற்படுத்த வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.



# காந்தியடிகள் வாழ்விலே...



## ஏழைகள் வசிக்கும் இடம்தான் எனக்கும் தேவை!

1931-ஆம் ஆண்டு செப்டம்பரில் காந்தி அடிகள் இலண்டனுக்குச் சென்றிருந்தார். அங்கு காந்திஜி தங்குவதற்காகப் பல பிரமுகர்கள் சகல வசதிகளுடன் கூடிய தங்கள் தங்கள் பங்களாக்களை அவருக்குத் தங்கும் இருப்பிடங்களாகத் தர முன் வந்தனர். ஆனால் அவர் எங்கு தங்கப் போகிறாரோ? என்பதே பலருக்கு வியப்பான கேள்விக்குறியாகவே இருந்தது. ஆனால் கிழக்கு இலண்டன் பகுதியில் ஏழைகள் வசிக்கும் இடத்தில் மிஸ். முரியல் லெஸ்ட்டர் என்பவர் சுமார் 30 ஆண்டுகளாக வசித்து வருவதோடு, சமூக ஊழியராகப் பொதுப் பணி வேலையும் செய்து வருபவராவார். எளிமையான வாழ்க்கையில் இலண்டனிலுள்ள "கிங்ஸ்லி ஹால்" சமூக நல ஸ்தாபனத்தின் தலைவியாக இருந்தவர்.

1925-இல் காந்தியடிகளை நேரில் சந்தித்ததிலிருந்து மிஸ். லெஸ்ட்டர் அவருடைய சிறந்த சிநேகிதியாக இருக்கிறார். இலண்டனுக்கு வருகை தரும் காந்தியடிகளை மிஸ். லெஸ்ட்டர் தமது இருக்கையில் தங்கி விருந்தாளியாக இருக்கும்படி கேட்டு அவர் பெயருக்கு எழுதிய ஓர் கடிதத்திற்கு, காந்தியடிகளே தன் கைப்பட எழுதிய பதிலில்... "மற்ற இடங்களில் தங்குவதைவிட தங்கள் விடுதியில் தங்குவதையே நான் அதிகமாக விரும்புகிறேன். ஏனெனில் என் வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு வகுப்பு ஜனங்களுக்காக நான் உழைத்திருக்கிறேனோ அவர்கள் போன்றவர்களிடையே தங்க எனக்கு அதன் மூலம் சந்தர்ப்பமேற்படக்கூடும். அவசியம் உங்கள் விடுதியிலும் தவறாமல் தங்குவேன்!" எனக் குறிப்பிட்டிருந்தார்.

## காந்தியடிகளுக்கு மரியாதை

ரிச்சர்டு ஆடன்பரோவின் மகத்தான தயாரிப்பான 'காந்தி' திரைப்படத்தில் காந்தியடிகளாக நடித்தவர் 'பென் கிங்ஸ்லி'. இவர் பார்வைக்குக் காந்தியடிகளைப் போல இருக்கவே, அவரைப் போல் தத்ரூபமாகவும் நடித்தார். சுமார் 43 வயதான 'பென்கிங்ஸ்லி' பிறப்பதற்கு முன்னரே இங்கிலாந்திலே மகாத்மா காந்தியைப் போலவே, மற்றொரு நபரும் பிறந்திருந்தார். அவர் பெயர் 'மெக்ளீன்'. 1893-ஆம் ஆண்டு பிறந்த இவரின் முழுப் பெயர் "மிஸ்டர் ஜிம் மெக்ளின்" எனப்படும். இவர் எடின்பரோவுக்கு அருகில் 'க்வின்பெரி'யில் மிக்க எளிமையாகவே வாழ்ந்து வந்தார். மெக்ளினும் பார்வைக்குக்

காந்தியடிகளைப் போலவே எடுப்பான மூக்கு, கண் அசைவு, வாய், உதடு, சிரிப்பு, மீசை, நடை, கையசைப்பு அத்தனையுமே அப்படியே இருந்தது. இதனால் இவரது நண்பர்கள் இவரைச் சந்திக்கும்போதெல்லாம் "காந்தி! அதோ காந்தி வருகிறார்" என்றழைத்து அவரை "மெக்ளீன் காந்தி" என்றனர்; அப்பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

*1931*-ஆம் ஆண்டு இறுதியில் காந்தியடிகள் வட்டமேசை மாநாட்டிற்காக இலண்டனுக்குச் சென்றிருந்தார். அப்போது பக்கிங்காம் அரண்மனையில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் ஓர் விருந்து காந்திஜிக்கு அளிக்க ஏற்பாடாகியிருந்தது. காந்தியடிகள் தனது செயலாளர் மகாதேவதேசாய், சரோஜினி நாயுடு ஆகியோருடன் மன்னரின் அரண்மனைக்குச் சென்றார். மிகுந்த மரியாதைகளோடு அவரை அங்கு வரவேற்றதோடு, காந்தியடிகள் மட்டும் தனியாகப் பல கோணங்களில் புகைப்படமும் எடுத்தனர். அதில் மன்னருக்கு மிகவும் பிடித்தமான காந்தியடிகள் புகைப்படமொன்றை ஆள் உயரத்திற்குப் பெரியதாக்கி அரண்மனைக்குள் ஓர் பிரதான இடத்தில் பார்வைக்காக வைத்திருந்தனர்.

அன்று பார்வையாளரோடு பார்வையாளராக மன்னரின் அரண்மனைக்கு வந்திருந்த 'மெக்ளின்' அங்குள்ள காந்தியடிகளின் புகைப்படத்தைக் கண்டதுமே, 'சட்டென்று' அதன் பக்கத்திலேயே சாதாரண தோற்றத்தில் வெள்ளைக் கதராடையை காந்திஜி அணியும் பாணியிலேயே அணிந்து வெறும் பாதங்களோடு வந்து நின்றார்.

அங்கு வந்திருந்தவர்கள் அனைவருமே இக்காட்சியினைக் கண்டதுமே இவர்களில் காந்தி யார்? என வியப்படைந்தபோது 'மெக்ளின்' கண் அசைவிலிருந்து அவரைக் கண்டுபிடித்து அவரிடமே, "மிஸ்டர் மெக்ளீன்! இப்போது நீங்கள் காந்தியைப் போலவே இருக்கிறீர்கள். சந்தேகமேயில்லை. ஆனால் காந்தியடிகளைப் போலப் பாதங்களில் காலணிகளை அணியாததுதான் ஒரே ஒரு குறை! இதனை எப்படி மறந்தீர்கள்?" என்று கேட்டதற்கு மெக்ளீன் "பெரும் புகழும் பெருமையும் கொண்ட மகாத்மா காந்தியடிகளின் உருவப் படத்திற்கு பக்கத்திலேயே நானும் காலணிகளை அணிந்து நிற்க என் மனம் இடம் தரவில்லையே? அவருக்கு மரியாதை செய்ய வேண்டாமா?" என்றது வந்திருந்த அனைவரையுமே வியப்பில் ஆழ்த்தியது!

# காந்தியடிகளின் தமிழ்நாட்டு நினைவு!

*1933*-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் ரெய்ப்பூருக்கு வந்திருந்தார். வழக்கம்போல அவர் கதர்த்துண்டுகளை ஏலத்தில் விட்டு, அதனால் வரும் தொகையை "ஹரிஜன நல நிதி"யில் சேர்ப்பதற்காக இங்கும் அவர் ஒரு கதர்த்துண்டைஎடுத்து ஏலம் கூவினார். ஆனால் அந்தத் துண்டு 30 ரூபாய்க்கு மேல் ஏலம் உயரவில்லை. அத்துண்டை அந்த விலைக்கு விற்க மனமில்லாதவராய் ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு, "இதே கதர்த்துண்டை நான் தமிழ்நாட்டில் 000க்கு விற்றிருக்கிறேன். கதர்களுக்குத் ழ்நாட்டில்தான் மதிப்பு அதிகம். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை நான் இங்கு எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் ரூ.30க்கு இதனை விற்க எனக்குச் சம்மதமில்லை!" எனக்கூறி அத்துண்டை மடித்து வைத்தது தான் தாமதம். உடனே கூட்டத்தில் அதே கதர்த்துண்டின் விலை 'மளமள'வென்று ஏலம் உயர்ந்துவிட்டது!

–டி.வி.ஆர்.






# அறிவொளி காண...




கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டம் எழுத்தறிவு இயக்கத்திற்குத் தொட்டிலாக இருந்தது என்றால், தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம் அறிவொளி இயக்கத்திற்கு ஒரு சாதனைக் களமாகவே அமைந்துவிட்டது. புதுக்கோட்டை அறிவொளி இயக்கம் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பேருக்கு எழுத்தறிவு வழங்கியது என்றாலும், இந்த இயக்கத்தால் ஏற்பட்ட மக்கள் விழிப்புணர்வு இருக்கிறதே அதுதான் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

**அறிவொளி**

இந்த மாவட்ட எழுத்தறிவு இயக்கத்திற்கு "அறிவொளி" என்று பெயரிடப்பட்டது. இது வழக்கமான சமூக மேம்பாட்டுத் திட்டம் இல்லை என்பதை மக்கள் உடனே உணர்ந்தனர். எழுத்தறிவு வேண்டும் என்று அடிமன உறுத்தல் உடைய மக்களுக்கு, இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. மக்களும் சரியான பாதையை மேற்கொண்டார்கள்.

**எழுத்தறிவு மையங்கள்**

எங்கும் எழுத்தறிவு மையங்கள் தோன்றின. குடிசைகளில் ஆல மரத்தடிகளில், கிராமச் சதுக்கங்களில், அரசு அலுவலகங்களின் முன் பகுதித் தாழ்வாரங்களில், திருக்கோவில்களில் இந்த மையங்கள் எழுந்தன. சிலேட்டூர் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலில் எழுந்த எழுத்தறிவு மையம் இதற்கோர் எடுத்துக்காட்டு.

கிராமப்புறங்களில், வயல்வெளிகளில், எழுத்தறிவு மையங்களில் பாடல்களைப் பாடினார்கள். அவையெல்லாம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாடல்களாகும். "நிலவில் கால் பதித்தான் ஒரு மனிதன். நாமோ கட்டைவிரல் பதிக்கிறோம்" என்று எழுத்தறிவின்மையை ஏளனம் செய்யும் பாடல்களும் உண்டு.

புதிதாகக் கல்வி பெறும் பெண்களுக்கு வர்த்தக வங்கிகள் எளிதாகக் கடன் கிடைக்க உதவின. ஒரு வங்கியின் ஊழியர்கள் ஒரு கிராமத்தைத் தத்து எடுத்துக்கொண்டு, அதற்குக் கரும்பலகைகளும் விளக்குகளும் வாங்கிக் கொடுத்தார்கள். உதவி சிறிதாக இருந்தாலும், காலத்தால் செய்ததால் ஞாலத்தைவிட மிகப் பெரிதாக அமைந்துவிட்டதை யாரும் புறக்கணிக்க முடியாது.

**இயக்கத்தின் விரிவாக்கம்**

மாவட்ட அதிகாரிகள் இந்த இயக்கத்தின் வரம்பைக் கல்விக்கு அப்பாலும் விரிவாக்கினர். மாவட்டக் கிராம வளர்ச்சி முகமையும் ஒரு வங்கியும் சேர்ந்து வைரம் பட்டை தீட்டுதல், அழகுப் பொருள்களான பாய்கள், கூடைகள் போன்ற பொருள்களைத் தயாரித்தல், பனை ஓலைக் கலைப்பொருள்கள் உற்பத்தி செய்தல் போன்ற சுய வேலைவாய்ப்புத் தொழில்களில் மகளிருக்குப் பயிற்சி அளித்ததை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

**முழுமையான எழுத்தறிவு பெற...**

15 வயது முதல் 35 வயது வரையான பிரிவில் 10 கோடி பேருக்குச் செயல்முறைக் கல்வி அளிக்கும் தேசிய கல்விப் பணியில் முழுமையான எழுத்தறிவு முக்கியமானது ஆகும். 1993ஆம் ஆண்டு நவம்பர் வரை, 240 மாவட்டங்களில் முழுமையாகவோ அல்லது சில பகுதிகளிலோ இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த 'அறிவொளி இயக்கம். வரையறுக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் நடைபெறுவது கால அட்டவணை கொண்டது. மக்கள் ஈடுபாடும் தாமாக முன்வரும் தன்மையும் உடையது. சிக்கனமானது என்றாலும் பயனோ பெரிது. வேறு சமுதாயப் பணிகளும் இத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லோரையும் பள்ளிகளில் சேர்க்கும் முயற்சி; முறைசாராக் கல்வி இல்லாத இடங்களில் 9 - 14 வயதுப் பிரிவு சிறுவர்களுக்குக் கல்வி, முத்தடுப்பு ஊசி இயக்கம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, சிறு குடும்ப நெறி, மகளிர்க்கு அதிகாரம் போன்ற பணிகளும் இதில் அடங்கும்.

12 மாதக் காலத்தில் நடைபெறும் இந்த இயக்கத்தில் ஆயத்தத்திற்குப் பாதியும் அறிவொளி தருவதற்குப் பாதியும் செலவிடப்படும். சிரமமான பகுதிகளில் கால அவகாசம் கூடும். இருவகைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வீடுதோறும் சென்று, எழுத்தறிவு வேண்டுவோரையும் எழுத்தறிவு தரக்கூடியவர்களையும் கண்டறிந்து இப்பணியில் சேர்ப்பது ஒரு நடவடிக்கை. மாநிலக் கருவூல மையங்கள் தயாரித்த பாடத் திட்டங்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. போதனை துவங்குவதற்கு முன்னர், உயர் நிபுணர்கள், போதகர்கள், தொண்டுள்ளம் கொண்ட ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரப்படுகிறது.

அறிவொளி இயக்கம் நடந்த இடங்களில் இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர் இயக்கம் நடைபெறுகிறது. கற்றுத் தரும் நிலையில் உள்ள பயிற்சியாளர்கள், தாங்களே கற்றுக் கொள்ள இந்தத் தொடர் இயக்கம் உதவுகிறது.




# சமூக நீதிக்காகப் பாடுபட்டவர்களுக்குப் பெரியார் விருது!

*சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சாதனைகளுக்காக மாற்றுக் கட்சியினர் அளித்த பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு (8.9.1994)*

தமிழகத்தின் சமூக நீதி வரலாற்றில், ஒரு சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டியதாகவும், சமூக நீதியைக் காப்பாற்றுவதில், நாம் அனைவரும் அடைந்த மாபெரும் இமாலய வெற்றியை மனம் திறந்து பாராட்டி மகிழ்வதற்காகவும் குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நீதி காக்கும் போராட்டத்தில், நாம் அடைந்த வெற்றிக்காக, என்னை மனம் திறந்து பாராட்டிய உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியைப் பெறுவதற்காக, நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குத் தாங்கள் சார்ந்துள்ள



அரசியல் கட்சி மற்றும் இயக்கத்தின் சார்பில் மனம் திறந்து பாராட்டுக்களை வழங்கிய உங்களது பண்பையும், மாண்பையும் பார்க்கும்போது எனக்கு ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது.

நான் மேற்கொண்ட முயற்சிகளையும், அதில் வெற்றி கண்ட விதத்தையும், அதனால் தமிழகத்திற்கு ஏற்பட்ட உயர்வையும், எடுத்துரைத்த உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்குகிறேன். உதட்டளவில் இன்றி, உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்து உங்கள் பாராட்டு மொழிகள், நான் மக்கள் பணியை, மேலும் உற்சாகத்துடன் மேற்கொள்ள, ஒரு தூண்டுகோலாக விளங்கும் பாராட்டுகின்ற பரந்த மனம் படைத்த

முதல் அட்டை சொல்லும் செய்தி

நீங்கள் அனைவரும், இந்த மகத்தான பணியில், எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பையும், ஆதரவையும் நினைவுகூர்ந்து எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகின்றேன்.

இதுவரை அரசாணையால் மட்டுமே, நடைமுறைப்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டு முறைக்கு, முதன் முதலில், ஒரு சட்டத்தை இயற்றிய ஒரே மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழ்நாடு மட்டும் தான். அது மட்டுமன்றி, அந்தச் சட்டத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் நிரந்தரப் பாதுகாப்பைப் பெற, அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மத்திய அரசை மேற்கொள்ளச் செய்த ஒரே மாநிலமும், தமிழ்நாடு தான்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு", என்ற தூய அரசியல் பாரம்பரியத்தைக் கற்றுத் தந்த அரசியல் ஆசான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், அன்று கூறியதைப் போல, அரசியல் மனமாச்சர்யங்களைக் கடந்து, அடுத்தவர்களின் நற்செயல்களைப் பாராட்டுகின்ற பாரம்பரியம், இன்னும் தமிழகத்தில் குடிகொண்டுள்ளது என்பதை நிரூபிக்கின்ற வண்ணம், இந்தப் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்து இருக்கின்ற, எனது அன்பிற்குரிய அன்புச் சகோதரர்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தூய அரசியலிலும், பொது வாழ்க்கையிலும், கருத்து வேறுபாடுகள் காணப்பட



லாம். இருப்பினும், ஒவ்வொரு மனிதனிடமும், ஒவ்வொரு இயக்கத்திடமும், காணப்படுகின்ற நற்பண்புகளைச் சுட்டிக் காட்டி, அவற்றைப் பெருமைப்படுத்துகின்ற அரசியல் நாகரிகம், இந்த மண்ணுக்கே உரித்தான, ஒரு மரபு ஆகும். அந்த மரபும், இந்த மண்ணின் வாசனையும், இன்னும் மாறவில்லை என்பதை, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சி உலகத்திற்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

பேதங்கள் ஆயிரம் இருக்கலாம்; கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருக்கலாம்; இயக்கத்தின் நடைமுறைத் தத்துவங்கள் வேறுபடலாம். ஆனால், மாற்றானின் நற்செயல்களையும், நற்பண்புகளையும் மதிக்கின்ற, நல்லதொரு கலாச்சாரத்தை, இந்த நாடு, என்றென்றைக்கும் மறந்து விடக் கூடாது என்பதில், எனக்கு ஒரு உறுதியான ஈடுபாடு உண்டு. அந்த அரசியல் நாகரிகத்தை, உலகிற்கு நாம் உணர்த்திக் கொண்டிருக்கிறோம், என்பதை எண்ணும்போது, என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினையான, இந்தச் சமூக நீதி காக்கின்ற பிரச்சினையை ஒரு சத்திய வேள்வியாகக் கருதி, நான் ஆரம்பத்திலிருந்தே, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்தேன். தமிழகத்தில் காலம் காலமாகத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் காத்து வந்த ஒதுக்கீட்டு முறைக்கு, ஊறு விளைந்த போது எத்தகைய இன்னல்கள் இடர்ப்பாடுகள் வந்தாலும், அவற்றை எதிர்கொண்டு, அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மேம்பாட்டிற்கும், உயர்விற்கும், வழி வகுக்க வேண்டும், என்ற சபதத்தை மேற்கொண்டேன்.

மக்கள் சக்தி, என்கின்ற மாபெரும் சக்தி ஒன்றை மட்டுமே, ஆதாரமாகக் கொண்டு, இந்த விழா மேடையில் அமர்ந்திருக்கின்ற பல தலைவர்களின் துணையோடு, தமிழகத்திற்குச் சமூக நீதியைப் பெற்றுத் தரும் முயற்சிகளில் ஈடுபட்டேன்.

இந்தியாவில் வேறு எந்தப் பிரச்சினையும் இந்த அளவிற்குக் குறுகிய கால அளவிற்குள், தீர்த்து வைக்கப்படவில்லை என்ற பெருமை, தமிழ்நாட்டு மக்களுக்கு உரித்தாகும் வண்ணம், நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றன. நமது உள்ளங்களில், பொது நலன் மட்டுமே ஓங்கியிருந்ததால், நாம் மேற்கொண்ட சத்திய வேள்வியில், முழுமையான வெற்றியைக் கண்டோம்.

அடுக்கடுக்கான வக்கணை பேசியவர்கள், வாய் வலிக்காமல் நம்மைக் குறை கூறியவர்கள், நாம் செய்தவற்றை எல்லாம் கண்டு, எள்ளி நகையாடியவர்கள், நான் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகாவது, தமிழக மக்களின் நலனில், ஒரு துளியேனும் அக்கறை கொண்டு இருந்தால், அதைப் பாராட்டி, அந்தச் சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்த்து, முழுச் சட்டப் பாதுகாப்புப் பெற்றுத் தர, ஒன்றாகக் கூடி ஓரணியில் திரண்டு செயல்படுவோம் என்று முன்வந்தார்களா? என்றால், அதுவும் இல்லை. இவர்களால் ஆனதெல்லாம், குறை கூறுவதும் புறங்கூறுவதும் தான்.

"குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்து விட்டாலும், அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு கிடைக்காதே" என்றும், "யாராவது நீதிமன்றத்திற்குச் சென்று, தடையாணை பெற்றுவிட்டால், என்ன செய்வது" என்றும் அழிவுப் பாதையின் தீர்க்கதரிசிகளாகச் சிலர் புலம்பினார்கள். இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே, இந்த அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நமது சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என்று, நான் கோரிக்கை விடுத்தபோது, அதற்கும் எதிர்ப்பாட்டுப் பாடினார்கள், ஆனால், அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளதை, உங்களைப் போன்ற நல்ல மனம் படைத்தவர்கள், பாராட்டுகின்றனர். என்னைப் பொருத்த வரையில், இதில் எனக்கு அரசியல் உணர்வைவிட, தமிழ் மக்களின் வளமார்ந்த எதிர்காலம் தான், கண்ணுக்குப் படுகின்றது. இந்த நேரத்தில், இத்தகைய ஒரு சட்டத்தை இயற்றி, அதற்கு அரசியல் சட்டப் பாதுகாப்பையும் பெற்றுத் தர, நம்மால் முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், என்ன ஆகும் என்பதை, நம்மை வஞ்சகம் பேசுபவர்கள், குறை கூறுபவர்கள், ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழக வரலாற்றில் என்றென்றைக்கும், நமக்கெல்லாம் ஒரு அவப் பெயர் ஏற்பட்டிருக்கும் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது. எதிர்காலச் சந்ததியினர், நம்மை வசைபாடி இருப்பார்கள். இந்த மாபெரும் வெற்றி, நமக்குக் கிடைத்ததால் தான், எதிர்காலச் சந்ததியினர், நம்மைத் தூற்றாமல், மாறாக, நம்மை எல்லாம் நெஞ்சார வாழ்த்துகின்ற ஒரு சூழ்நிலையை, இன்று நாம் உருவாக்கி இருக்கிறோம். எனவே தான், தமிழகத்து மக்கள் சக்தியின் துணையோடு, நாம் பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றியை, அதே தமிழக மக்களுக்குக் காணிக்கையாக்கி, மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியை இங்கே மீண்டும், உங்களுடன் பகிர்ந்து கொள்வதில், நான் பேருவகை அடைகின்றேன். என்னைப் பொருத்த வரையில், தமிழக மக்களின் பேராதரவும், பேரன்பும் தான், இந்த மகத்தான வெற்றிக்கு முக்கியக் காரணம்.

## ஆசிரியர் மாணாக்கர் விடுதி, வீட்டு வசதி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 2 இடங்களிலும் வேளாண் கல்லூரிகளில் பணிபுரியும் மாணவ மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குத் தங்கும் விடுதி மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றை 6.3 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்வசதிகள் அனைத்தும் செய்து முடிக்கப்படவேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இவற்றில் திருச்சி வேளாண் கல்லூரியில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமையவிருக்கும் மாணவர் தங்கும் விடுதியும் 5.4 கோடி ரூபாய் செலவில் திருச்சி மற்றும் கோவை ஆகிய இரு வேளாண் கல்லூரி வளாகங்களிலும் அமையவிருக்கும் ஆசிரியர்களுக்கான வீட்டு வசதியும் அடங்கும்.

வன்னியக்குல சத்திரிய நலச் சங்கங்களின் மத்திய மையத்தின் தலைவர் திரு. குலசேகரன் அவர்கள் பேசும்பொழுது, 1964 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு மூலமாக மத்திய அரசு செயல்படுத்தி வந்த தேசியக் கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தைக் கடந்த 2 ஆண்டுகளாகக் கைவிட்டு விட்டது என்றும், அந்தத் திட்டத்தை மாநில அரசே ஆண்டொன்றிற்கு 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மாணவ மாணவிகளின் சார்பில் கேட்டுக் கொண்டார்கள். இத்திட்டம் கைவிடப்பட்டதால், மாணவ மாணவியர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில், இந்த ஆண்டு முதல்

# நூல் நயம்



**சத்திய சோதனை சுருக்கம்**

மகாத்மா காந்தி எழுதியது.

தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:135 விலை: ரூ.10

அண்ணல் காந்தியடிகளின் திறந்த புத்தகம் தான் 'சத்திய சோதனை' என்னும் இந் நூல்.

பிறப்பு, வளர்ப்பு, படிப்பு என்று தொடங்கி, நாட்டுப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு சோதனைகளிலும், வேதனைகளிலும் பங்கு கொண்டு, வாழ்க்கையென்னும் கடலில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்த நிகழ்வுகளை ஒளிவுமறைவு இன்றிக் கூறுகிறார் அண்ணல் காந்தியடிகள்.

அவரது வாழ்க்கை நமக்கெல்லாம், குறிப்பாக இளைய தலைமுறைக்கு இன்றியமையாத செல்வமாகும். எத்தனைத் தடவை வேண்டுமானாலும் படிக்கலாம், அண்ணலின் வாழ்க்கை ஏட்டின் இந்தப் புனிதப் பக்கங்களை!

**காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்**

ஆசிரியர்: விஷ்ணு பிரபாகர்

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை 625 0,20

விலை:ரூ 50 பக்:135

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந் நூல் விளங்குகிறது. சத்தியம், வாய்மை, அகிம்சை முதலான தன்மைகளை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்துத் தூய வாழ்வு வாழ்ந்த அந்தப் புனிதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் வகையிலே கருத்துக்களின் கோவை இந்நூலில் அணி வகுக்கின்றது. பெரியவர், குழந்தைகள் எல்லோரும் இந்த நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

**உழைப்பு**

ஆசிரியர்: ஜே.சி. குமரப்பா

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:92 விலை ரூ.9

'உழைப்பு' பற்றி மிக ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு இந்நூல்.

'உழைப்பின் தத்துவம்' 'முன்னேற்றத்தின் தத்துவம்' 'காந்தியப் பொருளாதாரம்' என்ற மூன்று தலைப்புகளின் கீழ் உழைப்பு பற்றிய சிறந்த ஆய்வே நடத்தி இருக்கிறார் ஆசிரியர்.

—பி.வி. கிரி

---

இத்திட்டத்தை மாநில அரசே ஏற்று நடத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர் கல்விக் கடன் படிப்பு உதவித் திட்டத்திற்கு 25 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய அன்புச் சகோதரர் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் உரையாற்றுகின்ற போது, ஒரு கோரிக்கையை முன்வைத்தார்கள். சமூக நீதிக்காக, சமூக நீதியைப் பெற்றுத்தரப் பாடுபட்ட மற்ற தலைவர்களின் பெயர்களில் எல்லாம் தமிழக அரசு விருது அளிக்கின்றது. ஆனால், இந்தப் போராட்டத்திற்கு முதன் முதலில் மூல காரணமாக இருந்த தந்தை பெரியார் அவர்களின் பெயரில் ஒரு விருது நிறுவப் படவில்லையே என்று அவர் தெரிவித்து அத்தகைய ஒரு விருதைத் தமிழக அரசு ஏற்படுத்த முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். அன்புச் சகோதரர் திரு வீரமணி அவர்களின் ஆலோசனையை ஏற்று, தந்தை பெரியார் அவர்களின் பெயரில் சமூக நீதிக்காகப் பாடுபட்டவர்களுக்கு ஒரு விருது நிறுவப்படும். அடுத்த ஆண்டு முதல் அது அளிக்கப்படும் என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் இலட்சியங்களைத் துணையாகக் கொண்டு, தமிழகம் மென்மேலும் சிறப்புகளை அடைய, மக்கள் பணியைத் தொடர்ந்து ஆற்றுவோம், என்பதை எடுத்துரைத்து, இந்த விழாவில் என் மீது கொண்டுள்ள, தனிப்பட்ட பாசத்தின் காரணமாகவும், அன்பின் காரணமாகவும், கூறப்பட்ட பாராட்டு மொழிகளை, நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொண்டு, தமிழக மக்களின் வளமார்ந்த வாழ்விற்கு, நான் எடுக்கின்ற அத்துணை முயற்சிகளுக்கும், நீங்கள் தொடர்ந்து ஆதரவையும், ஒத்துழைப்பையும், நல்க வேண்டும், என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் என நெஞ்சார்ந்த நன்றியை, உங்கள் அனைவருககும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.





# பைந்தமிழ்க் கவிஞன் பாரதி வசித்த இல்லங்கள்

—ரகமி

பைந்தமிழ்க் கவிஞன் மகாகவி பாரதி எட்டயபுரத்தில் 1882-ஆம் ஆண்டு டிசம்பரில் பிறந்தது முதல், 1921-ஆம் ஆண்டு செப்டம்பரில் சென்னையில் இறுதிக் காலம் வாழ்ந்து மரணம் அடைந்தது வரையிலுள்ள இடைக்காலங்களில் அவர் எந்தெந்த இடங்களில் வாழ்ந்தார் என்பதனை இன்றைய இளந்தலைமுறையினர் அறிய வேண்டியது அவசியமாகும். எனவே, நாமும் கவி பாரதி பிறந்து, வளர்ந்து, வேலை பார்த்து, தனது வாழ்நாளில் அவர் வாழ்ந்த இல்லங்களின் விவரங்களை அறிவோமாக!

### 1882 டிசம்பர் 11 'சுப்பையா' பிறப்பு

ஆங்கில ஆண்டு 1882 டிசம்பர் 11-ந் தேதி தமிழில் ஸ்வஸ்திஸ்ரீ சித்திரபாநு வருடம் கார்த்திகை மாதம் 27-ந் தேதி திங்கட்கிழமை எட்டயபுரத்தில் ஸ்ரீசுந்தரராஜன் (எ) சின்னசாமி ஐயர், லட்சுமி தம்பதியருக்கு சுப்ரமணியன் (எ) 'சுப்பையா' பிறந்தார். எட்டயபுரத்தில் தாய் வழிப் பாட்டனார் ஸ்ரீராமசுவாமி ஐயர் இல்லத்தில் (பெரியமாடி வீடு) பிறந்தார். 1887-இல் எட்டயபுரத்தில் பாரதியின் 5-வது வயதில் தாயார் இலட்சுமி அம்மாள் மரணம். அடுத்து அவரது 15 வயதிற்குள் (1898) தகப்பனார் சின்னசாமி ஐயர் மரணம்.

### 1898 முதல் 1901 வரை காசி வாசி!

தகப்பனார் மறைவிற்குப் பின் கவி பாரதி தனது அத்தை குப்பம்மாளுடன் காசிக்குச் சென்றார். 1898 முதல் 1901 ஜூன் வரை அங்குள்ள 'ஸ்ரீஹநுமான்கட்டம்' சிவமடத்திலுள்ள அத்தையின் கணவர் கிருஷ்ண சிவன் இல்லத்தில் தங்கி, அங்கு "ஜெய் நாராயணப் பள்ளி" மற்றும் அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்வு.

### 1901 முதல் 1904 வரை

1901-இல் டெல்லியில் நடந்த "தர்பார் விழா" விற்குச் சென்றிருந்த எட்டயபுரம் ஜமீன்தார், ஊர் திரும்பி வருகையில் காசிக்கு வந்தவர், அங்கு தங்கியிருந்த கவி பாரதியைத் தன்னுடனே அழைத்து வந்து, தமது சமஸ்தானத்தில் 3 ஆண்டுகள் உத்தியோகமும் அளித்தார்.

### 1904 ஆகஸ்டு முதல் நவம்பர் வரை

1904-ஆம் ஆண்டு ஆகஸ்டு 1-ந் தேதி நவம்பர் 10-ந் தேதி வரை மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை பார்த்தபோது அங்கு கட்டுச் செட்டி மண்டபத்தின் அருகே ஓர் மொட்டை மாடி வீட்டில் வசித்து வந்தாராம்.

### 1904 நவம்பர் முதல் 1908 செப்டம்பர் வரை (சென்னைக்கு முதல் விஜயம்)

1904-ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த கவி பாரதி ஜி. சுப்பிரமணிய ஐயரின் "சுதேசமித்திரன்" நாளிதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்

எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் பிறந்த வீடு.



தார். சென்னை வந்த அவர் முதலில் மையிலாப்பூர் சித்திரக் குளத்திற்கு அருகேயுள்ள ஒரு குறுகலான வீதியில் ஒரு பெரிய வீட்டில் குடி வந்தார். அப்போது இவருடன் தங்கியிருந்த் தம்பி சி. விசுவநாதய்யர் அங்குள்ள பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

அடுத்து, திருவல்லிக்கேணி வீர ராகவ முதலித் தெரு (பெரிய தெரு) மசூதிக்கு எதிர்ப்புறத்திலுள்ள ஓர் தட்டோடு வீட்டிற்கு மாறிக் குடி வந்தார். இதே தெருவின் மற்றொரு பகுதியில் 'ஹிந்து', 'சுதேசிமித்திரன்' பத்திரிகைகளின் ஸ்தாபகரும், ஆசிரியருமான ஜி. சுப்பிரம்மணிய ஐயரும் தமது சொந்த இல்லத்தில் வசித்து வந்தார். அப்போது கவி பாரதியின் தம்பி, திருவல்லிக் கேணி "ஹிந்து உயர்நிலைப் பள்ளி"யில் சேர்ந்திருந்தார்.

1907 ஏப்ரலில் கவி பாரதி அதே திருவல்லிக்கேணியிலேயே நல்ல தம்பி முதலித் தெரு கிழக்குப் பக்கத்திலுள்ள ஓர் பழைய வீட்டின் (அன்றைய கதவு எண் 32 அல்லது 33) பின் பகுதியில் குடி வந்தார். இந்த வீட்டிலிருந்தபோது தான் கவி பாரதி, தான் இருந்த அந்த பழைய வீட்டைச் சுட்டிக் காட்டியே 'மண்ணுலகம்' என்ற நகைச்சுவைக் கட்டுரையையும் எழுதினார். சுதந்திரப் போராட்டம், மற்றும் சுதேசிய இயக்கங்களில் பெரிதும் ஈடுபட்ட கவி பாரதி அந் நாளைய பிரிட்டிஷ் அரசாங்கத் தின் கெடுபிடிகளின் காரணமாக, 1908 செப்டம்பரில் இந்த வீட்டி லிருந்துதான் புதுவைக்குச் சென்றார்.



1920-இல் சென்னை திருவல்லிக்கேணியில் கவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தின் பழைய தோற்றம்.

### 1908 செப்டம்பர் முதல் 1918 அக்டோபர் வரை (10 ஆண்டுகள் புதுவை வாசி)

புதுவைக்குச் சென்ற கவி பாரதி முதலில் ஈஸ்வரன் தர்மராஜா கோவில் தெருவில் மு. இராஜா பாதரின் வீட்டிற்கு அடுத்துள்ள ஓர் சிறு வீட்டிற்குக் குடிவந்தார். பின்பு அதே தெருவில் 28-ஆம் எண்ணுள்ள மாடிவீட்டிற்கு மாறிக் குடிவந்தார். இந்த வீட்டுச் சொந்தக்காரர் "ஐயாக்கண்ணு செட்டியார்". ஆனால், இவரைக் கவி பாரதி அழைத்ததோ "விளக்கெண்ணைய் செட்டியார்" என்ற நகைச்சுவைப் பெயரில்!



புதுவையில் பாரதியார் வாழ்ந்த இல்லத் தின் பழைய தோற்றம்.

### 1919 ஜனவரி முதல் 1920 நவம்பர் வரை

புதுவையினின்று வெளிவந்த கவி பாரதி எட்டயபுரம், கடையம், காரைக்குடி, கானாடுகாத்தான், திருநெல்வேலி, திருவனந்தபுரம் மற்றும் சிற்சில இடங்களிலெல் லாம் தங்கிச் சஞ்சாரம் செய்தார்.

### 1920 நவம்பர் முதல் 1921 செப்டம்பர் வரை (மீண்டும் சென்னை வாசி)

1920-ஆம் ஆண்டு நவம்பரில் மீண்டும் சென்னைக்கு வந்த கவி பாரதி, மீண்டும் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார் காலத்தில் ஆசிரியர் குழுவில் பணிக்குச் சேர்ந்தார். சென்னைக்கு வந்த சில நாட்கள், மட்டுமே சைதாப்பேட்டையில் "டேங் ஸ்கொயர் தெரு"வில் ஓர் வீட்டில் தங்கியிருந்தார். பின்னர் ஜார்ஜ் டவுன் தம்புச் செட்டித் தெருவில் ஸ்ரீகாளிகாம்பாள் கோவில் எதிர்ப் புற வரிசையில் ஓர் இல்லத்தில் குடியிருந்தார். அதே வீட்டில் சென்னை பிரசிடென்சி போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு, நாராயண னும் குடியிருந்தார்.

அத்தெருவில் 154-ஆம் எண் இல்லத்தில் (சாந்தாச்ரமம்) ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா வசித்து வந் தார். இவர் நடத்திய "அமரகலா விலாசனி சபா"வில் கவி பாரதி யார் கௌரவ அங்கத்தினராக இருக்கவே, அன்றாடம் சுதேச மித்திரனில் வேலை முடிந்ததும் பெரும்பாலும் அவர் இங்கேயே தங்கி தமது எழுத்துப் பணியில் ஈடு பட்டார்.

பின்பு முத்தியாலுப்பேட்டை ராமசாமி தெருவில் (பழைய கதவு எண் 89) ஓர் வீட்டில் தங்கி இருந்த போதுதான், புதுவையிலிருந்த கவி பாரதியின் ஆப்த நண்பரான "குள்ளச்சாமி" சென்னை வந்து கவி பாரதியைச் சந்தித்தார். அடுத்து, கவி பாரதி, மைலாப்பூரி லுள்ள தமது நெருங்கிய நண்ப ரான கிருஷ்ணாபுரம் ஹரிஹர சர்மா வீட்டிலும் சில நாட்களே தங்கினார்.

அடுத்து, அவர் தனது ஆப்த நண்பரான ஸ்ரீசுரேந்திரநாத் ஆர்யா - இவருடைய மனைவி 'ஒகிலி' அம்மையார் தம்பதியர் - வேண்டுகோளுக்கு இணங்கி தமது குடும்பத்தோடு வேப்பேரி ரண் டல்ஸ் ரோடிலுள்ள 'ஆர்யா'வின் பெரிய பங்களாவின் ஓர் போர்ஷ னில் குடியேறினார்.

கடைசியாக, பாரதியின் புதுவை நண்பர் குவளை கிருஷ்ணமாச் சாரியார் என்னும் 'குவளைக் கண்ணன்' அப்போது திருவல்லிக் கேணியில் வசித்துவந்தார். திரு வல்லிக்கேணி துளசிங்கப்பெரு மாள் கோவில் தெருவிலுள்ள (அன்றைய கதவு எண் 67) வீட்டிற் குக் குடிவரும்படி பாரதியை அழைத்து வந்தார். இந்த வீடு அந்நாளில் பிரபல ஹைகோர்ட் வக்கீலும் திவானுமாகிய "தும்மன பள்ளி ராஜாராமராவ்!" என்பவ ருக்குச் சொந்தமானது. திவான் ராமராவ் சுதந்திரப் போராட்ட வீராங்கனை ருக்மிணி லட்சுமி பதியின் தாய்வழிப் பாட்டனா ராவார்.




பாரதி இல்லத்தில் பதிக்கப்பட்ட பெயர்ப் பலகை.

இந்த வீட்டில் வாழந்தபோது மகாகவி பாரதிக்குச் சிறிதுகாலம் உடல்நலமின்றி 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ந் தேதி திங்கட் கிழமை அதிகாலை 1.30 மணிக்குக் காலமானார். அப்போது அவருக்கு வயது 39.

### மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் நினைவாலயமாக மாறியது

மகாகவி பாரதியார் காலமான பின் நீண்டகாலமாகவே திரு வல்லிக்கேணி துளசிங்கப்பெரு மாள் கோவில் தெருவில் அவர் வாழ்ந்த இல்லம் (புதிய கதவு எண் 75) எவ்வித மாறுதலுமின்றிப்பழைய பாணியிலேயே இருந்தது. கவி பாரதியின் பெயரை நினைவு கூரும் வகையில் "சென்னை பாரதி இளைஞர் சங்கத்தாரால்," 1965-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ந் தேதி "மகாகவி பாரதியார் 1882, 1921 வாழ்ந்த இல்லம்" என்றபெயர்ப் பலகையை அவ்வீட்டின் முன் பகுதியில் பதித்தும் வைத்தனர்.

இந்த இல்லத்தை நஞ்சுண்டரா விடமிருந்து 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் 26-இல் சென்னைப் பிர முகர்களான எஸ். சோகன்ராஜ், எம். மிஸ்ரிலால் என்ற இரு சகோதரர்கள் விலை கொடுத்து வாங்கினர். பின்னர் சென்னை கார்ப்பொரேஷன் முன் அனுமதி பெற்று அவர்கள் அவ்வீட்டின் முன் பகுதித் தோற்றத்தையும், பின் தோற்றத்தையும் மாற்றி நவீன பாணியில் சீரமைத்து "சன்செட்டி பவன்" (Sanchetti Bhavan) எனப் பெயரிட்டு அவ்வீட்டின் மேல் தளத்தை ஓர் பிரபல வங்கிக்கு வாடகைக்கு விட்டதோடு, கீழ்ப் போர்ஷனில் வீட்டின் சொந்தக் காரரும் குடியிருந்தார்.

உலகம் போற்றும் மகாகவி பாரதி சென்னையில் வசித்து கடைசியில் உயிர்நீத்த அந்தப்

சன்செட்டி பவன் இல்லத்தின் தோற்றம்



பெருமை வாய்ந்த இல்லத்தை ஓர் நினைவாலயமாக்க வேண்டுமென பொதுமக்களிடையே எழுந்த வேண்டுகோள் தமிழக அரசின் கவனத்திற்கு எட்டியது. 1976-ஆம் ஆண்டு, செப்டம்பரில் அப்பகுதி தாசில்தார் மூலம், அந்த வீட்டின் சொந்தக்காரருக்கு அரசு ஒரு நோட்டீஸ் கொடுத்தது. அதில், "அந்த இடத்தைக் கவி பாரதியாரின் நினைவாக வாங்கி, மக்களின் சொத்தாக ஆக்க அரசு விரும்புவதாகவும் அந்த இடத்தில் ஓர் நினைவுச் சின்னம் ஏற்படுத்த விரும்புவதாலும், மேற்படி நிலத்தில் எவ்வித மாற்றமும் செய்யக் கூடாதென்றும்" தெரிவித்தது.

இதனை எதிர்த்து அந்த வீட்டின் சொந்தக்காரர்கள் இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஓர் "ரிட்மனு" தாக்கல் செய்தனர். இதனை நீதிபதி பத்மநாபன் தீவிரமாக விசாரித்து, "பொது நோக்குடன் இதுவிஷயமாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை செல்லத்தக்கதே என்றும் இதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது. எனவே, மகாகவி பாரதியார் வசித்த வீட்டைப் பொதுச்சொத்தாக ஆக்கத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் செல்லத்தக்கதே!" என 1983-ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதியில் தீர்ப்பளித்தார். தீர்ப்பிற்குப் பின்னரே அவ்வீட்டைத் "தமிழக அரசு"தன் வசம் கையகப்படுத்தியது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் அவ்வீடு



தமிழக அரசு மாற்றியமைத்த கவி பாரதியின் இல்லத்தின் பழைய தோற்றம்.

எப்படி இருந்ததோ, அதுபோலவே மீண்டும் உருமாற்றி அமைக்கும் பணியைத் தமிழகப் பொதுப் பணித் துறையினர் மேற்கொண்டனர். ரூ.5.70 இலட்சம் செலவில், கையகபபடுத்தப்பட்ட அவ்வீட்டைப் புதுப்பிக்க மேலும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளதாக அரசு தெரிவித்தது.

சென்ற 1992-ஆம் ஆண்டு மத்தியில், நவீன பாணியிலிருந்த "சன்செட்டி பவன் மீண்டும் அந்நாளில் (1920-21) கவி பாரதியார் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந்ததோ, அதே உருவில் கைதேர்ந்த ஸ்தபதிகளையும், கட்டடக் கலை வல்லுநர்களையும் கொண்டு புதுப்பித்து அதில் "மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவு இல்லம்" என்ற எழுத்துக்களோடு பெருமையாகக் காட்சியளிக்கும் இந்நினைவாலயத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1993-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ந் தேதி காந்தியடிகளின் பிறந்த தினத்தன்று திறந்துவைத்தது, தமிழக வரலாற்றிலேயே ஓர் புனித நிகழ்ச்சியாகும்!

## பொன்மொழிகள்

நீங்கள் எதைச் செய்தாலும்
சரி; உலகத்திற்கும்
உள்ளத்திற்கும்
உண்மையாகவே நடந்து
கொள்ளுங்கள்.

— காந்தியடிகள்

எரிகிற நெருப்பை நீரினால் அணைப்பதைப் போல மனதில் எழுகின்ற கோபத்தைப் புத்தியினால் அடக்குகிறவனே மகாத்மா.

—ராமாயணம்

தனது உள்ளத்தில் மனிதன் கட்டும் மாளிகைக்குத் தூய்மை, நல்லறிவு, இரக்கம் அன்பு ஆகிய நான்கும் நான்கு சுவர்களாக அமைகின்றன.

தாயுமானவர்

தூரத்தில் உள்ளதை எதிர்பார்த்து அருகில் இருப்பதை அலட்சியம் செய்யாதே.

— ஆஸ்கார் ஒயில்டு

அறிவாளி தன்னுடைய வாழ்க்கையில் சிறப்பாக இருக்கத் தேர்ந்தெடுப்பது அடக்கத்தைத் தான்

— திருவள்ளுவர்

பேச்சு சிறந்ததுதான்;
ஆனால் அதைவிட
மௌனம் மிகவும் சிறந்தது.

— தாமஸ் கார்லைல்

அழகு பெண்களுக்குப் பெருமையைத் தருகிறது. அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மகிமையைத் தருகிறது. கற்பு அவர்களைத் தெய்வம் ஆக்குகிறது.

— சேக்ஸ்பியர்





என்ற பெயரையும், புகழையும் தன்னகத்தே பெற்ற, இந்த வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்ட வளர்ச்சிக்கு, உங்கள் அன்புச் சகோதரி, 126 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களுடன், இன்று உங்களைக் காண வந்துள்ளேன். 59 கோடி ரூபாய்க்கான முடிவுற்ற திட்டங்களை, இன்று நான் துவக்கி வைத்து 40 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும் 27 கோடி ரூபாய் செலவில், 54000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்கப் போவதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இம்மாவட்டத்தில், அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டம் தொடங்கப்பட்டு, 3 இலட்சம் பேருக்கு எழுத்தறிவுக் கல்வி போதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மாவட்டத்தை, "முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக", இன்று அறிவிப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மாபெரும் சேவையில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றிய, 50,000 தன்னார்வத் தொண்டர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். கடந்த ஆண்டு நான் துவக்கிவைத்த, அறிவொளி இயக்கத்தின் இரண்டாவது கட்டப் பணியையும், அதே ஆர்வத்துடன், நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி அமைந்த பின்பு தான், இந்த மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி, ஒரு புதிய உத்வேகத்தைப் பெற்றுள்ளது என்பது, நிதர்சனமான உண்மை, இராணிப்பேட்டையில் அமைந்துள்ள, தொழிற்பேட்டைகளின் பங்கு, இதில் மிகக் கணிசமானது.

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள, 493 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரில் உள்ள 'மாசு,' பாலாற்றையும், இந்தொழிற்சாலைகளைச் சுற்றி உள்ள நிலத்தடி நீரையும், வெகுவாகப் பாதித்துள்ளதையும் இதன் காரணமாக, 35,000 எக்டேர் நிலப்பரப்பு, தரிசாகக் கிடப்பதையும், எங்கள் அரசு அறிந்திருந்த காரணத்தினால்தான் இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து, வெளியாகும் கழிவு நீரைச் சுத்தம் செய்த பின்பு, பாலாற்றில் விடுவதற்காக, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங் (Common Effluent Treatment Plants) களை அமைக்கக், கொள்கை முடிவெடுத்து அதைச் செயல்படுத்தியும் வருகின்றது. வாணியம்பாடி. ஆம்பூர், பேரணாம்பட்டு மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் 4 பொதுச் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கி வருகின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தோல் பதனிடும் தொழிற்சாலைகள், இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்பிற்கும், அடிப்படையாக அமைந்திருப்பதால், அந்தத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு, வழி வகுக்கும் அதே நேரத்தில், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதும், நமது கடமை ஆகும். எனவே தான், இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும், செயல்படுத்தாத ஒரு திட்டம் ஒரே மாதிரியான தொழிற்சாலைகளுக்கான, கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்யும், "பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முதன் முதலில், தமிழ்நாட்டில் தான், அதுவும் இந்த மாவட்டத்தில் தான், செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டதட்ட, 100 தோல் பதனிடும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள, வாணியம்பாடிப் பகுதியில், இந்தத் தொழிற்சாலைகள் அனைத்

திலும் இருந்து, வெளியேற்றப்படும் கழிவு நீரை, சுத்திகரிப்புச் செய்வதற்காக, மூன்று கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில், "பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம்" ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்று, இந்த நிலையத்தைத் திறந்து வைத்ததில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலேயே, இது போன்ற முதன் முயற்சி, வெற்றிகரமான முயற்சி, "வாணியம்பாடி கழிவு நீர்ப் பொதுச் சுத்திகரிப்பு நிலையம்" தான், என்பதைத் தெரிவிப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும் நிலத்தடி நீரைத் தூய்மையாக வைத்திருக்கவும் விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ள குந்தகங்களைச், சீர் செய்யவும் அதே நேரத்தில், தொழிற்சாலைகள் நசுங்கிவிடாமல் பாதுகாக்கவும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு - உங்கள் அரசு மிக்க உறுதியுடனும், ஆத்மார்ந்த ஈடுபாட்டுடனும், செயல்பட்டு வருகின்றது என்பதற்கு, இந்தச் சுத்திகரிப்பு நிலையம், ஒரு எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை.

கழிவு நீர்ப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள, 35,000 எக்டேர் நிலப்பரப்பைச் சீர்திருத்தி, மண் வளத்தை அதிகரித்து மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்காக இந்த அரசு, "தொழில்நுட்ப வல்லுநர் குழு" ஒன்றை, ஏற்படுத்தி உள்ளது என்பதையும் இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நிவாரணப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பாதிப்பிற்கு உள்ளான நிலங்களில், சாகுபடியே செய்ய முடியாமல், தரிசாகக் கிடக்கின்ற நிலங்களுக்கான, நில வரித் தொகை முழுவதையும், ரத்து செய்து, ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு இலட்சம் எக்டேர் வனப் பகுதியைத், தன்னகத்தே கொண்டுள்ள இம்மாவட்டத்தில், சந்தன மரங்களைக், கொடியவர்களின் கைகளில் இருந்து பாதுகாக்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு உங்கள் அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனங்களை அழிக்கும் தீயவர்களையும் கடத்தலில் ஈடுபடும், சமூக விரோதச் சக்திகளையும் எதிர்கொள்ள, வனத்துறை அலுவலர்களுக்கு, வாகன வசதிகளும், அதி நவீன துப்பாக்கிகளும், தொலைத் தொடர்புச் சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளதோடு, சந்தன மரக் கடத்தலில் ஈடுபடும், வாகனங்களைப் பறிமுதல் செய்யவும், வனத்துறை அலுவலர்களுக்கு, 1992 ஆம் ஆண்டு, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சந்தனக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த, 310 பேர், குண்டர் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதிலிருந்து, நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் தீவிரத்தை, உங்களால் புரிந்துகொள்ள முடியும், என்று கருதுகிறேன். சந்தன மரக் கடத்தல் வழக்குகளை, விரைவாக விசாரிப்பதற்கு, ஒரு தனி நீதிமன்றத்தை, 1992 இல் ஏற்படுத்தினோம். இந்த அதிரடி நடவடிக்கைகளின் காரணமாக, இம்மாவட்டத்தில், சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்த, சமூக விரோத சக்திகளின் நடமாட்டம், வெகுவாக ஒடுக்கப்பட்டுள்ளதால், வழக்குகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள வனங்களைக் காப்பதற்காக, வனத்துறை அலுவலர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வாகனங்களையும், வசதிகளையும், கூடுதல் பயிற்சியையும், அளித்து வருகின்ற எங்கள் அரசு, இந்த ஆண்டு முதல், சிறப்பாகப் பணியாற்றி, சாதனை புரியும் வனத்துறை அலுவலர்களுக்கு, முதலமைச்சரின் தங்கப் பதக்கம் வழங்க முடிவு செய்து உள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் கிட்டத்தட்ட 16,000, ஓய்வூதியம் பெறுகின்ற முன்னாள் ராணுவத்தினராகவோ, அல்லது இராணுவத்தினரின் குடும்பத்தினராகவோ இருக்கின்றார்கள். தாயகத்தைக் காக்கின்ற பணியில், 1948 ஆம் ஆண்டு முதல், இன்று வரை, உயிர் நீத்த 45 இராணுவ வீரர்களின் குடும்பங்களும், இம்மாவட்டத்தில் வசித்து வருகின்றன. போர்க்களத்தில் உயிர் நீத்த, இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்களுக்குத், தமிழக அரசுப் பணியில், கருணையின் அடிப்படையில், பணியிடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருவதை, நான் நன்கறிவேன். இந்தக் கோரிக்கையை ஆய்வு செய்து, விரைவில் இது குறித்து, தக்க ஆணைகள் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, போர்க்களத்தில் காயம் அடைந்த வீரர்கள், மற்றும் அவர்தம் குடும்பங்களின் நலம் காக்க, இந்த அரசு நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காங்கேயநல்லூரில் பிறந்த, திருமுருக கிருபானந்த வாரியாருக்கு, ஒரு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்று, ஆன்மீக மனம் படைத்த பலர் விரும்புவதை நான் அறிவேன். மக்கள் எண்ணம் அறிந்து செயல்படுகின்ற அரசு இந்த அரசு. எனவே, இம்மாவட்ட மக்களின் மனம் மகிழும் வண்ணம், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு, நினைவு மண்டபம் ஒன்று, தமிழக அரசின் சார்பில் எழுப்பப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஆயத்தப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும்.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அந்த மாநிலம் ஒவ்வொரு ஆண்டும், வளர்ச்சிப் பணிகளுக்கு என, ஒதுக்கீடு செய்யும் அளவைக் கொண்டும் அந்தத் திட்டங்கள் எந்த அளவிற்குச் செம்மையாகச் செயல்படுத்தப் படுகின்றன, என்பதைக் கொண்டும் தான், தீர்மானிக்க முடியும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, 1300 கோடி ரூபாய் மட்டுமே.

ஆனால் அந்த நிலைமையை மாற்றி, 3 ஆண்டுகளில், வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை, இரண்டு மடங்குக்கும் மேலாக்கி, இந்த ஆண்டு, 2,750 கோடி ரூபாய் அளவிற்குத், திட்டப் பணிகளுக்கு என, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகள், கிட்டத்தட்ட 200 சதவிகிதம் அதிகரித்துள்ளன என்பதைத் தான் இது காட்டுகிறது. அந்த வகையில், இந்த மாவட்டத்தின் விரைவான வளர்ச்சிக்கு, இன்று, 126 கோடி மதிப்பில், திட்டங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் நல்வாழ்விற்குப் பல சீரிய திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயலாற்றும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு இம்மாவட்டத்தில் மட்டும், இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் மதிப்பில், 2402 தொகுப்பு வீடுகள் கட்டி, ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு, இலவசமாக வழங்கும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோலப் பள்ளிக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், கசிவு நீர்க் குட்டைகள், போன்ற அடிப்படை வசதிகளை, 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்காக, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். 44 இலட்சம் ரூபாய் செலவில், ராணிப்பேட்டை நகரில் தங்கும் விடுதி, மற்றும் வணிக வளாகம் அமைப்பதற்கும் 29 இலட்சம் ரூபாய் செலவில், வாணியம்பாடி நகரில் சாலைகளை மேம்படுத்துவதற்கும் பூங்குளம் சாலையில், 25 இலட்சம் ரூபாய் செலவில், மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கும், இன்று அடிக்கல் நாட்டியதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், 55 இடங்களில், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவதற்கு, அடிக்கல் நாட்டியதிலும் 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், 161 புதிய மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைத், திறந்து வைத்ததிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாநிலத்தின் மிகப் பழமையான நகராட்சி, என்ற சிறப்பைப் பெற்ற வாலாஜாப் பேட்டையில், குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருவதை, நான் நன்கு அறிவேன். இந்தக் குறையைப் போக்குவதற்காக, இன்று, 23 இலட்சம் ரூபாய் செலவில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள, குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைத் திறந்து வைத்ததில், நான் மன நிறைவு அடைகின்றேன்.

சமுதாயத்தில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், வீட்டு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும் என்பதில், அக்கறை கொண்டுள்ள எங்கள் அரசு, இம்மாவட்டத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, 21 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், 2511 வீடுகளும், குடியிருப்புகளும் கட்டப்படும் என்பதை, நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 12 கோடி ரூபாய் செலவில், 2860 வீட்டு மனைகள், இம்மாவட்டத்து மக்களின் தேவைக்கேற்ப, உருவாக்கப் பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுவதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், 18 புதிய வழித் தடங்களையும், 5 கோடி ரூபாய் மதிப்பில், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, 81 புதிய பேருந்துகளை வாங்கி வழங்குவதிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்ற ஆண்டு, இராணிப் பேட்டையில் நடைபெற்ற, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், நான் அடிக்கல் நாட்





டிய பல்வேறு திட்டப் பணிகள், இன்றைய அளவில் நிறைவு பெற்றுள்ளன. அந்த வகையில், 25 கோடி ரூபாய் மதிப்பில், கிட்டத்தட்ட 4464 கட்டடங்களும், திட்டங்களும், நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உண்மையில் என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

ஏற்கெனவே பெரிய தொழிற்சாலைகளைத் தன்னகத்தே கொண்ட, இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு, சிறப்புச் சேர்க்கும் வண்ணம், 45 இலட்சம் ரூபாய் செலவில், 10 புதிய தொழில் கூடங்களையும், இன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பல கோடி ரூபாய் மதிப்பில், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அதே நேரத்தில் சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு, அதன் பயன்கள் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், பல்லாயிரக்கணக்கான பேருக்கு, அரசின் நலத்திட்ட உதவிகளை, வழங்கி வருகின்றேன். இம்மாவட்டத்தைச் சேர்ந்த 54,000 பேருக்கு, 27 கோடி ரூபாய் செலவில், அரசின் நலத்திட்ட உதவிகள், இன்று, இங்கே, வழங்கப்படவுள்ளன. பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், இந்த உதவிகளை, நானே நேரிடையாகச் சென்று வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சில பயனாளிகளுக்கு மட்டும், இதே மேடையில் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே சென்று உதவிகளை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் உதவிகளைப் பெறும் பயனாளிகள் அனைவரும், அவற்றை ஒரு ஆதாரமாகக் கொண்டு, தங்கள் உழைப்பால் உயர்ந்து பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

தமிழ்நாட்டில் மகளிரும் மழலையரும் ஏற்றம் காண்பதற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது உங்கள் அரசு. இந்தியாவில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, முதன் முறையாக, பெண்களின் வளர்ச்சிக்கு என, ஒரு கொள்கையையும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு என, 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டத்தையும் தீட்டிச் செயல்படுத்தி வருகின்ற ஒரே மாநிலம், தமிழ்நாடு தான் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மகளிரின் மேம்பாட்டிற்குப் பெண்கள் ஆணையம் Women's Commission ஒன்றையும் அமைத்துள்ளோம். சமுதாயத்தில் சரிபாதியாக, எண்ணிக்கையில் மட்டுமின்றி, உரிமையிலும், உணர்விலும், மகளிர் விளங்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு சமூக நலத் திட்டங்களை, நாங்கள் ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டுள்ளோம். அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்றவை, சமுதாயத்தில் ஒரு மாபெரும் மாறுதலையும், எழுச்சியையும் உண்டாக்கி வருவதை, நான் கண்கூடாகக் கண்டு வருகிறேன்.

மகளிரின் பிரச்சினைகளைச் சட்ட ரீதியாக அணுகி, தீர்வு காண்பதற்காக, மாவட்டந்தோறும், 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்', எனது நேரடிப் பார்வையில், அமைக்கப்பட்டு வருகின்றன. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், நாம் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் கூட, சட்ட ரீதியான தீர்வுகளை, மகளிர் பெறுகின்ற ஒரு தனி அமைப்பை, இன்று வரை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. எனவேதான், மகளிரின் சமுதாய வளர்ச்சிக்கு, அத்தகைய அமைப்புகளை உண்டாக்கித் தருவதில், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன்.

இத்தகைய காவல் நிலையங்களை, நாடி வருகின்ற மனுதாரர்கள், படிக்காதவர்களாகவும், பாமரர்களாகவும் இருக்கக் கூடும் என்பதால், அவர்களைச் சகோதரிகளாக, தாய்மார்களாகக் கருதி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அன்பாகவும், ஆதரவாகவும் நடத்த வேண்டும் என்று, அனைத்து மகளிர் காவல் நிலையப் பெண் ஆய்வாளர்களையும், பெண் காவலர்களையும், கேட்டுக் கொண்டு வருகிறேன். தற்போது செயலாற்றி வருகின்ற, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அத்தகைய ஒரு சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருவதைப் பலர் என்னிடம் நேரில் எடுத்துரைத்திருக்கிறார்கள். அத்தகைய ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை', இன்று மதியம், வேலூர் நகரத்தில், இம்மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வைப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அதே போல, இன்று பிற்பகல் வேலூர் நகரில் 75,000 ரூபாய் செலவில், காவல் துறையினரால், காவலர்களின் நலத்திட்டத்தின் கீழ், தனிப்பட்ட முறையில் கட்டப்பட்டுள்ள, காவலர்கள் ஓய்வு இல்லத்தையும், திறந்து வைக்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் காவல் துறையின் இந்த முயற்சிக்கு, எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவை, ஒரு மாநாடு போலப் பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடு செய்துள்ள, இம்மாவட்டத்து அமைச்சர், அன்புச் சகோதரி திருமதி ஆர். இந்திர



குமாரி அவர்கள், ஒரு பெண்மணியாக இருந்தாலும், ஆண்களுக்கு இணையாக, இன்னும் சொல்லப் போனால், ஆண்களைவிட ஒரு படி மேலாக, அத்தனைச் சீரோடும் சிறப்போடும், இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுக்கள்.

ஆரம்ப காலத்தில் இருந்தே, இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, மிகுந்த ஈடுபாட்டுடன் கழகப் பணி ஆற்றி வருபவர், அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள். கழகத்தில் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, நன்முறையில் செயலாற்றி வருபவர், திருமதி இந்திரகுமாரி அவர்கள். மடை திறந்த வெள்ளம் போல, உணர்ச்சிப் பெருக்கோடு, கருத்துச் செறிவோடு, கேட்பவர்கள் அனைவரும், அதிசயிக்கத் தக்க பேச்சாற்றல் படைத்தவர். எத்தனையோ பேர், புலவர் என்று பெயரைச் சூட்டிக் கொண்டு இருந்தாலும், சகோதரி இந்திர குமாரி அவர்கள், புலவர் என்ற பட்டத்திற்கு, எல்லா வகையிலும் தகுதி உடையவர் என்பதை, நான் நிச்சயமாக எடுத்துச் சொல்ல முடியும்.

பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, இடைத் தேர்தலாக இருந்தாலும் சரி; தேர்தல் காலங்களில் இவரது பங்கு, எப்போதுமே கணிசமாக இருக்கும். இந்த மாபெரும் இயக்கத்திற்கு, நான் தலைமை ஏற்ற பின்பு, நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும், இவர் மிகுந்த ஈடுபாட்டுடன், மகளிர் அணியை ஒன்று திரட்டி, ஊண் உறக்கமின்றி, வீடு வீடாகச் சென்று, தேர்தல் பணி ஆற்றியதை, என்னால் நிச்சயமாக மறக்க முடியாது எடுத்த பணி எதுவாக இருந்தாலும், அதை விரைவாகவும், திறமையாகவும், முடிக்கின்ற, மன உறுதியும், ஆற்றலும், அவரிடம் இயற்கையாகவே இருக்கின்றது. இருப்பினும், பார்ப்பதற்கு எளியவராகவும், பழகுவதற்கு இனியவராகவும், மெய் வருத்தம் பாராமல், சலிக்காமல், உழைக்கக் கூடிய பக்குவத்தையும் பெற்ற ஒரு



வல்லவர். படிப்படியாக இயக்கத்தில் உயர்வு பெற்று, இன்று மகளிர் அணி செயலாளராகவும், நாட்ராம்பள்ளி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும், சமூக நலத் துறை அமைச்சராகவும், திறம்பட, நமது அனைவரது பாராட்டையும் பெற்று, செயலாற்றி வருகின்றார். தான் பொறுப்பேற்றுள்ள துறையின் அத்துணை விவரங்களையும், விரல் நுனியில் வைத்து இருக்கும், நிர்வாகத் திறமை படைத்தவர் அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள். இவரது நிர்வாகத்தின் கீழ், தமிழகத்தின் சமூக நலத் துறை, நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்கள், மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடித் திட்டங்களாக அமைந்துள்ளன.

கொண்ட கொள்கையில் உறுதியும், ஏற்றுக் கொண்ட தலைமையின் மீது விசுவாசமும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டு உள்ள இவர், தான் எடுத்த முடிவில், எந்த விதமான தடுமாற்றமும், சஞ்சலமும் இன்றி, உறுதியுடன் நிற்கக் கூடியவர். அத்தகைய உறுதியும், கடுமையான உழைப்பும்தான், இன்று அவரை இந்த உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

மாவட்டம் தோறும், அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவை, அந்த மாவட்டத்தின் அமைச்சர்கள், சிறப்புறச் செய்வது வழக்கம். ஆனால் இதுவரை ஆண் அமைச்சர்கள் மட்டுமே, இது போன்ற மிகப் பெரிய விழாக்களை, ஏற்பாடு செய்து உள்ளார்கள். இன்று இந்த மாவட்டத்தில், தமிழக அமைச்சரவையில், என்னைத் தவிர உள்ள ஒரே பெண் அமைச்சரான, அன்புச் சகோதரி இந்திர குமாரி அவர்கள், இந்த விழாவை இத்தனைச் சிறப்பாக ஏற்பாடு செய்து, ஒரு பெண், ஒரு ஆணுக்கு, எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல என்பதை, நிரூபித்துக் காட்டி இருக்கிறார், என்பதை நினைக்கும் போது, ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில், என் மனம் ஆனந்தப் பூரிப்பு அடைகின்றது. அவரது பணி மேலும் சிறக்க, எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இந்த விழாவை, இத்துணைச் சீரோடும், சிறப்போடும் ஏற்பாடு செய்த, சகோதரி இந்திர குமாரி அவர்களுக்கும், அவருக்கு ஒத்துழைப்பை நல்கிய, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும், எனது பாராட்டுக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்கு வருகை தந்த என்னை, ஒரு புதிய எழுச்சியுடன் வரவேற்ற, இம்மாவட்ட வாழ் மக்கள் அனைவர்க்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, பல்லாண்டு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழ் வளர்த்த பெரியார்:

# பேரறிஞர் அண்ணா



எண்ணற்ற எழுத்தோவியங்களால் சொல்லோவியங்களால் எல்லாருடைய இதயங்களிலும் குடியிருப்பவர் -

'தம்பிக்குக் கடிதம்' எழுதி, தமிழ்-தமிழர்-தமிழ்நாடு உயரவும், இளைஞர்கள் எழுச்சிபெறவும், தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி விழிப்புணர்ச்சியூட்டியும், காலமெல்லாம் தம் எழுத்துக்களைப் பயன்படுத்தியவர்-

மேடைப் பேச்சுக்கு இலக்கணம் வகுத்து, மேதினி மேன்மையுறக் கருத்து மழை பொழிந்தவர்-

சிந்தனையாலும், செயலாலும் செயற்கரிய செயல்களைச் செய்து செகமிசை வாழ்வாங்கு வாழ்ந்தவர்-

அவர்தான், பேரும் புகழும் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணாவின் வாழ்க்கை, கடல் போன்று பரந்துபட்டது. அந்தக் கடலிலிருந்து ஒரு சில துளிகளை மட்டும் இப்போது பார்ப்போம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1909-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் காஞ்சிபுரத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர் நடராசன், பங்காரு அம்மையார். இவரை வளர்த்து ஆளாக்கியவர் பங்காரு அம்மையாரின் தங்கை இராசாமணி அம்மையார். அண்ணா தம் சிற்றன்னையைத் 'தொத்தா' என்று அழைத்துவந்தார்.

முதலில் அண்ணா, காஞ்சிபுரம் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். 1928-இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று எம்.ஏ., பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அவர் புத்தகங்களை நிறையப் படித்தார். நூலகங்களைத் தேடிச் சென்றார்.

கல்லூரிக் காலத்திலேயே எழுத்திலும், பேச்சிலும் வல்லமை பெற்று விளங்கினார் அண்ணா.

1930-இல் அண்ணாவுக்குத் திருமணம் நடந்தது. துணைவியார் ராணி அம்மையார்.

1935-இல் சென்னை கோவிந்தப்ப நாயக்கர் நடுத்தரப் பள்ளியில் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இதே ஆண்டில் தந்தை பெரியார் அவர்களை முதன்முதலாகத்திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில் சந்தித்தார்.

நீதிக் கட்சியின் கொள்கைகள் அண்ணாவைப் பெரிதும் கவர்ந்தன. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே இந்தக் கட்சி, திராவிடர்களுக்கு ஆற்றி வந்த அரும்பணிகள் குறித்து அறிந்திருந்தார் அண்ணா.

அப்போது நடந்த சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலில் அண்ணா அவர்கள் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார். என்றாலும், அவர் பணி தொய்வில்லாமல் தொடர்ந்தது. அண்ணாவின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் ஈர்க்கப்பெற்ற எண்ணற்ற இளைஞர்கள், அண்ணா வழியை ஆர்வமுடன் பின்பற்றத் தொடங்கினர்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அண்ணாவின்





உருவத்தில் தமிழன்; உயர்குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில் தமிழன் அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நம் அண்ணா. பரந்த நெற்றி, குறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டுமஸ்தான உடற்கட்டு, பந்தயக் குதிரைபோன்று விறுவிறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள்ளம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் தோழர் அண்ணாதுரை.

—கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

எழுத்தும் பேச்சும் வளர்ந்தது.

1937-இல் 'நவயுகம்' என்னும் திங்கள் இதழின் ஆசிரியர் ஆனார் அண்ணா.

1938-இல் இந்தி மொழி தமிழ் நாட்டில் கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. அதை எதிர்த்து முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக அண்ணா 4 மாதச் சிறைத் தண்டனைப் பெற்றார். இதற்குப் பிறகு அதாவது 1939-இல், தந்தை பெரியாரோடு அண்ணா நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்தார். இதே ஆண்டில் அண்ணா, நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

1940-இல் அண்ணாவின் முதல் புதினம் 'குமாஸ்தாவின் பெண் அல்லது கொலையாளியின் குறிப்புகள்' என்னும் நூல் வெளிவந்தது.

1942-இல், 'திராவிட நாடு' என்னும் திங்களிதழை அண்ணா தொடங்கினார். இந்த இதழில் அண்ணாவின் எழுத்தோவியங்கள் அனைவரையும் கவர்ந்தன. சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பொதிந்த கட்டுரைகள், சிந்தனைச் சிதறல்கள் முதலியன இளைஞர்கள் மத்தியில் எழுச்சியை உண்டாக்கின. அரசியல் தெளிவு பெறத் தக்க அற்புதமான கட்டுரைகள் இதழ்தோறும் இடம் பெற்றன.

1943-இல், அண்ணாவின் முதல் நாடகம் 'சந்திரோதயம்' அரங்கேறியது. அந்த நாடகத்தில் அண்ணாவும் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1944 இல், சேலத்தில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் கட்சியின் பெயரை 'திராவிட கழகம்' என்ற தீர்மானத்தை அண்ணா முன்மொழிந்தார். மீண்டும் 1948-இல் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டது. இதை எதிர்த்து அண்ணா சிறை சென்றார்.

1949 இல் தனியே ஓர் இயக்கம் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டது;

1950-இல், 'ஆரிய மாயை' என்னும் நூலை எழுதியதற்காக அண்ணா அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பபட்டது. 1959-இல் அண்ணா காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962-இல் நாடாளுமன்றத்தில் அண்ணாவின் குரல் ஒலித்தது. அதைக் கேட்டு அந்த அவையே கலகலப்படைந்தது. - கருத்து மழையிலே நனைந்தது.

விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று பல போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்று சிறை புகுந்தச் செம்மல் அண்ணா.

1967 மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாள் தமிழ்த் த்தாயின் தலைமகன் தமிழ்நாட்டின் முதலமைச்சரான பொன்னாள்! அண்ணா, குறுகிய காலமே ஆட்சிப் பீடத்திலே இருந்தார் என்றாலும், அளப்பரிய செயல்களைச் செய்தார். ஏழை எளிய மக்களின் துயர் போக்கும் திட்டங்களைத் திட்டினார். படி அரிசித் திட்டத்தை — அதாவது ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார். கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வி வழங்கவும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கவும் தக்க ஏற்பாடுகள் செய்தார். தொழிலாளர் தினமான மே நாளை அரசு விடுமுறையாக அறிவித்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, 1968 டிசம்பர் திங்களில் — தமிழ் நாட்டிற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது, தமிழக வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நிகழ்ச்சியாக அமைந்தது.

ஆம், 'தமிழ்நாடு' பெயர் சூட்டும் விழா சென்னையிலேயே சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அண்ணா அவ்விழாவில் கலந்து கொள்ள வேண்டும் ஆனால், அந்தச் சமயத்திலே அண்ணா நோய்வாய்ப் பட்டிருக்கிறார். அவர் எண்ணம் எல்லாம் அந்த விழாவையே சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், மருத்துவர்களோ விழாவில் கலந்துகொள்ள வேண்டாம் என்றும், முழு ஓய்வு தேவை என்றும் வற்புறுத்தினார்கள். ஆனால், அண்ணாவோ இந்த விழாவில் கலந்துகொள்ளாத உடம்பில் உயிர் இருந்தால் என்ன! போனால் என்ன!" என்று கூறி, 'தமிழ்நாடு' பெயர் சூட்டு விழாவில் கலந்துகொண்டு பேருரை ஆற்றியது தமிழகத்தையே தலை நிமிரவைத்தது.

1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ஆம் நாள் சென்னை மாநகரில் 'இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்'டை அண்ணா மிகச் சிறப்பாக நடத்தியதை, தமிழ் உலகமே பாராட்டியது.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்: "தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறை



**சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் மேம்பாட்டுக்காகச் செயல்படும் அரசு, இந்த அரசு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணாவின் எண்ணங்களுக்கு, உருக்கொடுக்கும் அரசு; அவரது கொள்கைகளை நெஞ்சில் சுமந்து செயலாற்றும் அரசு.**

யில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால், தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்" என்று தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை இதைவிட வேறு யாரால் சொல்ல முடியும்.

1968-ஏப்ரல் 15-இல் அமெரிக்க ஏல் பல்கலைக்கழகம் அண்ணாவிற்கு 'பெல்லோசிப்'– வழங்கி மகிழ்ந்தது.

தமிழுக்கும், தமிழர் நல்வாழ்விற்கும் காலமெல்லாம் உழைத்த அண்ணாவைக் கடுமையான புற்று நோய் பற்றியது. சிகிச்சைக்காக அண்ணா அமெரிக்கா சென்றார். வெற்றியுடன் அறுவைச் சிகிச்சை முடிந்து சென்னை, திரும்பினார்.

1969-இல் ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள், கலைவாணர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில் அண்ணா கலந்து கொண்டார். இதுவே அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சியாகும். இதே ஆண்டு ஜனவரி 20-இல் புற்றுநோய் முற்றியதன் காரணமாக அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் அண்ணா. அமெரிக்க மருத்துவர் மில்லர் இரண்டாம் முறையாக அண்ணாவிற்கு அறுவைச் சிகிச்சை செய்தார். ஆனால், சிகிச்சை பலனளிக்காமல், 1969 பிப்ரவரி 2-இல் பேரறிஞர் அண்ணா, நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார். யாருக்காக அண்ணா கண்ணீர் விட்டுக் காலமெல்லாம் உழைத்தாரோ, அவர்களெல்லாம் அண்ணாவின் பிரிவைத் தாங்காது கதறி அழுதார்கள்.

அண்ணா நம்மைவிட்டுப் பிரிந்தாலும், அவர் விட்டுச் சென்ற அழியாச் செல்வங்களான கருத்து மணிகள் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா மிகச் சிறந்த அரசியல்வாதியாக, தத்துவமேதையாக, மனிதநேய மாமனிதராக, மக்கள் போற்றும் தலைவராக, தலைசிறந்த சிந்தனையாளராக, சீர்திருத்தவாதியாக விளங்கி, தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தார். அவரால் தமிழ் தழைத்தது. அவரது வாழ்வு தமிழ் வாழ்வாகவே மலர்ந்து மணம் வீசியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றாரை மதிக்கும் பண்பு உடையவர். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று அவர் கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தமுண்டு.

அண்ணா அவர்கள், நாட்டு மக்களுக்கு நற்கருத்துக்களை வழங்கிட ஒரு சிறந்த கருவியாகப் பத்திரிகைகளைப் பயன்படுத்தினார். பால பாரதி, நவயுவன், திரவிட நாடு, நம்நாடு, காஞ்சி, Home Land, Home Rule ஆகிய இதழ்களின் ஆசிரியராகப் பணி ஆற்றினார்.

பத்திரிகைகளில் தலையங்கம் தீட்டுவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. அதற்குச் சிந்தனைத் திறனும் செயல் திறனும் மிகமிக முக்கியமானதாகும்.

அண்ணா அவர்கள் எழுதிய தலையங்கங்கள்தலையங்கம் எழுதுவதற்கு முன்மாதிரியாக மட்டுமல்ல, தலையெழுத்தையே மாற்றி அமைக்கும் வகையிலும் அமைந்திருந்தது என்றால் அது மிகை அல்ல.

அண்ணா அவர்கள் ஏராளமான படைப்புகளை இந்தத் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார்கள். செவ்வாழை, காதல் ஜோதி, இன்ப ஒளி, பித்தளையல்ல பொன்னேதான், வெள்ளை மாளிகையில், ரோமாபுரி ராணிகள், சந்திரமோகன், வண்டிக்காரன் மகன், ஓர் இரவு, சந்திரோதயம், ரங்கோன் ராதா, வேலைக்காரி இப்படி அவரது எழுத்தோவியங்களைப் பட்டியல் போட்டுச் சொல்லலாம்.

இவற்றுள் ஓர் இரவு ஒரே இரவில் எழுதி முடித்த நாடகமாகும்.

தமிழ் தமிழ் என்று கூறுகின்றோம். ஆனால், அந்தத் தமிழை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? என்பதற்கு அண்ணா அவர்கள் ஓர் அருமையான விளக்கத்தைத் தந்திருக்கிறார்:

"தமிழர் வாழ்வு தழைக்க, தமிழ் மணம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ, தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத் தான் உணர்ந்து தன்னம்பிக்கை பெற்று–தன்னையும், தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத் தெரிந்து புரிந்து-தெளிந்து-வாழும் நிலைக்கான வகையில்-வழியில்-முறையில், முத்தமிழ் விளங்க வேண்டும்; பயன்பட வேண்டும்; பயன்படுத்தப்பட வேண்டும்".

அண்ணா அவர்கள், மற்றவர்களின் திறமையை மதித்தார். அவ்வாறு மதிப்பதுதான் பண்பு என்றும் கூறிவந்தார். அதுமட்டுமல்ல; நம்முடைய திறமை நமக்காக அல்ல, நாட்டுக்காகப் பயன்பட வேண்டும் என்று கூறினார்.

பெண் கல்வி குறித்துப் பல பெரியவர்கள் பேசியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள், "பெண் கல்வி நாட்டில் எந்த அளவிற்கு உயருகின்றதோ, அந்த அளவிற்கு நாடு மேம்பாடு அடைகின்றது என்று பொருள்"என்றுஇரத்தினச் சுருக்கமாக உணர்த்தினார்.

இவ்வாறு அண்ணாவின் கருத்து முத்துக்கள், அலை அலையாய் வந்தன. அவையாவும் கடல் அலைப் போலக் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

– பி.வி. கிரி





தந்தை பெரியார் அவர்களின் 116-வது பிறந்த நாளையொட்டி சென்னை, அண்ணா மேம்பாலம் அருகே அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் வாரியத் தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்—17.9.1994.

## படமும் - செய்தியும்

பேரறிஞர் அண்ணா அவர்களின் 86-வது பிறந்த நாளையொட்டி தஞ்சாவூர், நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர்பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்-15.9.1994.



## மாணவர் பக்கம்



# மகாத்மா காந்தி

—கலைப்பொழிலன்

அன்பும் பண்பும் ஒன்றாக
அமைந்த மனிதர் காந்தி!
குன்று போலே புகழ்நிற்க
கொள்கை கண்டவர் காந்தி!

தீண்டா மையெனும் கொடுமையை
வேண்டாம் என்றவர் காந்தி!
ஆண்டான் அடிமை வேற்றுமையை
அகற்றச் சொன்னவர் காந்தி!

கண்ணன் சொன்ன கீதைவழி
கடமை செய்தவர் காந்தி!
உண்மை ஒன்றே கடவுளென
உணர்த்தி வாழ்ந்தவர் காந்தி!

இந்திய நாட்டின் தந்தையென
இசைக்கப் படுபவர் காந்தி!
முந்தைய பெருமை அத்தனைக்கும்
முடிமணி மகாத்மா காந்தி!



**வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கூட்டத்திலும்-எதிலும் எப்போதும் நேர்மை இருக்க வேண்டும்; உண்மையிருக்க வேண்டும்.**

## அறிவுச்சுடர்

தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்-
அலெக்சாந்தர் கிரகாம் பெல்.

ரயில் இஞ்சினைக் கண்டு பிடித்தவர்- ஸ்டீபென்சன்.

காடுகள் அதிகமுள்ள மாநிலம்- திரிபுரா.

அம்மைத் தடுப்பு மருந்து கண்டவர்- எட்வர்ட் ஜென்னர்.

நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர்- கவியரசர் தாகூர்.

கம்பளம் அதிகமாக உற்பத்தியாகும் நாடு- ஈரான்.

சாரணர் இயக்கத்தை ஏற்படுத்தியவர்- பேடன் பௌல்.

சந்தனமரங்கள் அதிகமாகக் கிடைக்குமிடம்- கர்நாடகம்.

தென் மாநிலங்களில் அதிகம் பயிராகும் உணவு- ராகி.

ஜூடோ குத்துச் சண்டையின் பிறப்பிடம்- ஜப்பான்.

சிகப்பு ரோஜா நகரம்- ஜெய்ப்பூர்.

"கும்பமேளா" நடைபெறும் இடம்- ஹரித்துவார்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் தொடங்கிய ஆண்டு-
செப்டம்பர் 1 - 1956

**உலகின் மிகப் பெரிய நூலகம்- வாஷிங்டனில் உள்ளது.**



## இராமநாதபுரம்

# கட்டட மையம்

## சீர்மிகு பணிகள்

**ம**னிதன் வசிப்பதற்கு வீடு மிகவும் அவசியம். வீடு கட்டுவது தற்காலத்தில் கடினமான காரியம். 'வீடு கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்' என்பார்கள். சிரமப்பட்டு வீடு கட்டினாலும் அதைப் பராமரிக்கும் செலவு ஆண்டுதோறும் கூடிக்கொண்டே போகிறது. "யானை அசைந்து தின்னும். வீடு அசையாமல் தின்னும்" என்கிற பழமொழி இதைப் புலப்படுத்தும் . அவரவர் தன்னிடம் இருக்கும் நிதி நிலைமைக்கு ஏற்ப வீடு கட்டிக் கொள்ள வேண்டும். வீடு கட்டுவதில் சிக்கனத்தைக் கடைப் பிடித்து குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் புதிய தொழில் நுட்பத்தைக் கையாள வேண்டும். இந்தப் புதிய சிக்கனமான தொழில்நுட்பத்தை "ஹட்கோ" இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு உதவியுடன் பொது மக்களுக்கு அறிமுகப் படுத்துவதில், இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையமாவது 'ஹட்கோ' இந்திய அரசு தமிழ்நாடு அரசு உதவியுடன் இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமையின் மூலம் இயங்கிவருகிறது.

இளைஞர்களுக்கு - குறிப்பாக கட்டடத் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது. முதலில் இராமநாதபுரம் அருகிலுள்ள கிராமப்புற இளைஞர்களைத் தூண்டி 'டிரைசம்' திட்டம் மூலம் பயிற்சி அளித்துள்ளது. பயிற்சி பெற்றவர்கள் தனியாய்த் தொழில் செய்கிறார்கள். அதையறிந்து தற்போது நிறையப்பேர் பயிற்சி பெற முன்வருகிறார்கள். இங்கு பயிற்சி பெறும் கட்டடத் தொழிலாளிகளைப் பயன்படுத்தியே கட்டட மைய வளாகத்தில் டிரைசம் உள்ளமைப்பு வசதிக்கான கட்டங்கள் குறைந்த செலவிலான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டு வருகின்றன. அவை முடிவடையும் தறுவாயில் உள்ளது.

ஏற்றி வைத்த ஒரு விளக்கு தொடர்ந்து அணையா விளக்காக எரிந்து ஒளிவீச ஒருவர் எண்ணெய் ஊற்றித் திரியைத் தூண்டிவிடுதல் அவசியம். அதுபோல் இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் என்னும் விளக்கை முன்னாள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். ஆதிசேஷய்யா, இ.ஆ.ப. அவர்கள் ஏற்றி வைத்து, அதை அடுத்து வந்த முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். ஜனார்தன், இ.ஆ.ப. அவர்கள் தூண்டி வளர்த்ததைத் தொடர்ந்து தற்போது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் கட்டட மையத்தின் பெருந்தலைவருமான திரு இல. கிருட்டிணன், இ.ஆ.ப. அவர்கள் கட்டட மையத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும் முழு முதற்காரணமாக இருந்து ஊக்குவித்து வளர்க்கும் அருந்தலைவராயிருக்கிறார்.

ஆரம்ப நிலையில் இக்கட்டட மையத்தில் திட்டப் பணிகள் வெற்றிகரமாகச் செயல்படாமைக்குக் காரணம் சில ஒன்றியப் பொறியாளர்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்கள் குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்ப முறைகளில் போதிய ஆர்வம் காட்டி ஒத்துழைக்காததும், சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளாலும் தான்.

ஆனால், தற்போது மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் அவர்கள் இடையறாத தூண்டுதலின் பேரில் நன்முறையில் மேற்கூறிய குறைகளின்றி நல்ல நிலையில் செயற்பட்டு வருகிறது.

ஆரம்ப நிலையில் வளர்ந்து வரும் கட்டட மையத்தில் மிகக் குறைந்த ஊழியர்களுடன் செயல்பட்டு வருவதால் அவ்வளவு பணிகளையும் மையமே ஏற்று நடத்துதல் அரிது. சமீபத்தில் கட்டட மையத்தில் பெரிரோ சிமெண்ட் கதவுகள் தயாரிக்கும் முறையைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியப் பொறியாளர்களுக்கும், ஒன்றிய மேற்பார்வையாளருக்கும் ஒரு நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதனால், மரக்கதவுகள் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு காடுகள் அழிவதும் தவிர்க்கப் படும்.

குறைந்த செலவிலான நவீன தொழில்நுட்ப முறைகளை வீடுகள் கட்டுவதில் அறிமுகப்படுத்தும் வகையில் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்துறையின் உதவி (Research & Development) பெரிதும் துணையாய் உள்ளது. ஆனால், அவை பொதுவான வீடுகட்டும் முகமை அளவிலோ (Public Housing Agency Level) தனியார் அளவிலோ பெரும் பயன் விளைவிக்கவில்லை.

இதனைக் கருத்திற் கொண்டும் இந்திய அரசு, தேசிய அளவிலான கட்டட மையங்கள் அமைப்பை நாட்டின் பல மாவட்டத் தலைமை இடங்களில் நிறுவியது. அதன் விளைவாக நமது தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டக் கட்டட மையம் உருவாக்கப்பட்டது.

1. குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்ப முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது.

2. கட்டடத் தொழிலாளிகளின் திறனை வளர்ப்பது, கட்டடத்

தொழிலாளி அல்லாத மற்றவர்களுக்குக் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுவது.

3. குறைந்த செலவிலான தொழில்நுட்பப் பொருட்கள் தயாரித்து நியாயவிலையில் விற்பனை செய்வது.

4. கட்டுமான முகமையாக இயங்கி அரசு மற்றும் அரசு அல்லாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது.

5. குறைந்த செலவிலான புதிய கட்டுமானத் தொழில் நுட்பங்களைப் பயிற்சியின் மூலம் கற்றறிந்த பயிற்சியாளர்களுக்கு இயன்றவரை வேலை வாய்ப்பு அளிப்பது.

## ஹட்கோ/ இந்திய அரசு நிதியுதவி

இந்திய அரசின் சார்பாக ஹட்கோ நிறுவனம் ஒத்துழைத்து, குறைந்த செலவிலான தொழில் நுட்பத்திற்கான விவரங்களை அளிப்பதிலும் உறுதுணையாகச் செயல்படுகிறது. மையத்திற்கான நிதியுதவியாக முதலில் ரூ.2/ இலட்சம் வழங்க ஹட்கோ/ இந்திய அரசு அனுமதி அளித்தது. இம்மையம் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி சொசைட்டிப்பதிவுச் சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. இம்மையத்தின் செயல்முறைகளை வளர்க்க இதன் பெருந்தலைவராக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரும், உறுப்பினர் செயலாளராக இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும்,நிர்வாகச் செயலாளராக மையத்தின் திட்டப் பொறியாளரும் உள்ளனர். இராமநாதபுரம் கீழக்கரை சாலையில் அமைந்துள்ள இராஜசூரியமடை கிராமத்தில் 2 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டது. 9.8.1991 இல் செல்வி ம.ரா.கேந்திராதேவி திட்டப் பொறியாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மையம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப் பட்டது. திட்டப் பொறியாளர் செப்டம்பர் 1991- இல் கேரளாவில் உள்ள கொல்லம், திருச்சூர், பாண்டிச்சேரி ஆரோவில் ஆகிய இடங்களில் பயிற்சி பெற்றார். அந்த இடங்களுக்குக் தலைமைக் கொத்தனாரும் அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றார்.

இராஜசூரியமடை கிராமத்தில் அமைந்துள்ள கட்டட மையத்திற்கான நிலத்தில் ஒரு சிறிய 3மீ 6மீ 18 சதுர மீட்டர் அளவிலான அறையும் 50 ச.மீ. வார்ப்புத்தளம் ஒன்றும் அமைக்கப்பட்டன. இந்தக் கட்டட வேலையைக் கட்டட மையமே ரேட் டிரப் இணைப்பு முதலான குறைந்த செலவிலான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டி, முடித்து 4- இல் ஒரு பங்குச் செலவைச் சேமித்தது.அங்கு 6.1.1992 லிருந்து டிரைசம் திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி நடைபெற்றது.

## முதல் திட்டப்பணி

சுந்தரமுடையான் மாதிரி தோட்டக்கலைப்பண்ணையில் ஒரு பண்டக அறையும், பணிக்கூடம் ஒன்றும் கட்டும் கட்டுமானப் பணி முதல் திட்டப்பணியாக ஏற்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் 20 சதவீதம் சிக்கனம் அமைந்தது. இத்திட்டப்பணிகளில் இம்மையத்தில் பயிற்சி பெற்ற பெண்களே கலந்து கொண்டு பணியாற்றி வந்தது சிறப்பிற்குரியது.

## மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பிரதான மையம்

இராஜசூரியமடை கிராமத்தில் அமைந்த 2 ஏக்கர் நிலத்தில் தண்ணீர் வசதி இல்லாததால் மையம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அரசு விருந்தினர் இல்லம் அருகே 0.75 ஏக்கர் நிலத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலம் பிரதான மையமாகக் கருத்தில் கொள்ளப்பட்டது. இராஜசூரியமடை கிராமத்தில் உள்ள நிலமானது கட்டட மையத்தில் கிராம உப மையமாக்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்தச் சிறு அறை கிராம நிர்வாக அலுவலருக்குச் சாவடியாக ரூ.50/ மாத வாடகையில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

## கட்டட மையத்தின் முதன்மை உள்ளமைப்பு வசதிகள்

கட்டடமைய உள்ளமைப்பு வசதிகளுக்கான கட்டடங்கள்





கட்டுமானப் பணிகளைத் தொடங்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டது. இம்மையத்திற்கு டிரைசம் மற்றும் நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக உள் அமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதன் விபரம் பின்வருமாறு:

## டிரைசெம் உள்ளமைப்பு நிதிமூலம்

1. ஒரு அலுவலக அறை 2. ஒரு வகுப்பு அறை 3. தண்ணீர் தொட்டி 4.ஆர்.சி.சி. வட்டக் கிணறு 5. வார்ப்புத்தளம் 6. பண்டக அறைகள் 7. பயிற்சியாளர்கள் தங்கும் அறைகள்.

## அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம்

இம்முகாமில் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்ப முறைகளான ரேட் டிரப் இணைப்பு, வளைவுகள், பெர்ரோ சிமிண்ட் கதவு முதலானவற்றின் மாதிரிகள் பொதுமக்களின் காட்சிக்கு அமைக்கப்பட்டன. மேலும் தலைப்பு விரிவுரைகள் மூலமாகவும் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்பக்குறிப்புகள் என்ற சிறு புத்தகம் வெளியிடப்பட்டு மக்களுக்கு விளக்கியது.

## இந்தியக் கான்கிரிட் இன்ஸ்டிடியூட் உதவியுடன் பயிற்சி முகாம்

18.3.1994 அன்று இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டிடியூட் உதவியுடன்கட்டடத் தொழிலாளிகளுக்குக் குறைந்த செலவிலான கட்டடத் தொழில் நுட்படங்களில் பயிற்சி நடத்தியது. சுமார் 49 கட்டடத் தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். திரு.டி.சீனிவாசன், செயல் மேலாளர், இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டிடியூட், டாக்டர் திரு ஏ.ஆர் சாந்தகுமார் பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திரு எம். நீலமேகம் விஞ்ஞானி கட்டுமானத் தொழில் நுட்ப ஆராய்ச்சி மையம், சென்னை 2 - ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை நடத்தினார்கள்.

> ★ ஒருவரின் செயலானது
> மற்றொருவரின் மனதை
> நிறைவு செய்வதாக இருக்க
> வேண்டும்; அப்படி
> இருக்குமானால், அதுவே
> அந்தச் செயலுக்குக்
> கிடைத்த கடமையின் பரிசு
> ஆகும்.
>
> சியார்ஜ் எலியட்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இராமநாதபுரம் கட்டட மையத்தின் பெருந்தலைவரும், கட்டட மையத்தின் செயலாளரான இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சித்திட்ட இயக்குநரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். விவசாயிகள் பலர் கட்டட மையத்தில் இருந்த மாதிரிகளைப் பார்த்து விவரம் அறிந்தார்கள்.

## தொழில் நுட்ப ஆலோசனை மையமாகச் செயல்படல்

பெரட்டகவயல், பண்டிக்கணோய், மணிகண்டி ஆகிய இடங்களில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்படும் சில கட்டடங்களுக்கு, குறைந்த செலவிலான தொழில் நுட்ப ஆலோசனை அளித்து அந்தந்த ஒன்றியங்கள் மூலம் கட்டப்பட்டு வருகிறது.

## 1994-95-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

பொது விநியோகக் கட்டடங்கள் இந்த ஆண்டில் இராமநாதபுரம், திருப்புல்லாணி, பரமக்குடி, முதுகுளத்தூர், கடலாடி, நயினார் கோவில் ஆகிய ஒன்றியங்களில் கட்டட மையத்தின் ஆலோசனையுடன் குறைந்த செலவிலான தொழில் நுட்ப முறைகளான ரேட் டிரப் செங்கல் இணைப்பு ஆர்.சி.சி. பில்லர் ஸ்லாப் போன்றவற்றைப் பயன்படுத்திக் கட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

மேலும், அனைத்து ஒன்றியத் திட்டப் பணிகளில் 30% சதவீத பணிகளைக் குறைந்த செலவிலான கட்டுமானத் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தி முடிக்க மாவட்ட ஆட்சியர் / பெருந்தலைவர் அவர்களால் ஆணையிடப்பட்டது.

## "தானே இயங்கல்" நிறுவனம்

இக்கட்டட மையமான திட்டப் பணிகளிலும், குறைந்த செலவிலான கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்தும், நியாயமான கட்டணம் விலை வைத்து அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தானே செயற்பட்டு இயங்குகிறது.

இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 20.5.1994 அன்று நடைபெற்ற கட்டட மைய செயற்குழுக் கூட்டத்தில் கட்டடமைய ஆலோசனையில் எடுக்கும் கட்டடங்களில் மதிப்பீட்டுத் தொகையில் 3 சதவீதம் மேற்பார்வைக் கட்டணமாகவும் (SUPERVISION CHARGES) ஆலோசனை மதிப்பீட்டுத் தொகையாக ரூ. 50-ம் கட்டட மையமே நிறைவேற்றும் கட்டுமானத் திட்டப் பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையில் 12.50 சதவீதத் தொகையும் நிர்ணயிக்கப்பட்டன. மீன் வளத்துறையின் அதிகாரிகளுக்கான கட்டடங்கள் கட்டும் கட்டுமானப் பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

## விற்பனை மையமாக இயங்கல்:

இந்த ஆண்டில் விற்பனை மையமாகவும் செயல்பட்டு மீன் வளத்துறை மற்றும் இராமநாதபுரம் நகராட்சிக்கு பெர்ரோ சிமின்ட் தொட்டி, கதவு, ஆர்.சி.சி. நிலை போன்ற பொருள்கள் மையத்தில் தயாரித்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகப் பணி உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

## "குறைந்த செலவில் கட்டடத் தொழில் நுட்பக் குறிப்புகள்:



ரேட் டிரப் செங்கல் இணைப்பு என்பது சாதரணமாக அமைக்கும் இணைப்பைச் சற்று மாற்றி அமைக்கும் முறையாகும். செங் கல்லைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கிச் சுவர் நடுவில் இடை வெளிஇருப்பதுபோல் கட்டுவது தான் இம்முறை. இவ்வாறு கட்டினால் நமக்கு 20%முதல் 25% வரை செங்கல் மற்றும் சிமின்ட் மிச்சமாகும். இவ்வாறு கட்டும் சுவர் உறுதியாகவும் வெப்பக்கசிவு, மிதமாகவும் இருக்கும். இச்சுவரில் குழாய் மற்றும் மின்சாரக் கம்பிகள் உட்புறமாக எளிதாகப் பொருத்தி வரலாம்.

## நிரப்பிய கான்கிரிட் (பில்லர் கிலாப்)

வீடு கட்டுவதில் அதிகச் செலவாகும் இடம் மேற் கூரையாகும். அதை நிவர்த்தி செய்ய ஒரு புதிய முறையை நாம் கையாளலாம். தற்போது கான் கிரீட் தேவையில்லாத இடங்களில் குறைந்த எடையுள்ள ஓடுகள் அல்லது செங்கல் வைத்து கான்கிரீட் கூரையை அமைக் கலாம். இம்முறையில் சாதாரண கான்கிரீட் கூரை அமைப்பது போல் பலகையை அடித்து, இரண்டு மங்களூர் ஓடுகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, இரும்புக் கம்பிகளுக்கிடையில் வைக்க வேண்டும். இதனால் விலை குறைந்த ஓடுகள் இருக்கும் பகுதியில் உள்ள விலை உயர்ந்த கான்கிரீட்டை மிச்சப்படுத்த முடியும் மற்றும் கனமான கான்கிரீட்டைக் குறைப்பதால் கூரை அமைக்க தேவையான இரும்புக் கம்பிகளை மிச்சப் படுத்தலாம். ஓடுகளுக்கு இடையில் வெற்றிடம் இருப்பதால் கோடை காலத்தில் மிதமான சீதோஷ் ணத்தை உணரமுடியாது.

## இரும்பாலான சிமிண்ட் கதவு

மரத்தில் விலை அதிகரிக்கும் இக் காலத்தில் மரத்திற்குப் பதிலாக இரும்பாலாகிய சிமிண்ட் கலவை கொண்டு கதவு தயாரிக்கலாம். இவ்வாறு செய்யும் கதவில் சிமிண்ட் கலவை 1:11/2 (சிமிண்ட் ஒரு பங்கு, மணல் ஒன்றரை பங்கு) வீதத்தில் கலவையை எடுத்துக் கொள்ளவும். 22 கேஜ் கோழி வலையை வேண்டிய அளவுக்கு வெட்டி நான்கு அடுக்காக வைத்து சிமிண்ட் கலவையை மெத்திவிட வேண்டும். பிறகு கதவை ஒரு நாள் உலரவிட்டு ஒரு வாரத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கவிட்டு உறுதிப் படுத்திய பின் வேண்டிய இடங்களில் துளைபோடும் இயந் திரத்தைக் கொண்டு துளை போட்டு - தாழ்ப்பாள், கிழ்சட்டம் போன்றவற்றைப் பொருத்தலாம். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளைவிடச் செலவு குறைவாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருக்கும்.

## ஜன்னல் அல்லது வாயிற்படியின் மேல் உத்திரம்

பொதுவாக ஜன்னல் கதவு போன்ற இடைவெளிகளில் கான் கிரீட் லிண்டல்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. லிண் டல் ஒரு எளிய முக்கோண வடிவிலான செங்கல் சுவரைத் தாங்க மட்டுமே பயன்படுகிறது என்பதை நாம் கருத்தில் கொள்வதில்லை. எனவே, அதிகச் செலவினத்தைக் கொண்ட லிண் டல் அமைப்பதைத் தவிர்க்கலாம். அதற்கு மாறாக இடைவெளிகளில் மேல் அரைவட்ட வடிவம் அமைந்த செங்கல் வளைவுகள் அல்லது படி போன்ற செங்கல் வளைவுகளை அமைக்கலாம். பொதுவாக 4 அடிக்குக் குறை வான இடைவெளி இருப்பின் அவ்விடங்களில் லிண்டல் அமைப் பதற்குப் பதிலாகச் செங்கற்களைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி அமைக்கலாம். இடைவெளி அதிக மாக உள்ள இடங்களில் லிண்டல் அமைக்க வேண்டியிருப்பின் குறை வான கான்கிரீட்டைக் கொண்டு அமைக்கலாம்.

இவ்வாறாகக் கட்டட மையம் இராமநாதபுரத்தில், இராமநாத புரம் மாவட்ட வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு பொ. நெல்லையப்பன் அவர்களின் சீரிய முயற்சியில் இயங்கிவருகிறது.

துரை . ராஜ் குமார்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்



# கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள்!



**காதி கிராப்ட்**

நவராத்திரி என்றதுமே, பொம்மைக் கொலு நம் நினைவுக்கு வரும்.

இல்லங்களிலெல்லாம் கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள் இடம் பெறும்.

விதவிதமான பொம்மைகளை வாங்க, பொம்மைக் கண்காட்சி களுக்கு ஆடவர், மகளிர், குழந்தைகள் எனத் திரளாக வருவதுண்டு.

நகரில் பல இடங்களில் பொம் மைக் கண்காட்சிகள் நடைபெறுவ துண்டு. அந்த வகையில், காதி கிராப்ட்டும், காதிகிராமோத்யோக் பவனும் சிறப்பாக இந்தக் கண் காட்சிகளை நடத்தி வருகின்றன.

பாரம்பரியமிக்க நம் கலாச் சாரம், கலைத்திறன் ஆகியவற்றைப் பன்னெடுங் காலமாகப் பாது காத்து வரும் தொழில்களில் மட் பாண்டத் தொழில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

மிக அற்புதமான கற்பனை வடி வங்களைக் கைகளின் மூலம், மண் பொம்மைகளிலும், மட்பாண்டங் களின் வடிவிலும் படைத்துத் தரும் நம் தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் திறமை போற்றுதலுக்குரியதாகும். வேக மாக மாறிவரும் இந்த நாகரிக உலகத்தில் நமது தொன்மையான கலாச்சாரமிக்க மட்பாண்டத் தொழில் நசிந்துவிடாமல் பாது காத்து, அத்தொழிலில் ஈடு பட்டுள்ள ஆயிரக்கணக்கான கிரா மப்புற ஏழை மட்பாண்டத் தொழி லாளர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புஅளித்து, வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வழங்கி அவர்களைப் பாதுகாக்கும் தலை யாய பணியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த 34 ஆண்டுகளாகத் தன்னை முழு மையாக ஈடுபடுத்திக் கொண் டுள்ளது.

வாரியத்தின் 5 அலகுகள் மூல மாகவும், 125 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், மட் பாண்டத் தொழில் திட்டங்களை வாரியம் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் மட்பாண்டத் தொழிலாளர்களின் மூலம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி ரூபாய் 1,720.50 இலட்சமாகும். 14,245 மட்பாண்டக் கைவினை ஞர்கள் சொந்தமாகத் தொழில் செய்ய வாரியம் நேரிடையாக நிதி உதவி அளித்துள்ளது. 1,12,864 மட்பாண்டக் கைவினைஞர்கள் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இதில் 45,710 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங் களில் வாழும் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மட்பாண்டத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் கலைநயமிக்க பொம்மைகளை நவராத்திரிக் காலங்களில், இக்குறளகம் கதர்

புங்காடியில் வைத்து விற்பனை சய்து அவர்கள் நல்ல பயன டயத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாட்டின் விருத்தாசலம், வீரபெருமாநல்லூர், திண்டிவனம், கடலூர், காஞ்சி புரம், சென்னை கொசப்பேட்டை ஆகிய இடங்களிலிருந்து தயாரிக் கப்பட்ட கலைநயமிக்க பொம் மைகள் இக்குறளகம் கதர் அங் காடியில் பெருமளவில் விற் பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர, மாவட்டத் தலைநகரங் களில் உள்ள கதர் அங்காடி களிலும் பொம்மைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொம்மை தயாரிக்கும் தொழி லில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களின் திறமைகளுக்கேற்ப பொம் மைகளின் தரமும், கலை வேலைப் பாடுகளும் இன்று அதிகரித்து உள்ளன.

களிமண் போன்ற பல்வேறு மண்வகைகளில் செய்யப்படும் பொம்மைகள், காகிதக்கூழ் பொம்மைகள், மெருகேற்றப்பட்ட பலவண்ண மண்பொம்மைகள், செம்பு, கறுப்பு, வெள்ளை உலோ கத்தில் தயாரிக்கப்பட்ட பொம் மைகள், சந்தன மரம், ரோஸ்வுட், நெட்டி, கொம்புகள், கண்ணாடிக் குச்சிகள் ஆகியவற்றில் தயாரிக்கப் பட்டுள்ள ஏராளமான பொம் மைகள் பல்வேறு வண்ணங்களில் இக்காதி கிராப்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு, புதுப்புது வடிவங் களில் பொம்மைகள் கதர் அங் காடியில் விற்பனைக்காகத் தயார் நிலையில் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பொம் மைகள் விற்பனை பன்மடங்கு அதிகரித்து வருவதே இதற்குச் சான்றாகும். கடந்த 2 ஆண்டுகளில் நவராத்திரி விழா கொலுக் கண்காட்சிக் காலங்களில் பொம் மைகள் விற்பனை விவரம் —

1992 : ரூ.25 இலட்சங்கள்

1993 : ரூ.28 இலட்சங்கள்

இவ்வாண்டு நவராத்திரிக் கொலு பண்டிகைக் காலத்தில் ரூ.30 இலட்சத்திற்குப் பொம் மைகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்விற்பனை இலக்கினை எய்திட சிறப்பான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## காதி கிராமோத்யோக் பவன்

சென்னை மாநகரத்திலேயே பொம்மைக் கொலுக் கண்காட்சி யானது, 1969-ஆம் ஆண்டு, அண்ணாசாலையில் உள்ள காதி பவனில் முதன் முதலில் ஆரம் பிக்கப்பட்டது.' சுமார் 25 ஆண்டு களாக இக்கண்காட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்காட்சி வைக்க முக்கிய நோக்கம் என்னவென் றால், பொம்மைகள் செய்யும் கலைஞர்கள் தாங்கள் தயார்செய்த பொமமைகளைத் தலையில் சுமந்துகொண்டு தெருத்தெருவாக விற்பதையும், பல முக்கியமான இடங்களில் உள்ள தெருக்களில் வைத்து விற்பதையும் கண்டு திறமைமிக்க கலைஞர்கள் கௌர விக்கப் படவேண்டும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற கண் காட்சியை அன்று இது தொடங் கியது.

பொம்மை செய்யும் கலைஞர்கள் தயார் செய்யும் பொம்மைகளை, காதி கிராமோத்யோக் பவன் வாங்கி, ஒரு பொம்மைக் கொலுக் கண்காட்சி ஏற்பாடு செய்து, அதன்மூலம் விற்பனை செய்ய, வழிவகுத்தது. அதோடு மட்டும் அல்லாமல் ஆண்டு முழுவதும், பொம்மை செய்யும் கலைஞர் களுக்கு மாதா மாதம் வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யவே இந்தக் கண்காட்சி அமைக்கப் பட்டது.

பொம்மை செய்யும் கலைஞர்கள் தாங்கள் செய்யும் பொம்மைகளை, காதி பவனுக்குக் கொண்டு வந்து கொடுத்து பயன் அடைந்து வந்தார்கள். கைவினைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற காந்தியடிகளின் கனவை, காதி பவன் ஒரு குறிக் கோளாகக் கொண்டும், காந்தியடி களின் விருப்பமான வாடிக்கை யாளர்கள் மதிக்கப் படவேண்டிய வர்கள் என்ற கொள்கைப்படி நியாயமான விலையில் வாடிக்கை யாளர்களுக்குப் பொம்மைகள் கிடைக்கவும், இந்தக் கண்காட்சி தொடங்கப்பட்டது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் செய்யப்படும் பொம்மைகள் — அதாவது, மகா ராஷ்டிராவில் உள்ள கோலாப்பூர் மற்றும் ஆக்ரா, கொண்டபள்ளி, லக்னோ, கல்கத்தா, பண்ருட்டி, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், மீஞ்சூர் ஆகிய ஊர்களிலிருந்து வர வழைக்கப்பட்ட பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இங்கு இடம்பெற்றுள்ள பொம் மைகள், மண், காகிதக்கூழ், உலோகம், மரம், கருங்கல், பீங் கான், துணி முதலானவைகளால் தயார் செய்யப்பட்டவை.

கரக செட், கரடி வித்தை செட், நால்வர் செட், ராமேஸ்வரம் ராமர் பூஜை செட், பழனி காவடி, காமாட்சி தங்க ரதம், பழனி தங்க ரதம், பிரதோஷ பூஜை செட் ஆகியவை இவ்வாண்டு இடம் பெறும் புதிய ரகங்களாகும்.

ரூ.3லிருந்து ரூ.6,000 வரை விலையுள்ள பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

கடந்த ஆண்டு பொம்மை விற்பனை ரூ.6 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டு ரூ.7 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, இந்தக் கண்காட்சிகள் அக்டோபர் 13 ஆம் நாள் வரை நடைபெறும். அதுமட்டுமன்று, பொதுவாக பொம்மைகள் இங்கு எப்போதும் கிடைக்கும்.

—பி.வி.ஜி.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ—ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்


9 மே 1994


தமிழரசு
16.10.1994 ரூ.3
22 மே 1994




## இந்த இதழில்.....


மதுரையில் நடந்த புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-3 நூல் வெளியீட்டு விழா ——— 4

வளரும் வேளாண்மை ——— 9

நாகை-காயிதேமில்லத் மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ——— 10

குற்றாலத்தில் குதூகலமான சாரல் விழா ——— 23

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ——— 24

திருப்பதி திருமலை தங்கத் தேரோட்டம் ——— 33

நலிந்தோர் நலம் பெற ——— 35

ஔவையார் ——— 38

நல்ல தமிழ்ச் சொற்கள் ——— 43



தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

புரட்டாசித் திங்கள்: 30

இதழ்:8

மலர்:25

16.10.1994


### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை (9)*

★ கேட்காத செவி பார்க்காத கண் முதலியனபோல், எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.



# அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை!

"அண்ணாவின் அரசியல் சிந்தனைக் களஞ்சியங்களும், செந்தமிழுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகளும் இனி அரசு உடைமை ஆகும்.

அவருடைய படைப்புகள் அனைத்தையும் இனி, யார் வேண்டுமானாலும் அச்சிட்டு வெளியிடலாம். அதன்மூலம் அவரது உலகளாவிய கொள்கைகளும், திராவிட இயக்க இலட்சியங்களும் தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் - ஏன், உலகம் முழுவதும் பரவும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, எனக்குள் ஒரு ஆனந்தப் பூரிப்பு ஏற்படுகின்றது.

அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசு உடைமை ஆக்கப்படுவதால், அதற்குரிய மதிப்பு விரைவில் நிர்ணயிக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு அந்த மதிப்புத் தொகை வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

–மாண்புமிகு முதலமைச்சர்.
(நாகை - 15.9.1994)

# உலகத் தமிழ் மாநாடு

## தஞ்சையில் முதலமைச்சர் ஆய்வுக் கூட்டம்- மாண்புமிகு அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னையிலிருந்து 14.9.1994 அன்று, ஹெலிகாப்டர் விமானம் மூலம் தஞ்சை வந்தடைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தஞ்சாவூர், மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஈ. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் காவல்துறை அதிகாரிகளும், பொதுமக்களும் வரவேற்றார்கள்.

அரசினர் விருந்தினர் மாளிகை வந்தடைந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தஞ்சையில் நடைபெற உள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் குறித்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், திரு. எஸ். கண்ணப்பன், தலைமைச் செயலாளர், திரு.என். அரிபாஸ்கர், காவல்துறை இயக்குநர் திரு ஸ்ரீபால் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஈ. வெங்கடாசலம், ஆகியோரை அழைத்து ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

உலகத் தமிழ் மாநாடு சிறப்பாக நடைபெற மேற்கொள்ளுவதற்கான கட்டுமானப் பணிகளுக் காகவும், மாநாடு நடைபெறுவதற்காக மேற் கொள்ளப்பட வேண்டிய கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்காகவும் இதுவரை சுமார் 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக, மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளின் நிலைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர், வரைபடங்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, அவ்வப்போது அந்தப் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ளத்தக்க தமது மேலான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார். புதிதாக மேற்கொள்ளவேண்டிய பணிகள் பல குறித்தும் தனது கருத்துக்களைத் தெரிவித்தார். கலை நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது குறித்த புதிய யோசனைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார். கட்டுமானப் பணிகள், பாது காப்புப் பணிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கு நிகழ்ச்சிகள், ஊர்வலம் போன்றவற்றிற்கான எல்லா ஆயத்தப் பணிகளையும் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் தேதிக்குள் முடித்துவிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல மைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தஞ்சையில் இந்த ஆய்வுக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

### பாரம் குறையுமா?

நமது, மக்கள் தொகை 1951-லிருந்து 1991 வரையிலான நாற்பது ஆண்டுகளில் சுமார் 2¼ மடங்கு பெருகியுள்ளது. 1957-இல் 36.11 கோடியாக இருந்தது. 1991-இல் 84.63 கோடியாக அதிகரித்து விட்டது.

திருப்தி தரும் செய்தி என்னவெனில், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. 1941-51 காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.25 சதவிகிதமாக இருந்தது. 1971-81-இல் இது 2.22 சதவிகிதமாக அதிகரித்தது. எனினும், 1981-91 காலகட்டத்தில் இது 0.8 சதவிகிதமாகக் குறைந்து, 2.14 சதவிகித மாகியது. 1992-இல் இது மேலும் சரிந்து 1.90 சதவிகிதமாக ஆகியுள்ளது.

பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. எனினும், குறைந்துவரும் இறப்பு விகிதத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் அல்ல. 1992-இல் இறப்பு விகிதம் 10 சதவிகிதமாகவும், பிறப்பு விகிதம் 29 சதவிகிதமாகவும் இருந்தது. சராசரி ஆயுள் காலம் 1941-51-இல் 32 ஆண்டுகளாக இருந்தது. 1986-91-இல் 58.6 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

வரும் 2001-வது ஆண்டில் நமது மக்கள் தொகை நூறு கோடியைத் தாண்டக்கூடும். பூமி தாங்குமா? பாரம் குறையுமா?





## 8-வது உலகத் தமிழ் மாநாடு:

### மாண்புமிகு முதல்வர் நேரில் அழைப்பு; குடியரசுத் தலைவர், பிரதமர் ஒப்புதல்

தஞ்சாவூரில், வருகிற ஜனவரி மாதம் சிறப்புற நடைபெறவிருக்கும் 8-வது உலகத் தமிழ் மாநாட்டிற்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும் வருகை தரவிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இதற்காக நேரில் அவர்களைச் சந்தித்து அழைப்பு விடுப்பதற்காக டில்லிக்குச் சென்றிருந்தார்.

3.10.94 அன்று மதியம் ஒரு மணியளவில் மேதகு குடியரசுத் தலைவர் திரு. சங்கர்தயாள் சர்மா அவர்களை ராட்டிரபதி பவனில் சந்தித்து அழைப்பு விடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர். ஏறத்தாழ 30 நிமிடம் இந்தச் சந்திப்பு நடந்தது. அன்று மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களையும் அவரது இல்லத்தில் சந்தித்து அழைப்பு விடுத்தார்; இந்தச் சந்திப்பும் ஏறத்தாழ 30 நிமிட நேரம் நடந்தது.

அவர்கள் இருவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஜனவரி முதல் தேதியிலிருந்து 5-ஆம் தேதிவரை தஞ்சாவூரில் நடைபெற உள்ள 8-வது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்தார்கள்.





அட்டை சொல்லும் கட்டுரை

## அறிவுச்சுரங்கம் - ஆராய்ச்சிக் கதிர்மணி - கருத்துப்பெட்டகம் - பல்கலைப் பனுவல்

# புரட்சித்தலைவி முழக்கம் தொகுதி-3 நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் பெருமக்கள் பெருமிதம்

கூடல் நகராம் மதுரையில், மாசி வீதிகள் கூடும் சந்திப்பில் தமிழகத்தின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரோடும், சட்டப் பேரவைத்தலைவரும் பங்கேற்க, மதுரை மாநகர் இதுவரை கண்டறியா வகையில் அரசு விழா ஒன்று அக்டோபர்த் திங்கள் 5-ஆம் நாள் அரங்கேறியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கடந்த ஆண்டில் ஆற்றிய தமிழ் உரைகளின் தொகுப்பு "புரட்சித் தலைவி முழக்கம்-3" ஆங்கில உரைத் தொகுப்பு "Jayalalitha Speaks Vol.III" ஆகிய எழில்மிகு நூல்களின் வெளியீட்டு விழா தான் இச் சிறப்பு மிகு விழா!

"சமூகநீதி காத்த வீராங்கனை" என்னும் தலைப்பில் அறுபெருங் கவிஞர்கள், பாலாறும் தேனாறும் பாய்வது போல, கவி மழை பெய்து விழாவைத் தொடக்கி வைத்தார்கள். கவிஞர் புலமைப்பித்தன் கவியரங்கைத் தொடங்கி வைத்தார். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில், கவிஞர் கரு. நாகராசன், கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் அரு. நாகப்பன், கவிஞர் இளந்தேவன் ஆகியோர் தாங்கள் யாத்த கவிதையை மன்றத்தின் முன்வைத்து மக்களை மகிழ்ச்சி மழையில் நனைய வைத்தனர்.

பின்னர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களது தலைமையில் நூல் வெளியீட்டு விழா சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

### மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வரவேற்புரை

'புரட்சித்தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் எளிமைக்கு எளிமையாய், இனிமைக்கு இனிமையாய், ஓரிரு சொல் எடுத்து உவமைக்கு நயம் கொடுத்து வரவேற்புரை ஆற்றினார்.



அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "புரட்சித்தலைவி முழக்கம் தொகுதி-3", "Jayalalitha Speaks - Vol III" ஆகிய இரு நூல்களையும் வெளியிட்டார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் நூலின் முதற் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் திறம் குறித்தும், தொகுக்கப்பட்ட நூலின் நயம் குறித்தும் புகழ்ந்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு. வி. சத்திய மூர்த்தி அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்டி சோமசுந்தரம் அவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



**மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் பேசியதாவது:**

"தமிழகத்தின் தன்னேரில்லாத முதலமைச்சர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் பெயரில் அழகிய நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூல் எப்பேர்ப்பட்ட நூல்; எத்தகைய அருமையான கருத்துக்களைத் தாங்கியிருக்கிறது; எவ்வளவு சிறப்பான கருத்துக்களை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் கவிஞர்கள் மிகவும் சிறப்பாக எடுத்துப் பேசினார்கள். இத்தகைய ஆற்றல் மிக்க உரைகளை ஆற்றிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், சாதி, மத, கட்சி பேதமின்றி மக்கள் சக்தியைத் திரட்டிக் காட்டுகின்ற மாபெரும் சக்தி ஆவார். அந்த மாபெரும் சக்திதான் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நமக்குப் பெற்றுத் தந்தது. தான் சொன்னதைச் செய்து காட்டுகிற, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிக்காட்டுகிற ஒரே முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரே ஒருவர்தான். அவர்தான் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

அரசு சாதனைகளை மாணவர்கள் ஆராய்ச்சி செய்திட உறுதுணை புரியும். இந்நூல் எளிதாகக் கிடைக்க, எல்லோருக்கும் கிடைக்க, செய்தித்துறை அனைத்து ஏற்பாடுகளும் செய்திட வேண்டும்".

**மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரி அவர்கள், பேசியதாவது:**

இந்தப் புத்தகம் ஒரு சாதாரணப் புத்தகம் அல்ல; இந்தியாவுக்கே வழிகாட்டுகிற ஒரு சரித்திரப் புத்தகம். இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஒரு சாதாரண மனிதர் அல்ல; அவர் ஒரு சகாப்தம். அவர்கள் வாழுகிற காலத்தில் வாழ்வதே நமக்குப் பொற்காலம்.

இளைய தலைமுறைக்கும் எதிர்காலத் தலைமுறைக்கும் எப்படிப்பட்ட ஒரு முதல்வர் தமிழ்நாட்டை ஆட்சி செய்திருக்கிறார் என்பதை-எப்படிப்பட்ட அறிவாற்றல் மிக்க ஒரு தலைவர் அவர் என்பதை எடுத்துக்காட்டுகிற சாட்சியாக இந்த நூல் அமைந்திருக்கிறது.



புரட்சித்தலைவியின் முழக்கம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய அற்புத நூல். அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அற்புத நூல். அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொருவரின் உயிர் நாடி உயிர் மூச்சு டாக்டர் புரட்சித்தலைவி. அவருக்காக எங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டோம். அவரது உரைகளைத் தொகுத்து நூலாகச் சிறப்பாக வெளியிட்டிருக்கும் செய்தித்துறைக்கு எனது அன்பான பாராட்டுக்களை உரித்தாக்குகிறேன்.

**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் பேசியதாவது:**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பான புரட்சித்



தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூலைப் படித்தால், அரசின் நிர்வாகம் என்பது என்ன? அதன் திட்டங்களும் செயல்பாடும் எப்படி? ஏழை எளிய மக்களை வாழ வைக்கும் நலத்திட்ட உதவிகள் என்னென்ன என்கிற விளக்கங்களையெல்லாம் நாம் அறிந்து கொள்ள முடியும். நம்மை ஆட்சியில் அமரவைத்தவர்களுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செய்திருக்கும் சாதனைகளை நாம் தெரிந்து கொள்ள முடியும். தமிழகத்திற்கு இது ஒரு பொற்காலம் என்பது வெறும் வாய்ச்சொல் அல்ல. அது ஒரு சரித்திரம். இந்தச் சரித்திரத்தை யாரும் புரட்டி எழுத முடியாது. இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாலே அது புரிந்து விடும்.

புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூல், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி சிறக்கும் வகையில், அதன் திட்டங்கள், கொள்கை வடிவங்களைச் சிறப்புடன் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.





**மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் பேசியதாவது:**

சங்கம் வளர்த்த மதுரையிலே இன்று எழுகின்ற வீர முழக்கம் அதுவே "புரட்சித்தலைவியின் முழக்கம்". இது வெறும் பேச்சுக்களின் தொகுப்பு அல்ல; புரட்சித்தலைவி அவர்கள் படைத்திருக்கும் புதிய புறநானூறு!

இந்தியத் திருநாட்டைக் காக்க என்று வருவார் இந்தத் தலைவர் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது "புரட்சித்தலைவியின் முழக்கம்". கருத்துப் பெட்டகமான இந்நூல், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்று என்ன சாதித்தது என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவி அவர்கள் மாவட்டந்தோறும் சென்று நடத்திய விழா—அதன்மூலம், மக்களுக்குச் செய்த சாதனைகள்—இன்னும் செய்யப்போகும் சாதனைகள் ஒவ்வொரு பிரச்சினை மீதும் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் இவை யாவற்றையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது இந்த நூல்.

**மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசியதாவது:**

வரலாற்றை உருவாக்குகின்ற தலைவர்களுள் முதல் தலைவராக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவர் பேசியுள்ள பேச்சுக்கள், மக்கள் மத்தியில் ஆற்றியுள்ள உரைகள் அவை வெறும் வார்த்தை ஜாலமில்லை; அத்தனையும் நாம் கவனிக்க வேண்டிய கருத்து; கற்க வேண்டிய பாடம்.

"புரட்சித்தலைவியின் முழக்கம்" என்னும் இந்த நூல் கருத்துப் பெட்டகம்; தத்துவ ஊற்று; பல்கலைப் பனுவல்; ஆராய்ச்சிக் கதிர்



மணி; அறிவுச் சுரங்கம்; வருங்காலத் தமிழகம் வளம்பெறவே வைக்கப்பட்டுள்ள வைப்பு நிதி; மொத்த இந்தியாவுக்கும் அளிக்கப்பட்டுள்ள சீதனம். அதுவே இந்நூல்!

**மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர். திரு. இ. மதுசூதனன் அவர்கள் பேசியதாவது:**



"புரட்சித்தலைவியின் முழக்கம்" என்பது வெறும் புத்தகம் அல்ல; வருங்கால சந்ததிகளுக்கு வரலாற்றைச் சொல்லப்போகும் சத்தியம்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றியுள்ள இந்த உரைகளுக்குப் பின்னால் சத்தியம் இருக்கிறது; நீதி இருக்கிறது; மாணவர்களும், பாட்டாளிகளும், மக்களும் எப்படி இருக்க வேண்டும் என்கிற தத்துவம் இருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் பெறவேண்டும் என்று செயல்படுகின்ற தொலைநோக்குத் திட்டங்கள் இருக்கின்றன.

இத்தகைய அரிய நூலை வெளியிட்ட செய்தித்துறை இன்னொன்றும் செய்திட வேண்டும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஆற்றியுள்ள உரைகளை ஒலி நாடா வடிவமாக்கிப் பட்டி தொட்டி எங்கும் கேட்கும்படி செய்திட வேண்டும். வருங்காலச் சமுதாயம் வணங்கி வரவேற்கும்.



**மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசியதாவது:**

தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூலாம், "புரட்சித்தலைவியின் முழக்கம்", நூலை, தமிழ் வளர்த்த மாமதுரையில் நின்று வெளியிடுகிறோம். இந்துக்களுக்கு எப்படி கீதையோ, கிறிஸ்துவர்களுக்கு எப்படி பைபிளோ, இஸ்லாமி

யருக்கு எப்படி குரானோ, அதே போல அண்ணா தி.மு.க. தொண்டன் ஒவ்வொருவர் இல்லத்திலும் "புரட்சித்தலைவியின் முழக்கம்" இருக்கும்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென, 69 சதவிகித இட ஒதுக்கீடு, உலக வரலாற்றிலேயே எங்கும் இல்லை. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேசிக் கொண்டிருந்த ஒரு தலைவரை பேசாமல் இருக்க வைத்தார். பேசாமலிருந்த ஒரு தலைவரைப் பேச வைத்தார். ஆன்மீகவாதிகள் அவரைப் போற்றுகின்றார்கள். திராவிட வழிவந்தவர் அவரைப் பாராட்டுகின்றனர். பாரதப் பிரதமர் அவரைப் பாராட்டுகிறார்; குடியரசுத் தலைவர் அவரைப் பாராட்டுகிறார்; அன்னை தெரசா அவரைப் பாராட்டுகிறார். உலகமே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பாராட்டுப் பெறுவதற்குரிய மனிதநேயம், ஏழை எளியவர்களுக்காய் செயல்படுத்தும் திட்டங்கள், அள்ளி வழங்கும் உதவிகள் அனைத்தும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரையில் நிருபணமாய் இருக்கின்றன. இதனால்தான் அனைவரும் உளமாரப் புகழ்ந்து, வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் பேசியதாவது:**



மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற மனப்பக்குவம் குறைந்து வருகிற காலம் இது. இந்த நாளில் தான் படும் துயரை எடுத்துச் சொல்லி புரட்சித் தலைவியிடம் விண்ணப்பித்தால், அந்தச் செய்தி ஊருக்குத் தெரிவதற்கு முன் உதவி செய்து முடித்து விடுகின்ற மனித நேயத்தின் சிகரம்தான் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மற்றவர்கள் பிரமிக்கின்ற வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை பற்றி எந்த ஒரு தலைவரும் சிந்திப்பதற்கு முன்பே, செயல்பட்டவர் நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை மேற்கொண்ட 6 மாதத்திற்குப் பிறகுதான் மற்ற தலைவர்கள் பேசவே ஆரம்பித்தார்கள்.

69 சதவிகித இடஒதுக்கீட்டுப் பிரச்சினை குறித்துப் பிரதமரைச் சந்தித்துப் பேசுகிறார் புரட்சித் தலைவி. முடியாது என்று சொல்ல முடியாது என்கிற அளவுக்குத் திறமையாகப் பக்குவமாக இருக்கிறது புரட்சித்தலைவி அவர்களது வாதம்.

70 ஆண்டுகாலப் பிரச்சினையை 20 நிமிடங்களில் பேசி முடித்து, தீர்த்து வைத்தார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

உடன் வந்திருந்த மற்ற அரசியல் கட்சித் தலைவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏதாவது சொல்லுங்கள்" என்று புரட்சித்தலைவி அவர்கள் கேட்க, "நாங்கள் சொல்வதற்கென்று எந்தச் செய்தியையும் நீங்கள் விட்டு வைக்கவில்லையே" என்று பெருமையுடன் அவர்கள் பதில் சொல்லும் அளவுக்கு ஆற்றல் பெற்றவர் நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

அத்தகைய ஆற்றல் பெற்ற தலைவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான "புரட்சித்தலைவியின் முழக்கம்" நூலை மக்கள் தங்கள் இதயத்தில் வைத்துக் கொள்வார்கள்.

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:**

தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், திரைப் படத்துறையினருக்கு அறிவுரை கூறிய முதல் நிகழ்ச்சி தொடங்கி, 10 வது நிதிக்குழுவின் நிறைவுரை நிகழ்த்தியது வரை 54 உரைகளைத் தொகுத்து அழகிய நூல் வடிவமாகத் தந்திருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்று இதுவரை நிகழ்த்திய சாதனை என்ன? நிகழ்த்தப் போகும் திட்டங்கள் என்னென்ன



என்பதைத் தெளிவுடன் விளக்கும் நூல் தான் புரட்சித்தலைவியின் முழக்கம்! இந்த நூல் வெளியிட இவ்வளவு பெரிய விழாவா என்று கூட கேட்கிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். கூந்தல் இருக்கிறவள் அள்ளி முடிகிறாள் இல்லாதவளுக்கு ஏன் வாய்ச்சவடால்? என்கிற கிராமத்து வழக்கே அவர்களுக்குப் பதில். ஒரு சிறிய அரங்கில் கூட்டம் போட்டுச் சொல்லி இருக்கலாம். ஆனால், நமது சாதனைகளை மக்கள் மன்றம் முன்னர் எடுத்துவைக்கிற நிகழ்ச்சியாக, மாபெரும் விழாவாக மதுரையம்பதியில் நடை

தொடர்ச்சி 41 ஆம் பக்கம் பார்க்க



# வளரும் வேளாண்மை

## மழையைப் பற்றிய முன்அறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், புதுதில்லியிலுள்ள மத்தியக்கால வானிலை முன்அறிவிப்பு மையமும், இணைந்து ஆய்வு செய்து மழைவருவதைப் பற்றிய மத்தியக் கால முன் அறிவிப்பைக் கடந்த ஆண்டு ஜூன் 1993 முதல் செய்துவருகிறது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்படும் வானிலை சம்பந்தப்பட்ட வெப்ப நிலை, உதாரணமாக, அதிக மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை மழை அளவு, காற்றின் ஈரப்பதம், சூரிய வெப்பம் போன்றவை புதுதில்லிக்கு அனுப்பப்பட்டு, அங்கு அவை கணிப்பொறியின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டு மழை வருவதற்கான முன் அறிவிப்பு பெறப்படுகிறது.

பெறப்பட்ட முன்அறிவிப்பையும், பதிவு செய்யப்பட்ட மழை அளவையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, மழை வருவது, அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலோ அல்லது ஒருநாள் முன்னரோ அல்லது பின்னரோ பெறப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும் அறிவித்த மழை அளவுக்கும், பதிவு செய்யப்பட்ட மழை அளவுக்கும் அதிக வேறுபாடு காணப்படவில்லை. எனவே, இந்த முன் அறிவிப்பைப் பயன்படுத்திட வேளாண்மைச் செயல்முறைகளைத் திட்டமிட்டுப் பயன் பெறலாம்.

## பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதைத் தொழில் நுட்பம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகக்கழக விதை நுட்பவியல் துறையில் பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதை உற்பத்தித் தொழில் நுட்பத்திற்கான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் கிடைத்தன:

ஒரு கிலோ வெங்காய விதைக்கு 2 கிராம் திரம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து 700 காஜ் அடர்த்தியான பாலித்தீன் பைகளில் இட்டு, எட்டு மாதங்கள் வரையில் 68 சத முளைப்புத் திறனுடன் சேமிக்கலாம்.

ஐந்து மாதம் சேமித்த பெல்லாரி மற்றும் சிறிய வெங்காய விதைகளை டை சோமியம் பாஸ்பேட் இரசாயனக் கரைசலில் இரண்டரை மணி நேரம் ஊற வைத்து பின் 8 சத ஈரப்பதத்திற்கு உலர்த்திச் சேமிப்பதால் விதைகளின் வீரியம் மற்ற முளைப்புத் திறனை 8 மாதங்கள் வரை சீரிய முறையில் பாதுகாப்பதோடு, 7.7 சதவிகித அதிக மகசூலும் பெறலாம்.

## மண்ணில் பூஞ்சானக்கொல்லி மருந்தின் நிலைப்புத்திறன்

விவசாயத்தில் பூஞ்சானக் கொல்லி மருந்துகள் பெருமளவில் நோய்த் தடுப்பு மருந்தைச் சரியான அளவில் பயன்படுத்தாத காரணத்தினால், பல சுற்றுப்புறச் சீர் கேடுகள் ஏற்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், முறையற்ற பூஞ்சானக் கொல்லி மருந்தின் உபயோகத்தினால் மண்ணுக்கும் விளை பொருள்களுக்கும் அநேகச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, மண்ணில் பூஞ்சானக் கொல்லி மருந்தின் இயக்கம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

காய்கறிப் பயிர்களில் ஏற்படும் இலைக் கருகல் மற்றும் இலைப் புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக, குளோரோதலோனில் என்றதொரு வகை பூஞ்சானக் கொல்லி மருந்தினால், வண்டல், கரிசல், செம்புறை மற்றும் செம் மண் வகைகளில் ஏற்படும் இயக்கத்திறன், நிலைப்புத் தன்மை மற்றும் அழிவுத்தன்மை பற்றியும், இதுமாதிரியே, தக்காளி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களில் இப்பூஞ்சானக் கொல்லி மருந்தின் நிலைப்பு மற்றும் பரவும் தன்மை பற்றியும் அறிவதற்குச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மண்ணில் குளோரோதலோனில் மருந்தின் இயக்கத்திற்கு, மண்ணில் உள்ள அங்ககப் பொருள்கள், களி மண் அளவு மற்றும் கார அமிலத் தன்மை போன்றவை காரணிகளாக இருக்கின்றது என ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இதனால் செம்புறை மண் வகையில் குளோரோதலோனில் மருந்தில் நிலைப்புத் தன்மை அதிகமாகவும், செம்மண் வகைகளில் குறைவாகவும் இருக்கிறது.

தக்காளி மற்றும் மிளகாய்ப் பயிர்களில் ஆய்வு மேற்கொண்டால், குளோரோதலோனில் பூஞ்சானக் கொல்லி மருந்தைத் தெளிக்கும் அளவிற்கு ஏற்ப, மிளகாய் அதிக நாட்களுக்கும் தக்காளியில் குறைந்த நாட்களுக்கும் நீடிக்கிறது. தக்காளியிலும் மிளகாயிலும் பூஞ்சானக் கொல்லி மருந்தின் நச் த்தன்மை 15 நாட்கள் வரை நீடிக்கிறது. எனவே, மருந்தினைத் தெளித்த (0.2 சத அளவு) 6.0 நாட்களுக்குப் பிறகு தக்காளியையும், 6.5 நாட்களுக்குப் பிறகு மிளகாயையும் அறுவடை செய்வதால் எந்தத் தீங்கும் ஏற்பட வாய்ப்பில்லை என்று பரிந்துரைக்கப்படுகிறது.

வேளாண் தகவல் பணி மையம்
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.









## "அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை!"

## "கச்சத்தீவை மத்திய அரசு காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுத் தரவேண்டும்!"

# நாகை-அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

'கண்ணியத்'தின் மறு பெயராகவும் மத நல்லிணக்கத்தின் இலக்கணமாகவும் திகழ்ந்த, காயிதே மில்லத் அவர்களின் திருப்பெயரைத் தாங்கிய, இந்த மாவட்டத்திற்கு வருகை தந்து, மலர்ந்த முகத்துடன் வீற்றிருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்றி வருகின்ற உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையின் அமைந்த இந்த அரசு - உங்கள் அரசு 1991-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டத்தின் நிர்வாக நலனைக் கருதி, மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சேர்த்து, இந்த மாவட்டத்திற்கு, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்', என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது. மாவட்டத் துவக்க விழாவிற்குப் பின்பு, நான் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்திருந்தாலும், விழாக் கோலம் பூண்டு உள்ள நிலையில், நாகப்பட்டினம் நகரத்திற்கு மீண்டும் வந்து, உங்களையெல்லாம் சந்திக்கின்ற, வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நாகப்பட்டினம் பகுதி, ஒரு காலத்தில் பிரசித்தி பெற்ற ஒரு துறைமுகமாக விளங்கியது என்பதை, 15-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகளிலிருந்து, தெரிந்து கொள்ள முடிகிறது. பர்மாவுக்கும், இலங்கைக்கும், இடையேயான கப்பல் போக்குவரத்து, நாகப்பட்டினம் துறைமுகம் வழியே நடைபெற்று வந்ததைச் சரித்திர ஏடுகள் சுட்டிக் காட்டுகின்றன. போர்ச்சுகீசியர்களும், டச்சுக்காரர்களும், டேனிஷ்காரர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும், இந்தத் துறைமுக நகரத்தைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள். ஒரு புறம், மாபெரும் ஆதிக்கப் போராட்டத்தையும், அதன் விளைவாகப் பின்னர் எழுந்த கலாச்சாரப் போராட்டத்தையும் சந்தித்த பூமி இது. தரங்கம்பாடியில் உள்ள கோட்டை, இன்றும் டேனிஷ்காரர்களின் கட்டடக் கலையின் சிறப்பை, உலகிற்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

மூன்று கடல்கள், கன்னியாகுமரியில் சங்கமம் ஆவது போல, இந்த மாவட்டத்தில், மூன்று மதங்களும் சங்கமம் ஆகின்றன என்றால், அது மிகையாகாது. இந்த





மாவட்டத்தில், இந்துக்கள், முகமதியர்கள், கிறித்தவர்கள், போன்ற அனைத்து மதத்தினரும், வித்தியாசம் ஏதுமின்றி, மத நல்லிணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக, வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மை, நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி ஆகும்.

'Our Lady of Health' என்று நாம் தொழுகை புரியும் வேளாங்கண்ணி மாதா கோயிலையும், நாகூரிலுள்ள, 'Saint Hazarath Syed Shahul Hameed 'Qudir Vali Ganjasavoy Andavar' தர்காவையும் மற்றும், சிக்கல் சண்முகவேலர், திருக்கடையூர் சிவன், நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி அம்மன் திருக்கோயில்களையும், தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்தில் எல்லா மதத்தின் வழிபாட்டுத் தலங்களுக்கும், இந்த மாநிலத்தில் உள்ளவர்கள் மட்டுமின்றி, இதர மாநிலங்களில் இருந்தும், மக்கள் வித்தியாசமின்றி வந்து வழிபட்டுச் செல்வதைக் கண்கூடாகக் காணலாம்.

பூம்புகார், கோடியக்கரை வன விலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்களைத், தன்னகத்தே கொண்ட இம்மாவட்டம், பல்வேறு கவின் கலைகளை, வளர்த்த பெருமையையும் படைத்தது. தமிழகத்தின் கலை வளர்ச்சிக்குத் தஞ்சைப் பூமியின் பங்கை, எவ்வளவு சொன்னாலும் தகும்.



இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, இன்று, 135 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை, அர்ப்பணிக்க வந்துள்ளேன். இன்று, 26 கோடி ரூபாய், செலவில், ஏற்கெனவே முடிவடைந்த திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், 97 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 54,000-க்கும் மேற்பட்ட, இம்மாவட்டத்து வாழ் மக்களுக்கு, 12 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, இதே விழா மேடையில், வழங்க உள்ளதையும் எண்ணி, நான் பெருமிதம் அடைகின்றேன்.

திராவிட இயக்கத்தின் திருவிளக்காம், பேரறிஞர் பெருந்தகை, அண்ணா அவர்களின் பிறந்த நன்னாளை, நாம் மகிழ்ச்சிப் பெருக்குடன், இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அரசியல் நாகரிகத்திற்கும், தூய்மையான பொது வாழ்விற்கும், தனது இலட்சியங்களால் அடிக்கல் நாட்டிய, நமது அரசியல் ஆசான் அவர்களின் பிறந்த நாளை, உங்கள் அனைவருடனும் கொண்டாடி மகிழ்கின்ற, பேறு கிடைத்ததை எண்ணிப் பேருவகை அடைகிறேன்.

எந்த ஒரு மாமனிதரின் பேச்சுக்கள், நமக்கு வேதமாக இருக்கின்றதோ எந்த ஒரு மாமனிதரின் எழுத்துக்கள், நமக்கு இலட்சியங்களாக மிளிர்கின்றதோ அந்த அணையாத அறிவுத் தீபம், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களை, அரசுடைமையாக்கி, இன்று ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது பிறந்த நாளுக்கு, உங்கள் அனைவரின் சார்பிலும், உங்கள் அன்புச் சகோர்தரி, செலுத்துகின்ற காணிக்கை இது.

அண்ணாவின் அரசியல் சிந்தனைக் களஞ்சியங்களும், செந்தமிழுக்கு அவர் ஆற்றிய அரும் பணிகளும், இனி அரசுடைமை ஆகும். அவரது படைப்புகள் அனைத்தையும், இனி யார் வேண்டுமானாலும், அச்சிட்டு வெளியிடலாம். அதன் மூலம், அவரது உலகளாவிய கொள்கைகளும், திராவிட இயக்க இலட்சியங்களும், தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் – ஏன், உலகம் முழுவதும் பரவும் என்பதை, எண்ணிப் பார்க்கும்போது எனக்குள் ஒரு ஆனந்தப் பூரிப்பு ஏற்படுகின்றது.

அண்ணாவின் கொள்கைகளையும், புரட்சித் தலைவர் எம்ஜிஆரின் இலட்சியங்களையும் நடைமுறைப் படுத்திவரும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, தமிழகத்திற்கு ஒரு உன்னதமான எதிர்காலத்தை, ஏற்படுத்திக் கொடுக்கும் மக்கள் பணியில், ஒரு புதிய உத்வேகத்துடன், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என்று இந்த நன்னாளில் உறுதிகூற விரும்புகிறேன்.



அண்ணாவின் எழுத்தோவியங்கள், அரசுடைமை ஆக்கப் படுவதால், அதற்குரிய மதிப்பு, விரைவில் நிர்ணயிக்கப்பட்டு, அவரது குடும்பத்திற்கு, அந்த மதிப்புத் தொகை வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பான்மையாகக் கிராமங்களையும், விவசாயத் தொழிலை நம்பியுள்ள மக்களையும், கொண்ட இந்த மாவட்டத்தில், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி, வளர்தொழில்கள் வளரச் செய்ய வேண்டும், என்ற ஆர்வத்தின் அடிப்படையில், அதற்குரிய ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும், எனப் பணித்திருந்தேன். இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருட்கள், இயற்கையாக அமைந்துள்ள மனித வளம், தொழில் நுட்பம், போக்குவரத்து வசதி, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சில புதிய தொழிற்சாலைகளை, இம்மாவட்டத்தில் உருவாக்க, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. Phenol-லையும், அதன் உப பொருளான Acetone-ஐயும், தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை, 100 கோடி ரூபாய் செலவில், இம்மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள், ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



சமீப காலமாக, இந்த மாவட்டத்து மக்களைப் பாதிக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை, எங்கள் அரசு, உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. 'மீன் வளத்தைப் பெருக்குவதற்காகக் கடற்கரையோர மாவட்டங்களின், உப்புத் தன்மையுடைய நீரைக் கொண்டு, இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால் எழுந்துள்ள பொருளாதார, மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றித்தான், நான் குறிப்பிடுகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள, பல கடற்கரையோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள், மற்றும் மீன் பண்ணைகள், அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த இறால் பண்ணைகளில், கடல் உப்பு நீரைத் தொட்டிகளில் தேக்கி வைப்பதாலும், திறந்த கால்வாய்கள் வழியாகக் கடல் நீரைப் பண்ணையில் உள்ள தொட்டிகளுக்குக் கொண்டு செல்வதாலும் இந்த உப்புத் தன்மை, நிலத்தடி நீரையும், பண்ணைக்கு அருகில் அமைந்துள்ள, விவசாய நிலங்களின் மண் வளத்தையும், பாதித்து வருவதையும் சில இடங்களில், இதனால் சுற்றுப்புறச் சூழலுக்கும், தீங்கு உண்டாகும் சூழ்நிலைகள் எழுந்துள்ளதையும் இதன் காரணமாகத் தேவையற்ற சமூக இடர்ப்பாடுகள் ஏற்பட்டு வருவதையும் நான் நன்கறிவேன்.

தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று, நாம் விரும்பும் அதே நேரத்தில், வேளாண் தொழிலுக்கு, எள்ளளவும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல், பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, மிக உறுதியாக உள்ளது. நிகழ் காலத்தில் கிடைக்கும், ஒரு சிறு இலாபத்திற்காக, எதிர்காலத்தைப் பாதிக்கும் செயல்களை, நிச்சயம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். சுற்றுப்புறச் சூழலையும், நமது இயற்கை அன்னை அளித்த வளங்களையும் ஊனப்படுத்திவிடக் கூடாது என்பதில், நான் மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றேன். அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுகின்ற, அக்கறை கொண்டிருக்கின்ற, ஒரு அரசு தான் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

எனவேதான், இறால் மீன் பண்ணைகள் அமைப்பதால், எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கூாகக் கடந்த மாதம், எனது ஆணையின் பேரில், ஒரு

'வல்லுநர் குழு' (ExpertCommittee) ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் குழு, கடலோரக் கிராமங்களில், இறால் மீன் பண்ணைகள் அமைப்பதற்கு, அனுசரிக்க வேண்டிய வரைமுறைகளையும், நிபந்தனைகளையும், வகுத்துக் கொடுக்கும். மேலும், தனி நபர் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, நல்ல விளை நிலங்கள், இறால் மீன் பண்ணைகளாக, உருவாவதைத் தடுக்கவும் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களின், மரபு சார்ந்த முறையில் கடற்கரைப் பகுதிகளையும், கடல் நீரையும், உபயோகிக்கின்ற உரிமைகளைப் பாதுகாக்கவும் கடற்கரையின் தொடர்ச்சியைப் பாதிக்கின்ற அளவில், பண்ணைகள் ஏற்படுவதைத் தடுக்கவும் கடலோரக் கிராமங்களில் வசிக்கும் மக்கள், இதுவரை அனுபவித்து வந்த, பாதை உரிமை போன்ற, மரபு வழி உரிமைகள், பாதிக்கப்படாமலும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் விதத்தைத் தடுக்கும் உத்திகளைக் கண்டறிவதும் இந்தக் குழுவின் நோக்கங்களாகும்.

மேலும், இந்தப் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப்படும், கழிவு நீரின் நச்சுத் தன்மையை அறிவதோடு நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றிற்கு, இந்த மாசுகளால் ஏற்படுகின்ற பாதிப்பைத் தவிர்ப்பதற்கு, மேற்கொள்ளப்பட வேண்டிய, தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், இந்தக் குழு முழுமையாக ஆராய்ந்து, தனது பரிந்துரைகளை வழங்கும்.

எனவே, நடைமுறையில் உள்ள, விவசாய விளை நிலங்கள் பாதிக்கப்படாமலும் சுற்றுப்புறச் சூழல் கெடாமலும், இறால் மீன் பண்ணைகள் அமைக்கின்ற, புதிய வரைமுறைகளை, மிக விரைவில் எங்கள் அரசு வெளியிடும். சுற்றுப்புறச் சூழல். எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்க்கை, மக்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உங்கள் சகோதரியின் அரசு, இந்தப் பிரச்சினையில் நல்ல முடிவுகளை எடுக்கும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், இது குறித்து தேவையற்ற கவலையிலும், பிரச்சினையிலும், ஈடுபட வேண்டாம் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேவையற்ற முறையில் இந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக்கி, மக்கள் மனதில் ஒரு பீதியை உண்டாக்குகின்ற முயற்சியில், யாரும் ஈடுபடக் கூடாது என்பதே, எனது வேண்டுகோள். அதே நேரத்தில், இந்தக் கட்டுப்பாட்டை மீறுபவர்களைப் பார்த்துக் கொண்டு, இந்த அரசாங்கம் கைகட்டிக் கொண்டு வாளா இருக்காது என்பதைச் சுட்டிக் காட்டுவதும், எனது கடமை என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில், வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை, உயர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, விவசாய விளை பொருட்களின் நடமாட்டத்திற்கு, சில தடையும் கட்டுப்பாடுகளும், இருந்து வந்தன. இந்த நடமாட்டக் கட்டுப்பாடுகளால், விவசாயிகளின் நலன் பாதிக்கப்படுவதையும், பொதுமக்களுக்குச் சில வகையில் இடையூறுகளாக இருப்பதையும் அறிந்த நாங்கள், பதவி ஏற்ற குறுகிய காலத்தில், இந்தக் கட்டுப்பாடுகளைப் படிப்படியாகத் தளர்த்தி, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கப் பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டோம். விவசாயிகளின் நலன் காக்க, ஒரு தொலை நோக்குப் பார்வையுடன், லெவி





கொள்முதலை அடியோடு ரத்து செய்தோம். தாலுக்கா அளவில் நடமாட்டக் கட்டுப்பாட்டைத் தளர்த்தினோம். மாவட்ட அளவிலான சோதனைச் சாவடிகளை ஒழித்தோம். காவிரிப் பாசனப் பகுதியில், கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த, ஏகபோகக் கொள்முதல் முறையை ரத்து செய்து, மற்ற மாவட்டத்து விவசாயிகளைப் போல, இப்பகுதி வாழ் விவசாயிகளும் தங்களது விளை பொருட்களைத் தாங்கள் விரும்புகின்ற விலையில் விற்பதற்கான உரிமையை மீட்டுக் கொடுத்தோம்.

அதே நேரத்தில், நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துவதிலும், நாங்கள் தயக்கம் காட்டியது இல்லை. சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை, ஒரு குவிண்டாலுக்கு, 230 ரூபாயிலிருந்து 340 ரூபாயாக, படிப்படியாக இந்த மூன்று ஆண்டுகளில், உயர்ந்து உள்ளதை, இந்த நேரத்தில், பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உயரிய விதை நெல், மானியத்துடன் கூடிய இடுபொருட்கள், வீடு தேடிச் சென்று தொழில் நுட்ப அறிவுரைகள், தாராளக் கடன் உதவி, ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்குச் சேவை செய்து வருகிறது. எங்கள் அரசு, நெல் உற்பத்தியில் இன்று, ஒரு புதிய குறியீட்டினை நாம் எட்டி உள்ளோம். அதன் விளைவாக, J.J.92 போன்ற உயர்ந்த ரக அரிசியை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் T.K.M. 9 ரக அரிசியை, வெளிமாநிலங்களுக்கு விற்க எங்கள் அரசு அனுமதி அளித்து இருந்ததால், விவசாயிகள் பெருமளவு இலாபம் அடைந்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.



அதே நேரத்தில், விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பதற்குச் சிரமம் ஏற்படாமல் இருக்க, நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை, சென்ற ஆண்டு அளவில் இருக்க வேண்டும் என்றும், அந்த நிலையங்களுக்கு வருகின்ற நெல்லைக் கண்டிப்பாக வாங்கவேண்டும் என்றும், நான் ஆணை பிறப்பித்துள்ளேன்.

விவசாயிகளின் நலன் காக்க, நாங்கள் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதே நேரத்தில், நுகர்வோரின் நலன் காக்க, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் பொருட்களுக்காக, 400 கோடி ரூபாய் அளவில் மானியச் சுமையை ஒவ்வொரு ஆண்டும் இந்த அரசு தொடர்ந்து ஏற்றுக் கொண்டு வருகிறது என்பதையும், பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவப் பெருங்குடி மக்களின் நலவாழ்விற்குப் பல்வேறு நலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்ற, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, இம்மாவட்டத்தைப் பொருத்த வரையில், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், 72 மீனவர்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், உதவிகளை வழங்கி உள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் அரசு கான்கிரீட் வீடுகளைக் கட்டி, மீனவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது. இம்மாவட்டத்து மீனவர்களுக்கு, கடந்த 3 ஆண்டுகளில், ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில், 428 கான்கிரீட் வீடுகள், கட்டித் தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, ஒரு கோடி ரூபாய் செலவில், மேலும் 200 வீடுகள், கட்டித் தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள, 500 கடற்கரை ஓரக் கிராமங்களில் உள்ள, அடிப்படை வசதிகளை மேம்படுத்துற்காக, "ஒருங்கிணைந்த கடலோர மீனவக் கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்" ஒன்று, வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம், மிக விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடற்கரையோரக் கிராமங்களில் வசிக்கும் மீனவப் பெருங்குடி மக்களின் நல் வாழ்க்கைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்ற உங்கள்



**அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு**
**வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்-பண்ணாவன்**
**சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்**
**அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு.**

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

அன்புச் சகோதரியின் அரசு, உங்களின் அரசு கச்சத் தீவுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வ்ருகின்றது.

ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், மீனவப் பெருங்குடி மக்கள் நிம்மதியாக, பாதுகாப்புடன் தங்கள் தொழிலை மேற்கொள்ள மத்திய அரசு ஒரு சில நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கை நாட்டு அரசியலில் இப்போது ஏற்பட்டுள்ள தலைமை மாற்றத்தை இந்திய அரசு பயன்படுத்தி, கச்சத் தீவைக் காலவரையற்ற குத்தகைக்கு— அதாவது Lease in Perpetuity க்கு பெற்றுத்தர வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். நிச்சயமாக மத்திய அரசால் இதைச் செய்ய முடியும்.

எனவே, மத்திய அரசு தமிழக மீனவர்களுக்கு மட்டுமின்றி, இந்திய மீனவர்கள் அனைவரும் பயன்பெறும் இந்தப் பணியை, விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

கச்சத்தீவைக் காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுவிட்டால், அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடல்நீரில், மீன் பிடிக்கும் உரிமை இயற்கையாக, இந்திய மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் கிடைத்துவிடும் என்பது உறுதி. அதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண்பதும் திண்ணம். எனவே, மத்திய அரசு எனது கோரிக்கையை ஏற்று கச்சத்தீவைக் காலவரையற்ற குத்தகைக்குப் பெற்றுத்தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தைச் சார்ந்த, ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, ஆறு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், இந்த ஆண்டு, 2,800 தொகுப்பு வீடுகள் கட்டி, இலவசமாக வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான அடிக்கல்லை, இன்று நான் நாட்டியுள்ளேன்.

மேலும், 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, 1,504 தொகுப்பு வீடுகளை, இன்று நான் திறந்து வைத்ததிலும், மன நிறைவு அடைகின்றேன்.

பாமணி, கத்தூர், உப்பூர், பாப்பா கோயில், தேமங்கலம், குடவாசல், மணல்மேடு, ஆகிய 7 குடிநீர்த் திட்டங்களை, ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்வதற்காக, இன்று அடிக்கல் நாட்டியதிலும்— சீர்காழி குடிநீர்த் திட்டம் உட்பட, 14 குடிநீர்த் திட்டங்களை, இரண்டரைக் கோடி ரூபாய் செலவில், இன்று துவக்கி வைத்ததிலும் நான் உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊரகப் புறங்களிலும், வீட்டு வசதியை, உண்டாக்கித் தர வேண்டும் என்ற எங்கள் முயற்சியின் விளைவாக, 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவான, 24 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததிலும், மன்னார்குடி, திருவாரூர் ஆகிய இடங்களில், 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், கட்டப்பட உள்ள 425 குடியிருப்புகளுக்கு, அடிக்கல் நாட்டியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் தொழிற்சாலைப் பகுதிகள் அல்லாத இடங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பழுதடைந்துள்ள, 48 சாலைகளைச் செப்பனிட்டுச் சீரமைக்க, இந்த ஆண்டு, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், நாகூர், திட்டச்சேரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில், 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 136 குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினத்தில், வெங்காயக் கூடை முடைவோருக்கு என்று, தனியே ஒரு குடியிருப்பு 40 இலட்சம் ரூபாய் செலவில், அமைத்துத் தரப்படும் என்பதையும் 3 கோடி ரூபாய் செலவில், குடிசைப் பகுதிகளை மாற்றி, அடுக்கு மாடி வீடுகள், கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, 'கிராமப்' புறங்களிலும், கூடுதல் மின் வசதியை வழங்கவேண்டும்— விவசாயத்திற்காக உபயோகப்படுத்தும், உயர் அழுத்த மின்சக்தி, தடங்கலின்றி, தொடர்ந்து- கிடைக்கவேண்டும் என்பதற்காக இன்று 11 கோடி ரூபாய் செலவில், பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

5 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில், மன்னார்குடி துணை மின் நிலையம், 33 கிலோ வோல்ட்டிலிருந்து, 110 கிலோ வோல்ட் மின்சக்தித் திறன் கொண்ட நிலையமாக உயர்த்தப்படும். ஒரு கோடியே 65



இலட்சம் ரூபாய் செலவில், நாகப்பட்டினம் துணை மின் நிலையம், 66 கிலோ வோல்டிலிருந்து, 110 கிலோ வோல்ட், மின்சக்தி திறன் கொண்ட, நிலையமாக மேம்படுத்தப்படும். புதிதாக, 4,000 தெரு விளக்குகளை அமைக்க, உங்கள் சகோதரியின் அரசு, ஒரு கோடி ரூபாய் செலவிடும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



**அரசியலோடு-நாகரிகத்தை அரசியலோடு-நாணயத்தை- அரசியலோடு நல்ல நோக்கத்தை-அரசியலோடு சனநாயகத்தை - அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை இணைத்துத் தந்த நல்ல சனநாயகவாதி அண்ணா அவர்கள்.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

மன்னார்குடி நகருக்கு அழகு சேர்த்து, அருள்பாலித்துக் கொண்டு வரும், அருள்மிகு ராஜகோபால் சுவாமி திருக்கோயிலின் திருப்பணி, 40 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்ளப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னார்குடி நகர எல்லைக்குள், பாமினி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள, கீழப்பாலம் மிகவும் குறுகியதாகவும், துரிதப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாமலும் இருப்பதால், இந்தப்பாலத்தை,இருவழிப்பாதை கொண்ட உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை, இப்பகுதி வாழ் மக்களிடம் பல காலமாக இருந்து வருகின்றது. இந்தப் பாலத்தைக் கட்டித் தருவதாக, முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன என்பதையும், நான் நன்கு அறிவேன். காலங்காலமாக நடைபெறாத பல திட்டங்களைச் செயல்படுத்திவரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அதே உணர்வுடன், 22 கிராமங்களில் வசிக்கின்ற, கிட்டத்தட்ட 52,000 மக்கள் பயன் பெறும் வண்ணம், இந்தக் கீழப்பாலத்தைச் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில், இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற உயர்மட்டப் பாலமாக விரைவில் கட்டித் தரும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குரிய ஆயத்தப் பணிகளை விரைவில் மேற்கொள்ளவேண்டும் என, அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளேன்.

மன்னார்குடி பொது மருத்துவமனையும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், இடையூறுகள் நிறைந்த பகுதியில், வசதிக் குறைவுடன் செயல்பட்டு வ்ருகின்றன. எனவே பொது மக்களின் விருப்பப்படி வேறொரு புதிய இடத்தில், இந்த மருத்துவமனையும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியும், கூடுதல் வசதிகளுடன் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்துள்ள கொரநாடு என்ற இடத்தில், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில், முதல் அனைத்து மகளிர் வங்கிக் கிளை ஒன்றை, இந்த விழாவில் துவக்கி வைத்ததில், நான் உண்மையில் பெருமிதம் அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு அடையாளமாக விளங்கும், "கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை"யின் விரிவாக்கப் பணி, 34 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விரிவாக்கத்தின் மூலம், இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறன், நாளொன்றுக்கு 1,250 டன்னிலிருந்து, 3,500 டன்னாக உயர்த்தப்படும் என்பதையும் தரமான சர்க்கரையை உற்பத்தி செய்வதற்கு, வழி வகுக்கும் என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயர, அடிப்படை வசதிகளை, அனைத்து மக்களுக்கும் வழங்க, சமுதாய வளர்ச்சிப் பணிகளை, நாம் மேற்கொள்ளும் போது, ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்தின் அங்கத்தினர்களாகிய, ஒவ்வொரு தனிநபருக்கும், சென்றடைய வேண்டும் என்ற சித்தாந்தத்தில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. எனவேதான், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லும் போது, ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்கி வருகிறேன். இத்தகைய தனிநபர் உதவிகள் மூலமாக, நலிவடைந்த பிரிவு மக்களின், வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழி வகுக்க முடியும் என்று, நான் திண்ணமாக நம்புகிறேன்.

இன்று, 12 கோடி ரூபாய் செலவில், 51,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயனாளியையும் மேடைக்கு அழைத்து, நானே நேரில் உதவிகளை அவர்களுக்கு வழங்கி, எனது வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் நெஞ்சார விரும்பினாலும் இந்தக் குறுகிய காலத்தில், அவ்வாறு அனைவரையும் அழைத்துக்கொடுக்க, இயலாத காரணத்தினால், ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையிலேயே வழங்க உள்ளேன்.

மற்றப் பயனாளிகளுக்கு, எனது சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்கள் இருக்கின்ற இடத்திற்கே சென்று, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் உதவிகளை ஆதாரமாகக் கொண்டு, பயனாளிகள் அனைவரும், ஊக்கத்துடன் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்ற, எனது நெஞ்சத்துப் பேரவா வினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ந்துவருகின்றசமுதாயத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, நமது காவல் துறையை, நவீனமயமாக்குவதோடு,. மனிதாபிமானமிக்க ஒரு மக்கள் உதவிப் படையாக, அதனை மாற்ற வேண்டியது, காலத்தின் அவசியம் என்பதை உணர்ந்து, நவீன ஆயுதங்களையும், போக்குவரத்து வசதிகளையும், தொலைத் தொடர்புச் சாதனங்களையும், காவலர்களுக்கு வழங்கி வருகிறது, உங்கள் சகோதரியின் அரசு.

காவல் துறையை நவீனமயமாக்குகின்ற, எனது ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஒன்றுதான், மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுவரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, சமுதாயக் கொடுமைகள், பல நேரங்களில், அவர்களுக்கு என்று ஒரு அமைப்பு இல்லாத காரணத்தினால், வெளிவராமல், உள்ளேயே மறைக்கப்பட்டு விடுவதும் பின்னர் இதுபோன்ற, சமுதாயக் கொடுமைகளில் ஈடுபடுபவர்கள், சட்டத்தின் பிடிக்குள் சிக்காமல், தப்பிச் செல்லுகின்ற . சம்பவங்களும் பல காலமாக நமது சமுதாயத்தில், நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள் ஆகும். இத்தகைய கொடுமைகள், இன்னும் ஒரு தொடர்கதையாக ஆகாமல் தடுக்கவும் அவற்றிற்குச் சட்ட ரீதியான தீர்வினை, ஏற்படுத்தித் தருவதும் தான் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின், அடிப்படை நோக்கங்கள் ஆகும்.

மகளிரின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை நாளும் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்திவரும், உங்கள் சகோதரியின் அரசு — உங்கள் அரசு இந்தப் பணியையும், ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன், செயல்படுத்தி வருகின்றது. தொலை நோக்குப் பார்வையுடன், மகளிர் வளர்ச்சிக்கு, நாம் மேற்கொண்டு வரும் திட்டங்கள், பலரின் பாராட்டைப் பெற்று வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலும், சிந்தித்துப் பார்க்காத ஒரு திட்டத்தை, நாம் நடைமுறைப்படுத்தி, இது முடியும் என்று நிரூபித்துக் காட்டி இருக்கிறோம். இது கனவுக்கு உதவாது என்று, நமது சிந்தனையை உதாசீனப்படுத்தியவர்கள், இன்று வரவேற்கிறார்கள் பாராட்டுகிறார்கள். அண்டை மாநிலங்களும், ஏன், அண்டை நாடுகளும், நம்மை ஒரு முன்னோடியாகக் கொண்டு, இது போன்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அங்கேயும் துவக்கிவைத்து வருகின்றார்கள் என்ற செய்தி, தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கும், மற்ற நாடுகளுக்கும், முன்னோடி என்ற உண்மையை, மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டு இருக்கிறது.

இந்த மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்காக, இம்மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, நாகப்பட்டினம் நகரத்தில், இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு, அர்ப்பணித்து வைக்க உள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**11.3.1994** அன்று, தஞ்சைத் தரணியில் நடைபெற்ற அரசு விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டிய, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அன்பு அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், இன்று நாகப்பட்டினத்தில், அதைவிட சிறப்பானதொரு விழாவை, ஒரு பெரிய மாநாடு போலப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்துள்ளார்கள். எந்தக் கடினமான பணியானாலும், அதை முக மலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரையும் அரவணைத்து, சிறப்பாகச் செயலாற்றி, எடுத்த பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் ஆற்றலும் அபூர்வமான நிர்வாகத் திறமையும் ஒருங்கே பெற்றவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், என்மீது அளவு கடந்த ஒரு பாசப் பிணைப்போடும், இயக்கப் பற்றோடும், தொண்டாற்றி வருகின்றார்.

அல்லும் பகலும், அயராது பாடுபட்டு, சலியாது உழைப்பதில், அவருக்கு நிகர் அவரேதான். அரசுப் பணியானாலும், இயக்கப் பணியானாலும், திறம்படச் செய்து முடித்து, நம் அனைவரது பாராட்டுதல்களைப் பெறும் செயல் திறன் படைத்த வல்லவர் அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். நற்பண்புகள் நிறைந்த இவர், வளர்ந்து வரும் இன்றைய இளைய தலைமுறைக்கு, ஒரு அருமையான எடுத்துக்காட்டு என்பதை, என்னால் உறுதியாகக் கூற முடியும்.

இந்த விழாவைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களுக்கு, என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும், உரித்தாக்கிக் கொள்கிறேன். அவர் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல் நலத்துடனும், பல்லாண்டுப் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ் நாட்டிற்கும், நமது இயக்கத்திற்கும், தொண்டாற்ற வேண்டும் என்ற, எனது பேரவாவினையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விழாவில், அவருக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும், எனது நெஞ்சம் கனிந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது உரையைக் கேட்பதற்காகவும், இங்கே பெருந்திரளாகக் குழுமியிருக்கின்ற, இம்மாவட்டம் வாழ் பெருமக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

***(15.9.1994 அன்று நாகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை முழு விவரம்)***

**தண்ணார் தமிழ்தழைக்கச் சாந்திச் சிறைசார்ந்த**
**பண்ணார் தமிழ்ச்சோலைப் பைங்கிளியாம் - 'அண்ணா'**
**மறைந்தா ரிலையேஇம் மாந்தருளம் எல்லாம்**
**நிறைந்தாரே என்றும் நிலைத்து.**

**—திருமுருக கிருபானந்தவாரியார்.**



### ஆதிதிராவிட மாணவ மாணவியர்:

# பணியாளர் தேர்வுப் போட்டிகளில் கலந்துகொள்ள முன் பயிற்சி

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவ+மாணவியர்கள் பல்வேறு பணியாளர் தேர்வுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக முன் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசின், Staff Selection Commission இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India), வங்கிப் பணியாளர்கள் தேர்வு வாரியம் (Banking Service Recruitment Board), ரயில்வே பணியாளர்கள் தேர்வாணை வாரியம் (Railway Recruitment Board) மற்றும் தமிழ்நாடு தேர்வாணைக் குழு (Tamil Nadu Public Service Commission) ஆகியவற்றில் கலந்து கொள்கின்ற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன் பயிற்சி அளிக்கப்படும்.

வங்கிப் பணிகளில் எழுத்தர் தேர்வுக்காக (Banking Services Recruitment Board - Clerical Cadre Examination 1994) நடத்தப்படுகின்ற தேர்வுகளில் பணி நியமனம் பெறுவதற்கு 4,000 ஆதிதிராவிடர்களுக்கு 21 மாவட்ட மையங்களில் உடனடியாகப் பயிற்சி அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இந்தப் பயிற்சி நிலையங்கள் விரைவில் ஆதிதிராவிட இன மாணவ மாணவியர்கள் தேர்வை மேற்கொள்வதற்கான பயிற்சியை வழங்கும்.




# நாகையில் அரசு விழா: நிகழ்ச்சி விவரம்

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.9.1994 வியாழனன்று நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தஞ்சையிலிருந்து நண்பகல் 12.30 மணியளவில் ஹெலிகாப்டர் மூலம் நாகப் பட்டினத்திற்கு அவர் வருகை தந்தார். ரூ.135 கோடி மதிப்புள்ள அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்; 54,000-க்கும் மேலான ஏழை எளிய பயனாளிகளுக்குப் பலவகை அரசு நலத்திட்ட உதவிகளையும் தாம் பங்கேற்ற விழாவில் அவர் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழாப் பேருரைக்குப்பின், 3 மணியளவில், மிகப் பெரிய மாநாடு போல நடைபெற்ற இந்நிகழ்ச்சி முடிவுற்றது.

**விழாக்கோலம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு, நாகப்பட்டினமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் வாழை மரங்கள், வண்ணக் கொடிகள், மாவிலை- தென்னங்குருத் தோலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந் தன. எங்கு பார்த்தாலும் எண்ணற்ற வளைவுகள் எழிலோடு உருவாக்கப்பட்டிருந்தன. தஞ்சை-நாகை காயிதே மில்லத் மாவட்டச் சிறப்பம்சமான தென்னங்கீற்றுச் சப்பரங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன.

'நாகை காயிதேமில்லத் மாவட்டம் கண்ட புரட்சித் தலைவியே வருக...'

'மதமாச்சரியங்களைத் தகர்த்த மக்கள் தலைவியே வருக...'

'காவிரி தந்த தாயே வருக...'

- போன்ற வாசகங்கள் தாங்கிய வண்ணமயமான சுவரொட்டிகள், இரண்டு வரிசை வீடுகளோடும் வீதிகளின்மேலே கைகோர்த்துக் காட்சியளித்த பதாகைகள் நகரெங்கும் எழிற்கோலம் காட்டின.

அருள்மிகு தட்டையப்பர் கோயில் கோபுரம், வேளாங்கண்ணி மாதாகோயில், நாகூர் தர்கா ஆகியவைகள் அச்சாகியிருந்த வரவேற்புச் சுவரொட்டிகள் ஏராளம் இருந்தன. 'மும்மதத்தின் ஒளி விளக்கே வருக' என்ற வாசகம் அவற்றில் காணப்பட்டது.

எங்குபார்த்தாலும் நாதசுரக் கச்சேரி, திரையிசைப் பாடல்கள், நையாண்டி மேளம் போன்றவை ஒலித்தன. மயிலாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டமெல்லாம் நடத்தப்பட்டன.

**மாநாட்டைப் போல...**

வலிவலம் தேசிகா தொழில்நுட்பக் கல்லூரி திடலில் மாபெரும் மாநாட்டுக்குப் போல பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப் பட்டிருந்தது. வெயிலையும் பொருட் படுத்தாமல் சாரிசாரியாகக் காலை முதலே ஆண்களும் பெண்களும் வந்தவண்ணம் இருந்தார்கள்.

கோட்டைபோல் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கான நுழைவாயிலில்-அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதல்வர் 'கட்அவுட்'டுகள் வைக்கப்பட்டிருந் தன. 'கலியுகத்தின் காவல் தெய்வமே வருக' என்று அவற்றுக்கு மேலே அழகுற எழுதப் பட்டிருந்தது. உள்ளே– கழுத்தை உயர்த்தி உயர்த்திக் குரல் கொடுத்து வரவேற்கும் 'டினோசர்' ஒன்று அமைத்திருந்தார்கள்.

முக்கிய மேடையில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதலமைச்சர் படங்கள் அணி செய்தன. பூச்சரங்கள் பொலிவுறத் திகழ்ந் தன. எங்கு நோக்கினும் ஆண்களும் பெண் களுமாக வெள்ளம்போல் மக்கள் கூட்டம்.

அதனருகே அமைக்கப்பட்டிருந்த சிறிய் தோர் சிங்கார மேடையில் காலை 10 மணி முதலே 'சோழன் போக்குவரத்துக் கழகத் தினரின் இசை நிகழ்ச்சி' நடத்தப்பட்டது.

**முதல்வர் வருகை**

வானில் - 12.30 மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகைதரும் ஹெலி காப்டர் காட்சியளித்ததுமே "புரட்சித் தலைவி வாழ்க" என்கிற வாழ்த்து முழக்கம் மண்ணதிர எழுந்தது.

அடுத்த சிறிது நேரத்தில் விழா நிகழிடத் திற்கு வந்து சேர்ந்தார் மாண்புமிகு முதல்வர். நாகை காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள கோயில்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப் பட்ட பிரசாதங்கள் அவருக்கு வழங்கப் பட்டன; பூரண கும்ப வரவேற்பு அளிக்கப் பட்டது. மாண்புமிகு முதல்வரோடு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வருகை தந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேடைக்கு வந்ததுமே - விண்ணை எட்ட வாழ்த்து முழக்கம் மீண்டும் எழுந்தது. மேடையின் நாலாபுறமும் சென்று மக்களை நோக்கிக் கரமசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார் அவர்.

நாகை காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். சாவர்க்கர் - மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் விழாத் தலைமை யேற்குமாறு முன்மொழிய, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.இரா.சம்பத் அவர்கள் அதை வழிமொழிய விழா தொடங்கியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர் முதலான முக்கிய விருந்தினர்களுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார்.

அதன் பின்னர் ரூ.135 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர்அவர்கள்தொடங்கிவைத்தார்,சில திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

## நீர் ஆதாரம்

- பூமியில் மொத்த மேற்பரப்பில் 1.41 பில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் கொள்ளளவு உள்ளது. இந்தத் தண்ணீரைச் சமமாக எல்லாப் பகுதிக்கும் பகிர்ந்தளித்தால் 3,000 மீட்டர் ஆழத்திற்குள் பூமி அமிழ்ந்திருக்கும்.
- பூமியில் உள்ள தண்ணீரில் 98 சதவிகிதம் உப்புநீர், இரண்டு சதவிகிதம் மட்டுமே தூய்மையான நீராகும்.
- உலகில் 1.2 பில்லியன் மக்களுக்குத் தூய நீர் கிடைக்காமல் உள்ளது. உலக மக்கள் தொகையில் 4 சதவிகிதம் பேர் தினமும் 400 லிட்டர் நீர் உபயோகிக்கின்றனர். மூன்றில் இரண்டு பங்கு மக்கள் நாள் ஒன்றுக்கு 50 லிட்டருக்கும் குறைவான நீரையும், பெரும்பாலான மக்கள் 20 லிட்டர் நீரையும் பயன்படுத்துகின்றனர்.



### வாழ்த்துரைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், நாகையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கவிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்து காவல்துறைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபால் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

அதன்பின் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு.ஓ.எஸ். மணி, நாகப்பட்டினம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கோடிமாரி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம். சின்னசாமி வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இதன் பிறகு - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அதைத்தொடர்ந்து 54,000-க்கும் மேலான பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

உதவி பெறுவோரின் பட்டியலை, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.இரா. சம்பத் அவர்கள் படித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், நாகை காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் நாகூர், வேளாங்கண்ணி, அகோபிலமடம் ஆகிய திருத்தலங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் பலரும் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

விழா முடிவில், மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றியுரையாற்றினார்.

### மகளிர் காவல் நிலையம்

அதற்குப் பிறகு-மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் - நாகையில், பழைய பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டிருந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்'தைத் திறந்து வைத்தார்.

அவ்விழாவில் காவல்துறைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபால், அவர்களும், காவல்துறை கூடுதல் தலைவர் திரு தேவாரம் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

இந்த விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வருகை தந்திருந்தார்கள்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி.எல். ராஜேந்திரன்**



## குற்றாலத்தில் குதூகலமான சாரல் திருவிழா

பொதிகை மலை அடிவாரத்தில், கடல் மட்டத்திற்கு மேல் 550 அடி உயரத்தில் 7.68 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ள இயற்கை வளம் பொருந்திய பகுதிதான் திருக்குற்றாலம். தென்பாண்டி நாட்டில் இயற்கை அழகும், இறைவன் அருளும் ஒருங்கே அமையப் பெற்றது இந்த அழகிய குற்றாலம்.

கம்பீரமாக நிற்கும் மலை, அதில் ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள்; மலைகளில் பொங்கிவரும் அருவிகள்; அழகிய மலையைச்சுற்றி வந்து கொஞ்சும் மேகக் கூட்டங்கள்; மென்மையாக வீசும் தென்றல்; பூத்துக் குலுங்கும் பூவினம்; மந்திகளின் குறும்புகள்; ஓய்வு நாடியும், உடல் நலம் நாடியும் இங்கு வருவோருக்கு பன்னீரைத் தெளிப்பது போன்று வரவேற்கும் சாரல்; இங்கு வீசும் 'தென்றலுக்கு' என்றும் வயது பதினாறு!

பேரருவி, ஐந்தருவி, புலி அருவி, சிற்றருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி, பழைய குற்றால அருவி, பழத்தோட்ட அருவி, புது அருவி போன்ற அருவிகளில் நீராடும்போது சுற்றுலாப் பயணிகள் அடையும் சுகம்தான் என்ன! ஆண்டுதோறும் குற்றாலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரை சாரல் காலமாகும், சுற்றுலாப் பயணிகளின் நலம் கருதி, மாவட்ட நிர்வாகம், வசதிகளை விரிவான முறையில் செய்கின்றது.

ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க அரசின் சார்பில் குற்றாலம் கலைவாணர் சாரல் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றது. 20.8.94 முதல் 28.8.94 முடிய அரசின் சார்பில் சாரல் திருவிழா மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. தினமும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கலை நிகழ்ச்சிகளை மாவட்ட நிர்வாகமும், தஞ்சை தென்மண்டலப் பண்பாட்டு மையமும், சுற்றுலாத் துறையும் இணைந்து நடத்தின.

சாரல் திருவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு நாகூர்மீரான் அவர்களையும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், சுற்றுலாத்துறை இயக்குநர், திரு குணாளன், இ.ஆ.ப., அவர்களையும், வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகள் அனைவரையும், மாவட்ட ஆட்சித் தலைவர், திரு இரா. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

விழாவில், மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்கள் பேசுகையில், குற்றாலத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. இங்கு வீசும் தென்றல் காற்றுக்கும் தனிச் சிறப்பு உண்டு. ஆனால், உல்லாசப் பயணிகள் குற்றாலம் வந்து குவிகிறார்கள் என்றார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர்மீரான் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுற்றுலாத்துறைக்குச் சுற்றுலாத் தொழில் கொள்கையை வகுத்துள்ளார் என்றும், குற்றாலத்தில் ரூ.60 இலட்சம் செலவில் தமிழ்நாடு ஓட்டல் கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள் என்றும், குற்றாலம், ஐந்தருவி, பழைய குற்றாலம் ஆகிய இடங்களில் உணவு விடுதிக் கூடங்கள் திறக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது என்றும் கூறினார்.

24.8.94 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு டி. ஜனார்த்தனம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி



கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.

26.8.94 அன்று, கோ-ஆப்டெக்ஸ் தலைவர் திரு. நெல்லை பாலாஜி அவர்கள், திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கே.ஆர்.பி. மணிமொழியன் ஆகியோர் கலந்து கொண்டுகுற்றாலத்தின் புகழினை விளக்கினார்கள்.

27.8.94 அன்று, மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டது. இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி செல்வம் ஜெயராமன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் துணைவியார் திருமதி இளவேனில்ராஜேந்திரன் அவர்கள், குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. அழகம்மாள் அவர்கள், மாவட்டச் சமூகநல அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சாரல் திருவிழாவின் நிறைவு நாளில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விழாவைச் சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும், திருநெல்வேலி நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி நன்றி கூறினார்.

சாரல் திருவிழாவின்போது நடத்தப்பட்ட மெல்லிசை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், நட்சத்திர இரவுகள், மாயாஜாலக் காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்தனர்.

**-எம்.பி. இராஜா**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி கட்டபொம்மன்
மாவட்டம்



# “குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே எம் இலட்சியம்”

## 23.9.1994 அன்று திண்டுக்கல் அண்ணா மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**வீ**ரத்தின் விளை நிலமாக விளங்கி, விடுதலை உணர்வை வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்த பூமி, இந்த திண்டுக்கல் அண்ணா மாவட்டம். இந்துக்களும், முகமதியர்களும் உடன்பிறவாச் சகோதரர்களாக, மத நல்லிணக்கத்துடன் வாழும் மாவட்டத்திற்கு, வருகை தந்த என்னை, எழிச்சியோடு வரவேற்க வந்துள்ள, இலட்சக்கணக்கான மக்களைச் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி, பேரறிஞர் பெருந்தகை, திருப்பெயரை தாங்கிய மாவட்டம் இது. நம்மை வளர்த்துவிட்ட, நமது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்து, மக்கள் பணி மேற்கொண்ட ஒரு காலகட்டத்தில் இடைத் தேர்தல் வெற்றி வாயிலாக, அரசியல் அங்கீகாரம் வழங்கி, தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டிய இடம், இப்பகுதி.

அண்ணாவின் திருப்பெயரைத் தாங்கிய, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியங்களுக்கு, முதல் அரசியல் வடிவம் தந்த, இந்த மாவட்டத்திற்கு வருகை தரும்போதெல்லாம், என்னை அறியாமல், எனக்கு ஒரு புதிய தெம்பு ஏற்படுவதாக, நான் உணர்கிறேன்.

இப்பகுதியின் வீர உணர்விற்கும், தொன்மைக்கும், ஒரு சான்றாக விளங்கிக் கொண்டிருக்கும், மலைக்கோட்டை, 1605-ஆம் ஆண்டு, முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரால் கட்டிமுடிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அவர்கள் வழி வந்த ராணி மங்கம்மா, இந்த மலைக் கோட்டைக்கு, 600 படிகளை





வெட்டிவைத்ததாகவும், சரித்திர ஏடுகள் தெரிவிக்கின்றன.

1755-ஆம் ஆண்டு, அன்றைய மைசூர் சமஸ்தானம் Hyder Ali-ஐ திண்டுக்கல்லுக்குக் கவர்னராக நியமித்தது.

அப்போது திண்டுக்கல் பகுதியும் சேர்த்து கோலோச்சிய, சிவகங்கைச் சீமையின் அரசி, வீரமங்கை வேலுநர்ச்சியாரைப் பற்றி குறிப்பிடாவிட்டால், எனது பணி நிறைவு பெறாது என்பதை நான் நன்கு அறிவேன்.

1772-ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர்,முத்துவடுகநாத பெரிய உடையாத்தேவர் காளையார் கோயில், காளேசுன் கோவிலில் தெய்வ தரிசனம் செய்து கொண்டிருந்த போது, ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ராணி வேலுநாச்சியார், திண்டுக்கல்லக்கு வந்து, Hyder Ali-யின் ஆதரவு பெற்று, திண்டுக்கல் கோட்டையிலும், விருப்பாச்சிக் கோட்டையிலும், எட்டு ஆண்டுகள் வாழ்ந்து, ஆங்கில ஏகாதிபத்தியத்தை விரட்டி அடித்தார். தான் ஏற்றுக் கொண்ட சபதத்தை நிறைவேற்றி சிவகங்கைச் சீமையை மீட்டு, தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையை நிலைநாட்டியவர் வேலு நாச்சியார்.

வடக்கே ஜான்சி ராணி, ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து, முதல் சுதந்திரப் போரில் குரல் கொடுத்ததற்கு, அரையாண்டுக்கு முன்பே தெற்கே இந்த மண்ணில், ஒரு தமிழச்சி வாள் ஏந்திக் களம் புகுந்து, பகைவரை வெட்டி வீழ்த்தி ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய எண்ணங்களுக்குச் சமாதி வைத்தார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மனதில் ஒரு புதிய எழுச்சி தோன்றுகிறது. தமிழ் நங்கையரின் வீரத்தைப் பறை





சாற்றும் வண்ணம், இழந்த சிவகங்கைச் சீமையை மீட்டு, மீண்டும் பத்தாண்டுக் காலத்திற்கு நல்லாட்சிபுரிந்த வேலுநாச்சியார் இன்றும் தமிழக மக்களின் வீரத்திற்கும், ஆற்றலுக்கும் ஒரு வாலாற்றுச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டில், சுதந்திரக் கனலை மக்களிடையே ஊட்டிய, அதில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகி சுப்பிரமணிய சிவா, இம் மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலகுண்டில் பிறந்தவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமது மனதில், தேச பக்தி உணர்வு, மிகுதியாகின்றது. பாரதியாரால் புகழப்பட்ட சிவா, கப்பலோட்டிய வ.உ. சிதம்பரனாருக்கு உதவியாக இருந்து, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையும், அடக்கு முறையையும் எதிர்த்து தேசிய உணர்வை வளர்த்ததை, சரித்திரம் என்றென்றும் மறக்காது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அதே நேரத்தில், மாவட்டங்களின் இணையான வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டத்தின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப, பல திட்டங்களைத் தீட்டி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. அதே உணர்வுடன், இந்தத் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு உங்கள் அன்புச் சகோதரி 153 கோடி ரூபாய்க்கான திட்டங்களுடன், உங்களைக் காண வந்துள்ளேன். இன்று, 78 கோடி ரூபாய் செலவில், முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், 58 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 54,000 பேருக்கும் அதிகமான, இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 17 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட உள்ளதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பது, குடிநீர்ப் பிரச்சினை என்பதை அறிந்த உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அதற்குத் தீர்வு காண, கடந்த மூன்று ஆண்டுகளில், பல்வேறு குடிநீர்த் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகின்றது. தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள குக்கிராமங்களுக்குக் "கூட, பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம். நாங்கள் செய்து முடித்த பணிகள் ஏராளமாக இருந்தாலும் இன்னும் திட்டமிட்டு, நாங்கள் செயல்படுத்த வேண்டிய பணிகளும், நிறையவே உள்ளன. எப்பாடுபட்டாகிலும் அவற்றைச் செயல்படுத்தி இம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நான் உறுதி கொண்டுள்ளேன்.

குடிநீர்த் திட்டங்களையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும், பரிசீலனை செய்து ஒப்புதல் அளிப்பதற்கு அரசாங்கம் சில வரை முறைகளைக் கடைப்பிடித்து வருகின்றது. செலவு பயன் விகிதாச்சாரம், அதாவது Cost Benefit Ratio அடிப்படையில், செலவு அளவிற்குப் பயன் இருக்கிறது என்பதைக் கண்டறிந்த பிறகு தான், இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகின்றது. இத்தகைய "இறுக்கமான விதிமுறைகளினால்", திண்டுக்கல் போன்ற பகுதிகளில், பல குடிநீர்த் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, செலவு பயன் விகிதாச்சாரத்தின்படி ஏற்புடையது அல்ல என்று நிராகரிக்கப்பட்டுள்ளன. "விதிகளின் அடிப்படையில், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது நல்லது" என்கின்ற அதே நேரத்தில் மக்களுக்கு நன்மை செய்கின்ற பணியில், இந்த Cost Benefit Ratio அதாவது செலவு பயன் விகிதாச்சாரம் என்கின்ற விதி இடையூறாக இருக்கக் கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம். எனவே இன்றுமுதல் வறட்சிப் பகுதிகளுக்கும் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துவிட்ட பகுதிகளுக்கும் இந்த இறுக்கமான விதிமுறைகள் சற்று தளர்த்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நிலத்தடி நீர், கடுமையாகக் குறைந்துள்ள பகுதிகளுக்கு, இந்த அறிவிப்பு, ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

பல காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள குடிநீர்த் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும்



எனது புதிய ஆணைப்படி, மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். "மக்கள் தான் இறுதி எஜமானர்கள்", என்ற ஜனநாயகக் கோட்பாட்டில், நாங்கள் வைத்துள்ள ஆழமான நம்பிக்கைக்கு, இந்த அறிவிப்பு, ஒரு உண்மையான சாட்சி.



சின்னாளப்பட்டி, நகரின் குடிநீர்த் தேவை, வளர்ந்து வருகின்ற அதேநேரத்தில் கிடைக்கின்ற நிலத்தடி நீரும், குடிப்பதற்கு உகந்ததாக இல்லை என்கின்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால் இன்று, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, வைகை ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு, ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தீட்டியுள்ளது.

சின்னாளப்பட்டிப் பேரூராட்சிப் பகுதிவாழ் மக்களுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்கு, 15 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில், வெகுவிரைவில் செயல்படுத்தப்படும் என்பதை, மிகமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 16 இலட்சம் ரூபாய் மட்டுமே, ஆண்டு வருமானம் கிடைக்கின்ற சின்னாளப்பட்டி பேரூராட்சியால், இத்தனைப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்த நிதி ஆதாரத்தைத் திரட்ட முடியாது என்கின்ற சூழ்நிலையில் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, எப்பாடுபட்டாகிலும், இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியே தீரும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வேடசந்தூர், கூட்டுக் குடிநீர்த் திட்டம் வத்தலகுண்டுப் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நாதுனாபுரம், கரிசல்பட்டி குடிநீர்த் திட்டம், மன்னவனூர் குடிநீர்த் திட்டம், காசாம்பட்டி குடிநீர்த் திட்டம் போன்ற பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நான் இப்போது வழங்கியுள்ள, புதிய வரைமுறைகளின்படி, மறு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் குடிநீர்த் திட்டங்களை, எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதில் தீவிரமாக இருக்கின்றோம். வெள்ளோடு கிராமத்தில் ஆனைவிழுந்தான் ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல், கன்னிவாடி கிராமத்தில் நாயோடைக் குறுக்கே புதிய ஏரி கட்டுதல், நல்லதங்காள் ஓடை குறுக்கே, ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டுதல், ராஜதானிக் கோட்டை அருகே, சிறுமலை அருவிக்குக் குறுக்கே ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டுதல், காவல்பட்டிக் கிராமத்திற்கு அருகில், பச்சையாறு குறுக்கே, நீர்த் தேக்கம் கட்டுதல் போன்ற திட்டங்கள் மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேடசந்தூர் வட்டம், ராமகிரி கிராமத்தில் அமைந்துள்ள, ராமகிரி ஏரியை மீண்டும் புதிதாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்பகுதி வாழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வருவதை நான் நன்கு அறிவேன். 1993-ஆம் ஆண்டு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களை நான் இப்பகுதிக்கு அனுப்பி வைத்து பார்வையிடச் செய்தேன். அதன் விளைவாக, ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரைப் பொறுத்தவரையில், குடிநீர் வழங்கும் திட்டம், செவ்வனே செயல்படுத்தப்பட்டு, போதிய அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், முறையான ஒரு பாதாள சாக்கடைத் திட்டம், இல்லாத சூழ்நிலையில், இந்த நகரின் அரண்மனைக் குளம் மற்றும் பல பகுதிகளில், கழிவு நீர்ப் பெருக்கம் ஏற்பட்டு சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு வருகின்றது. எனவே, இந்த நகரத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, கழிவு நீர்ப் பாதாளச் சாக்கடைத் திட்டம்

Underground Drainage Scheme ஒன்று, 28 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய நிதி ஆதாரம், இந்நகராட்சியிடம் இல்லாத காரணத்தினால், அவற்றை, எவ்வாறு ஏற்பாடு செய்வது, என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். வெகுவிரைவில், இத்திட்டத்திற்குச் செயல் வடிவம் தரப்படும். இந்த நகரத்தின் பல பிரச்சினைகள் இதனால் தீரும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாவட்டத்தின் சுற்றுலா மையமான, கொடைக்கானலில் அனைத்து வசதிகளோடு கூடிய ஒரு பேருந்து நிலையம் இல்லாதது ஒரு குறையாக உள்ளது. சென்ற முறை நான் கொடைக்கானல் வந்திருந்தபோது, அதிகாரிகளோடு பேசும்போது, கொடைக்கானலில் ஒரு புதிய பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். அதன்படி 30 இலட்சம் ரூபாய் செலவில் அதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டது. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், மற்றும் கொடைக்கானல் நகராட்சி ஆகிய இரண்டும் இணைந்து, இந்தப் பணியை விரைவில் செய்து முடித்துக் கொடுக்க வேண்டும் என நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சிதான் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை என்ற கொள்கையில் நாங்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு, மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம். இம்மாவட்டத்தின் பல்வேறு திட்டங்களில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, அமைத்துத் தரும் வகையில் மொத்தம் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு பள்ளிக் கட்டடங்கள், சத்துணவு மையங்கள்,



"கடலுக்காக அல்ல, கடற்கரையிலே இருக்கின்ற மக்களுக்காக காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால் தன் எதிரிலே இருக்கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர, அதனடியில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அதுபோல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல, நாட்டு மக்களுக்காக—அந்த மக்களுக்காக. அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!"

---

சமுதாயக் கூடங்கள், இணைப்புச் சாலைகள், பாலங்கள், சிறு பாசனத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், தொகுப்பு வீடுகள் ஆகியவற்றைப் பொதுமக்களின் நலனிற்கு அர்ப்பணித்ததில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த, 10 புதிய வழித்தடங்களை இன்று துவக்கி வைத்துள்ளேன். மேலும், ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள, ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின், தலைமை அலுவலகக் கட்டடத்தையும் திறந்து வைத்ததில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேளாண் பொறியியல் துறை, 4 கோடி ரூபாய் மதிப்பில், சில திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில், பல்வேறு நீர்ப் பராமரிப்புப் பணிகள் உட்பட, இத்திட்டங்களைத் துவக்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பழனி நகரத்தின் சுகாதார மேம்பாட்டிற்காக, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில், நிர்மாணிக்கப்பட்டுள்ள, பாதாளச் சாக்கடைப் பணி Underground DrainageScheme இன்று என்னால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது.ஆண்டு முழுவதும், இலட்சக்கணக்கான இறையன்பர்கள் வருகை தரும் அறுபடை வீடுகளில் ஒன்றான இந்தப் பழனி நகரின், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும் நிறைவான தோற்றத்தை வழங்கவும் இந்தத் திட்டம் உதவும் என்றும் நான் பரிபூரணமாக நம்புகின்றேன்.

அதேபோன்று, திண்டுக்கல், கொடைக்கானல் ஆகிய இரண்டு முக்கிய நகரங்களிலும், சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய சாலை வசதிகள், மற்றும் குடிநீர் வசதிகள் ஆகியவை, வளர்ந்து வரும் இந்நகரங்களில், பெருகி வரும் மக்கள் பெருக்கத்தின் தேவைகளை, நிறைவு செய்யும் வகையில், அமைந்திடும் என்று நான் கருதுகின்றேன். குறிப்பாக, கொடைக்கானலில் நிறைவேற்றப்பட்டிருக்கும் எழிலார்ந்த ஏரி அபிவிருத்தித் திட்டம், அந்த ஏரிக்கு மென்மேலும் அழகு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ராமநாயக்கன்பட்டி, முன்னிலைக்கோட்டை, வேலான் கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளிட்ட, 9 கிராமங்களில், சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளை, நான் இன்று துவக்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குடிநீர் வசதி மேம்பாட்டு வசதிகளைப் பொருத்த வரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, சுமார் 40 இலட்சம் ரூபாய் செலவில், வீரசின்னம்பட்டி, கோனூர் உட்பட ஆறு கிராமங்களில், புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள்



கட்டப்படும். திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் இதுவரை குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்குரிய, புதிய குடிநீர் விநியோகம் அபிவிருத்தித் திட்டம், 40 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்டு, இன்று என்னால் துவக்கிவைக்கப்பட்ட, சேவகம்பட்டி பேருராட்சி குடிநீர் விநியோகம் அபிவிருத்தித் திட்டம் இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்யும் என்று நம்புகின்றேன்.

10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, அழகாபுரி, குடகனாறு நீர்த் தேக்கத்தைத் திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாவட்டத்தின் வேளாண் விளைபொருள் பெருக்கத்திற்கு, இது வழிவகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

அடுத்து, கிராம மக்களின் சுகாதார, மற்றும் நல்வாழ்வு முன்னேற்றத்தைப் பொருத்தவரையில் எங்கள் அரசு மிகுந்த அக்கறை செலுத்திவருகிறது. நவீன மருத்துவ வசதிகள், கிராம மக்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த வகையில், ஆலமரத்துப்பட்டி, நரசிங்காபுரம், எரியோடு, ஆகிய மூன்று கிராமங்களில், ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்களையும் நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில், புதிய அறுவை சிகிச்சைப் பகுதிக் கட்டடத்தையும் இப்பகுதி வாழ் மக்களின் நலனுக்காக, இன்று அர்ப்பணித்துள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பெரும் விருப்பமாகும். இவ்விருப்பமே என்னை எப்போதும் ஏழைகளிடையில் போய்ச் சேர்த்தது. ஏழைகளுடன் கலந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

---

சின்னாளப்பட்டியில் புதிய காவல் நிலையம், கொடைக்கானலில் புதிய போக்குவரத்துக் காவல் நியைலம், ஆயுதப் படைக்குக் கூடுதலாக இரு புதிய அணிகள் என்று, இம்மாவட்டத்தின் காவல் துறையை மேலும் வலுப்படுத்த, சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாட்டின் முக்கியத் திருத்தலங்களில் ஒன்றான பழனியில், பெருகி வரும் இறையன்பர்களின் எண்ணிக்கை கூடி வரும் போக்குவரத்து ஆகியவை, அதன் பேருந்து நிலைய விரிவாக்கத்தின் தேவையை வெகுகாலமாகவே ஏற்படுத்தி வந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பில், பழனி நகரில் அனைத்து வசதிகளுடன், ஒரு புதிய பேருந்து நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், திண்டுக்கல், பழனி, ஆகிய நகரங்களில் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பில் 395 புதிய குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திண்டுக்கல் புகைவண்டி நிலையத்திற்கு அருகில், ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படாததால், போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதைத் தீர்க்க 3 கோடி ரூபாய் செலவில் இரயில்வே மேம்பாலம் ஒன்று கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் இன்றைய தினம் சுமார் 29 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு மின் வளர்ச்சித் திட்டங்களுக்கான, அடிக்கல்லை நாட்டியதில், நான் பேருவகை கொள்கின்றேன். செம்பட்டியில் 15 கோடி ரூபாய் செலவிலும், கன்னிவாடி, சித்தர்கள் நந்தம், எரியோடு ஆகிய இடங்களில் 8 கோடி ரூபாய் செலவிலும் துணை மின்நிலையங்கள் உருவாக்கப்படும். வேடசந்தூர் துணை மின் நிலையம், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட, துணை மின் நிலையமாக உயர்த்தப்படும்.

சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்களும், சமுதாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ச்சி அடைய வேண்டும் என்கின்ற கருத்தை நான் பல இடங்களில் வலியுறுத்தி வருகின்றேன். இதன் வெளிப்பாடாகத்தான் நான் சொல்கின்ற எல்லா மாவட்டங்களிலும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, அரசின் பல்வேறு திட்ட உதவிகள் வழங்கி மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வகையில் 54,000 பேருக்கும் மேற்பட்ட, இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 17 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன.

என் அன்பிற்குரிய மக்கள் அனைவரையும், இந்த மேடைக்கு வரவழைத்து எனது கரங்

களாலேயே, இந்த உதவிகளை வழங்க நான் பெரிதும் விரும்புகின்றேன். நேரமின்மையைக் கருதி ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையில் நான் உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள் என்று மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், அதனை ஒரு அடிப்படையான ஆதாரமாகக் கொண்டு தங்களது உழைப்பை நல்கி பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்று, வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் முயற்சிகள் அனைத்தும், வெற்றி அடைய வேண்டும் என்ற, எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த, பெண்களின் பிரச்சினைகளுக்குச் சட்டரீதியான தீர்வைக் காணவும், பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்றவும், தனி ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டும், என்ற எனது எண்ணத்தின் பிரதிபலிப்புத் தான் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். ஆரம்பத்தில், இது நடக்கின்ற காரியமா? என்று கேள்வி கேட்டவர்களும் உண்டு. நடக்காது என்று சாதித்தவர்களும் உண்டு. கற்பனையில் வாழ்ந்தவர்கள் என்று நம்மை பரிகசித்தவர்களும் உண்டு. ஆனால், இன்று நாம், அதைச் சாதித்துக் காட்டியிருக்கின்றோம். இதை முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களால், தமிழகத்திற்கு மகளிர் ஒரு புதிய தன்னம்பிக்கையையும், சட்டப் பாதுகாப்பையும் பெற்றிருக்கிறார்கள் என்பது, கண்கூடு. இந்த விஷயத்தில் நம் இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கும் மட்டும் அல்லாது உலக நாடுகளுக்கே, முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல் கட்டமாக 27 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஆரம்பிக்கலாம் என்று, நாங்கள் திட்டமிட்டோம். மேலும் சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதால் முதல் கட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகின்றேன்.

இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகு, திண்டுக்கல் நகரத்தில், நான் திறந்துவைக்க உள்ள "அனைத்து மகளிர் காவல் நிலையம்", தமிழகத்தின் 31-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும்.

ஒரு காவல் மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தையாவது, இந்த முதல் கட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்ததை நினைத்து என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

இந்த மாவட்டம், தனது சொந்த மாவட்டமாக இல்லை என்றாலும், தனது சொந்த மாவட்டமாகக் கருதி, இந்த விழாவை இத்தனைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும், உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தச் சீரிய பணியில் அவருடன் ஒத்துழைத்துப் பணியாற்றிய, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு எஸ். ரகுபதி அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்துணைத்தலைவர் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.காந்திராஜன் அவர்களுக்கும், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர், திரு சி. சீனிவாசன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும், பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் 23 மாவட்டங்களுக்கும், நானே நேரிடையாகச் சென்று அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி, முடிக்கப்பட்ட பல திட்டங்களைத் துவக்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன். திண்டுக்கல் அண்ணா மாவட்டம், இந்தச் சுற்றில் கடைசி மாவட்டம் ஆகும். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும், நானே நேரில் சென்று மாவட்ட வாழ் மக்களின் பிரச்சினைகளை, அலசி ஆராய்ந்து மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, பல்வேறு பணிகளை மேற்கொண்டதை நான் ஒரு வேள்வியாக நடத்திக் காட்டியுள்ளேன்.

அரசியல் மனமாச்சரியங்களுக்காக, நான் செய்வதையெல்லாம் குறை கூறுபவர்கள், இதிலும் குறை கூறத்தான் செய்கிறார்கள். என்னைப் பொருத்தவரையில் குறை கூறுபவர்களைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது மக்களின் குறைகளைக் களைவதையே நமது கொள்கையாகக் கொள்ளவேண்டும்.

நாம் மேற்கொண்ட புனிதப் பணியில் மற்றவர்களின் குறை சொற்கள் நமது மக்கள் பணியை மேலும் வலுப்படுத்துகின்ற ஒரு உரமாகத்தான் அமையுமே தவிர, அனல் மீது விழும் நீரைப் போல, நமது வேகத்தைத் தணித்துவிடாது.

அந்த வகையில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, கடந்த மூன்றாண்டுக் காலத்தில், பல மாவட்டங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலமுறை சென்றிருந்தாலும், 23 மாவட்டங்களுக்கு, குறைந்தபட்சம் ஒரு முறையாவது செல்கின்ற பணியையும், இன்று இந்த இடத்தில் முடித்து வைக்கின்றேன் என்பதை எண்ணும் போது பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கு ஒரு வடிவத்தை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எந்த இடத்தில் கொடுத்தாரோ அதே இடத்தில், அவரது இலட்சியங்களுக்கு கனவுகளுக்கும் நான் ஒரு புதிய பொலிவைச் சேர்த்துள்ளேன் என்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் செல்லுகின்ற இடங்களிலெல்லாம், நீங்கள் அளித்த வரவேற்பையும், உங்கள் அன்பையும், பாசத்தையும் கண்டு, மனம் நெகிழ்ந்து நிற்கின்றேன். நீங்கள் அனைவரும் பல்லாண்டு பல்லாண்டுக் காலம் அனைத்து வளங்களும், நலங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## கோழி வளர்ப்பு

கிராமப் பகுதிகளில் குடிசைத் தொழிலாக, ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பை அளிப்பது கோழி வளர்ப்புத் தொழில். நடப்பு நிதியாண்டில் 2,61,303 முட்டைகள் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. அதே போன்று 1993-94-இல் சராசரி தனிநபர் முட்டை நுகர்வு ஆண்டுக்கு 27-ஆக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. முட்டை உற்பத்தியைப் பெருக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கோழிப் பண்ணைகள் வைத்திருப்பவர்களுக்குத் தரமான கோழி இனங்கள் கிடைப்பதை அதிகரிப்பது, கோழியின மேம்பாட்டுக்கெனத் தேசிய அளவில் உயர் மட்ட அமைப்பை ஏற்படுத்துவது, கோழியின வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பயிற்சி வசதியை ஏற்படுத்துவது கோழியின வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் கோழியின யூனிட்டுகள் அமைப்பைக் கூட்டுறவு அடிப்படையில் உருவாக்குவது, கோழியினப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான ஊக்கத்தை அளிப்பது போன்றவையே அந்த நடவடிக்கைகள்.

## தொழுநோய்

உலகம் முழுவதும் 3.5 மில்லியன் பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் உள்ளனர். இந்தியாவில் 201 மாவட்டங்களில் 1,000 பேரில் ஐந்து பேருக்கும் 77 மாவட்டங்களில் 100 பேரில் இரண்டு முதல் மூன்று பேருக்கும் தொழுநோய் பாதிப்பு உள்ளது. தொழுநோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் கூட்டு மருந்துச் சிகிச்சை முறை படிப்படியாக விரிவாக்கப்பட்டு வருகிறது. இதுவரை 135 மாவட்டங்களைச் சேர்ந்த 27.5 கோடி ம்க்களுக்கு இச்சிகிச்சையின் பலன் கிட்டியுள்ளது. 62 மாவட்டங்களுக்கு இச்சிகிச்சை முறை தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாகக் கூட்டு மருந்துச் சிகிச்சை மூலம் தொழுநோய் ஒழிப்பில் நல்ல பலன் காணப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 1,10,000 பேர் இச்சிகிச்சையின் மூலம் குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் சுமார் 285 தொண்டு நிறுவனங்கள் தொழுநோய் ஒழிப்பில் ஈடுபட்டுள்ளன. 49 தொழுநோய்ப் பயிற்சி நிலையங்களில் டாக்டர்களுக்குத் தொழுநோய் பற்றிய அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 25,000 தொழில்நுட்பப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தொழுநோய்ப் பாதிப்பு அதிகம் உள்ள தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்கள், புதுச்சேரி மற்றும் இலட்சத்தீவு யூனியன் பிரதேசங்களில் கூட்டுமருந்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாயிரமாவது ஆண்டுக்குள் தொழுநோயை முற்றிலுமாக ஒழித்துவிட மத்திய அரசு நாடு முழுவதும் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தைத் துவக்கியுள்ளது.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.




தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



## திருப்பதி-திருமலை

# தங்கத் தேரோட்டம்!

தமிழ்நாடு அரசின் ஓர் அங்கமாம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகமான 'பூம்புகார்' இங்கே மட்டுமன்றிப் பிற மாநிலங்களிலும் தமது புகழ்க்கொடி நாட்டிவருகிறது.

சென்ற 30.9.94 வெள்ளியன்று திருப்பதியில் உள்ள அருள்மிகு வெங்கடேசுவரர் திருக்கோயிலுக்கு ரூ.2.50 கோடி செலவில் சிறப்புறச் செய்யப்பட்ட தங்கத் தேர், இக் கழகம் மூலம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஊரகத் தொழில்துறை அமைச்சர்- திரு. துரை இராமசாமி அவர்களும், தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களும் கலந்துகொண்டனர்.

அவர்களோடு- திருப்பதி தேவஸ்தானத் தலைவர் செங்கல்ரெட்டி, நிர்வாக அதிகாரி மூர்த்தி, திருப்பதி இராமானுஜ பெரிய ஜீயர் சுவாமிகள், 'போர்டு' உறுப்பினர்களான திரு. டிடி. வாசு, திரு. வெங்கடராம ரெட்டி, தமிழ்நாடு அரசின் கைத்தறி கைவினைப் பொருள்கள் துறைச் செயலர் திரு. குப்தா ஆகியோரும் பங்கேற்றுத் தங்கரதத்தின் வெள்ளோட்டத்தை வடம்பிடித்து இழுத்துத் தொடங்கிவைத்தார்கள்.

அன்று காலை 9.30 மணியளவில், கோயிலின் முக்கிய நுழைவு வாயில் முன் தொடங்கிய இந்தத் தேரோட்டம்- கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாடவீதிகளிலும் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் வீதியின் இருமருங்கிலும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நின்று வியப்போடு கண்டு ரசித்துத் தரிசித்தார்கள்.

### தேர் பற்றிய விவரம்

இந்தத் தேர், இதுவரை தமிழ்நாட்டில் செய்யப்பட்ட 8 தங்கத் தேர்களில் உயரமானது ஆகும்.

26 அடி 6 அங்குலம் உயரமுடைய இத் தங்கத் தேர், இரண்டாண்டுகளில் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்திட 27.922 கிலோ தங்கமும், 780.700 கிலோ செப்புத் தகடும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான தங்கத்தைத் திருப்பதி திருமலை தேவஸ்தானமே வழங்கியிருக்கிறது.

'பூம்புகார்' அமைப்பின் மூலம் இதேபோல் தமிழகத்தைச் சேர்ந்த அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலையில் உள்ள அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில், இராமேசுவரம் கோயில், சிவன்மலை கோயில் உள்ளிட்ட 10 திருக்கோயில்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள்






உத்தரவின்பேரில் தங்கரதங்கள் செய்தளிக்கப்படவிருக்கின்றன.

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கும், மருதமலை அருள்மிகு முருகப்பெருமான் திருக்கோயிலுக்கும் மரத்தேர் செய்யப்பட்டுள்ளது.

### சிற்ப விற்பன்னர்கள்

மதுரையைச் சேர்ந்தவரான ஸ்தபதி திரு. முத்துக்குமாரசாமி தலைமையில் 57 சிற்ப விற்பன்னர்கள் இரவு பகலாகப் பாடுபட்டு இந்த எழில்மிகு ரதத்தைத் தமிழ்நாட்டுக் கலையுலகுக்குப் பெருமை கூட்டும் வகையில் செய்து முடித்திருக்கிறார்கள்.

பத்திரிகையாளர் சந்திப்பின்போது- தலைமை ஸ்தபதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசு அளித்துப் பாராட்டினார்.

மேலும்- அக்குழுவினரில் சிறப்பாகப் பணிபுரிந்த திரு. அலாவுதீன், திரு. உசேன் முதலான ஐவருக்கும் கைத்தறி ஆடைகளும், ரொக்கப் பரிசும் அளித்தார்.

### பத்திரிகையாளர் சந்திப்பு

திருப்பதி திருமலை தேரோட்டத்தின் பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த மாண்புமிகு தமிழ்நாடு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை இராமசாமி அவர்கள் தெரிவித்ததாவது:

"பூம்புகார் அமைப்பிற்குத் தமிழகத்தில் உள்ள மாவட்டத் தலைநகர்களில் மட்டுமல்லாமல் வேறு மாநிலங்களைச் சேர்ந்த திருப்பதி, பெங்களூர், கல்கத்தா, புதுடில்லி போன்ற நகர்களிலுமாகப் பத்தொன்பது விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இக் கழகம் 1993 -94- இல், ரூ.800 இலட்சம் விற்பனையையும், ரூ.160 இலட்சங்கள் உற்பத்தியையும் அடைந்துள்ளது. வருகிற ஆண்டில் ரூ.900 இலட்சம் அளவில் விற்பனையும், ரூ.160 இலட்சம் அளவில் உற்பத்தியும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"1991 -இல் இந்த நிறுவனம் திருப்பதி திருமலை திருக்கோயில் கருடமண்டபத்தின் கீழ்ப் பகுதிக்குத் தங்கமுலாம் பூசும் பணியை ரூ.23.37 இலட்சம் செலவில் உபயதாரர் மூலமாகச் செய்திருக்கிறது. அதே உபயதாரர், கருடமண்டபத்தின் மேல் பகுதிக்கு ரூ.23.52 இலட்சம் செலவில் தங்கமுலாம் பூசும் வேலையை இந்த நிறுவனத்திற்கு அளிக்கவிருக்கிறார். இலண்டனில் உள்ள அருள்மிகு மகாலட்சுமித் திருக்கோயிலுக்கு தேக்குமரத்தாலான ரதம் ஒன்று செய்து கேட்டிருக்கிறார்கள்.

"இதுபோன்ற நுணுக்கமான கலைப்பணிகள் தமிழ்நாட்டில் அல்லாமல் வேறு எந்த மாநிலத்திலும் இத்தனைச் சிறப்பாகச் செய்யப்படுவதில்லை. டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசு இந்த அளவிற்குக் கலைகளை ஊக்குவித்து வருகிறது. இதனால், கைவினைத் தொழிலாளர்களின் பல எண்ணற்ற குடும்பங்கள் நல்வாழ்வு பெற்று வருகின்றன.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அப்போது தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஓ.எஸ். மணியனும் உடனிருந்தார்.

-நிகழ்ச்சித் தொகுப்பு: 'கங்கைகொண்டான்'



# நலிந்தோர் நலம்பெற...

தி.சு. கிருட்டிணமூர்த்தி
மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்,
விருதுநகர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டையத் தமிழ்நாடு அரசு வகுத்துக் கொடுத்த வழியிலே காமராசர் மாவட்டத்தில் பல பணிகள் செயலாக்கம் பெற்று வருகின்றன.

மேற்படி வகுப்பினர் முன்னேற்றம் காண மேற்கொள்ளும் பணிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

அ. கல்வி

ஆ. பொருளாதாரம்

இ. பயிற்சிகள்

பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்காகச் சென்ற ஆண்டில் ரூ.1,17,91,060 செலவிடப்பட்டது. நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் ரூ.1,22,68,160 ஒதுக்கீடு பெறப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### அ. கல்வி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கிணங்க கல்விப் பணி இங்கு சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றது. மாணவர், மாணவியர்கட்குக் கீழ்கண்ட வசதிகள் இலவசமாகச் செய்துதரப்படுகின்றன.

### கல்வி உதவித் தொகைகள்

பள்ளிக் கல்வியில் மாணவர்கட்கு இலவசப் பாடப்புத்தகங்களும் தனிக் கட்டணம் ஈடு செய்தலும் வழங்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 6,000 நபர்களும், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5,000 நபர்களும் இதனடிப்படையில் பெரிதும் பயனடைவர்.



மாணவர் விடுதி - வெளிப்புறத் தோற்றம்

ஆங்கிலப் போதுரை மொழியில் பயில்பவர்கட்குப் படிப்புக் கட்டணம் ஈடுசெய்து தரப்படுகின்றது.

இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பெற்றோர் ஆண்டு வருவாய் ரூ.12,000க்கு மிகைப்படாமல் இருந்தால் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் சிறப்புக் கட்டணம் முழுவதும் ஈடுசெய்து தரப்படுவதுடன், புத்தகக் கட்டணம், உண்டி உறையுள் கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படுகின்றது.

மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர்கட்கு பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம். பட்டப்படிப்புப் பயிலும் போது, வருமான வரம்பு ஏதும் இன்றியும்- மருத்துவம், பொறியியல் பயிலும் மாணவர்களைப் பொருத்த மட்டில் ரூ.12,000 ஆண்டு வருமான நிபந்தனைக்குட்பட்டும் மேற்படி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 9,000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் 5,000 பேரும் பயனடைவர்.

### விடுதிகள்

கிராமப்புற மக்கள் பயனடையத் தக்க வகையில் 26 விடுதிகள் தேர்ந்த காப்பாளர், காப்பாளிகளைக் கொண்டு சிறப்பாக நடத்தப் பெற்று வருகின்றன. இதனால் ஆண்டு தோறும் 1,400 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வில் விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவ, மாணவியர் சிறப்பாகத் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் களுடன் தேர்ச்சி பெற்றனர். ப்ளஸ் 2 மேல்நிலைத் தேர்வில், கீழ்க்கண்ட விடுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட மாணவ, மாணவியர் 100 சதவிகிதம் தேர்ச்சியுற்றுச் சாதனை படைத் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள்

அரசு மாணவர் விடுதி, கோபால புரம். அரசு மாணவர் விடுதி, இராசபாளையம். அரசு மாணவர் விடுதி, மலைப்பட்டி. அரசு மாணவர் விடுதி, வன்னியம்பட்டி.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள்

அரசு மாணவியர் விடுதி, குல்லூர் சந்தை அரசு மாணவியர் விடுதி, கோபாலபுரம் அரசு மாணவியர் விடுதி, வன்னியம்பட்டி.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, ப்பி. புதுப்பட்டி, பள்ளி இறுதித் தேர்வில் கீழ்க்கண்டவாறு விடுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட மாணவ, மாண வியர் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக் காடு அளித்துப் பெருமை சேர்த் தனர்:

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, இராசபாளையம். அரசு மாணவர் விடுதி, வன்னியம்பட்டி.

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி

அரசு மாணவியர் விடுதி, பந்தல்குடி அரசு மாணவியர் விடுதி, ஆலங்குளம். அரசு மாணவியர் விடுதி, வன்னியம்பட்டி.

### மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி

அரசு மாணவர் விடுதி, அருப்புக் கோட்டை.

### மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி

அரசு மாணவியர் விடுதி, திருச்சுழி.

கோபாலபுரம் மாணவியர் விடுதி யில் (50) மாணவியரும் தேர்ச்சியுற்று 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றார்கள். வன்னியம்பட்டியில் உள்ள அர சினர் பிற்பட்ட வகுப்பு மாண வர்கள் 50 பேர் அனைவரும் தேர்ச்சி பெற்று முழுத்தேர்ச்சி 100 விழுக் காட்டைக் கொடுத்துள்ளனர். செல்வி எல்லம்மாள் 405 மதிப் பெண்கள் எடுத்துச் சாதனைபுரிந் துள்ளார்.

அருப்புக்கோட்டை மாணவியர் விடுதியிலிருந்து பள்ளி இறுதித் தேர்வுக்கு அனுப்பப்பட்ட செல்வி சுதா 420 மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளார். மல்லாங் கிணறு விடுதியிலிருந்து அனுப்பப் பட்ட செல்வன் மாயகிருஷ்ணன் 410 மதிப்பெண் பெற்று, பள்ளியில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். குல்லூர்சந்தை மாண வியர் விடுதியில் பயின்ற முரு கேஸ்வரி என்பவர் 416 மதிப் பெண்கள் பெற்றுத் தேர்ச்சி அடைந் துள்ளார். பந்தல்குடி மாணவர் விடுதியில் பயின்ற மாணவர் வைரமுத்து என்பவர் 949 மதிப் பெண்களும், கர்ணன் என்பவர் 934 மதிப்பெண்களும் பெற்றுத் தேர்ச்சி யடைந்துள்ளனர்.

வருகிற ஆண்டிலும் இதே நிலை தொடர, கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவர் களுக்கு நல்ல சுற்றுப்புறச் சூழல் அமையவேண்டும் என்ற நோக்கில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின் றன. இதுவரை 3 அரசுக் கட்டடங் களில் விடுதிகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

கடந்த 22.8.94 அன்று அருப்புக் கோட்டை வட்டம் கோபால புரத்தில் ரூ.9.67 இலட்சம் செலவில் கட்டப்பட்டுவந்த மாணவர் விடுதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

நடப்பு 1994-95-ஆம் ஆண்டில் மேலும் 2 பள்ளி மாணவியர் விடுதிக் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது. கீழ்க்கண்ட 2 இடங்களில் மேற்படி கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் துவக்கப் படவுள்ளது.

1. எம். ரெட்டியபட்டி, அருப்புக் கோட்டை வ்ட்டம்.

2. கோபாலபுரம், அருப்புக் கோட்டை வட்டம்.



விடுதி சமையல் கூடம்



சென்ற ஆண்டில் 4 விடுதிகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இது தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### பொருளாதாரத் திட்டங்கள்

சென்ற ஆண்டிலும் நடப்பு ஆண்டி லுமாக இதுவரை 538 சலவைத் தொழில்புரிபவர்கட்கு இலவசமாகத் தேய்ப்புப் பெட்டிகளும், சவரத் தொழில்புரிபவர்கட்கு 14 சவரப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப் பட்டுள்ளன. மண்பாண்டத் தொழில்புரியும் ஒருவருக்கு மின் விசைச்சக்கரம் பொருத்தப்பட்ட இயந்திரம் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 11 நபர்களுக்கு நடமாடும் சலவையகம் அமைக்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது. முடிதிருத்தும் நாவிதர்களுக்குச் சவரக் கடைவைகக 8 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டது. 1 நபருக்குச் சல வைக் கடை வைக்க மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப் பட்டது.

### இலவச மனைப்பட்டா

நடப்பு ஆண்டில் ரூபாய் 3 இலட்சம் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரப்பினருக்கு இல வச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

### தமிழ்நாடு பொருளாதார மேபாட்டுக் கழகக் கடன்வசதி

இதுவரை இம்மாவட்டத்திலிருந்து 386 விண்ணப்பங்கள் தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள் ளன. மத்திய அரசு உதவியுடன் சமூகத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசுப் பணி தேர்வு எழுதுவதற்காக இலவசப் பயிற்சி முகாம் விருதுநகர் செந்திக்குமாரநாடார் கல்லூரியில் துவக்கப்பட்டு 40 பேர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

ப்ளஸ் 2 தேர்வில் மாவட்டத்தில் அதிக மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர், மாணவியருக்குத் தொழிற் கல்வி பயில ரூ.2,000 பேரறிஞர் அண்ணா பரிசுத்தொகை 24.9.94 அன்று வழங்கப்படவுள்ளது. 14 நபர்கட்குப் புதுப்பித்தல் பரிசுத் தொகை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சிவகாசியில் வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று பாலி டெக்னிக் படிக்கும் 2 மாணவர் 2 மாணவியருக்குத் தந்தை பெரியார் பரிசுத் தொகை- ரூ.2,000 வீதம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டங் களினால் காமராசர் மாவட்டத்தில் உள்ள பிறபடுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மக்கள் பெரிதும் பயன் பெற்று வருகின்றனர்.

## களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகம்!

இங்கே நெடிதுயர்ந்த மலைகள்,
பயங்கரமான பள்ளத்தாக்குகள்,
மலை மடிப்புகளிடையே
படர்ந்துள்ள் அடர்ந்த காடுகள்,
மலைக்க வைக்கும்
மலைச்சரிவுகள், பசும் கம்பளம்
விரித்தாற்போலுள்ள
புல்வெளிகள், அமைதியாக
ஓடும் ஓடைகள், சீறிவரும்
சிற்றாறுகள், மலையுச்சியிலிருந்து
விழும் அழகிய அருவிகள்,
வண்ணப்பூக்களையும்
இலைகளையும் கொண்ட
அழகுமிகு தாவர இனவகைகள்,
ஓங்கி உயர்ந்த மரங்கள் சிறிய
அளவிலிருந்து பெரிய
அளவிலான கொடிகள் மற்றும்
மருந்து வகைத் தாவரங்கள் நம்
கண்களுக்கு விருந்தாக
அமைகின்றன.

மலைமுகடுகளில் பயமின்றித்
தாவிச் செல்லும் வரையாடுகள்,
மரத்துக்கு மரம் தாவும்
குரங்கினங்கள், மலை அணில்,
யானையின் ஏறுநடை, மிரண்டு
ஓடும் மானின் அழகு. பளிங்கு
போன்ற நீர்த்திவலைகள்
தெரிவிக்கும் காட்சி, அவற்றில்
மின்னல்போல் செல்லும்
மீன்வகைகள், முங்கி முங்கிக்
குளிக்கும் நீர்நாய்கள்,
முதலைகள்.. பார்ப்பதற்குக்
கண்கொள்ளாக் காட்சி!

அடர்ந்த காடுகளில்
ரீங்காரமிடும் வண்டினிசை,
பாடும் பறவைகளது இசை,
சலசலக்கும் ஓடை இசை,
சிற்றாறுகளின் சீறும் இசை,
அருவிகளின் ஆரவார இசை,
அடர்ந்த மரங்களிடையே புகும்
காற்றிசை, மலை அணில்களின்
கதறல், கருங்குரங்கின் கூவல்,
புலியின் உறுமல், யானையின்
பிளிறுமிசை, தவளைகளின்
ரீங்காரச் சத்தம்
இவையெல்லாம் காதுக்கு
விருந்தாகும்!

இங்குள்ள பாணதீர்த்தம்
நீர்வீழ்ச்சி, அகத்தியர் நீர்வீழ்ச்சி,
மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி,
கலியாண தீர்த்தம் இவைகளில்
குளிப்பது உடலுக்கு நல்லது.
அகத்தியர்கோயில், பாவநாச
சிவன் கோயில், சொரித்து
அய்யனார் கோயில்,
வனப்பேச்சியம்மன்கோயில்,
கோலக்நாகர்கோயில்,
பள்ளிவாசல், தோரணமலை
முருகன் கோயில்,
கருமாண்டியம்மன்கோயில்,
மலைநம்பிகோயில் இவைகளில்
சென்று தரிசிப்பது மனதுக்கு
ஆறுதலையும் நிம்மதியையும்
கொடுக்கும்!

இப்புலிகள் காப்பகத்தில்,
எங்கு நோக்கிடினும்
இறைவனின் ஆட்சி!
இயற்கையின் மாட்சி!

–பாண்டியன்
ஆராய்ச்சி அலுவலர்
புலிகள் காப்பகம்,
அம்பாசமுத்திரம்

# ஔவையார்

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறு வதையொட்டி, புலவர் பெரு மக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகிறது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டிய ஔவையார் குறித்த கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

ஔவைப் பாட்டி என்று தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப் படும் ஔவையார், தமிழ் இலக் கியத்தில் தமக்கென்று தனி இடம் பெற்ற சிறந்த கவியரசி. எளிமை யான தமிழ்ப் பாடல்களின் அரு மையான கருத்துக்களை அமைத்து வழங்கியுள்ள ஔவையார், தமிழ் அறிந்த குழந்தைகள் அனைவரின் உள்ளத்திலும் அழியாத இடம் பெற்று விளங்குகிறார். அவருடைய 'ஆத்தி சூடி'யைப் படிக்காத தமிழ்க் குழந்தைகள் இல்லை. அவருடைய பல நூல்களையும் பாடல் களையும் சிறு குழந்தைகள் படிப் பது மட்டுமின்றி, தேர்ந்த புலவர்களும் திருக்குறள் போன்ற பெருநூல்களுடன் சேர்த்து ஆழ்ந்து கற்று ஆய்வு செய்கிறார்கள்.

கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை யான காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமான சங்ககாலம் என்று கருதப்படுகிறது. சங்க காலத்தில் 473 கவிஞர்கள் வாழ்ந் ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் 33 பேர் பெண்கள், பெண் கவிஞர் களில் ஒருவரான ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார்.

## சிறந்த கருத்தாழம்

ஔவையார் என்பது அவரது இயற்பெயர் அல்ல. அவர் தீண்டத் தகாததாகக் கருதப்பட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் என்பது வழிவழி வரலாறு. அவர் திரு மணம் செய்து கொள்ள விரும் பாமல் துறவு வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டார். அவர் தாம் சென்ற இடமெல்லாம் தமது பாடல்கள் மூலம் அறிவுச் சுடர் ஏற்றிவந்தார். அந்தக் காலத் திலேயே மக்களின் அறியாமை இருளைப் போக்க அவர் அறி வொளி இயக்கம் நடத்தினார் என்று கூறலாம்.

ஔவையார் என்ற பெயரில் பல பெண் கவிஞர்கள் வாழ்ந்ததாகவும் அவர்கள் அனைவரைப் பற்றிய கதைகளும் வரலாறுகளும் ஒன்று சேர்ந்து ஒரே ஔவையாருக்கு உரியனவாக ஆகிவிட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறு கிறார்கள். குறைந்தது மூன்று ஔவையார்களைத் தனியாக அடையாளம் காண முடிகிறது. சங்ககால ஔவையார் ஒருவர், 9-10 நூற்றாண்டுகளில் வாழ்ந்து நீதிநூல்கள் இயற்றிய ஔவையார் ஒருவர், 12-14 நூற்றாண்டுகளில் வாழ்ந்து ஒட்டக்கூத்தருக்கும் புக ழேந்தியாருக்கும் சமகாலத்தவராக இருந்த ஔவையார் ஒருவர் என மூன்று கவிஞர்களை நாம் அறிய முடிகிறது. உண்மையான ஔவை யார் யாராக இருந்தபோதிலும், அவரது பெயரில் வழங்கப்படும் பாடல்கள் சிறந்த கருத்தாழம் கொண்டு விளங்குகின்றன.

எளிமையான தமிழில் எல்லோ ரும் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ள அவரது பாடல்கள் அவரது ஆழ்ந்து அகன்ற அறிவை யும் பாடல் புனைவதில் அவருக்கு இருந்த அற்புதத் திறமையையும் காட்டுகின்றன. அவர் நீண்ட பாடல்கள் பல இயற்றியுள்ளார் என்றாலும், குழந்தைகளுக்கெனப் இயற்றப்பட்ட ஒரு வரிப் பாடல்கள் உள்ளிட்ட சிறிய பாடல்கள் மக் களிடையே பிரபலமாக வழங்கு கின்றன. பெரியவர்களும்கூட படித்து ரசிக்கும் பாடல்கள் அவை. இந்தப் பாடல்களில் ஔவையார் சிறந்த நீதி நூல்களின் கருத்தைத் திரட்டி எளிமையான வடிவில் மக்களுக்கு வழங்கியிருக் கிறார்.

## பொருள் செறிந்த பாடல்கள்

ஔவையாரின் நூல்களில் ஆத்தி சூடி 108 ஒற்றை வரிகளையும், கொன்றைவேந்தன் 91 ஒற்றை வரிகளையும் கொண்டவை; மூதுரை 30 வெண்பாக்களையும், நல்வழி 40 வெண்பாக்களையும் கொண்டவை. இந்த நான்கு நூல் களும் ஆரம்ப வகுப்புகளுக்கான தமிழ்ப்பாடப் புத்தகங்களில் நிரந் தரமாக இடம் பெற்றிருக்கின்றன. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நீதி நெறிகளை இந்த நூல்கள் இளம் உள்ளங்களில் எளிதாகப் பதிய வைக்கின்றன. அசதிக்கோவை, பந்தனந்தாதி ஆகிய நூல்களும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய சங்க நூல்களில் பல பாடல்களும் ஔவையாரால் பாடப்பட் டுள்ளன.

ஔவையாரின் அறிவின் ஆழத் துக்கும், ஆழ்ந்த கருத்துக்களை எளிய சொற்களில் எடுத் துரைக்கும் திறனுக்கும் எடுத்துக் காட்டாக ஒரு சில பாடல்களை யும் வரிகளையும் சுட்டிக் காட்டலாம். ஆத்திசூடியிலிருந்து சில மணிமொழிகள்:

நயம்பட உரை (இனிமையாகப் பேசவும்).

சக்கர நெறிநில் (அரசின் விதி களைக் கடைப்பிடித்து நடக்கவும்).

சோம்பித் திரியேல் (சோம்பேறி யாகப் பொழுதைக் கழிக்க வேண்டாம்).

தூக்கி வினைசெய் (சிந்தித்துச் செயல்படவும்).

நாடு ஒப்பன செய் (நாட்டுக்கு நலமான செயல்களையே செய்ய வும்).

நூல் பல கல் (பல நூல்களைக் கற்று அறிவை வளர்க்கவும்).

கொன்றை வேந்தனிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டலாம்;

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.

## பரந்த பார்வை

இதேபோல- 'வாக்குண்டாம்' என்று வழங்கப்படும் மூதுரை யிலும் சிறந்த நீதிகளையும் அறி வுரைகளையும் கூறும் பல பாடல் களைக் குறிப்பிடலாம். உதாரணத் துக்குச் சில:

'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.'

-ஒருவருக்கு ஒரு நன்மை செய் தால் 'அதற்குக் கைம்மாறு எப்போது தருவார்' என்று எண் ணிக்கொண்டிருக்க வேண்டாம். தென்னை மரத்துக்கு அடியில் ஊற்றிய நீரை, அம்மரம் தன் தலையால் இளநீராகத் தருவதைக் காணுங்கள்.

'மன்னனும் மாசறக் கற்றோறும்
சீர் தூக்கின்
மன்னனின் கற்றோன்
சிறப்பு உடையன்- மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பு
இல்லை,
கற்றோற்குச் சென்ற இட
மெல்லாம் சிறப்பு.'

-மன்னனைவிடக் கல்விமானே சிறந்தவனாவான்; ஏனென்றால் மன்னனுக்குத் தன் நாட்டைத் தவிர பிற நாடுகளில் சிறப்பு இல்லை; ஆனால் கல்விமானுக்கு எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டு.

'வேங்கை வரிப்புலி நோய்தீர்த்த
விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம்
ஆனாற்போல்- பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த
உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்'.

-புலியின் நோய்க்கு வைத்தியம் செய்து நோயை நீக்கிய மருத்துவன் அந்தப் புலிக்கே இரையாகி விடுகிறான். அதுபோலவே, நன்றி யுணர்வு இல்லாதவர்களுக்குச் செய்யும் உதவி, கல்லின் மேல் போடப்பட்ட மண்பானையைப் போல் ஆகிவிடுகிறது.

ஔவையாரின் பாடல்கள் அவரது பார்வை பரந்து விரிந்து உள்ளதைக் காட்டுகின்றன. வாழ்க் கையின் பல்வேறு துறைகளிலும் குடும்ப வாழ்க்கை, தெய்வபக்தி, ஏழைகளுக்கு உதவுதல், நீதி, கௌரவம், நட்பு, அரசியல் போன்ற வெவ்வேறு துறைகளிலும் அவரது கூரிய அறிவுப் பார்வை பதிந்திருக்கிறது. தாம் கூறவந்த கருத்துக்களை அவர் கூறியிருக்கும் விதம் அவரது தனிச் சிறப்பைக் காட்டுகிறது. வாழ்க்கையில் நலி வுற்ற மக்களின்பால் பேரன்பு கொண்டு வாழ்ந்த ஔவையார் அவர்களுக்கு நண்பராகவும், ஆசானாகவும், அறிவின் உருவா கவும் விளங்கினார். 'ஔவையார் உழைக்கும் மக்களின் கலாசாரத் தின் பிரதிநிதி' என்று ராஜாஜி ஒரு முறை கூறியது மிகவும் பொருத்த மானதே.

-பி. கிருஷ்ணமூர்த்தி



# தூத்துக்குடியில் உலக வங்கிக் குழுவினர் ஆலோசனை

உலக வங்கிக் குழுவைச் சார்ந்த திரு. மைக்கேல் வில்பிரட், திரு.ஜான் கிரிக் மற்றும் திரு துரைப்பாண்டியன் ஆகியோர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹேமந்த் குமார் சின்கா, அவர்களுடன் தூத்துக்குடி மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து விவாதித்தனர். தூத்துக்குடி நகராட்சியின் நிதி நிலைமை பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், உலக வங்கிக் குழுவினரை, சாலைப் பராமரிப்பு மற்றும் சமூகக் கூடங்கள் கட்டுவதற்கு உதவி செய்வதோடு, பெரிய திட்டங்களுக்கு அதிக அளவில் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஏற்றுமதி தொழில் கொள்கையினைத் தளர்த்தியதின் காரணமாக, தூத்துக்குடி ஒரு தொழில் வளம்மிக்க நகரமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தூத்துக்குடியை அழகுபடுத்துவதில், கீழ்க் காணும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென, மாவட்ட ஆட்சித் தலைவர் உலக வங்கிக் குழுவினரைக் கேட்டுக் கொண்டார்.

தேசிய. நெடுஞ்சாலையில் உள்ள மீளவிட்டான் கிராமத்தில் ஒரு லாரி நிலையம் நவீன வசதிகளுடனும் - திட்டங்கள் பதிவு அலுவலகம் ஆகிய வசதிகளுடனும் அமைக்கப்பட்டால் நகரில் உள்ள நெரிசலைத் தவிர்க்கலாம்.

இருவழிப்பாதை அமைத்து, பக்கிள் கால் வாயைச் சீரமைப்பதன் மூலம் மழைக் காலங்களில் நகரில் தேங்கும் நீரைத் தேங்கவிடாமல் செய்யலாம்.

சுரங்கப்பாதை, ரயில்பாதைகள் அமைப்பதன் மூலம் நகரில் வாகனங்களின் நெரிசலை 'ரயில்வே கேட்' சாத்தியுள்ள நேரங்களில் தவிர்க்க முடியும். நீண்ட நாள் கோரிக்கையான நகரில் உள்ள ரயில் நிலையத்தை மீளவிட்டானுக்கு மாற்றி அமைக்கலாம்.

நகரைச் ,சுற்றிப் புறவழிச்சாலை அமைப்பதன் மூலம், நகரில் வாகனங்களின் நெரிசலைத் தவிர்க்கலாம்.

பாதாளச்சாக்கடை அமைத்தல் மற்றும் நகரில் உள்ள சாலைகளைப் பதுழுபார்த்தல்.

தூத்துக்குடி நகராட்சியின் எல்லையை விரிவுபடுத்தி, மேலும் சிறப்புடன் செயல்பட உலக வங்கிக் குழு தீர்மானித்தது.

மேலும், உலக வங்கிக் குழு நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களைப் பராமரிப்பது என முடிவு செய்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நகரின் வளர்ச்சிக்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை குறித்தும் ஸ்டேடியம் அமைப்புப் பணிகள் மற்றும் ரோச் பூங்கா மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

உலக வங்கிக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பணியைப் பாராட்டியதோடு, நகரின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தமிழகத்தின் உயர் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தனர்.

–மு. பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி

## மீன்

*மீன் ஊட்டச் சத்து நிறைந்தது. நமது கடல் பகுதியிலிருந்து ஆண்டுக்கு 39 லட்சம் டன் மீன் பிடிக்க சாத்தியம் உள்ளது. ஆனால் 26 லட்சம் டன் மீன்கள்தாம் பிடிக்கப்படுகின்றன. உள்நாட்டு நீர் நிலைகளில் 45 லட்சம் டன் மீன் பிடிக்க வாய்ப்புள்ளது. ஆனால் உற்பத்தியோ 18 லட்சம் டன் தான்.*

*தற்போது 1,42,500 பாரம்பரிய மீன்பிடிப் படகுகளும் 34,000 இயந்திரப் படகுகளும், 180 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளும் இதில் ஈடுபட்டுள்ளன.*



8 ஆம் பக்கத் தொடர்ச்சி

பெற்றுக் கொண்டிருக்கிறது, "புரட்சித்தலைவியின் முழக்கம்" என்பது இந்தியாவின் புகழ்மிக்க தலைவியின் விளக்கம். இது ஓர் அரசியல் இலக்கிய நூல்.

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பேசியதாவது:**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, மூன்றாண்டுகள் முடிந்து வெற்றிநடை போடுகிறது. அவர் போடுகிற திட்டங்கள் அனைத்தும் புதுமை, புதுமை,



புதுமை. அந்தப் புதுமையெல்லாம் இந்தப் புரட்சி நூலில் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளாகப்- பேசிய பேச்சுகளாக இருக்கின்றன. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தீட்டிச் செயல்படுத்துகிற தொட்டில் குழந்தைத் திட்டம் என்றாலும், மகளிர் காவல் நிலையம் என்றாலும் அனைத்தும் புதுமை, புதுமை, புதுமை!

**மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசியதாவது:**

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து வரலாற்றுப் பெட்டகமாக, செய்தித்துறை அளித்திருக்கிறது. டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசியல் தோற்றத்தை, அவர்களது ஞானச் செருக்கை, தொண்டு உள்ளத்தை, உலகப் பார்வையைப், "புரட்சித்தலைவி



யின் முழக்கம்" நூலின் மூன்று தொகுதிகளும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. புத்தகம் என்று சொன்னால், ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குகிற திறம் படைத்ததாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட இலக்கணத்திற்குச் சான்றாக இந்த நூல் விளங்குகிறது. 100 ஆண்டுகளுக்குப் பிறகு வரப்போகிற தலைமுறைக்கும் வழிகாட்டுகிற நூல் "புரட்சித்தலைவியின் முழக்கம்".

**மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடபட்டி முத்தையா அவர்கள் பேசும்போது கூறியதாவது:**

சங்க காலத்திலிருந்து இலக்கிய நூல்களை மதுரையில் வெளியிடுவதுதான் வழக்கம். அப்போது எந்த நூல்களைப் பொற்றாமரைக்



குளம் தாங்கி நிற்குமோ அந்த நூல்கள்தான் ஏற்றுக் கொள்ளப் படும். இன்று பொற்றாமரை இல்லை. அதற்கு பதிலாக மக்கள் வெள்ளம் முன்பு, புரட்சித்தலைவியின் புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது. டாக்டர் புரட்சித் தலைவி உச்சரித்த வார்த்தைகளை 6 கோடி மக்கள் இன்று பெற்றுள்ளார்கள். ஆங்கில மொழியில் அவர் ஆற்றிய உரைகளும் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. சட்டசபையில் முதல்வரின் சிந்தனை எதுவோ அதுதான் பேச்சாக வரும். அவர் ஒரு அரசியல் ஞானி.

**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புத்தகத்தை வெளியிட்டுப் பேசும்போது கூறியதாவது:**



ஒரு கட்சியின் தலைவர் எப்படி இருக்க வேண்டும்; ஒரு ஆட்சியை நடத்துகிற முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். எப்படிப்பட்ட உயர்ந்த கொள்கையுடன், நிலைத்த குறிக்கோளுடன் இந்த ஆட்சியைப் புரட்சித்தலைவி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார், இதுவரை நிகழ்ந்த சாதனைகள் என்ன? சாதிக்கப் போகும் திட்டங்கள் என்ன என்பதை எடுத்துக்காட்டுகிற நூலாகப் "புரட்சித்தலைவியின் முழக்கம்"

நூலைச் செய்தித்துறை வெளியிட்டிருக்கிறது. மிகவும் அழகான நூல்.

69 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது என்பது ஒரு சாதாரண செயல் அல்ல. ஒரு மகத்தான செயல்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட விடமாட்டேன் என வீறு கொண்டெழுந்து வெற்றி பெற்ற செயல் 70 ஆண்டுக் காலமாகச் சாதிக்க முடியாத ஒரு செயல். இன்று புரட்சித் தலைவியால் சட்டப்பூர்வமாக்கப்பட்ட செயல். இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கும் தலைமுறை தலைமுறையாக வாழ்த்தி வணங்க வேண்டிய செயல்.

**"புரட்சித்தலைவி முழக்கம்"**
**தொகுதி-3**
*பக்கம்: 400 விலை: ரூ.30*
*(அடங்கிய உரைகள் - 54)*

**"Jayalalitha Speaks"**
**Volume-3**
*பக்கம்: 164 விலை: ரூ.20*
*(அடங்கிய உரைகள் - 23)*

முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு, இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் நன்றிகூற விழா இனிதே முடிந்தது.

விழாவில் பாண்டியன் போக்குவரத்துக்கழக இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழகத்தின் அனைத்து அமைச்சர்களும் மற்றும் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும் பங்கேற்க இரவு ஒரு மணி வரையிலும் நடைபெற்ற இவ்விழாவில்



பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் விழா முடியும் வரையில் கலையாது காத்துநின்று ரசித்து மகிழ்ந்தனர் என்பதே இவ்விழாவின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு அல்லவா!

நிகழ்ச்சித் தொகுப்பு: சாரதி

அக்டோபர் 1-7
வன விலங்கு வாரம்:



## பல்லுயிர்ப் பண்பு பெருகுமா?

உலகளவில் பல்லுயிர்ப் பண்பு பெருமளவில் உள்ளதாக 12 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் இந்தியாவும் ஒன்று. அதேபோல், உலகளவில் 18 பகுதிகள் வெப்பப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் இந்தியாவில், கிழக்கு இமாலயப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை என இரண்டு உள்ளன.

இந்தியாவில் 45,000 செடி வகைகள் உள்ளன. இது, உலகத் தாவர இனத்தில் 7 சதவிகிதம். இவற்றுள், 15,000 பூச் செடிகளும் அடங்கும், இத்தாவரங்களில் 4,900 பிரிவுகள் இந்தியாவிற்கே உரித்தவை. எனினும் இவற்றில் 1,500 வகைகள் அழிவை எதிர் நோக்கியுள்ளன.

இந்தியாவில் 81,000 வகை உயிரினங்கள் உள்ளன. இவற்றில் 57,000 பூச்சி வகைகள்; உலகளவில் இது 6.4 சதவிகிதமாகும். 2,546 மீன் வகைகள், 428 ஊர்வன, 1,228 பறவை, 372 பாலூட்டி, 204 நிலநீர் உயிரினப் பிரிவுகளும் இதில் அடக்கம். இவற்றுள் 62 சதவிகிதம் இந்திய மண்ணிற்கு உரித்தானவை.

மக்கள் தொகைப் பெருக்கமும், வேளாண் பரப்பு விரிவாக்கமும் நமது பல்லுயிர்ப் பண்பிற்கு ஆபத்தை விளைவிக்கின்றன. இந்த நூற்றாண்டிலேயே இந்தியச் சிறுத்தைப் புலி, மலைக் காடை, செந்தலை வாத்து போன்ற சில உயிரினங்கள் அழிந்தே விட்டன.

மனிதன் உட்பட, அனைத்து உயிர்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஓர் உயிரினத்தின் அழிவு, இத்தகைய உயிர்ச் சங்கிலியைப் பிரித்து, இயற்கையைப் பாதித்து, அழிவுக்கு வழி கோலும்.

வன விலங்கு வாரத்தை ஒட்டி, பல்லுயிர்ப் பண்பைக் காக்க நாம் உறுதி கொள்வோமாக!



# நல்ல தமிழ்ச் சொற்கள்

கோ. முத்துப்பிள்ளை

ஆங்கிலச் சொற்களுக்கேற்ப, பொருத்தமான நல்ல தமிழ்ச் சொற்களைத் தேர்வு செய்வது என்பது கடினமான செயல்தான். மொழிபெயர்ப்பு என்பதே ஒரு கலைதானே! அந்தக் கலையில் அனுபவமிக்கவரும், தமிழ்நாடு ஆட்சிமொழி ஆணையத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவருமான தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை அவர்களின் கைவண்ணத்தில் உருவான நல்ல தமிழ்ச் சொற்களைப் படித்துச் சுவைப்போமா

| | |
|---|---|
| Promptness | - விரைந்து வினைசெயல் |
| Proposal | - கருத்துரு |
| Prospectus | - வாய்ப்பு விளக்கம் |
| Protocol | - மரபு நெறி |
| Query | - ஐய வினா |
| Queue | - வரிசை |
| Quotation | - விலைப்புள்ளி |
| Rank | - வரிசையிடம் |
| Raw skin | - பச்சைத் தோல் |
| Ready cash | - உடன் தொகை |
| Ready Reckoner | - உடன் கணிப்பேடு |
| Realism | - நேரியம் |
| Recurring expenditure | - தொடரும் செலவினம் |
| Red carpet | - நடை பாவாடை |
| Redirected | - மறு முகவரியிடப்பட்டது |
| Reference Books | - பார்வை நூல்கள் |
| Refill | - மறுநிரப்பி |
| Remedy | - தீர்திறம் |
| Remote control | - தொலைவியக்கம் |
| Review | - சீராய்வு |
| Scrutiny | - கூர்ந்தாய்வு |
| Round Tana | - வட்டத் திட்டு |
| Royalty | - உரிமை ஊதியம் |
| Rubber | - தேய்ப்பம் |
| 'Eraser | - அழிப்பம். |
| Rumour | - ஊர்ப் பேச்சு, ஓமல் |
| Running File | - தொடர் கோப்பு |
| Secret | - மறையம் |
| Selected Poems | - இன்சுவைக் கவிகள் |
| Selection Grade | - தெரிவு நிலை |
| Senior | - முதுவர் |
| Sex | - பாலினம் |
| Shade | - சாயல் |
| Single window committee | - ஒருமுகப்புச் செயல்வினைக் குழு |
| Slide | - திரைப்பட வில்லை |
| Snack bar | - நுண்மை நுகர்வகம் |
| Sophisticated Instruments | - புத்தாக்க நுண்கருவிகள் |
| Stage fear | - அவையச்சம், மெய்விதிர்ப்பு |
| Standard | - தரப்பாடு |
| Stethoscope | - நாடிக்குழல் |
| Stretcher | - கைப்படுக்கை |
| Style | - ஒயில் |
| Sunshade | - வெப்பத் தடுப்பி |
| Subtle distinction | - நுண்ணிழை வேறுபாடு |
| Suggestion | - புத்தெண்ணம் |
| Sump | - தொட்டிக் கிணறு |
| Suspense | - ஆவல் தவிப்பு |
| Tamil Lexicon | - தமிழ்ப் பேரகராதி |
| Tape recorder | - நாடாப் பதிவி |
| Tepoy | - தணிவு மேசை |
| Television terms | - தொலைக்காட்சிக் கலைச்சொற்கள் |
| Teller | - விரைவுக் காசாளர் |
| Temptation | - அவா ஈர்ப்பு |



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு. இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள் (2.10.94).

சென்னை — கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், அண்ணல் காந்தியடிகளின் படத்தைத் திறந்து வைத்து மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார் (2.10.94).









நாகபட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் மயிலாடுதுறையில், பெருந்தலைவர் காமராசர் அவர்களது 92-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச.சாவார்க்கர், இ.ஆ.ப., தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கழகத்தலைவர் திரு. ஒ.எஸ்.மணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர் (4.10.1994).

# படமும் செய்தியும்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, கோவையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி.சங்கர், இ.ஆ.ப., தேசிய சிறுசேமிப்பு துணைத்தலைவர் திரு வி.பி.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.பி.ராஜு, திரு சிங்கை கோவிந்தராஜ், திரு கே.செல்வராஜ், டாக்டர் சீனியம்மாள், செல்வி எல்.சுலோச்சனா ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர் (8.10.94).





சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற வன உயிரின வார நிறைவு விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு,இரா. முத்தையா அவர்கள் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு, கு. லாரன்ஸ், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, நாகூர் மீரான் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர் (9.10.94).

சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் நிகழ்ச்சிகள் நடத்திய கலைஞர்களுக்கு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு, எஸ். கண்ணப்பன் அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார் (8.10.94).








### பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்

ஆசிரியர்: வெ. இறையன்பு

கிடைக்குமிடம்:
திரு. செல்வராஜ்,
வள்ளலார் குருகுலம்
வடலூர்
(தெ.ஆ. வள்ளலார் மாவட்டம்)

சிந்தனையின் சிதறல்களே புதுக் கவிதை எனலாம். அந்த வகையில் இந்த நூலில் சிந்தனைகள் இழைந்தோடும் சீர்மிகு கவிதைகள் பல உள்ளன. 'நிறவெறிக்குக் கறுப்புக் கொடி' ஒரு அற்புதமான கவிதை. காதகத்தைப் பற்றி இவர் பாடுகையில்,

அகத்தியன் கமண்டலத்தை
அன்றுநீ
கவிழ்த்திருக்காவிட்டால்
காவிரி ஏது? கல்லணை ஏது?

கவிழ்த்ததே கவிழ்த்தாயே
தமிழ் எல்லையில்
கவிழ்த்திருக்கக்கூடாதா!

எனச் சிலர் கவலைப்படுகிறார்கள்

- என்கிற வரிகள் நல்ல சிந்தனை.

'மரணம் தந்த ஜனனம்' எனும் கவிதையில்,

'ஒரு மூங்கிலின்
மரணத்தில்
கண் திறந்தது
ஒரு புல்லாங்குழல்'

- என்கிற வரியும்,

'அகலாத அழுக்குகள்' எனும் கவிதையில்,

'குளத்தின்
அழுக்குகளை அகற்ற
மீன்களை வளர்த்தனர்,
இப்போது
மீன்களின் கழிவுகள்
மட்டுமே
அழுக்காய்
எஞ்சியிருந்தது'

என்கிற வரியும் நம்மை ஈர்க்கின்றன. இதேபோல காதல், வாழ்க்கை குறித்த பல கவிதைகள் இன்றையச் சூழலைப் படம்பிடித்துக்காட்டுகின்றன. தொடக்கம் முதல் முடிவு வரை உள்ள அத்தனைக் கவிதைகளுமே தித்திக்கும் தேன் குடங்கள்.

### சத்திய சோதனை தரும் நித்தியப் பாடங்கள்

ஆசிரியர்: புயல் சிங்காரவேலு

வெளியீடு: ராஜகுமாரி
பப்ளிகேஷன்ஸ்
20, நியூசெஞ்சுரி காலனி,
சென்னை 600 058

விலை:ரூ 16 பக்:112

சத்தியம், அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய இப்பெரும் தன்மைகளைக் காந்தியடிகள் கண்ணும் கருத்துமாய்க் கடைப் பிடித்து வந்தார். 'என் வாழ்வே எனது செய்தி' என்று கூறிய காந்தியடிகள் தமது "சத்திய சோதனை" தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளையும், சாதனைகளையும் கோடிட்டுக் காட்டுகிறார். அவரது வாழ்க்கை ஏட்டின் சில பக்கங்களைத் தொகுத்துத் தந்துள்ளார் நூலாசிரியர். அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

—பி.வி.கிரி

இசை எனக்கு அமைதியளிக்கிறது. ஏதாவதொன்றைப் பற்றி நான் பரபரப்படைந்திருக்கும் சமயத்தில், இன்னிசையானது உடனே எனது உள்ளத்திற்கு அமைதி தந்தது உண்டு; கோபத்தை வெல்வதற்கு இசை எனக்குப் பேருதவி தருகிறது.

— அண்ணல் காந்தியடிகள்

### ஏணிப்படிகள்

ஆசிரியர்: "அழகுதாசன்"

வெளியீடு: ருக்மணி பதிப்பகம்
3, உச்சக் கோனார்
தெரு,
இடையர் பாளையம்,
குனியமுத்தூர் (அஞ்சல்)
கோவை 641008

பக்கங்கள்: 104 விலை: ரூ.15/

சர்வோதயக் கவிஞரின் காந்திய சிந்தனைக் கவிதைகள். மனித நேயம் என்னும் மாண்பினை வளர்க்க வேண்டும்; மானிடம் செழித்துச் சமுதாயம் சிறக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் சிந்தித்து எழுதப்பட்ட கவிதைகள்.

இளைய சமுதாயம் எழுந்து நிற்க ஊன்றுகோலாக இருப்பவையும், உச்சத்திற்கு ஏற ஏணிப்படிகளாக இருப்பவையும் சமுதாயப் பண்புகள் என்று கூறும் அழுகுதாசனின் கவிதைகளை மாந்தி மகிழலாம்.

### புதுவைச் சிவம் கவிதைகள்

ஆசிரியர்: கவிஞர் புதுவைச் சிவம்

வெளியீடு: முல்லைப் பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு
சென்னை 600 040

பக்கங்கள்: 104 விலை: ரூ.14/

திராவிட இயக்கத்தின் பழைய இதழ்களான திராவிட நாடு, நகரதூதன், விடுதலை, குடிஅரசு ஆகிய ஏடுகளில் கவிஞர் புதுவைச்சிவம் எழுதியிருந்த கவிதைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தி எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, தமிழரின் தன்மான உணர்வு, தமிழர் வீரம், சுயமரியாதை, பெண்விடுதலை இவை பற்றி எழுச்சியுடன் பாடப்பட்ட கவிதைகள்.

—சாரதி



# தமிழக அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி!

## மாண்புமிகு முதல்வர் ஆணை

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக அரசு அலுவலர்களுக்கு 1.7.94 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக அக விலைப்படி வழங்க ஆணையிட்டு உள்ளார். அதன்படி மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 104 சதவிகிதம் என்பதை 114 சதவிகிதம் எனவும், மாதம் ரூ.3,500-க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 78 சதவிகிதம் என்பதை 85 சதவிகிதம் எனவும் அகவிலைப்படி வழங்கப்படும். இதனால் குறைந்தபட்ச அக விலைப்படி உயர்வு ரூ.75 ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.399 ஆகவும் இருக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு ஊதிய நிரலில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இதனால் சுமார் 10 பத்து இலட்சம் அலுவலர்கள் பயன் பெறுவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வு ஜூலை 1994 முதல் ரொக்கமாக வழங்கப்படும். மேலும், கிராம உதவியாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும் 12 சதவிகித அக விலைப்படியை 22 சதவிகிதம் என உயர்த்தி வழங்கப்படும். இதனால் மாதத்திற்கு ரூ.75 கூடுதல் பணப் பயன் இவர்களுக்குக் கிடைக்கும். 31,000 கிராம உதவியாளர்கள் பயனடைவார்கள்.

அரசு அலுவலர்களின் அக விலைப்படியை உயர்த்தி வழங்கப் பட்டதைக் கருத்தில் கொண்டு தொகுப்பூதியம் மற்றும் மதிப் பூதியம் பெறும் அலுவலர்களுக்கு 1.7..94 முதல் கீழ்க்கண்டவாறு ஊதிய உயர்வு வழங்கப்படும்:

1. மாதம் ரூ.150-க்கு குறைவாக மதிப்பூதியம்/தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு - மாதம் ரூ.10.

2. மாதம் ரூ.150-ம் அதற்கு மேலும் மதிப்பூதியம்/தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு - மாதம் ரூ.20.

இந்த உயர்வு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் உள்ளிட்ட மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும். இதனால் சுமார் 3 இலட்சம் அலுவலர்கள் பயனடைவார்கள்.

அதேபோல தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மத்திய அரசில் கொடுத்திருப்பது போல் மேலும் ஒரு அக விலைப்படித் தவணையை 1.7.94 முதல் வழங்கப்படும். அதற்கிணங்க அகவிலைப்படி ஓய்வூதியம் ரூ.1,750 வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 104 சதவிகிதம் என்பதை 114 சதவிகிதம் எனவும் ரூ.1,750க்கு மேல் ரூ.3,000 வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 78 சதவிகிதம் என்பதை 85 சதவிகிதம் எனவும் ரூ.3,000-க்கு மேல் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 67 சதவிகிதம் என்பதை 74 சதவிகிதம் எனவும் அகவிலைப் படி அளிக்கப்படும். இதனால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்குக் குறைந்தபட்சம் ரூ.38-ம் அதிகப்பட்சம் ரூ.273-ம் பணப் பயன் அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட திருத்திய அக விலைப்படி தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் உள்ளாட்சி மற்றும் மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் இறந்துவிட்ட உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ ஓய்வூதியம் இல்லாத பணியாள ரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களின் குடும்பங்கள் (மாதம் ரூ.150 கருணைத் தொகைப் பெறுபவர்கள்)உட்பட எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால் ஏறக்குறைய 2.67 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தமாக ரூ.171.51 கோடி செலவாகும். நடப்பாண்டில் இச்செலவினம் ரூ.114.34 கோடியாக இருக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்




புரட்சித்தலைவியின்
முழக்கம்


JAYALALITHA
Speaks


1.11.1994 ரூ.3






## இந்த இதழில்.....

8-வது உலகத் தமிழ் மாநாடு:
வரவேற்புக் குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு முதல்வா் அவா்கள் உரை ........ 2

8-வது உலகத் தமிழ் மாநாடு:
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சா்
திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவா்கள்
விளக்கவுரை ........ 5

8-வது உலகத் தமிழ் மாநாடு:
தஞ்சை தயாராகிறது! ........ 9

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவா்
சிலைத் திறப்பு விழாவில்
மாண்புமிகு முதல்வா் அவா்கள் உரை ........ 14

முத்தையா செட்டியாா் சிலைத் திறப்பு விழாவில்
மாண்புமிகு முதல்வா் அவா்கள் உரை ........ 19

தமிழ்நாட்டில் புயல் மழை:
மாண்புமிகு முதல்வா் அவா்கள் ஆணை ........ 23

காவல் துறைத் தலைமை அலுவலகக்
கட்டடக் கால்கோள் விழாவில்
மாண்புமிகு முதல்வா் அவா்கள் உரை ........ 24

தமிழ பயிற்று மொழியாக வேண்டும்!
-தவத்திரு குன்றக்குடி அடிகளாா் ........ 29

மாணவா் பக்கம் ........ 31

சேக்கிழாா்
-டாக்டா் சி. பாலசுப்பிரமணியம் ........ 33

சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பம் ........ 38

கணகள் பாதுகாப்பு ........ 41

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்போம்! ........ 43

கணியான் கூத்து ........ 45

நூல் நயம் ........ 48

**'தமிழரசு'**
வெள்ளி விழா ஆண்டு



### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார் (10)*

★ இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவா், பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவா் கடக்க முடியாது.

**தமிழரசு**
திருவள்ளுவராண்டு. 2025
ஐப்பசித் திங்கள்: 16
மலா்: 25 இதழ்: 9
1.11.1994
விலை: ரூ.3

# தமிழ்மொழி புத்துணர்ச்சி பெற வேண்டும்!



## எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

**1995**-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெற உள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து விவாதிப்பதற்காக இந்தக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்கிறேன்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்த குடி"

தமிழ்ப் பெருங்குடி என்பார்கள். அத்தகைய தொன்மையுடைய தமிழ் மொழி, இன்று காலத்தைக் கடந்து நின்று, காலத்தால் வெல்ல முடியாத அளவிற்கு, உலக அரங்கில், தனிப் புகழ் பெற்று, சிறப்புடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

செந்தமிழின் வளர்ச்சிக்காகவும், தமிழ் கூறும் நல்லுலகத்தின் மேன்மைக்காகவும், தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரப்ப வகை செய்வதற்கும், நாம் மேற்கொண்டு இருக்கும், முக்கியமான முயற்சி தான், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும், காவிரி பாயும் தஞ்சைத் தரணியில், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, அகில உலக முழுவதும் வாழும் தமிழ் மக்கள், மகிழ்ச்சி கொள்ளும் வண்ணம், சீரோடும் சிறப்போடும், நடத்த வேண்டும் என்பதே, எனது அவா. தமிழ்த் தாய்க்கு ஆராதனை செய்வதற்கு, நாம் மேற்கொள்ளும் முயற்சி, சிறப்பாக நடைபெறும் என்று, பரிபூரணமாக நம்புகிறேன்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், அசுர கதியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. 21-ஆம் நூற்றாண்டை நோக்கி, நடைபோட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுத்து, தமிழ் மொழியை மேலும் வளப்படுத்தவும், வலுப்படுத்தவும், நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, இந்த உலகத் தமிழ் மாநாடு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலும், நிகழ் காலத்தின் நடப்புகளைக் கருத்தில் கொண்டும், எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, தமிழ் மொழியை, எந்த அளவிற்குச் சிறப்புடைய, ஒரு மொழியாக்க வேண்டும் என்பதைப் பற்றியும், நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். தமிழ் மொழி, இந்த மாநாட்டின் மூலம், ஒரு புத்துணர்ச்சி பெற வேண்டும் என்பதே எனது அவா.

தமிழ் மொழியின் பெருமையைக், கட்டிக் காக்கின்ற ஒரு மாபெரும் பாரம்பரியத்தின், ஒரு முக்கியமான கால கட்டத்தில், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இது வரையில் நடைபெற்ற, மற்ற தமிழ் மாநாடுகளைவிட, மிகச் சிறப்பாக நடைபெற



196103



## கலைகளைக் கட்டிக் காப்போம்



நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

"அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என்று, இறைவனையே பரதக் கலையின் கண்கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

இந்தியத் திருநாட்டின் நடனங்கள், கலைப் பொக்கிஷங்கள் மட்டுமல்ல, அவை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகவும் விளங்குகின்றன. எனவே, இந்தக் கலைகளைக் கட்டிக்காத்து வளர்ப்பது, நமது தலையாய கடமையாகும்.

-'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து

---

வேண்டும், என்ற ஆர்வத்தின் அடிப்படையில் தான், இந்தக் கூட்டத்தை நான் இன்று கூட்டியுள்ளேன்.

உலகத் தமிழ் மாநாட்டின், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு, பல்வேறு குழுக்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் அனைத்தும், தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளைச், சீரிய முறையில் மேற்கொண்டு வருகின்றன. பல்வேறு குழுக்களின் மற்றும், பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பைத், திறம்பட ஏற்படுத்த வேண்டும். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, வருகின்ற தமிழறிஞர்களும், கலை வித்தகர்களும், தங்கள் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக, இந்த உலகத் தமிழ் மாநாட்டை, நாம் நடத்திக் காட்ட வேண்டும். பொது வாழ்வில், முக்கிய பதவிகளை வகித்த பெரியோர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இந்த மாநாட்டைச் சீரிய முறையில் நடத்துவதற்குத், தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும், எடுத்துக் கூறுவார்கள் என்று நம்புகிறேன்.

மாநாடு தொடர்பான பல்வேறு பணிகளைக், கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள், இதுவரை செய்து முடித்தப் பணிகளையும், எஞ்சியுள்ள பணிகள், எப்போது செய்து முடிக்க இயலும் என்பதைப் பற்றியும், விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் விவாதிப்பதற்காக, எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள்கள் மீது, கருத்துக்களைத் தெரிவிப்பதுடன், இந்த மாநாட்டை மேலும் சிறப்பாக நடத்துவதற்கான, உங்கள் ஆலோசனைகளையும், கருத்துக்களையும், தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றைச் செயல்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வரவேற்கின்றேன். நன்றி. வணக்கம்.



# 8வது உலகத் தமிழ் மாநாடு

## உலகம் முழுவதிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் வருகை

## தஞ்சை ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் விளக்கவுரை

தஞ்சையில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாடு பற்றிய சிறப்பு அம்சங்களை- 21.10.94 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் விரிவாக விளக்கிக் கூறினார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியதாவது:

### செய்தியாளர்கள் கூட்டம்

1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை தஞ்சாவூரில் 8-வது உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழ்நாடு அரசு நடத்துகிறது.

இந்த மாநாட்டுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

மாநாட்டையொட்டி, தொடக்க நாளன்று மிகவும் கோலாகலமாக ஊர்வலம் நடக்கிறது. மாநாட்டின் போது தஞ்சாவூரில் தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு, தமிழர் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அரசுத் துறைகள், நிறுவனங்கள் பங்கு பெறும் கண்காட்சி நடத்தப்படும்.

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களின் வீர வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலி-ஒளிக் காட்சியை வெளிநாட்டவர்களும் கண்டு பிரமிக்கும் வகையில் சிறப்பாகத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### அஞ்சல் தலை, நாணயம்

இந்த மாநாட்டின் போது- இராஜ ராஜ சோழன் உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலை, திருவள்ளுவர் நாணயம் ஆகியவற்றைத் தொடக்க விழாவின் போது வெளியிட வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மாநாட்டின் போது, பொது மக்களுக்கு 300 கிராம் அளவிலான இரு வகை உணவுப் பொட்டலங்கள் "ஒரு பொட்டலம் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் ஆங்காங்கே விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும். அத்துடன் குடிநீர்ப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கப்படும்.

இது தவிர, தனியார் ஓட்டல்களிலும் தரமான பொது உணவு தயாரித்து நியாயமான விலையில் உணவுப் பொட்டலங்களாக விற்பனை செய்ய ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

### நிறைவு விழா

நிறைவு விழாவில் மிகப் பிரம்மாண்டமான அளவில் கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், சாகசங்கள், மாணவ, மாணவியரின் ஆடல், பாடல் அணி வகுப்புகள் நடக்கின்றன.

மாநாட்டுக்கு வரும் பொது மக்களின் வசதிக்காகக் கூடுதல் பஸ் வசதிகளும், பகலில் இளைப்பாறவும் இரவில் தங்கிச் செல்லவும் பெரிய பந்தல்களும் அருகில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளும் அமைக்கப்படும்.

### ரெயில்கள்

தஞ்சை ரெயில் நிலையத்தைப் புதுப்பிக்கவும், கம்ப்யூட்டர் மூலம் முன்பதிவு வசதி, கூடுதல் ரெயில்கள், குளிர்பதனப் பெட்டிகள் இணைப்பு ஆகிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் தென்னக ரெயில்வே ஒப்புக் கொண்டுள்ளது.

### திருவள்ளுவர் சிலை

தஞ்சையில் இதுவரையில் செய்யப்பட்ட ஏற்பாடுகள், நிரந்தரமாகப் பலன் தரும் பணிகள், இனி மாநாட்டுக்குத் தேவையான பணிகள் வேகமாக நிறைவேற்றப்படும்.

தஞ்சாவூரில் கட்டப்படும் 7 நுழைவு வாசல்களின் பணிகள் அநேகமாக முடிந்துவிட்டன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட இருக்கும் மண்டபப் பணிகள் முடிந்து விட்டன.

### பிரம்மாண்டமான ஊர்வலம்

மாநாட்டையொட்டி ஜனவரி முதல் தேதியன்று பிற்பகல் 2 மணியளவில் நாகப்பட்டினம் - பட்டுக்கோட்டை ரோடு சந்திப்பில் இருந்து ஊர்வலம் தொடங்குகிறது.

இந்த ஊர்வலம் பிரம்மாண்டமான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியக் காட்சிகள், தமிழுக்காக அருந்தொண்டாற்றியவர்கள் குறித்த அலங்கார வண்டிகள் இந்த ஊர்வலத்தில் வரும். ஊர்வலத்தின் நடுவில் தமிழ்க் கலாச்சாரம் மற்றும் பண்பாடு குறித்த நடனங்கள், கிராமிய நடனங்கள், கிராமியப் பாடல்கள் இடம் பெறும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ் இலக்கியத்தை மையமாகக் கொண்ட ஒரு சிறிய திரைப்படம் தயாரிக்கலாம் என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

## ஆலோசனை

இந்த மாநாடு சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களை அவ்வப்போது அழைத்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

வருகிற 28-ஆம் தேதி வரவேற்புக் குழுவினரை அவர் அழைத்துப் பேசவிருக்கிறார்.

இவ்வாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார். அப்போது தமிழ் கலாச்சாரத் துறைச் செயலாளர் திரு. இளங்கோ, உலகத் தமிழ் மாநாடு தனி அதிகாரி திரு. இறையன்பு ஆகியோர் உடனிருந்தனர்.

உலகத் தமிழ் மாநாடு குறித்து மேலும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

## ஆய்வரங்க நிகழ்ச்சிகள்

1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 5-ஆம் நாள் வரை தஞ்சையில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது,



**பெண் கல்வி நாட்டில் எந்த அளவிற்கு உயர்கின்றதோ, அந்த அளவிற்கு நாடு மேம்பாடு அடைகின்றது என்று பொருள்.**

**—பேரறிஞர் அண்ணா**

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் நொபோரு கரஷிமா தலைமையிலான ஆய்வரங்கக் குழு பொறுப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு நிலைக் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன. இக்கருத்தரங்குகளில் கலந்துகொள்ள உலகமெங்கிலும் உள்ள 2500 தமிழியல் பேராசிரியர்களுக்கு மாநாட்டின் முதல் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளன. தமிழியலில் கீழ்க்காணும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. பண்டைய இலக்கியம், 2. பண்டைய இடைக்கால இலக்கியம், 3. பிற்கால இடைக்கால இலக்கியம், 4. தற்கால இலக்கியம், 5. ஒப்பிலக்கியம், 6. குழந்தை இலக்கியம், 7. இலக்கிய நடையியல், 8. இலக்கியத் திறனாய்வு, 9. தத்துவமும் சமயமும், 10. இலக்கணம், 11. மொழியியல், 12. மொழி கற்பித்தல், 13. அகராதியியல், 15. சுவடியியல், 16. ஆட்சித் தமிழ், 17. அறிவியல் தமிழ், 18. நாட்டுப்புறவியல், 19. வரலாறு, 20. சமூக வரலாறு, 21. வரலாற்றியல், 22. கல்வெட்டியல், 23. தொல்லியல், 24. பண்பாட்டு மாந்தவியல், 25. சமூகவியல், 26. தமிழர் குடிபெயர்வு, 27. பன்னாட்டு உறவு, 28. அயல்நாடுகளில் தமிழரும், தமிழும், 29. உளவியல், 30. கல்வியியல், 31. தகவல் தொடர்பியல், 32. பண்பாட்டியல், 33. பொருளியல், 34. ஆடலும் இசையும், 35. நாடகமும் திரைப்படமும், 36. ஓவியம், 37. சிற்பம், 38. அரங்கக் கலைகள், 39, தொல்லறிவியல், 40. அறிவியலும், தொழில் நுட்பமும், 41. மருத்துவம், 42. சித்த மருத்துவம் ஆகியவையாகும்.

இதுவரை 700 அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளப் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 23 அயல்நாடுகளைச் சேர்ந்த 250 பேராசிரியர்கள் அடங்குவர். இவர்களைத் தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, பின்லாந்து, இஸ்ரேல், ஜப்பான், சுவீடன், மொரிஷியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் 25 அறிஞர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக அரசால் அழைக்கப் பெற்றுள்ளனர். இவர்களில் 2 பேர் மட்டுமே உடல்நலக் குறைவால் வர இயலாமையினைத் தெரிவித்துள்ளனர். அரசு அழைப்பின் பேரில் இம் மாநாட்டிற்கு வரும் இவ்வறிஞர்கள் அரசு விருந்தினர்களாகக் கருதப்படுவதால் அவர்தம் நாட்டிலிருந்து தஞ்சை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளை அரசே ஏற்கும்.

இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விழையும் அறிஞர்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 650 ஆய்வுக் கட்டுரை சுருக்கக் குறிப்புகள் 26.8.94 மற்றும் 27.8.94 ஆகிய இரு நாட்களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வேறு பல் கலைக் கழகங்களைச் சார்ந்த 36 அறிஞர்களிடமிருந்து வல்லுநர் குழுக் கூட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் வாசிப்பதற்குத் தகுதியுடையதான 447 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் தகுதியற்றவை என 203 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் வகைப்படுத்தப் பெற்றன. ஆய்வரங்கத்திற்குத் தகுதியானவற்றில் அமர்வுகளின் எண்ணிக்கை ஏற்றவாறு 252 ஆய்வுக் கட்டுரைகள் வல்லுநர் குழு பிறப்பித்துள்ள வரிசையின் அடிப்படையில் செய்யப்படும்.

மாநாடு முடிவடைந்தவுடன் தமிழகத்தின் கலை பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிக்கும் வகையில் 150 அயல் நாட்டறிஞர்களுக்கு ஒருவார





# வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப்போற்றி வருகின்றனர். ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது — "அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்"

**—ப. ஜீவானந்தம்**

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல் காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

**—தந்தை பெரியார்**

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வர வேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**—பேரறிஞர் அண்ணா**

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

**—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.

**—டாக்டர் மு. வரதராசனார்**

காலச் சுற்றுலாவிற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அயல்நாட்டறிஞர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சிகளுக்கும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளுக்கும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கும் சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரில் 1995 ஜனவரி 1ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்பு மலர், அறிவியல் மலர், மாணவர் மலர் என்று மூன்று மலர்களை வெளியிட அரசு கருதியுள்ளது.

சிறப்பு மலரில் தமிழ் இலக்கியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணம், தமிழ் இசை, நாட்டியம், நாடகம், மொழியியல், நிகண்டு, கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியம், சமயம், தொல்லியல், கல்வெட்டியல், காசியல், மானிடவியல், சமுதாய இயல், நாட்டுப்புறக் கலை, மருத்துவம், வரலாறு, கனனியியல், தமிழ்ப் பண்பாடு, நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பிற மொழி இலக்கியம், சிறு கதை, புதினங்களின் வளர்ச்சி, கவிதைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் இடம்பெற தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் 127 பேர்களிடமும் பிற மாநிலப் பேரறிஞர்கள் 21 பேர்களிடமும் அயல்நாட்டுப் பேரறிஞர்கள் 82 பேர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

இதுவரை பேரறிஞர்களிடமிருந்து 94 கட்டுரைகளும், 7 கவிதைகளும் வரப்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுப் பேரறிஞர்களிடம் இருந்து 74 கட்டுரைகளும், 7 கவிதைகளும், பிற மாநிலத்தவர்களிடமிருந்து 5 கட்டுரைகளும், அயல் நாட்டினரிடமிருந்து 15 கட்டுரைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டுரைகளில் 7 கட்டுரைகள் ஆங்கிலக் கட்டுரைகள் ஆகும்.

பல பேரறிஞர்கள் தாமே உகந்தும் கட்டுரைகள் அனுப்பி வருகின்றனர். கிடைக்கப் பெற்றுள்ள 101 கட்டுரைகளும், கவிதைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. சிறப்பு மலரின் உட்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவை திருத்தம் செய்யப்பட்டு, அச்சிட உரிய பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு சிறப்புகளை, வரலாறு, கலை, சமுதாய பாரம்பரியங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்படும். மாநாட்டு மலர், மிகச் சிறந்த தாளில் பல வண்ணப் படங்களுடன், என்றும் வைத்துப் பேணும் வகையில் எழில் மலராக வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநாட்டில் அறிவியல் கட்டுரை மலர் ஒன்று வெளியிடக் கருதப்பட்டுள்ளது. அம்மலரில் மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை மற்றும் பொறியியல் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களைக் கொண்டு, அறி

வியல் கட்டுரை வெளியிட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் உட்குழு அமைக்கப்பட்டுள்ளது.

"அறிவியலில் தமிழ் வழிக் கல்வி" என்னும் தலைப்பில் இலக்கிய இலக்கண, நயத்துடன் கட்டுரைகள் வெளியிட கால்நடைத் துறை வல்லுநர்கள் 29 பேர்களிடமும், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் 23 பேர்களிடமும், மருத்துவத்துறை வல்லுநர்கள் 33 பேர்களிடமும், பொறியியல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் 28 பேர்களிடமும் ஆகக் கூடுதல் 133 வல்லுநர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

தற்போது வேளாண்மைத்துறை வல்லுநர்களிடமிருந்து 10 கட்டுரைகளும், மருத்துவத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், கால்நடைத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், பொறியியல் துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும் (ஆகக் கூடுதல் "22 கட்டுரைகள்) அறிவியல் மலருக்கு வரப்பெற்றுள்ளன.

அறிவியல் உட்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் இக் கட்டுரைகள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

அறிவியல் கட்டுரைகள் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்களிடமிருந்து 30.9.94க்குள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாணவர்கள் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தி அதில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தனித் தனியே மாநாட்டில் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.

–பேரறிஞர் அண்ணா

இப்போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகள் நடத்தத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறந்த கட்டுரைகளும், ஓவியங்களும், கவிதைகளும் மலரில் இடம் பெற்று, அது 'மாணவர் மலராக' மலரும்.

மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து நாளிதழ்கள், திரையரங்குகள், தனியார் தொலைக்காட்சி அமைப்புகளில் விளம்பரமாக வெளியிடவும், மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்தல், தொலைக்காட்சி, வானொலி மூலம் நேர்முக ஒளி, ஒலிபரப்ப ஏற்பாடு செய்யவும்,

மாநாட்டின் போது சென்னை, தஞ்சை நகரங்களில் தகவல் மையங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சிறப்பு மருத்துவ ஏற்பாடுகள்

தஞ்சை நகருக்கு வரும் அனைத்து முக்கிய நெடுஞ்சாலைகளிலும் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவவும், அவற்றில் முதலுதவி சிகிச்சைக்கான வசதிகளும், ஆம்புலன்ஸ் வசதியும் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை நகரில் பல்வேறு இடங்களிலும் மருத்துவ மையங்கள் நிறுவவும் இரத்தச் சேமிப்பு வங்கி மூலம் அவசரத் தேவைக்காக உடனுக்குடன் சமாளிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வரங்கக் குழுத் தலைவராக இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் பேராசிரியர் திரு. நோபொரு கரஷிமா பொறுப்பேற்றுள்ளார். இம்மாநாட்டின் ஆய்வரங்க ஏற்பாடுகளை நேரில் பார்வையிட 23.9.94 அன்று தஞ்சைக்கு வருகை புரிந்த பேராசிரியர் திரு. கரஷிமா, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் சந்தித்துப் பேசுகையில் இம்மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சிறப்புப் பணிகளையும்; மாநாட்டில் கலந்துகொள்ள வரும் பேராளர்கள், பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோருக்காகத் தங்குமிட வசதி, விருந்தோம்பல், போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் விளக்கிக் கூறினார். இப்பணிகள் நடைபெறும் இடங்களை நேரில் சுற்றிப் பார்த்த பேராசிரியர் திரு. கரஷிமா, இதுவரை நடைபெற்ற மாநாடுகளைவிட எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தமக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்துள்ளதாகவும், தான் ஜப்பான் நாட்டுக்குத் திரும்புமுன், சென்னையில் தமிழக முதலமைச்சரையும், பிற அமைச்சர்களையும் நேரில் சந்தித்துப் பேச இருப்பதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பிற்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்ட தமிழகம் 8வது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தும் பேறு பெற்றுள்ளது. தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்குமுள்ள தமிழர்களும் பெருமைப் படத்தக்கதொன்றாகும்.

இவ்வாறு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்.



8வது உலகத்தமிழ் மாநாடு:

'கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து
ஆய்ந்தஇப் பசுந்தமிழ்ஏனை
மண்ணிடைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ!'

–என்கிறது திருவிளையாடல் புராணம். அன்னைத் தமிழின் முன்னைச் சிறப்பை இதன்மூலம் நாம் அறிந்திடலாகும்.

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவது
எங்கும் காணோம்!...'

–என்று பெருமிதத்தோடு பாடி, அருமைத் தமிழின் அகலாச் சுவையை அறிவித்தார் முறுக்கு மீசை முண்டாசுப் பாரதியார்.

'தமிழுக்கும் அமுதென்றுபேர்–
அந்தத்
தமிழ்இன்பத் தமிழெங்கள்
உயிருக்கு நேர்!'...

–என்கிற சந்தக் கவிதையால், நாம் செந்தமிழை உயிருக்கு நிகராக்கிச் சிறப்புச் சேர்த்தார் புதுவைக் குயிலாம் புரட்சிக் கவிஞர்.

இவ்வளவு அருமைக்கும் பெருமைக்கும் உரிய- 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்கிற நன்நோக்கத்தோடு நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், எட்டாம் உலகத் தமிழ்

# நெஞ்சை அள்ளும் தஞ்சை மாநாடு!

மாநாட்டைக் காவிரியால் பூவிரியும் தஞ்சையிலே, 'இணையற்ற வகையிலே நடத்திடத் திட்டமிட்டிருக்கிறார்.

அம் மாநாடு வருகிற' சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து 5-ஆம் நாள் வரை நடைபெறவிருக்கிறது. நெஞ்சையள்ளும் பிரகதீசுவர் கோயில் தலை நிமிர்ந்து நிற்பதாலே புகழ் பெற்றிருக்கிற நஞ்சை மலிந்துள்ளதால் பஞ்சம் போக்கி நலம் சேர்க்கிற தஞ்சை மண், உலகத் தமிழ் மாநாடு கண்டு 'உலகப் புகழ் ஈட்டவிருக்கிறது.

### பெருமை பெறவிருப்போர்!

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களும், பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும் அம் மாநாட்டிற்கு வருகை தரவிருக்கிறார்கள்; சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து தமிழை வாழ்த்தி, அதனாலே பெருமை பெறவிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்பான அழைப்பைக் கனிவோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் அந்தப் பண்பான பெரியவர்கள்.

### நலத் திட்டப் பணிகள்

பயிர் செழிக்க வேண்டுமானால், மண் சிறக்க வேண்டும்; அதைப் போல, தமிழ் மாநாடு சிறக்க வேண்டுமானால், அம் மாநாடு நிகழிடத்தின் நலங்கள்-வளங்கள் பெருக வேண்டும் அல்லவா?

அல்லும் பகலும் அதற்கெனத் திட்டமிட்டு இதயம் நிறைந்த நல்லெண்ணத்தோடு, தென்னாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாநகரின் முக்கியத் தேவைகளை நிறைவு செய்திடப் பல்வேறு முக்கியப் பணிகளுக்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் புகழ் பெறும் தமிழ்நாடு அரசு, தற்போது பல நிதி ஒப்பளிப்புகளை வழங்கியிருக்கிறது. இதனால், இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் ஆண்ட காலத்திய பெருமை புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல; சோறுடைத்து என்ற பெயர் பெற்ற சோழ நாட்டுத் தஞ்சைக்கும் திரும்பவிருக்கிறது!

தமிழ் மாநாட்டையொட்டி நலத் திட்டப் பணிகள் பல தஞ்சாவூரிலே நாளோருமேனி பொழுதொரு வண்ணம் நிறைவேற்றப்பட்டபடியிருக்கின்றன! ஏராளமானோர் அந்த நகருக்கு புதுப் பொலிவூட்டும் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

### குறிப்பிடத்தக்கவை

மாநாடு எனில், அலையலையாய் மக்கள் அணிதிரளக்கூடும் அல்லவா? அதனால், போக்குவரத்தை எளிதாக்க ஊர்ச் சாலைகள் செப்பனிடப்பட்டு அகலமாக்கப்படுகின்றன; அழகாக்கப்படுகின்றன. ஆங்காங்கே ஒளி விளக்குகள் இரவைப் பகலாக்குகின்றன.

கீழ்ப் பாலமாகக் குறுகலாக இருந்த ரெயில்வே பாலம், தங்கு தடையற்ற போக்குவரத்திற்கேற்றபடி அகலமான மேம்பாலம் ஆக்கப்பட்டு வருகிறது;

இதற்கென மைய அரசின் ரயில்வே நிர்வாகத்திற்கு மாநில அரசால் முதல் கட்டமாக ரூ.50 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகைதரும் மக்கள், முன்னர் முடி மன்னர்கள் தஞ்சையில் உருவாக்கிய சரித்திரச் சிறப்புமிக்க இடங்களை- தம் புகழ் நிலைக்க அவர்கள் பதித்த அந்த அற்புதத் தடங்களை ஓய்வு நேரத்திலே கண்டு வுவக்க வருகைதரக் கூடுமல்லவா? எனவே, தஞ்சை அரண்மனை, கலைக்கூடம், சங்கீத மகால் போன்ற இடங்களில் புதுமெருகு கூட்டப்படுகிறது!

நாயக்கர் மகாலிலும், மராட்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட தர்பார் மண்டபத்திலும் உள்ள சிற்பங்களுக்குப் புதுப் பொலிவூட்டி வண்ணங்கள் தீட்டி உயிரூட்டப்பட்டு வருகிறது. இத்தகு பணிகளுக்கென ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த இராசராசனால், மலைவளமே இல்லாத சோழ மண்ணில், கலை வளம் மிக்கதான கற்சிற்பங்கள் நிறைந்த பெரிய கோயிலை எப்படிக் கட்ட முடிந்தது என்பது இன்றும் விளங்காத வரலாற்றுப் புதிர்!

விந்தையான அந்தப் பெருங் கோயில், உலகத் தமிழ் மாநாட்டுக் காலத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் கண்ணைக் கவரும் வண்ண விளக்குகளால் வனப்புக் கூட்டப்படவிருக்கிறது.

### வசதி வாய்ப்புகள்

வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம்; எல்லோருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் மேல் நாட்டம் என்பதால் இலட்சோப இலட்சமா, கோடானு கோடியா வருகை தருவோர் எண்ணிக்கை என்பதை இப்போதே கணித்தறிய முடியாத நிலை!

மக்கள் நெருக்கத்தால் சிறு விபத்துகள், இன்னல்தரும் நோய்கள் ஏதேனும் நேரகூடும் என்பதாலே மருத்துவ வசதிகள் தஞ்சை நகரில் திருத்தமுறச் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மட்டும் இதற்காக ஏறத் தாழ ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



'கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்' என்று பாவேந்தர் பாடியதால்- குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி வசதிகளைக் கூட்ட ரூ.30 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நகரின் அடிப்படை வசதிகளை மக்கள் வருகைக்கேற்பக் குறைவற்றதாக்க, திட்டமிட்ட நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டிருக்கின்றன.

### பாதுகாப்புப் பணிகள்

உலகத் தமிழ் மாநாட்டிற்கு உவகையோடு வருகைதரும் முக்கியப் பிரமுகர்களுக்கு மட்டுமல்ல-

'எங்கள் தமிழ்த்தாய் ஏற்றம் பெறுகிறாள்' என்கிற இதயப் பூரிப்போடு வருகை தரும் கணக்கிலடங்கா மக்களும் கவலை மறந்து உடல் நலம் சிறந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை மன நிறைவோடு கண்டு களிக்கும் வகையிலே பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பக்குவமாகச் செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனைப்படி, காவல் துறையினரால் உரிய நடவடிக்கைகள் ஊக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாநாட்டு மலர்

'மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று புலவர் பாடிய புகழ் மிக்கதான தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நாளன்று, சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவிருக்கிறது. கருத்துப் பேழையாய், கவிதைச் சோலையாய், வண்ண மாலையாய் இதழ் அவிழ்த்து காண்போரைக் கவரும் கவர்ச்சி மலராக மட்டுமல்ல; நுகர்வோரின் இதயத்தைக் கொள்ளை கொள்ளுவதாகவும் அந்தத் தேன்மலர் திகழப் போகிறது!

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், சிறப்பு மலர்க் குழுவினர் பசி நோக்காது கண்துஞ்சாது இரவு பகலாகப் பாடுபட்டு வருகிறார்கள்.



### முதல் நாள் - நிறைவு நாள் ஊர்வலங்கள்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தொடங்கப்படும் முதல் நாளும்- அது நிறைவுறும் கடைசி நாளும், சோழ நாடே கோலாகலமான விழாக்கோலம் பூணவிருக்கிறது!

நம்மவர்களோடு- முக்கியப் பிரமுகர்கள், அண்டை மாநிலத்தார், அயல்நாட்டார் எனப் பல தரப்பாரும் பங்கேற்கும் அவ்விரு நாட்களிலும் நடத்தப்படவிருக்கும் ஊர்வலங்கள், இதுவரை தமிழ் நிலம் காணாத சிறப்புடையதாக விளங்கும். சேமமுற்ற தஞ்சை மண்ணின் தெருவெல்லாம் தமிழ் முழங்கும்!

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' எனக் கேட்பது போல், அந்தக் காலத்து முப்படையும் அணிவகுக்கும்!...

அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படை, காண்போரைச் சிலிர்க்க வைக்கும்!...

அழகு ரதங்கள் உலா, பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்...

வண்டுபாடும் தஞ்சாவூர்க் கதம்பம், வகையுற எங்கும் மணக்கும்!...

'வருக வருக' என வரவேற்கும் பல வண்ணப் பட்டுக்கொடிகள் வீதியெலாம் பறக்கும்!...

கிராமியக் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், காண்போர் மனம் மயக்கும்!...

மாவிலை தென்னங் குருத் தோலைத் தோரணங்கள் வீதிகள் தோறும் ஊஞ்சலாடும்!...

ஓலைச் சப்பரங்கள், வகை வகையான வரவேற்பு வளைவுகள், வண்ணப் பதாகைகள், ஊரெங்கும் திகழும்; ஊர் மக்களிடையே உற்சாகம் கரைபுரளும்!

முதல் நாளிலிருந்து நிறைவு நாள் வரை, நகரெங்கும் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமண்டபம்,ஆய்வரங்கம்,வீரவிளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள்- கற்றறிவாளரையும் திகைக்க வைக்கும்...

தன் காலத்தே நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, இதற்கு முன் எவர் காலத்திலும் நடந்திராததாய் சிறப்புற்றிட வேண்டும்; இனி வேறெவர் காலத்திலும் நடத்திக் காட்ட முடியாததாய் புகழ் பெற்றிட வேண்டும் என்கிற உறுதிமிக்க உள்ளத்தோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தீர ஆலோசித்துத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறார்!



**வரவேற்பு வளைவு**
உலகம் புகழ நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தரும் மக்களை வரவேற்கத் திருச்சி சாலையில் அமைக் கப்பட்டு வரும் வரவேற்பு வளைவு.

# 8-வது உலகத் தமிழ் மாநாடு:

**நினைவுத்தூண்**
தொல்காப்பியர் சதுக்கத்தின் அருகே அமைக்கப்பட்டுவரும் நினைவுத்தூண்.





**திருவள்ளுவர் மண்டபம்**
குறள் தந்து குவலயம் விளங்க நெறி தந்த வள்ளுவர் புகழ்சிறக்க திருவள்ளுவர் மண்டபம் திருவுடன் உருவாகிறது.



**மணிமாடம் புனரமைப்பு**
தமிழக அரசின் நிதியுதவியுடன் தஞ்சை அரண்மனை வளாகத்திலுள்ள, மணி மாடத்தைத் தொல்பொருள் ஆய்வுத்துறை புதுப்பொலிவு காட்ட புனரமைப்பு செய்யும் காட்சி

# தஞ்சை தயாராகிறது!

**ரெயில்வே மேம்பாலம்**
மிகக் குறுகலாக இருந்த தஞ்சாவூர் ரெயில் பாலம், போக்குவரத்து வசதிக்கு ஏற்ப அகலப்படுத்தப்படுகிறது.





அட்டை சொல்லும் செய்தி

# 'தென்னகத்து நேதாஜி!'

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் சிலை திறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் புகழாரம்

தமிழக மக்களின் இதயங்களில் என்றென்றும், பத்தரை மாற்றுத் தங்கமாகக் குடி கொண்டிருக்கும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின், திருவுருவச் சிலையை, தமிழகத்தின் தலைநகராம், சென்னை மாநகரில் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

அதே மகிழ்ச்சி வெள்ளம், இங்கே என் எதிரில், முப்புறமும் கூடியுள்ள மக்கள் மத்தியில்,, கரைபுரண்டு ஓடுவதை, என்னால் காண முடிகின்றது. இந்தத் தேசத்தின் விடுதலைக்காக, எண்ணற்ற தியாகங்களைச் செய்திட்ட, ஒரு பத்தரை மாற்றுத் தங்கத்திற்கு, சென்னை நகரில், ஒரு சிலை நிறுவப்படாதது, சாதி, மதப் பேதங்களைக் கடந்து, அனைவரின் நெஞ்சங்களிலும், ஒரு குறையாகவே இருந்து வந்தது. தனக்கென்று வாழாமல், பிறர்க்கென்று, வாழ்ந்திட்ட, பெரியோர்களின் சேவையை நினைவு கூர்ந்து, சிலை எழுப்பி விழாக் கொண்டாடும், மாபெரும் கலாச்சாரத்தைப் படைத்த தமிழ் நாட்டில், இந்த நிலை தொடர்ந்தது வேதனைக்கு உரியது தான்.

இடையிலே சில ஆட்சியாளர்களின் கவனத்திற்கு, இந்தக் குறை எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அன்று அதிகாரத்தில் இருந்தவர்களில் சிலர், மக்களின் விருப்பத்தை மதிக்க விரும்பாமல், தேவருக்குச் சிலையா? என்று ஏகடியம் பேசியிருக்கிறார்கள்.

ஆனால், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில நாட்களில், இந்தக் குறைபாடு, என்



கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது தேசியத்தையும் தெய்வீகத்தையும், தனது இரு கண்களாகக் கொண்டு, செயல்பட்ட ஒரு உத்தமருக்கு, இத்தனைக் காலமும் சென்னையில், சிலை இல்லாமல் செய்து விட்டார்களே, என்ற கவலை தான் மேலோங்கியது. சக்கரவர்த்தி போல வாழ்ந்திருக்க வேண்டிய ஒருவர், சந்நியாசியாகவே வாழ்ந்து மறைந்தாரே! அந்தத் தியாக சீலருக்குச் சிலை வைத்து, தமிழ் நாட்டின் நல்ல மரபைக் காப்பாற்றுவது என, அன்றே உறுதி பூண்டேன்.

சென்னையின் மையப் பகுதியில், தேவரின் சிலையை வைக்க, மனம் திறந்து அனுமதி வழங்கினேன். பின்னர் சில கருத்து வேறுபாடுகளால், சிலை அமைக்கும் பணி, தாமதப்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டபோது, அரசின் சார்பில், "தேவர் சிலை அமைப்புக் குழு" ஒன்றை அமைத்து, ஆணையிட்டேன்.

சிலை அமைக்கும் பணியையும், நிதி சேர்க்கும் பணியையும், துவக்கி வைக்கும் வண்ணம், எனது சார்பில் நன்கொடையை வழங்கினேன். நமது அனைவரின் முயற்சிகள், இன்று திருவினையாகி, தென்னகத்தின் நேதாஜியாம், தேவர் பெருமகனாரின் திருவுருவச் சிலை, இங்கே கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

தேவர் மறைந்து 31 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் தேவர் என்றால், அது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை மட்டுமே குறிக்கும்.

குன்றிலிட்ட விளக்கான அவரது புகழை, சிலர் மறைக்க முயன்றபோது, தனக்கே உரித்தான பாணியில், அவரது சிறப்பை, குவலயம் முழுவதும் அறியும் வண்ணம் செய்திட்டவர், நமது இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான். தேவர் திருமகனார் பிறந்த நன்னாளைத், "தேவர் ஜெயந்தி" விழாவாக, அரசு தரப்பில் கொண்டாட ஆணையிட்டார். சட்டமன்றப் பேரவையில், அவர் திருவுருவப் படத்தைத் திறக்கச் செய்தார். அதுமட்டுமின்றி, அவர் பெயரால், ஒரு மாவட்டத்தையே அமைத்தார்.

ஆனால், பின்னால் வந்த ஆட்சியாளர்கள், அந்தப் பெயரைச் சிதைத்து அறிவித்தனர். ஆட்சிப் பொறுப்பேற்ற உடன், உங்கள் அன்புச் சகோதரி, உங்கள் அனைவரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம், தேவர் பெருமகனாரின் முழுப் பெயரில், மீண்டும் அந்த மாவட்டத்தை, "பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்", என அறிவித்ததை நினைவுகூர்வதில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேவரின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்க, நடவடிக்கைகள் எடுப்பதில், உங்கள் அன்புச் சகோதரி, எப்பொழுதும் தயாராக இருக்கிறேன், என்பதை உணர்த்தும் வகையில் தான், இந்தச் சிலைத் திறப்பு விழா, இத்தனைச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இளம் பருவத்திலேயே, தனது மனத்திற்குச் சரியெனப்பட்டதை, துணிந்து செய்யும் துணிவும், உறுதியும் படைத்தவராய், தேவர் பெருமகனார் இருந்துள்ளார்.

சிறு வயதிலிருந்தே, நெற்றி நிறைய திருநீறு அணியும் வழக்கத்தை, தேவர் திருமகனார் கொண்டிருந்தார். அவர் படித்த பள்ளிக்கூடத்தில், திருநீறு அணிவதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டபோது, "பள்ளியை வேண்டுமானால் மாற்றிக் கொள்வேனே தவிர, நெற்றியில் திருநீறு அணியும் வழக்கத்தைக் கைவிடமாட்டேன்" என்று, உறுதியுடன் இருந்தார். அந்த உறுதியின் காரணமாகத் தான், அவர் நம்மை விட்டுப் பிரியும் வரை, அவரது நெற்றி, நிறைந்த திருநீற்றோடு விளங்கியது.

தனது பள்ளிப் படிப்பை முடித்த நேரத்தில், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு, எப்படியாவது சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணம், அவர் நெஞ்சில் மேலோங்கி நின்றது. என்ன விலை கொடுத்தாவது, சுதந்திரத்தைப் பெற, இந்திய மக்களைத் தயார் செய்ய வேண்டும் என்று, தீர்க்கமாக இருந்தார். அந்த எண்ணங்களின் விளைவாகத் தான், நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் தலைமையை, எதற்கும் அஞ்சாத சிங்கமான தேவர் அவர்கள், ஏற்றுக் கொண்டார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ், பாலகங்காதர திலகர், போன்ற தீவிரவாத தேசியத் தலைவர்களோடும் தீவிரவாத கொள்கைக் கூட்டத்திற்கு அன்று, தமிழகத்தில் தலைமை ஏற்றிருந்த, சீனிவாச ஐயங்கார் போன்றவர்களின் உறுதுணையோடும் தேவர் பெருமகனார் தமிழகம் எங்கும், விடுதலை வேட்கை எனும் தீப் பிழம்புகளை ஏந்தி, வலம் வந்தார். குறிப்பாக, தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில், சுதந்திரத் தாகம் கொழுந்து விட்டு எரியச் செய்ததில், தேவர்

> தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் உயர முடியும்.
>
> –ஆபிரகாம் லிங்கன்

> **உங்களைத் தெரிந்துகொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள். பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தைப் பயன்படுத்துங்கள்.**
>
> **–ஷேக்ஸ்பியர்**

அவர்களின் பங்கை, எவரும் குறைத்துச் சொல்ல முடியாது.

ஆங்கில ஆட்சியாளர்களுக்குத் தேவர் ஒரு சிம்ம சொப்பனமாகவே விளங்கினார் என்பதை, அவர் ஆங்கிலேயர்களால் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, எத்தனை முறை சிறைக்கு அனுப்பப்பட்டார் என்பதிலிருந்து, தெரிந்து கொள்ள முடியும். கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ், பல்வேறு வழக்குகளில் ஆட்படுத்தப்பட்டார். அன்றைக்குத் தமிழகத்தில் இருந்த, பெரும்பாலான சிறைச்சாலைகள், அனைத்திலும் அடைக்கப்பட்ட ஒரே அரசியல் தலைவர், தேவர் திருமகனார் தான்.

வீரம், விவேகம், தன்னடக்கம், எளிமை, போன்ற பண்புகளின் ஒட்டுமொத்த சின்னமாக, அவர் விளங்கியதால், ஒரு புறம் சுவாமி விவேகானந்தரின் வடிவாகவும், மறு புறம், சுபாஷ் சந்திர போஸின் வடிவாகவும் அவர் திகழ்ந்தார்.

தெய்வீகச் சேவைக்கும், தேசியச் சேவைக்கும், எங்கே தனது மண வாழ்வு, இடையூறாக அமைந்துவிடுமோ என்று, முற்றும் துறந்த முனிவராக வாழ்ந்த தேவர், தன்னை நம்பிய மக்களின் நன்மைக்கும், நல்வாழ்விற்கும், எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயங்கியது இல்லை.

1934-ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் கொண்டு• வந்த, குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் தகர்த்தெறிய,தன்னந்தனியாகப்போராடி அவர் வெற்றி பெற்றதே, அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. குறிப்பிட்ட சமுதாய மக்கள், தினமும் காவல் நிலையத்திற்குச் சென்று, கை ரேகை வைத்துச் செல்ல வேண்டும் என்றும் வெளியூர் செல்வதாக இருந்தால், காவல் துறையினரின் அனுமதி பெற்ற பின்பே, செல்ல வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்ட ஒரு சட்டத்தை எதிர்த்து, அவர் போராடிய காரணத்தால் தான், அந்த இருட்டுச் சட்டம், ஆங்கில அரசால் திரும்பப் பெறப்பட்டது. ஒரு சமுதாயத்திற்கு நேர இருந்த, இழிவைத் தடுத்தவர் என்பதால் தான், இன்றைக்கும் அந்தப் பகுதி மக்கள், அவரைத் தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள்.

1937-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், அன்றைய இராமநாதபுரம் சமஸ்தானத்தின், ராஜா சேதுபதியை எதிர்த்து, மிகவும் துணிவுடன் போட்டியிட்டார். எங்கே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், காட்டாறு போன்ற, தனது கருத்தாழமிக்க பேச்சுக்களால், மக்கள் மனத்தைக் கவர்ந்து விடுவாரோ என்று பயந்து; எந்த மேடையிலும், அவர் சொற்பொழிவு ஆற்றக் கூடாது, என்று வாய்ப் பூட்டு போட்டது, அன்றைய ஆங்கிலேய அரசு. ஆனால் ஒவ்வொரு மேடையிலும், ஒரு ஞானியைப் போல அமர்ந்து விட்டு, மக்களைப் பார்த்து கரம் கூப்பி, வணக்கம் தெரிவித்து விட்டு ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல், அந்தத் தேர்தலிலே, மாபெரும் வெற்றியைப் பெற்றுக் காட்டியவர், தேவர் திருமகனார் என்றால், எந்த அளவிற்கு மக்கள் மனதை, அவர் ஆக்கிரமித்து இருந்தார் என்பது தெளிவாகும்.

அவரது சமூக, அரசியல், மற்றும் ஆன்மீகக் கருத்துக்கள், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக்கு, அடிப்படையாக அமைந்து உள்ளன என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

"விவேகம் அற்ற வீரம், முரட்டுத்தனம்· வீரம் அற்ற விவேகம், கோழைத்தனம்" என்று முழங்கியதோடு மட்டுமின்றி, நடைமுறைப்படுத்தியும் காட்டியவர், தேவர் அவர்கள்.

தேவர் பெருமகனாருக்குச் சென்னை நகரில் சிலை வைக்கும் இந்த நல்ல நாளில், நீங்கள் அனைவரும் மகிழ்ச்சி கொள்ளும்வண்ணம், சில அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

1. நந்தனம் சந்திப்பில் இருந்து பிரிந்து செல்லும், Chamiers சாலை, இன்று முதல், "பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை", என்று வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. பசும்பொன் தேவர் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பராமரிக்க, அவரது பேரில் ஒரு அறக்கட்டளை அமைக்கப்பட்டு இருந்தாலும், அந்த அறக்கட்டளை, நன்முறையில் பராமரிக்கப்படவில்லை என்ற குறை, பலர் மனதில் இருந்து வருவதை, நான் அறிவேன். அந்த அறக்கட்டளையின் கீழ் அமைந்த சொத்துக்கள், நன்முறையில் பராமரிக்கப்பட, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பலர் என்னிடம் கோரிக்கை வைத்து இருந்தார்கள். மக்கள் நலன் கருதி, அந்த அறக்கட்டளையினை நிர்வகிக்க, அரசின் உயர் அதிகாரி ஒருவர், தனி அதிகாரியாக நியமனம் செய்யப்படுவார் என்பதையும்; தேவர் அவர்கள் பெயரில், கமுதியில் அமைந்துள்ள, கல்லூரியின் நிர்வாகமும், இந்த அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, மதுரை காமராஜ் பல்கலைக்கழக்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள, ஆராய்ச்சி •மையம் ஒன்று விரைவில் தொடங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. பசும்பொன்னில், தேவர் அவர்கள் பிறந்த வீடு, தமிழக அரசின் சார்பில், நினைவுச் சின்னமாக மாற்றி அமைக்கப்படும் என்பதையும், அந்த நினைவுச் சின்னத்தை, தமிழக அரசே பராமரிக்கும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கள்ளர், மறவர், அகமுடையர் என்று இருக்கும், முக்குலத்து மக்கள், "தேவர்" என்ற ஒரே பேரில், அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாக, நான் ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையில், அறிவித்து இருந்தேன். மூன்று பிரிவுகளாக உள்ள இம்மக்கள், இன்று முதல், "தேவர்" என்ற ஒரே பிரிவாகக் கருதப்படுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இவற்றில் சில பிரிவினர் மட்டும், மிகப் பிற்படுத்தப்பட்டவர் என்ற நிலையிலும், சீர் மரபினர் என்ற நிலையிலும், அனுபவித்து வருகின்ற சலுகைகள், தொடரும் என்பதையும் தமிழக அரசு ஏற்படுத்தி இருக்கின்ற, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின், பரிந்துரைகளின் பேரில், தமிழக அரசு, தகுதியானதொரு முடிவை எடுக்கும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்து, மறைந்த தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் வேண்டியவர், என்ற எண்ணம் இல்லாமல் அனைவருக்கும் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லாச் சமுதாயத்தவர்களுக்கும் வேண்டியவர், என்கின்ற உணர்வை இங்கே அமைக்கப்பட்டிருக்கும் திருவுருவச் சிலை, நம் அனைவர் மனதில் ஏற்படுத்தும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

இந்த மாபெரும் மனிதரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததை எண்ணி, நான் உண்மையில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் காட்டிச் சென்ற தெய்வீகம், தேசியம், ஒற்றுமை, மக்கள் சேவை ஆகியவற்றை, நாம் என்றென்றும் மறக்காமல், தமிழ்நாட்டின் உயர்விற்காகப் பாடுபட வேண்டும் என்று, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தேவர் பெருமகனாரின் சிலையைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரண்டு வந்து, இந்த விழாவில் பங்கு கொண்ட உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# முத்தான அறிவிப்புகள் ஐந்து!

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிலை திறந்து வைத்த கையுடன், சிறப்புமிகு அறிவிப்புகள் ஐந்தைத் தனது உரையிலே வெளியிட்டார்:

1. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றி ஆராய மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலே ஓர் ஆராய்ச்சி மையம்.

2. அண்ணா சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சேமியர்ஸ் ரோடு இனி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை எனப் பெயர் மாற்றம்.

3. கள்ளர், மறவர், அகமுடையர் என முப்பிரிவாய்ப் பிரிந்து கிடக்கும் முக்குலத்தோர் யாவருக்கும் இன்று முதல் 'தேவர்' என்று ஒரே பெயர். எனினும், மிகப்பிற்பட்டோர் எனச் சலுகை பெற்ற பிரிவுகள் தொடர்ந்து அந்தச் சலுகை பெறலாம். மேலும், பிற்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து தக்க முடிவு.

4. முத்துராமலிங்கத் தேவர் பிறந்த இல்லம் நினைவுச் சின்னம் ஆக்கப்படும். அரசு அதனைப் பராமரிக்கும்.

5. முத்துராமலிங்கத் தேவர் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பராமரித்துவரும் அறக்கட்டளையை நிர்வகிக்க, அரசு உயர்நிலை அதிகாரி ஒருவர் தனிஅலுவலராக நியமிக்கப்படுவார். இந்த அறக்கட்டளையே கமுதி கல்லூரியின் நிர்வாகத்தை ஏற்கும்.

# வண்ண விளக்கு-வரவேற்பு வளைவு-வாழ்த்துப் பதாகைகளோடு கோலாகல வரவேற்பு!

மக்கள் தொண்டைத் தனது உயிர் மூச்செனக் கொண்டு, தேசியமும், தெய்வீகமுமே தனது வாழ்வென வாழ்ந்த மகத்தான தலைவராம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சிலைத் திறப்பு விழா 19.10.94 அன்று சென்னையில் கோலாகலமாக நடைபெற்றது.

'தலைவன் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்று, தனியொரு இனத்திற்கு மட்டுமல்ல; இந்தத் தரணிக்கே எடுத்துக்காட்டி வாழ்ந்த ஒரு தலைவனுக்கு, அவன் புகழ் சிறக்க, தலைநகரிலே ஒரு சிலை திறக்க வேண்டுமெனக் கடந்த 30 ஆண்டுகளாக எவருமே எண்ணாதிருக்க, எங்கள் தலைவர் இனிய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியன்றோ இன்று சிலை திறக்கிறார்' என விழாவிலே பங்கேற்றோர் பெருமிதத்துடன் வாழ்த்துரைக்க, தமிழர்தம் பெருமகனாம் தேவரின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார்.

11 அடி உயரமுள்ள பீடம். அதன் மீது, பொன் எனப் பொலிவு காட்டி, சிம்மமென நிற்கும் சிலையின் உயரம் 10 அடி, முழுவதும் வெண்கலம்; மதிப்பு 6 இலட்சம் ரூபாய். சிற்பி திரு ஜகன்னாதன்.

அண்ணா சாலை நந்தனம் சந்திப்பில் அழகுடன் அமையப் பெற்றுள்ள இச்சிலைத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

தேவரின் திருவுருவச் சிலை திறக்க வருகை தந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களில் இல்லத்திலிருந்து, விழா நடக்கும் நந்தனம் சந்திப்பு வரை, அண்ணா சாலை வழிநெடுக, வண்ண விளக்குகளும், வரவேற்பு வளைவுகளும், வாழ்த்துப் பதாகைகளும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்தி அமைக்கப் பட்டிருந்தன. அண்ணா சாலையின் குறுக்கே வளைவுகள் அமைக்கப்படக் கூடாது என அரசுத்தடை இருப்பதைக் கருத்தில் கொண்டு, சாலையின் மருங்கில், வரவேற்பு வளைவுகள் வண்ணமுடன் அமைக்கப்பட்டிருந்தன.

விழா மேடையருகே, உயிருள்ளவையோ என வியக்க வைக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டிருந்த சிங்கங்களும், மாலையைத் துதிக் கையில் ஏந்திய பட்டத்து யானையும் வரிசை யாக நிற்க, பின்னணியில் சிம்மக் கர்ஜனை முழங்க, ஆலயங்களில் அறநெறி வளர்க்கும் அந்தணர்கள் பூரண கும்பங்களுடன் திருச் சொல் அருளி வரவேற்க, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழாவுக்கு வருகை தந்தார்.



விழாத் தலைவர் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் "சிங்கம் நிகர்த்த எங்கள் தலைவி, சிம்மமென வாழ்ந்த தலைவரின் சிலை திறப்பார்", என அறிவிக்க, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படகு வடிவப் பிடியில் பதிக்கப்பட்டிருந்த பொத்தானை அமுக்க, சிலையைச் சுற்றியிருந்த பச்சைப் பட்டுத் திரை மெல்லக் கீழிறங்க, "தேவரய்யா வாழ்க! புரட்சித்தலைவி வாழ்க!' எனும் மக்கள் முழக்கம் விண்ணைப் பிளக்க, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சிலை திறக்கப் பெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சிறப்பு மிகு அறிவிப்புகள் ஐந்தைத் தமது உரையில் வெளியிட்டார்:

ஒவ்வோர் அறிவிப்பின் போதும், இலட்சோப இலட்சமாகக் கூடியிருந்த பொதுமக்கள் அனைவரின் கரவொலியும் விண்ணை முட்ட, அதன் எதிரொலியோ எனும் வண்ணம் "தேவரய்யா வாழ்க! புரட்சித்தலைவி வாழ்க!' என்று மக்கள் முழங்கினர்.

சிலை வடித்த சிற்பி திரு. ஜகன்னாதன் அவர்களைப் பாராட்டி, தங்க மோதிரம் ஒன்றை, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஆண்டித் தேவர், திரு. சிங்காரம், திரு. எஸ்.வி. சண்முகம் ஆகியவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. கந்தசாமி அவர்கள், தமிழ்நாடு தேவர் பேரவைத் தலைவர் திரு சீனிச்சாமித் தேவர் அவர்கள், ஓய்வுபெற்ற காவல்துறை உயர் அலுவலர் திரு. பொன். பரமகுரு அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள் நன்றி உரை யாற்றினார்.

திரைப்பட நடிகை திருமதி மனோரமாவின் இன்னிசை நிகழ்ச்சி விழாவில் நடைபெற்றது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைத் திறப்பு விழா, எழில்மிகு விழா மட்டுமல்ல, அது ஏற்றமிகு விழாவும் கூட என்பதற்கு, தமிழகம் முழுவதிலிமிருந்து வருகை தந்திருந்த இலட்சோப இலட்சம் மக்கள் சாட்சியாக இருந்தார்கள் என்றால் அது மிகையல்ல.

நிகழ்ச்சித் தொகுப்பு: சாரதி



- முக்கியச் சாலைக்கு ராஜா முத்தையா பெயர்!
- பாடநூலில் அவருடைய வாழ்க்கை வரலாறு!

# டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

## அட்டை சொல்லும் செய்தி

எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், "தமிழ் இசைக் காவலர்" என்று பாராட்டப்பெற்ற, டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களது திருவுருவச் சிலையின்ன, வரலாற்றுச் சிறப்பு மிக்க, எழில் மிகுந்த, இந்த ரிப்பன் மாளிகை வளாகத்தில் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

தமிழகத்தின், ஒரு பெருமை மிக்க பாரம்பரியத்தையும், வரலாற்றுச் சிறப்பையும், ஒருங்கே பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த, ஒரு நல்லவரின் சிலை, இங்கே அமைக்கப் பட்டிருப்பது, எல்லா வகையிலும் ஏற்புடையதாகும். சமுதாயத்தின் நலனுக்காகப் பாடுபடும், பெரியோர்களின் சிலைகளை அமைத்து, என்றென்றும் நினைவுகூரும் தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாடுதான், இங்கே கம்பீரமாகக் காட்சி தரும், ராஜா

# முத்தையா செட்டியார் வாழ்க்கை வரலாறு பாடநூலில் இடம் பெறுகின்றது

ரிப்பன் மாளிகை வளாகத்தில் 21.10.1994 அன்று ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றும்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் · ராஜா முத்தையா செட்டியாரின் நினைவாக ரிப்பன் மாளிகைக்கு அருகில் உள்ள சைடன்ஹாம்ஸ் சாலை (Sydenhams Road) ராஜா முத்தையா சாலை என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து சைடான் 'ஹாம்ஸ் சாலை பெயர் மாற்றம் செய்யப்பட்டு ராஜா முத்தையா சாலை என்று வழங்குவதற்கான ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார். இதற்கான அரசாணை 24.10.1994 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதே விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ராஜா முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, பாட நூலில் பாடமாகச் சேர்க்கப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து ராஜா முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாற்றைப் பாட நூலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநரகமும், தமிழ்நாட்டுப் பாட நூல் கழகமும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முத்தையா செட்டியாரின் திருவுருவச் சிலை.

ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் தந்தையார், ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழுக்கும், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், ஆற்றிய அரும் பணிகள், இன்னும் சரித்திரத்தில் பசுமையாகவே இருக்கின்றன. இந்த இருபதாம் நூற்றாண்டில், அவர் வழி வந்த ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், பாரம்பரியம் மிக்க அந்தக் குடும்பத்தின் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டும் வகையில், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினைப் போற்றி நினைவுகூர்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரைத் தொடர்ந்து, அவரது புதல்வர், டாக்டர் M.A.M. இராமசாமி அவர்களும், அந்த மாபெரும் பாரம்பரியத்தை, அதே உணர்வுடன் பாதுகாத்துச் செயலாற்றி வருகின்றார். “நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்” என்பார்கள். ஆனால், இந்தக் குடும்பம், ஒரு பல்கலைக் கழகத்தையே அமைத்து, உயர் கல்விப் பணியின் வளர்ச்சிக்கு, உறுதுணையாகத் திறமையுடன் செயலாற்றி வரும், ஒரு தொடர் நிறுவனமாக மாறிவிட்டது, என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கல்வி, கலை, இலக்கியம், பொருளாதாரம், வணிகம், மற்றும் அரசியல் என்று பல்வேறு துறைகளில், ஏதேனும் ஒரு துறையில் மட்டும் ஈடுபட்டு, ஒருவர் அதில் பாண்டித்தியம் பெறுவது என்பது, அரிதான காரியம் எனக் கூறிவிட முடியாது. ஆனால், தான் ஈடுபட்ட அத்தனைத் துறைகளிலும், . தனது தனி முத்திரையைப் பதித்து, சிறப்பை எய்துவது என்பது, நிச்சயமாக எளிதானது அல்ல. வெகு சிலரால் மட்டுமே, அந்த பெருமையை அடைய முடிந்துள்ளது. ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், அந்த வெகு சிலரில் ஒருவராக, தமிழக வரலாற்றில், குறிப்பாக தமிழகத்தின் கல்வி வரலாற்றில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளார். செயற்கரிய செயல் புரிந்தோர் பட்டியலில், அவர் இடம் பெற்றுள்ளதால் தான், இங்கே நாம் அவருக்கு, சிலை அமைத்து, பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், இந்த சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும், பின்னர், சென்னையின் முதல் நகரத் தந்தையாகவும், பணி புரிந்துள்ளார். இருபத்து நான்கு வயது முடிந்த நிலையில், ஒருவர் அன்றைய காலகட்டத்தில், சென்னை மாநகராட்சியின் உறுப்பினர் ஆவது, அவ்வளவு எளிதான செயல் அல்ல. ஆனால் ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், 24வது வயதில் உறுப்பினரானதோடு 28வது வயதில், சென்னை மாநகராட்சியின், முதல் நகரத் தந்தை, என்ற பதவியையும் வகித்துள்ளார் என்பதிலிருந்து அவரது செரிவார்ந்த அறிவையும், பல்கலைத் திறமையையும், நாம் அறிந்துகொள்ள முடியும். அந்த இளம் வயதிலேயே, எல்லா உறுப்பினர்களாலும், அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், என்பதை எண்ணிப் பார்க்கும் போது, அவர் எந்த அளவிற்குக் கூர்ந்த மதியுடனும், பரந்த மனதுடனும், உயர்ந்த எண்ணத்துடனும், செயல்பட்டிருப்பார் என்பது புலனாகிறது.



மூதறிஞர் ராஜாஜி அவர்கள், 1939ஆம் ஆண்டு, அமைச்சரவை அமைத்தபோது, எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றி பின்னர் புதிய அமைச்சரவை பதவியேற்ற போது, அதில் ஒரு அமைச்சராகவும் பணியாற்றியவர், ராஜா முத்தையா செட்டியார் அவர்கள். பல ஆண்டுகள் தொடர்ந்து, சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி, அனைத்துக் கட்சியினரின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர், முத்தையா செட்டியார் அவர்கள்.

தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கு, குறிப்பாக, உயர் கல்வி வளர்ச்சிக்கு, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், பலர் முயற்சி எடுத்தார்கள். ராஜா முத்தையா செட்டியார் அவர்களும், அவரது தந்தையார், அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அமைத்ததோடு அதை ஒரு சிறப்பு மிக்க கல்வி நிறுவனமாக மாற்றுவதில், தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டார்கள். குறிப்பாக, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், ஆற்றிய கல்விப் பணி, நன்றியுடன் நினைவுகூரத் தக்கதாகும்.

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், கல்வித் துறையின் வளர்ச்சிக்கும், ஊரக வளர்ச்சிக்கும், அதற்குரிய முக்கியத்துவத்தை அளித்து, பல முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

1991- 92-ஆம் ஆண்டு கல்வித் துறைக்கு, 1,299 கோடி ரூபாய் மட்டுமே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், படிப்படியாக அந்த ஒதுக்கீடு உயர்ந்து, 1994-95-ஆம் ஆண்டில், 2,002 கோடி ருபாயாக உயர்ந்துள்ளது.

அனைத்து மட்டக் கல்வியின் வளர்ச்சிக்கு, நாங்கள் எடுத்துள்ள சீரிய முயற்சிகளும், அறிவொளித் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு, அறிவுக் கண்களைத் திறந்து வைக்கின்ற பணிகளும், தமிழகத்தில் ஒரு புதிய எழுச்சியை, உண்டாக்கி வருகிறது என்பதில், ஐயமில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து, தமிழகத்தின் கல்வி வளர்ச்சியை நோக்கும் போது, கல்வி வளர்ச்சியின், முக்கியமான ஒரு கால கட்டத்தில், நாம் வாழ்ந்து வருகிறோம் என்ற உண்மை தெளிவாகும்.

தமிழ் மொழி, , மற்றும் தமிழ் இசை, ஆகியவற்றின் வளர்ச்சியிலும், இந்தக் குடும்பத்தின் ஈடுபாட்டை, அனைவரும் அறிவார்கள். குறிப்பாக, ராஜா முத்தையா செட்டியார் அவர்கள், தமிழ் இசைச் சங்கத்தின் மூலம், தமிழ் இசையைப் பாதுகாக்க, மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் ஒரு வகையில் தமிழ் இசையை, அழிவிலிருந்து காப்பாற்ற உதவியதோடு அந்தத் தேமதுரத் தமிழோசை, உலகெலாம் பரவவும், வழி வகுத்தது என்பதை, நாம் நிச்சயமாக மறுக்க முடியாது.

இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும், தனக்காகவும், தனது குடுப்பத்திற்காகவும் மட்டும் வாழாமல், உயர்ந்த பொது நோக்கங்களோடு, சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும், என்கின்ற ஒரு அடிப்படைக் கருத்தைத்தான், ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு, இன்றைய இளைய தலைமுறைக்கு, உணர்த்திக் கொண்டு இருக்கிறது.

பச்சையப்பன் அறக்கட்டளை நிறுவனம், இந்தியன் வங்கி, சென்னை மாநகராட்சி, சென்னைப் பல்கலைக்கழகம், இம்பீரியல் வங்கி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ராஜா அண்ணாமலை மன்றம், மதுரா கோட்ஸ் நிறுவனம், பின்னி மில்ஸ் நிறுவனம் என்று பலதரப்பட்ட நிறுவனங்களில், தம்மை இணைத்துக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வுக்குப் பாடுபட்ட, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின், திருவுருவச் சிலையை, இந்த ரிப்பன் மாளிகை வளாகத்தில் நிறுவுவது, மிகவும் பொருத்தமுடையதாகும். தமிழகத்தின் வரலாற்றில், அவரது பெயரும், புகழும், என்றென்றும் நிரந்தரமாகத், தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை. அவர் விட்டுச் சென்ற பணிகளை, அதே உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், செயல்படுத்தி வருகின்ற அவரது புதல்வர், டாக்டர் M.A.M.ராமசாமி அவர்களுக்கும், என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருவுருவச் சிலையைக் காண்பவர்களுக்கு, அதன் பின்னால் ஒரு மாபெரும் சரித்திரம் மறைந்து இருப்பது, நிச்சயமாக நினைவிற்கு வரும் என்று கருதுகிறேன். தனிப்பட்ட மனிதர்களைவிட, ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிதான் முக்கியம் என்ற உணர்வு, இயற்கையாக அவர்கள் மனதில் எழும் என்று நம்புகிறேன்.



நம்முடைய அறிவு வளர வேண்டுமானால், முதலில் நம்முடைய மனத்தை ஒருமுகப் படுத்த வேண்டும்.

–சுவாமி விவேகானந்தர்

# கல்விக் கொள்கையே உயிர்க் கொள்கை!



கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒருவகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது என்று அறிஞர் பெர்னாட்ஷா குறிப்பிட்டதை நான் தற்போது நினைவுகூர விரும்புகிறேன்.. மனிதனை நல்ல வாழ்க்கையை நோக்கி அழைத்துச் செல்வதோடு, அவனை மனிதாபிமானம், மிக்கவனாகவும்,, பண்புடையவனாகவும் மாற்றுவது தான் கல்வியின் நோக்கம்.

கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த காலம் மாறி இப்போது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. கல்வி தான் எத்தனையோ நாடுகளில் பெண்களின் அடிமைத் தனத்தை ஒழிக்கும் ஆயுதமாகச் செயல்பட்டு இருக்கிறது. வீட்டுக்கு உள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களையும், அடுப்பறைக்குள்ளேயே உழன்று கொண்டிருந்த மகளிரையும் கல்விதான் அகில உலகப் புகழ்பெற வைத்துள்ளது. மேலும் மற்ற நாட்டவர்கள் விரும்பி அழைத்து மரியாதை தருகிற பட்டியலில் முதலிடம் வகிப்பது அறிவார்ந்த கல்வியே ஆகும்.

ஓர் அரசுக்கு அதனுடைய கல்விக் கொள்கையே அதன் உயிர்க் கொள்கையாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட 'இரு மொழிக் கல்வித் திட்டம்', புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நமது மாநிலக் கல்வித் துறையின் பற்றுக்கோடாக விளங்கி வருகிறது. அதே இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை எங்கள் அரசு முழுமையாகச் செயல்படுத்தும்.

-'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து

அத்தகைய நல்லவரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததில், என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

உச்ச நீதிமன்ற நீதிபதி, திரு. எஸ். மோகன் அவர்கள், சற்று முன்பு பேசும்போது, ரிப்பன் மாளிகைக்கு அருகில் உள்ள சாலை ஒன்றுக்கு சென்னையின் முக்கியச் சாலை ஒன்றுக்கு, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் நினைவாக, அவரது பெயரைச் சூட்ட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை, என் முன் வைத்தார்கள். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, ரிப்பன் மாளிகைக்கு அடுத்துள்ள "Sydenhams சாலை", பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ராஜா முத்தையா செட்டியார் அவர்களின் நினைவாக "ராஜா முத்தையா சாலை" என்று இன்று முதல் அழைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நீதிபதி மாண்புமிகு திரு. மோகன் அவர்களது வேண்டுகோளின்படி, டாக்டர் முத்தையா செட்டியாரின் வாழ்க்கை வரலாறு பாடநூலில் பாடமாகச் சேர்க்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நீதிபதி அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, சென்னை மாநகரம் விரைவில் சிங்காரச் சென்னையாக எழிலார்ந்த சென்னையாக மாறும் என்று உறுதி கூற விரும்புகிறேன். "எழில்மிகு சென்னை 2000" என்னும் சென்னையை அழகுபடுத்தும் மாபெரும் திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் கலந்து கொள்ள, பெருந்திரளாக வந்துள்ள உங்கள் அனைவருக்கும், எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



# தமிழ்நாட்டில் புயல்-மழை

## நிவாரணப் பணிகள்: மாண்புமிகு முதலமைச்சர் ஆணை



சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் 31.10.94 அன்று சென்னையைக் கடந்த பெரும் புயலாலும், பேய் மழையாலும் பெரும் சீர் குலைவுக்கு ஆளாக நேர்ந்துவிட்டது. மக்கள் கடுமையான சூறாவளிப் புயல் காற்றாலும், பலத்த மழையினாலும் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்தவுடன், தேவையான அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மதுரையிலிருந்து, தலைமைச் செயலாளருக்கும், மற்றும் அலுவலர்களுக்கும் ஆணையிட்டார்.

மறுநாள் 31.10.94-ல் இதன் காரணமாகச் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகள்- கல்லூரிகளுக்கு அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

பலத்த காற்று மற்றும் மழையினால் விழுந்து விட்ட மரங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, சாலைகளில் போக்குவரத்தைச் சரி செய்யவும், மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளிலிருந்து, அந்த நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும், பள்ளமான பகுதிகளில் வசிக்கின்ற மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்க ஏற்பாடு செய்யவும், மாநகராட்சி அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

மேலும், தூத்துக்குடியில் நிகழ்ச்சி முடிந்தவுடன் நேராகச் சென்னை திரும்பிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளரிடம் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டார்.

பின்னர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் - மீனளத் துறை அமைச்சர் ஆகியோரை ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, பலத்த காற்றாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுமாறு அனுப்பி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், விமான நிலையத்திலிருந்து கிளம்பி, அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிடுவதற்கு விரைந்து சென்றார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களுக்கு சென்னை மாநகராட்சி 4 இடங்களில் சமையல் கூடங்களை ஏற்படுத்தி, உணவு சமைத்து வழங்கியது.

கடும் புயல்/மழை மற்றும் பலத்த காற்றினால் சில இடங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்களினால் மரணம் அடைந்த 15 பேரின் குடும்பத்தினருக்கு, தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக, தலா 10,000 ரூபாய் வழங்குவதற்கும் ஆணையிட்டார்.





# காவல்துறை கைரேகைப் பதிவு மேம்பட, நவீன தொழில் நுட்பத்தோடு புதிய பிரிவு!

## காவல்துறைத் தலைமை அலுவலகக் கட்டடக் கால்கோள் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

காவல்துறை என் வசம் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது என்னுடைய எண்ணத்தில் முன்னுரிமை கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

பொது நிர்வாகத்துறையில் மிகவும் சிக்கலான, கடினமான பணியை மேற்கொள்கிறார்கள் என்பதை நான் தெளிவாக அறிவேன்.

பாதுகாப்புப் பணி மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கும்போது, போலீசார் பிரம்மாண்டமான முயற்சிகளையும் சங்கடங்களையும் மேற்கொண்டு வருகிறார்கள், அதே நேரத்தில் அவர்கள் மக்களின் விமர்சனத்துக்கும் ஆளாகிறார்கள்.

எல்லாத் துறைகளிலும் 'கறுப்பு ஆடுகள்' இருப்பதைப் போல, காவல்துறையிலும் இருக்கிறார்கள். கறுப்பு ஆடுகளை தனிமைப் படுத்த வேண்டும்.

அதற்காக ஏற்கெனவே இருக்கும் வெள்ளை ஆடுகளை எல்லாம் கறுப்பு மை கொண்டு கறுப்பு ஆக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல, எங்களது நோக்கம் தவறுகளைத் திருத்த வேண்டும் என்பதுதான்.

நான் பதவிப் பொறுப்பு ஏற்ற பிறகு, காவல்துறையில் . பற்றாக்குறையை நிவர்த்திக்க ஏராளமான புதிய இடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

காவல்துறை தேர்வுக்கான நடைமுறைகள் சீரமைக்கப்பட்டன. எல்லா மட்டத்திலும் பதவி உயர்வுக்கான வாய்ப்பு அளிக்கப் பட்டது. காவல்துறையினரின் வீட்டு வசதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மகளிர் பிரச்சினைக்குத் தீர்வு காண, மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டன.

காவல்துறையில் நவீன தொழில் நுட்பத்தைப் புகுத்த நாம் மேற்கொண்டுள்ள. முயற்சிகளின் அடையாளமே இன்றையதினம் நடைபெறும் இந்த விழா. தகவல், தொடர்புச் சாதனங்களும், கணிப்பொறிகளும் இந்தத் துறையில் நவீன தொழில்நுட்பச் சாதனங்களாகும்.

காவல்துறைக்கு மட்டுமல்லாமல், புதிய சமுதாயத்துக்கே தகவல் தொடர்புச் சாதனங்கள் உயிர்நாடியாக உள்ளன. "போலீஸ் டிஜிட்டல் மைக்ரோவேவ்" திட்டம் காவல்துறையின் பணியில் முதல் தரமான நவீன தொழில் நுட்ப வசதியாகும்.

தமிழகக் காவல்துறையினருக்குக் குறிப்பாக ரேடியோ அதிகாரி மற்றும் அவரது குழுவினருக்கு இது பெருமை சேர்ப்பதாகும்.

இந்த நவீன தகவல் தொடர்புச் சாதனம்

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காவல்துறைத் தலைமை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு வருகை புரிந்தபோது, தமிழ்நாடு சிறப்புக் காவல் துறையினரின்* **(Tamil Nadu Special Police)** *அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் (24.10.94).*





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னையில் காவல்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில் காவல்துறை நவீனமயமாக்குதல் தொடர்பான கம்ப்யூட்டர் திட்டத்தை, காவல்துறை ஆலோசகர் திரு என். கிருஷ்ணசாமி விளக்குவதைப் பார்வையிட்டார் (24.10.94).

காவல்துறையினர் எந்த இடத்தில் இருந்தாலும் அவர்களுடன் தகவல் தொடர்பு ஏற்படுத்திட வசதி செய்கிறது.

கணிப்பொறிகளும், தகவல் தொடர்புச் சாதனங்களும் காவல்துறையினருக்கு அவசியம். இந்த நிலையில் எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ரேடியோ தகவல் தொடர்புச் சாதங்களை விரைவாக விநியோகம் செய்ய நான் தயக்கம் காட்டமாட்டேன்.

நவீன தகவல் தொடர்புச் சாதனங்களை ஏற்றுச் செயல்படுத்திட உரிய ஏற்பாடுகள்

சந்தன மரக் கடத்தல் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்ட காவல்துறை உதவி ஆய்வாளர் திரு செந்தில்குமார் அவர்களது மனைவி திருமதி லதா அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடையில், அரசுத் தரப்பில் நிவாரண நிதித் தொகையாக ரூ.10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், சிறப்புக் காவல்படைப் பிரிவுக் காவலர்கள் தன்னிச்சையாக வழங்கிய நிதி உதவியான ரூபாய் ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையையும் சேர்த்து மொத்தம் ரூ.11 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார் (24.10.94).



தாயின் அன்பை உணராதோர் உலகில் இல்லை. அந்த அன்பு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத உயர்ந்த ஒன்றாகும். தவறு செய்யும் குழந்தைகளைத், தாயன்பால் நிச்சயமாகத் திருத்த முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவ்வாறே மகளிர் காவலர்களின் கடந்த காலப் பணிகளை உற்று நோக்கினால், குற்றவாளிகளின் மன மாற்றத்திற்கு, அவர்களின் அணுகுமுறை பேருதவியாக இருந்து வருவது தெரியவரும்.

பெரும்பாலும் இளங் குற்றவாளிகளும், முதல்முறையாகக் குற்றம் புரிவோர்கள் பலரும், அவர்கள் செய்துவிட்ட குற்றத்தினை எண்ணி வருந்தும் நிலையிலேயே இருப்பார்கள். அந்த மனநிலையில் உள்ளோரை, மீண்டும் தவறு செய்யாமல் நிரந்தரமாகத் தடுத்தாட் கொள்ளும் திறமை, மகளிர் காவலர்களிடையே உள்ளது. இதுபோன்ற குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி, கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும், அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம், பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கின்றது.

–'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து



## தாயன்போடு அணுகும் மகளிர் காவலர்கள்!

செய்வது முக்கியம். இதற்காக 160 போலீஸ் கண்காணிப்பாளர்கள் மற்றும் அதற்கும் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

கணிப்பொறிகளைப் பயன்படுத்துவது படிப்படியாக ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் எட்ட வேண்டும் என்பதே எனது விருப்பம். இதனால் காவல் நிலையங்களில் எழுத்து வேலைகளின் சுமை குறையும்.

காவல்துறைப் பயிற்சிக் கல்லூரிகளிலும் கணிப்பொறி வசதிகள் செய்து தருவதன் மூலம் காவல் நிலையங்களில் கணிப்பொறிகளில் பயிற்சியும் ஏற்படும். இந்த 2 திட்டங்களின் தொடக்க விழா உண்மையிலேயே இந்தியாவில் காவல்துறை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

தமிழ்நாடு காவல்துறையில் செயல்படும் கைரேகைப் பதிவு இந்தியாவிலேயே சிறந்த நிறுவனமாகச் செயல்படுகிறது என்பதைக் கேள்விப்பட்ட நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துறை மூலம் பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

இப்போது கைரேகைப் பிரிவு மேலும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் இங்கே புதிய பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

"எலக்ட்ரானிக் கார்ப்பரேசன் ஆப் இந்தியா" நிறுவனம், பணம் எதுவும் வாங்காமல் ஓராண்டுக் காலத்துக்கு இந்தப் புதிய பிரிவை ('அங்குலி புராஜக்ட்') ஏற்படுத்தித்தந்துள்ளதைப் பாராட்டுகிறேன். மற்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் வகையில் இந்த நிறுவனம் காவல்துறைக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது.

இந்தப் புதிய பிரிவு தொடங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய கிருஷ்ணமூர்த்தி அயராது பாடுபட்டு இருக்கிறார். அவருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு காவல்துறையை நவீனப்படுத்துவதற்கு உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. உங்கள் ஆதரவு இல்லாமல், இதில் வெற்றி பெறமுடியாது. அந்த வகையில் தமிழ்நாடு போலீஸ் 'டி.ஜி.பி.' ஸ்ரீபால், அவ்வப்போது நல்ல ஆலோசனைகளையும், பல்வேறு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் தெரிவித்து வருகிறார். காவல்துறை முன்னேற்றத்திற்கு இவை மிகவும் உதவியாக உள்ளது. இதற்காக அவரை மனமாரப் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதோடு, குற்றங்களைக் கண்டுபிடித்து சமுதாயத்தையும் பாதுகாத்து வருகிறார்கள். இதற்காகப் போலீஸ் 'டி.ஜி.பி'யையும் மற்ற உயர் போலீஸ் அதிகாரிகளையும் அனைத்துத் தரப்பினரையும் பாராட்டுவதோடு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை மேலும் சிறப்பாகப் பணியாற்றி – நமது தமிழகக் காவல்துறை உலகிலேயே சிறந்த காவல்துறையாகத் திகழவேண்டும் என்ற என் கனவை நனவாக்க வேண்டும்.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

**செழிப்பான வாழ்விற்கு**
**இன்றே முதலீடு செய்வீர்**

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு
**2%**
சிறப்பு ஊக்கத்தொகை.




தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு




உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வெளியிடப்படும் கட்டுரை:

# தமிழ் பயிற்று மொழியாக வேண்டும்

**- தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

தமிழ், காலத்தால் மூத்த மொழி வளர்ந்த மொழி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் கண்ட மொழி. இலக்கியத்திற்கும் பின்தான் இலக்கணம் தோன்றும். தமிழின் இலக்கண வரம்பும், எளிமையும், இனிமையும், தமிழின் தொன்மைக்குச் சான்று. தமிழ், காலந்தோறும் அவ்வக் காலத்துக்குரிய இலக்கியங்களைப் பெற்று, வளர்ந்த மொழி, தமிழிலக்கியங்கள் புலமையின் விளைவு மட்டுமல்ல. காலத்தின் தாக்கமும் அந்த இலக்கியப் படைப்புகளுக்கு ஒரு காரணம். தமிழிலக்கியங்கள் வாழ்க்கையில் தோன்றியவை; வாழ்க்கையை உருவாக்கியவை.

நமது முன்னோக்கள் சங்கம் வைத்து மொழி வளர்த்தனர். பழந்தமிழ்ச் சங்கம் பிரெஞ்சு தேசத்து அகாடமி French Academy போல உரிமையும் வலிமையும் உள்ளதாக மொழித் துறையில் மேலாண்மை பெற்றிருந்தது. தமிழில் ஒரு நூல் தோன்றினால் தமிழ்ச் சங்கத்தின் அங்கீகாரம் பெற்றால்தான் அது நூல் என்று ஏற்கப்பெற்றது. இறையனாரின் "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடல் குற்றமுடையது என்று தமிழ்ச் சங்கம் சுட்டியதை நினைவுகூர்க. இடைக்காலத்தில் எல்லாம் போய்விட்டது! ஆரியம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் குறுக்கீடுகள் தமிழ் வளர்ச்சியைப் பாதித்துள்ளன. தமிழர்களும் தமிழ் வளர்ச்சியென்றால் என்ன என்று புரிந்து கொள்ளாமலே தமிழை வழிபாட்டுக்குரியதாக்கிவிட்டனர்! இன்று தமிழர்கள் செய்வதெல்லாம் தமிழ்ப் பாதுகாப்பு முயற்சியே! அதுவும் கூட முழுமையாக இல்லை!

இந்த யுகம் விஞ்ஞான யுகம். ஆனால், தமிழ் இந்த யுகத்திற்கு ஏற்றவாறு வளரவில்லை.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்!
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

என்று பாரதி எடுத்து மொழிந்து துயருற்றான். இன்றுவரை பாரதி துயருற்ற நிலை மாறவில்லை. மாற்றுவதற்கு இங்கும் அங்குமாகத் சில முயற்சிகள் நடந்தன. ஆனால், வெற்றி பெறவில்லை. நாடு விடுதலை பெற்ற காலத்திலிருந்து தாய் மொழி வளர்ச்சி- தமிழ் மொழி வளர்ச்சி, தாய்மொழி வழிக் கல்வி பற்றி ஓயாது பேசப்பெற்று வருகிறது. ஆனால், முயற்சி கைகூடவில்லை. தமிழ், முத்தமிழாகவே இருக்கிறது! நான்காவது தமிழ், ஐந்தாவது தமிழ் என்று தமிழின் துறைகள் வளரவில்லை. குறிப்பாக அறிவியல் தமிழ் வளரவில்லை.

தமிழ் அறிவியல் மொழி இல்லையா? பழந்தமிழில் அறிவியல் முத்துக்கள் இல்லையா? செடி, கொடி, தாவர இனங்களுக்கு உயிர் உண்டு என்று தொல்காப்பியம் கூறுகிறது. அவை ஓரறிவுயிர்கள் என்று கூறுகிறது. செடி, கொடி, தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கண்டுபிடித்த கருத்து, தமிழில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கருத்து. ஆனால், இன்று கற்றுத்தருவதோ சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த சர். ஜகதீச சந்திர போசு கண்டுபிடித்தார் என்பதாகும். ஏன் இந்த நிலை? தமிழர்கள் தங்கள் அறிவியற் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து ஆய்வு செய்யாததும் அனுபவத்திற்குக் கொண்டு வராததுமாகும். காந்தத்தின் ஈர்ப்பாற்றல் இரும்பை இழுக்கும் என்ற அறிவியல் உண்மையைத் திருவாசகம்,

"இரும்பு தரு மனத் தேனை
ஈர்த்து ஈர்த்து" (திரு ஏசறவு 1)

என்று கூறுகிறது.

மாணிக்கவாசகர் "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" என்று கி.பி. 9-ம் நூற்றாண்டிலேயே கூறியதன் மூலம் உலகம் உருண்டை என்கிறார். கம்பனின் இராம காதை முதலியன அணுவைப் பற்றிப் பேசுகின்றன. சித்தர்களின் நூல்களில்

உடலமைப்பு, உடலியல், மருத்துவ அறிவியல் பற்றிய செய்திகள் ஏராளமாக உள்ளன. ஆதலால், தமிழ், அறிவியல் சார்ந்த ஒரு மொழியேயாம். தமிழ்நாடு தன்னாட்சி இழந்தமையாலும் அந்நிய ஆட்சி மாறி மாறி தமிழ்நாட்டுக்கு வந்தமையாலும் தமிழ் வளர்ச்சி பாதிக்கப்பெற்றுள்ளது.

இன்று தமிழ் வளர்ச்சிக்கு- அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குத் தடை ஒன்றும் இல்லை. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் தாய்மொழி வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கிறது. உத்தரவாதம் அளிப்பதோடன்றி மைய அரசின் தேர்வாணை, தேர்வுகளை அவரவர் தாய்மொழியிலேயே எழுதலாம் என்று ஆணை பிறப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. பாராளுமன்றத்தில் தமிழில் பேசலாம், வினா கேட்கலாம். மைய அரசின் துறைகள் மாநிலத்தின் இயங்கும் துறைகள் தமிழில் இயங்க வேண்டும் என்பது ஆணை மட்டுமல்ல நடைமுறை. பணவிடைப் படிவம் தமிழில் இருக்கிறது. மேலும் மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு வேண்டிய நிதி உதவிகளையும் மைய அரசு வழங்குகிறது. மாநில அரசைப் பொருத்தவரையில் தமிழ் வளர்ச்சிக்குத் தடை இல்லை. மாறாக, "எதிலும் தமிழ், எங்கும் தமிழ்" என்பது தமிழக அரசின் கொள்கை கோட்பாடு.

அறிவு வளர, தாய் மொழி துணை செய்வதுபோல் பிற மொழி துணை செய்யாது. தாய் மொழியே சிந்தனைக்குரிய மொழி. ஒன்றைப் பரவலாக விரிவாக ஆய்வு செய்யத் துணை செய்வதும் தாய் மொழியே! தமிழ் வழிக் கல்வி, வற்றாத அறிவு ஊற்று. பிற மொழிக் கல்வி மனப்பாடம் மலைமீது




வீழ்ந்த மழையனையது. தமிழரின் அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யாது. தமிழர் அறிவியலில் வளர்ந்தால்தான் தமிழ் வளரும். தமிழரும் தமிழும் வளர்ந்தால்தான் தமிழ்நாடு வளரும். ஆதலால் தமிழ்நாட்டில் தமிழ், துறைதோறும் பயிற்று மொழியாக இடம் பெறவேண்டும். ஆங்கிலம் ஒரு பாட மொழியாகக் கற்பிக்கப்பெறுதல் வேண்டும். தமிழ்துறைதோறும் பயிற்று மொழியாக அமைந்தால்தான் தமிழ் வளரும். தமிழ் அறிவியல் தமிழாக வளர்ந்து காலத்தை வென்று விளங்கும். பாரதிதாசன்,

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும்

ஒருத்தர் தடை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட

என்று பாடியது வெற்றி பெற வேண்டும்.

## முத்துக்கள்

மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சியடையும் போது, கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகின்றது.

—பேரறிஞர் அண்ணா

உண்மையே சொல் அது உன் வார்த்தையைப் பாதுகாக்கும். கலந்து யோசனை செய். அது உன் சிந்தனையை வளமாக்கும்.

—வள்ளலார்

உண்மையைக் குறிக்கோளாய்க் கொண்டு உழைப்பவர்களைத் துன்பம் ஒன்றும் செய்ய முடியாது.

—மகாவீரர்

நல்லவற்றையே பேசுங்கள். இல்லையேல் மௌனமாய் இருப்பது நல்லது.

. நபிகள் நாயகம்





# விளையும் பயிர்



சென்னை, கே.கே. நகர் ஸ்ரீகிருஷ்ணசாமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பதினொன்றாம் வகுப்பில் பயிலும் மாணவி செல்வி சோ. சிவமீனாட்சி ஆனந்தி.

இவர், ஆறாம் வகுப்பு முதலே பல பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று, பற்பல பரிசுகளைப் பெற்றுள்ளார்.

1991-92-ஆம் ஆண்டு ஸ்ரீராம் குரூப் நிறுவனத்தினர் நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் பங்கேற்று முதற்பரிசாக ரூ.2,500 யும், பள்ளிக்கு நிரந்தரமாக ஒரு கேடயத்தையும் பெற்றுத் தந்து உள்ளார்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் கீழ் இயங்கி வரும் பாரதியார் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து கலந்து நான்காண்டுகளும் பரிசு பெற்றுள்ளார். ஆவிச்சி மேனிலைப் பள்ளியினர் ஆண்டுதோறும் நடத்தும் ஏ.வி.எம். நினைவுச் சுழற் கோப்பைப் பேச்சுப் போட்டியில் மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து பேசி மூன்று முறையும் முதற் பரிசு பெற்றுள்ளார்.

அசோக் நகரில் உள்ள அருள் நெறி மன்றத்தினர் ஆண்டுதோறும் நடத்தும் பாரதியார் விழாப் பேச்சுப் போட்டிகளிலும் தொடர்ந்து மூன்றாண்டுகளாகக் கலந்து மூன்று முறையும் முதற் பரிசினையே பெற்றுள்ளார். 1991-இல் அரசு நடத்திய குழந்தைகள் தின விழாப் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசினையும் 1993-இல் அரசு நடத்திய காந்தியடிகளின் 125-வது பிறந்த நாள் விழாப் பேச்சுப் போட்டியில் முதலாவதாக வந்து ரூ.100-க்கான அஞ்சலகச் சேமிப்புச் சான்றிதழினையும் பெற்றார். இவ்வாண்டும் ( 1994 ) அரசு நடத்திய காந்தியடிகளின் பிறந்த நாள் விழா பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு வென்று பரிசுகளை ஈட்டியுள்ளார்.

மேலும் பாவேந்தர் பாசறை, அம்பேத்கர் நூற்றாண்டு விழாக் குழுவினர், காந்திய இளைஞர் அமைப்பினர், மையிலாப்பூர் அகாடமி, ஜவகர் வித்யாலயா, ராமகிருஷ்ண மிஷன் மேல்நிலைப் பள்ளி மையம் ஆகிய அமைப்புகள் நடத்திய பேச்சுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வென்று பரிசுகளை ஈட்டியுள்ளார்.

# உலகில்...



உலகிலே மிகப் பெரிய ஹோட்டல் உள்ள நகரம் பீகிங்.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு பிரேசில்.

உலகிலேயே மிக நீளமான பாலம் அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியா மாநிலத்தில் உள்ள நியூரிவர் ஜார்ஜ் பாலம் ஆகும்.

உலகின் அதிகம் விற்பனையாகும் பத்திரிக்கை ஜப்பானின் 'யோமியுரி ஷிம்புன்' பத்திரிக்கை. உலகில் நீளமான பாதாள ரயில் பாதை லண்டனில் உள்ளது.

உலகிலேயே டாக்டர்கள் அதிகமுள்ள நாடு - அமெரிக்கா. உலகிலேயே மியூசியங்கள் அதிகமுள்ள நாடு அமெரிக்கா.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு மைதானம் செக்கோஸ்லாவாகியாவில் உள்ள ஸ்ட்ராஹாவ் விளையாட்டு மைதானம்.

உலகத்திலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் நியூயார்க் நகரிலுள்ள 'அமெரிக்கன் மியூசியம் ஆப் நேச்சுரல் ஹிஸ்டாரி' ஆகும்.

உலகிலேயே மிகப் பெரிய மலைச்சிகரம் எவரெஸ்ட். இதன் உயரம் 29,028 அடியாகும். உலகின் புகழ்பெற்ற அருவிகள் நயாகரா, விக்டோரியா, கலியா, கான்.

உலகில் ரப்பர் உற்பத்தியில் சிறந்து விளங்குவது - மலேசியா உலகில் தக்காளி அதிகம் உற்பத்தியாகும் நாடு அமெரிக்கா.

மாணவர் பக்கம்

# தொழிலே தெய்வம்





-கவிஞர் வெ. சிவநேசன்

ஒரு தொழிலைக் கற்போம்-நாம்
உயர்ந்து வாழ்வில் நிற்போம்
அமரகவியின் வாக்கு-இதை
அறிந்து சோர்வைப் போக்கு!





தொழிலில் சிறுமை பெருமை-பெரும்
தோல்வி என்ப தில்லை
தூய்மை முயற்சி ஒன்றே-நமைத்
தூக்கி விடும் நன்றே!

உடலும் மனமும் உழைக்கும்-நல்ல
உண்மை உழைப்புக் கீடு
உலகில் வேறு ஏது-என்று
உரக்க நீயும் பாடு!







# அறிவுச் சுடர்

எளிதில் மின்கடத்தும் திறன் கொண்டது எது?
தாமிரம்

இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
வில்லியம் ஹார்வே

மாலைக்கண்நோய் எதனால் ஏற்படுகிறது?
வைட்டமின் A குறைவு

ஆரஞ்சுப் பழத்தில் அதிகம் காணப்படுவது
வைட்டமின் சி

காகிதம் தயாரிக்க முக்கியப் பொருள்
செல்லுலோஸ்

ஆசிரியர் தினம் கொண்டாடப் படும் நாள்
செப்டம்பர் 5

பூமிதான இயக்கத்தைத் துவக்கியவர்
வினோபா பாவே

நோபல் பரிசு உருவாக்கிய நாடு
ஸ்வீடன்

ஒளியின் அளவை அளககப் பயன்படும் கருவி
போட்டோமீட்டர்

இந்தியாவின் மிகப் பெரிய அணை
பக்ராநங்கல்

இந்தியாவின் சிறிய யூனியன் பிரதேசம்
இலட்சத்தீவு

மலைவாழிடங்களின் அரசி
உதகமண்டலம்

ஜைன மதத்தை நிறுவியவர்
வர்த்தமான மகாவீரர்

மகாபாரதத்தை எழுதியவர்
வியாசர்

ஒரிஸாவின் தலைநகரம்
புவனேஸ்வர்

தென்னிந்தியாவின் அஜந்தா
சித்தன்ன வாசல்

பிரமிடுகள் அமைந்துள்ள நாடு
எகிப்து



# சேக்கிழார்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்.

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதையொட்டி, புலவர் பெருமக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகின்றது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டிய சேக்கிழார் குறித்த கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

சேக்கிழார் பெருமான் இயற்றிய திருத்தொண்டர்புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக இலங்கும் பெற்றியது! பல்சிறப்புக்களைப் பெற்றிலங்கும் பெரியபுராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொண்ட பெருமையையுடையவர் நம்பியாண்டார் நம்பிகளாவர்.

சேக்கிழாருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். கல்வெட்டு இவருடைய பெயரை இராமதேவர் எனவும் குறிப்பிடுகிறது. புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் திருஅவதாரம் செய்த சேக்கிழார் பெருமான்ன 'மாதேவடிகள்' எனவும் கல்வெட்டுகள் சிறப்பிக்கின்றன.

## சேக்கிழாரின் தொண்டு

சோழன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முதல் அமைச்சராக விளங்கிய பெருமையுடையவர், அறுபத்து மூன்று அடியார்களின் வரலாற்றினைத் தம் காப்பியத்தில் வடித்துக் கொடுத்து இருக்கிறார். அவர் தம் வரலாற்றினையும், வாழ்க்கை நிகழ்ச்சியினையும் அறியத் தமிழகத்தின் பல இடங்களுக்கும், ஊர்களுக்கும், திருக்கோயில்களுக்கும் சென்று அரிய குறிப்புகளைத் திரட்டிய பெருமையினர். கல்வெட்டுகளையும் கூர்ந்து கவனித்து, செய்திகளைத் தம் நூலுள் பொன்னே போல் போற்றிப் பொதிந்துள்ளார். சான்றாக, "தத்தா நமரேகாண்" என்ற தொடர் முதலாம் இராசேந்திர சோழனின் தஞ்சை கல்வெட்டில் காணப்படுகின்றது. கல்வெட்டுத் தொடரை அப்படியே மெய்ப்பொருள்நாயனார் புராணத்தில் எடுத்தாண்டுள்ளார்.

எங்கும் நிறைந்த சிவபெருமான் குரு வடிவிலும், இலிங்க வடிவிலும், அடியார் வடிவிலும் வெளிப்படுவார். அம்மூன்று வடிவங்களையும், தனித்தனிப் பற்றுக் கோடாகக் கொண்டு வழிபட்டு முக்திப் பேரடைந்தவர்கள் நாயன்மார்கள் ஆவர். அச் சைவப் பெரியவர்களை வணங்கி வழிபட்டு அவர்தம் வரலாற்றினைத் தம் மாக் கதையில் விரித்துரைத்து, உலகெலாம் அறிவித்து முக்திப் பேரடைந்தவர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

மேன்மைகொள், சைவம் செய்த தவப் பயனாகச் சேக்கிழார் அவதரித்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

அடியார்களின் செயல் நுட்பங்களை அறிந்து கூறிய சேக்கிழாரின் ஆற்றல் திறனை சிவஞான முனிவர், "வாக்கினால் சொல்லவல்ல பிரான்" எனப் புகழ்ந்து போற்றியுள்ளார். சான்றாக, திருக்குறிப்புத் தொண்டர் நாயனாரின் குலத்தொழிலை,

'குறித்த பொருள் ஒலித்துக்
கொடுப்பதற்குக் கொடு போந்து
வெறிந்தட நீர்த்துறையின்கண்
மாசெறிந்து மகப் புழக்கி'

என்று குறிப்பிட்ட குறிப்பினால் அறியலாகும்.

மாசெறிதல் - நீரில் தோய்த்துக் கல்லில் மோதல்.

## நூல் அரங்கேற்றமும் நூலின் சிறப்பும்

சேக்கிழாரின் நூல் நயச்சிறப்பினையும், நூல் அரங்கேற்றம் பற்றிய செய்திகளையும் வியந்து பாராட்டும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்

'ஒப்பரிய தொண்டர்தம்
அருமையும் பெருமையும்
உவக்கும் அவர்
அவர்செய்கையும்
உவமையில் லாச்செய்கை
நுட்பமும் திட்பமும்
உம்பர்கோன் அருள்தட்ப்மும்

தப்பரிய செந்தமிழ்த் தொடை
நடையும் அடையும்

தவப்பொருள் அணிசிறப்பும்
தமிழ்முறை அடங்குபல
மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற்
றனபாயன
மேயஅவை அகம் நயந்து
வியந்துமெய்ப் பாட்டினொடு
பாராட்டி மகிழமேல்
மேல்விரித் தருளிய பிரான்'

(- சேக்கிழார் பிள்ளைத்தமிழ், செங்கீரைப்பருவம், 3:)

-எனப் போற்றிச் சிறப்பித்துள்ளார்.

அநபாயன் காலத்தில் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டதை 'அனபாயன் மேய அவயகம்' என்ற தொடரால் அறியலாம். அநபாயன் காலத்தே திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டமையைச் சேக்கிழாரும்,

'மேய இவ்வுரை கொண்டு
விரும்பும்

சேய வன்திருப் பேரும்
பலம்செய்ய

தூய பொன்னணி சோழன்நீ
குழிபார்

ஆய சீர்அந பாயன் அரசவை'

என மொழிகுவர்.

உமாபதி சிவனாரும் அரங்கேற்ற நிகழ்ச்சியினை,

'மருவுதிரு முறைசேர்ப்பார்
எழுதுவார் இருந்து
வாசிப்பார் பொருளுரைப்பார்
கேட்டிருப்பார் - மகிழ்ந்து
சிரமசைத்துக் கொண்டாடிக்
குதூகலிப்பார் சிரிப்பார்
தேனிப்பார் குன்றைமுனி
சேக்கிழார் செய்த
அரியதவத் தினை நினைப்பார்
அம்பலவர் முன்னாள்
அடி எடுத்துக் கொடுக்க இவர்
பாடினார் என்றுரைப்பார்
பெரியபுராணம் கேட்ட
வளர்பிரான் செவிக்கும்
பிடிக்குமோ இனிச்சிந்தா
மணிப்புரட் டென்றுரைப்பார்

-எனக் காட்டுகிறார்.

உமாபதி சிவாச்சாரியார் பாடிய 'சேக்கிழார் புராணம்' வாயிலாகச் சோழ மன்னன் பணித்ததற்கிணங்கச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை இயற்றினார் என்பது அறியத் தகும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சேக்கிழார் பெருமானை, "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட கவி வலவ' எனச் சிறப்பித்துப் போற்றுவர். இறைவனே சேக்கிழார் பெருமானுக்கு இந்நூலினைப் பாட "உலகமெலாம்" என்ற தொடரை அடியெடுத்துக் கொடுத்தார்.

## நூல் நுவலும் அருஞ் செய்திகள்

சேக்கிழார் பெருமான் நாயன்மார்களின் வாழ்வியலை விவரிக்கும் சமுதாய வரலாற்று ஆசிரியர் எனில் சாலப்பொருந்தும். நாயன்மார்கள் ஓர் ஊரினர் அல்லர்; ஒரு சாதியினர் அல்லர்; ஒரே தொழிலில் ஈடுபட்டவருமல்லர். பல்வேறு நாடும், ஊரும், சாதியும், தொழிலும் கொண்டு வாழ்ந்த பெருமக்கள் ஆவர். அம் மக்களின் வாழ்வியல் வரலாற்றினை விவரிக்கும் முகத்தான் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை பழக்க வழக்கம், அரசியல் நெறி, கல்வி முறை, கோவில்கள், கலைகள், நாடு, நகர், ஆறு, மலை, காடு, சோலைகள், போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் தம் நூலில் நெறிப்பட எடுத்தியம்பியுள்ளார்.

## காணப்பெறாத செய்திகள்

பிற சைவத் திருமுறைகளிலும், நூல்களிலும் காணப்பெறாத செய்திகளைப் பெரியபுராணத்தில் காணலாம்; கண்டுகளிக்கலாம். திருநீலகண்டர், இளமையில் துறவு கொண்ட வரலாறும், சாக்கியர் காஞ்சியில் சிவனைப் பூசித்து முக்தி அடைந்த செய்தியும் சுந்தரர் சங்கிலியாரை மணம்புரிந்த செய்தியும் இத்திருத்தொண்டர் புராணத்திலன்றிப் பிற நூல்களில் காணப்படாதனவாகும்.

## காப்பிய நோக்கில் பெரியபுராணம்

பெரியபுராணத்தில் பெருங்காப்



பியத்திற்குரிய இலக்கணம் அமையவில்லை எனக் குறிப்பிடுவர். ஆனால் காப்பிய நோக்கில் இந்நூலினை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் பலர், பெரியபுராணம் பெருங்காப்பியமே என நிறுவுகின்றனர். சுந்தரமூர்த்தி இப்பெருங்காப்பியத்தின் தன்னிகரில்லாத் தலைவராவார்.

தடுத்தாட் கொண்ட புராணத்தில் சேக்கிழார் பெருமான் அருளிய 'சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி' என்ற தொடரில் வரும் 'திருத்தொண்டர்' என்ற பெயர் சுந்தரரைக் குறிக்கும் காப்பியத் தலைவனாகச் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு, அவர் கதையில் காப்பியத்தைத் தொடங்கி, அந்நாயனாரின் கதையில் காப்பியத்தை முடிக்கவும் செய்துள்ளார். சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயத்திலிருந்து மண்ணுலகில் பிறந்து, பெண்டிர் இருவரை மணந்து வாழ்ந்து திரும்பவும் திருக்கைலாயம் சென்று சேர்ந்தது வரை, கதையின் நிகழ்ச்சிகளைக் கதைக் கோப்பாகக் கொண்டு உள்ளார். -குன்றத்தூரரார், சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகையில் விரிவாக்கமாக விளங்கும் பெரியபுராணத்துள் அவர் போற்றிய சருக்கப் பெயர், அடியாரின் முறைவைப்பு என எல்லா நெறிகளிலும் சுந்தரமூர்த்தி நாயனாரின் நூல் நெறிமுறைகளைப் பொன்னே போல் போற்றிய பெருமையர் சேக்கிழார் பெருமானாவார்.

எனவே, சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் புராணத்துள் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் பான்மையர் ஆவர்.

"சுந்தரமூர்த்தி நாயனாரது முந்திய வரலாற்றைத் திருமலைச் சருக்கம் முதலிற் கூறுகின்றது. அப்பால், நாட்டுச் சிறப்பைக் கூறியபின், திருவாரூர் நகரச் சிறப்பினைக் கூறுகிறது. அதற்குச் சிறப்புக் கூறும் நோக்கத்தால் மனுச்சோழன் சரிதையை விளக்குகின்றார். இங்ஙனம் காப்பியத்திற்குரிய இரண்டும் நாட்டுச் சிறப்பும், நகரச்சிறப்பும் அமைகின்றன" என்பர்! சிவக் கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், "பெரியபுராணத்தைத் தனித்தனிப் பற்பல சரிதங்கள் கோத்த கோவை என்று சிலர் கருதுகிறார்கள், அது தவறு. பெரிய புராணமானது தொடர்நிலைச் செய்யுளாய் ஒரு பழஞ்சரிதத்தைச் சொல்வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக்காட்டுவதாயுள்ள ஒரு பெருங்காப்பியமேயாகும்" என்று நிறுவுகின்றார்.

> அனுபவம் ஒரு கடுமையான வாத்தியார். அது சோதனையைத் தந்த பிறகுதான் பாடத்தைப் போதிக்கிறது.
>
> பெர்னாட்ஷா

## பெரியபுராணமும் அடியார்களின் இயல்பும்

தேவாரம் பாடிய மூவர் உள்ளிட்ட அறுபத்து மூன்று அடியவர்களின் வரலாற்றினைப் படித்துக் கொடுக்கும் தகைமைச் சான்றாகப் பெரிய புராணம் விளங்குகின்றது. அவ்வடியார் பெருமக்களின் இயல்புகளை,

'கேடும் ஆக்கமும் கெட்ட
திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே
நோக்குவர்
கூடும் அன்பினில் கும்பிடவே
அன்றி
வீடும் வேண்டா விறலின்
விளங்கினார்'

(திருக்கூட்டச் சிறப்பு 20)

-எனப் போற்றிப் புகழ்வர் சேக்கிழார் பெருமான். தாம் இயற்றிய பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்" என்பதாகும். ஒப்பறி தொண்டர்களின் அருமை பெருமைகளைப் பாடியமையால் "தொண்டர் சீர் பரவுவார்." என வழங்கப்படுகின்றார்.

நாயன்மார்களின் சைவ வாழ்வின் பெருமைகளையும் தோற்றப் பொலிவினையும்,

'பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரையும் நீ அடைவாய்'

-எனப்பெருமித வாழ்வின் பெற்றியினைப் பக்திப் பெருக்கின் மேலீட்டால் போற்றிப் பரவசம் அடைகின்றார், சைவ குலம் தழைத்தோங்கத் தோன்றிய குன்றத்தூர்ப் பெருமகனார்.

## பக்திச்சுவை

சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் பக்திச் சுவை மேலோங்கி இருக்கக் காணலாம். சேக்கிழார் பக்திநெறிப்பட்ட தம் மனப்பாங்கினை ஆங்காங்கு வெளிப்படுத்திச் செல்கிறார்.

கயிலை மலையைக் காண்கிறார் செந்தமிழ்ப்புலவர் சேக்கிழார். 'புண்ணியந்திரண்டுள்ளது போல்வது' கயிலைமலை என்கிறார்.

'அண்ணல்பா கத்தையா ளுடைய
நாயகி
உண்டுணெகிழ் கருணையின்
ஒழுக்கம் போன்றது'

(திருநாட்டுச்சிறப்பு 6)

-காவிரி என்று பாடுகின்றார். வயலில் நெற்கதிர்கள் முற்றி விளைந்து சாய்ந்திருக்கும் காட்சிகள் சேக்கிழாருக்குச் சிவனடியார்கள் பத்திமை நெறி நின்று தலையினால் வணங்குதல் போன்ற தோற்றத்தை அளிக்கின்றதாம்,

'பத்தியின் பால ராகிப் பரமனுக்
காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள்
தலையினால் வணங்குமாபோல்
மொய்த்தநீள் பத்தியின் பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி யெல்லாம்'

(திருநாட்டுச்சிறப்பு 22)

தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பினைப் புகல வந்த சேக்கிழார் துன்பந் தீர்க்கும் சிவனடியார்கள் மேனியிற் பொலியும் திருநீறு போல் தூயதாகவும் அவர்கள் 'சிவாய நம' என எஞ்ஞான்றும் ஓசை யெழுப்புதலினால் ஆயிரம் பாற்கடல் போல் விளங்குவதாகவும் தேவாசிரியர் மண்டபத்தைக் காண்கிறார். பாற்கடலின் வெண்மைக்கு அடியார் மேனி முழுதும் பூசிய திருநீறும், பாற்கடலில் எழும் அலை ஓசைக்குச் சிவனடியார்களின் 'சிவசிவ' ஒலியும் உவமைகளாம்.

'அரந்தை தீர்க்கும் அடியவர்
மேனியில்
நிரந்த நீற்றொளி யால் நிறை
தூய்மையால்
பரந்த அஞ்செழுத் தோசை
பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல்
போல்வது'

(திருகூட்டச் சிறப்பு 3)

மாலையில் மேற்றிசையில் மாணிக்கச் சுடராம் கதிரவன் மறைவதும், இருள் வருவதும் உலகியல் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியாகும்.

கதிரவன் ஒளி மறைந்த பின்னர் வானம் இருண்ட செயலைச் சேக்கிழார் பெருமான், சிவபெருமானின் அஞ்செழுத்தாய் பஞ்சாக்கரத்தை உணர முடியாத அறிவிலார் நெஞ்சம் எவ்வாறு இரண்டு கிடக்குமோ அதுபோன்ற நீண்ட வானம் இருண்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

'பரன், அஞ்செழுத்தும் உணரா
அறிவிலோர்
நெஞ்சும் அன்ன இருண்டது
நீண்டவான்
(தடுத்தாட்கொண்ட புராணம்: 159)

கங்குலாகிய நங்கை முன்கொண்ட புன்முறுவல் போலும், வெண்ணீற்றின் பேரொளி போன்றும் நிலா முகிழ்த்தது என்பர் சேக்கிழார்.

'நறுமலர்க் கங்குல் கங்கைமுன்
கொண்ட
முறுவ லென்ன முகிழ்த்தது
வெண்நிலா'

(தடுத்தாட்கொண்டபுராணம்: 160)

'அற்ற அண்ணுடம லாம்
பரந்தண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது
நீள்நிலா'

(தடுத்தாட்கொண்டபுராணம்: 162)

இதுபோன்றே கயிலை மலையைக் காணும் சேக்கிழார் பெருமான் கண்களுக்கு அம்மலை "பொன்னின் வெண்திருநீறு புனைந்தது போன்று நீள்பணி பூசிய மால்வரை"யாகக் காட்சி தரக் காணலாம். நீற்றொளியின் வெண்மை, பகல் போல் துலங்குவததாகக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

'கிளர்ந்த திருநீற் றொளியிற்
கெழுமிய நண்பகல்'

(திருஞானசம்பந்த புராணம் 6)

இவற்றா லெல்லாம் சேக்கிழார் பெருமான் எப்பொருளைக் காணினும் அப்பொருளைச் சிவபெருமானோடும் அல்லது அவரோடு தொடர்புடைய பொருளாகவும் காண்கிறார் என்பது புலனாகும். இவற்றால் பத்தி நெறியின் தலைப்பட்ட சேக்கிழார் பெருமானின் மனப்பண்பு தெள்ளிதின் விளங்கும்.

## காவியச்சுவை

பத்தி நெறியினைப் பாடவந்த சேக்கிழார் தந்த காப்பியம் காவியச் சுவை நிறைந்து மிளிர்கின்றது. இயற்கை வருணனையும், சொல்லாட்சியும், உவமை அழகும்; அணிநலன்களும் ஆங்காங்கே அமைவுறப் பொருந்திக் காவியச் சுவையினைக் கூட்டுவிக்கக் காணலாம். மருத நிலத்தை வருணிக்கும் போது வயல் வளம் சூழந்த நாடு நம் கண் முன் நிற்கக் காணலாம்.

'சங்கங்கள் வயலெங்குஞ்
சாலிகூழைக் கரும்பெங்கும்
கொருகெங்கு நிறைகமலக்
குளிர்வாகத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற
வொலியெங்கும்
எங்கெங்கு மலர்ப்படுக
ரிவைகழிய வெழுந்தருளி'

(திருஞான புராணம்626)

'வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும் பென்ன நீங்கான்' என்று கண்ணப்பு நாயனார் புராணத்தில் இவர் கையாளும் உவமைத் தன்மை நாவிற் சிறப்பும், வேடர்களுக்குள் நிகழும் பேச்சுத்தன்மையிலேயே அவரறி பொருளை உவமையாகக் காட்டியிருப்பதும் இவர் நுண்மான் மதி நலத்தினை நுவலா நிற்கும். "பிள்ளைதைவரப் பெருகுபால் சொரிமுலைத்தாய்போல்" என்று இவர் பிறிதொரிடத்திற் கையாளும் உவமை, எடுத்த பொருளின் சிறப்பினை ஏற்றமுற வடிக்கும் திறமும் செஞ்சொற்களை வழங்கி நிற்கும் சொல்லழகும் உணர்த்துவதாகும்.

சோலையை வருணிக்கும் போது,

'மொய்யொளி சூழ்நிரை நீல
முதுவலயங்களின் அலையச்
செய்யதளிர் நறுவிரலில்
செடுமுகையின் நகஞ் சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும்
ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற்
போலுயர்வ
மலர்க்கோவை'

(திருநாவு புராணம் 9)

என்று வருணித்திருப்பது காவியச் சுவையின் உரைகல் எனக் கொள்ளலாம். ஒரு சொல்லையே இருமுறை பெய்து ஒரு தனியழகினைச் சொல்லில் புகுத்திக் காட்டல் சேக்கிழார் இயல்பு. சான்றாகத் திருவாமூர்ச் சிறப்பினைச் செய்ய வந்த சேக்கிழார் பெருமான்,



- நன்றி விசுவாசமுடையவன் எவ்னோ அவன் மாத்திரமே மனிதன் ஆவான்.
- சிந்திக்கும் தன்மையின் கூர்மைக்குப் பெயர்தான் பகுத்தறிவு.
- மானமும், அறிவுமே மனிதனுக்கு அழகு.

–தந்தை பெரியார்

விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமின்றி, இயற்கையில் மீதும் அவன் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

நம்மிடையே தீண்டாமையும், ஜாதியும் உள்ளவரை சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற இந்தக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.

நேரு பொன்மொழிகள்



'சைவநெறி ஏழுலகும் பாலிக்குந்
தன்மையினால்
தெய்வ தெறிச் சிவம்பெருக்குந்
திருவாமூர் திருவாமூர்

(திருநாவு புராணம் 12)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரிய புராணமாகிய கலைக்கோயிலின் சிறப்பினைக் கூறிக்கொண்டே போகலாம். கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்,

'கருங்கடலைக் கைநீத்துக்
கொளவெளிது முந்நீர்
கடற்கரையி னெய்ம்மணலை
யெண்ணியள விடலாம்.
பெருங்கடன் மேல் வருந்திரையை
யொன்றிரண்டென்றே
பிரித்தெழுதிக் கடையிலக்கம்
பிரித்துவிட லாகும்;
கருங்கடலின் மீனையள
விடலாகும் வானத்
தாரகையை யளவிடலாஞ்
சங்கரன்தா டமது
சிரங் கொடிருந் தொண்டர்புரா
ணத்தையள விடநந்
சேக்கிழார்க் கெளிதல்து
தேவர்க்கும் அரிதே'

என்றபடி சேக்கிழார் கட்டிய காவியக்கலைக் கோயிலின் மாண்பினை முற்ற உணர்த்த இயலாது.

## அரசியல் அறம்

சேக்கிழார் அமைச்சர் தொழிலைத் திறம்பட நடாத்தியவர். எனவே அரசியல் அறம் பிறழாத நெறிமுறைகளைத் தம் காப்பியத்தின் ஊடே விளக்கியிருக்கக் காணலாம். அனுபாய சோழனைக் குறிப்பிடும் பொழுது,

'மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்
கெலாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்கா
வயான்'

(திருநகரச் சிறப்பு 14)

என்று மண்ணில் வாழும் உயிரினங்களுக்கு அரசன் கண்ணாகவும், உயிராகவும் ஒளிர்கின்றான் என்று போற்றியுள்ளார். மேலும் அரசன் கடமை குடிமகனுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வாராமற் காத்தலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்களிலத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன்
பரிசகனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா
லுயிர்தம்மால்
அனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா
னல்லனோ?'

(திருநகரச் சிறப்பு: 34)

இவற்றாலும் "அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்" என்று குறிப்பிட்டிருப்பதாலும் அரசியல் அறம்பாடிய அறவோர் சேக்கிழார் என்பதனை அறியலாம்.

## சொல்லாட்சித் திறன்

சேக்கிழாரின் மொழியில் பொருட் சிறப்பு பொருந்தி இருக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் இறைவன் தொண்டரோடு வாதிடுகிறார். அப்போது கிழ வடிவில் இருந்த இறைவனை நோக்கி "பழைய மன்றாடி போலும்" என நம்பி ஆரூரர் கூறும் தொடரில் மேலோட்டமாகப் பார்க்கும்போது தொன்றுதொட்டு விளங்கும் பொற்சபையின் கண்ணே நடனமாடும் கூத்தன் போலும் என்ற பொருளும்,

நீதி மன்றங்கள் பல கண்டு அங்கெல்லாம் வழக்காடிவென்று கைவந்த பழைய ஆள் போலும் என்ற சிறப்புப் பொருளும் பிறக்கின்றன.

## புகழுரை

சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக ஒளிரும் திருத்தொண்டர்புராணத்தை இயற்றிய சேக்கிழாரை,

'புண்ணிய முதலே பொங்கொளி
மணியே
பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலில் முத்தே கள்ளமில்
வித்தே
புரையில் சுவைப்பாகே
தண்ணிய அமுதே மண்ணியல்
மதியே
தமிழ்நா வலர் ஏறே
சத்துவ நிதியே பொத்திய
பலநோய்
சாரு பெரும்பகையே
எண்ணிய அன்பர் உளத்தமு தூற
இனிக்கும் நறுந்தேனே
என்றும் பத்தி ரசம்கனி கனியே'

(சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
செங்கீரைப்பருவம் 7)

என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் போற்றிப் பரவுவது சாலப் பொருந்தும்.

# சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பம்

கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு, எரிசக்தி நிறுவனம்

சூரியனிடமிருந்து கிடைக்கும் ஆற்றல் சுத்தமானதும் அளவில்லாததும் ஆகும். அதுவும் இந்தியாவில்— குறிப்பாக தென்னிந்தியாவில் போதுமான அளவு கிடைக்கின்றது. இந்தியாவில் ஆண்டிற்கு சூரிய ஆற்றலின் அளவு சுமார் 4 மில்லியன் மெகாவாட் அல்லது 660 மில்லியன் டன் நிலக்கரிக்குச் சமமானதாகும். நமது நாட்டில் மற்ற ஆற்றல் வளங்கள் குறைவதால் சூரிய ஆற்றலின் உபயோகம் மிக முக்கியமானதாகின்றது. அது தவிர, இது பெட்ரோலிய, நிலக்கரிகளைப் போல சூழ்நிலையைப் பாதிக்காது.

## இன்றைய நிலை

சூரிய வெப்ப ஆற்றலுக்குப் பயன்படுத்துவது ஒரு முக்கியமான காரியமாகும். அநேகத் தொழில் நிறுவனங்கள் வெப்பக் காற்றை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். வெப்ப நிலைக்கேற்றாற் போல் சூரிய ஆற்றலை முழுவதுமாகவோ அல்லது மற்ற ஆற்றலோடு கலந்து பயன்படுத்தும் தொழில் நுட்பம் இப்போது நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது.

பிளண்டர்ஸ் எனர்ஜரி நெட்வொர்க் பென் என்பது விஞ்ஞானிகளுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இடையே இயங்கும் அமைப்பாக உள்ளது. இது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆற்றல் துறையில் அமைந்து சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பத்தை ஆராய்ச்சி மூலம் நிறுவியுள்ளது. இந்தத் தொழில் நுட்பத்தைக் கொண்டு தேயிலைத் தொழிற்சாலைகளிலும் ஒரு பழப் பதப்படுத்தும் தொழிற்சாலையிலும், சூரிய வெப்பக் காற்றுச் சாதனங்களை நிறுவியுள்ளது. அந்த நிறுவனங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இடம் | சூரிய கலெக்டரின் பரப்பளவு | அமைப்பின் நோக்கம் |
|---|---|---|
| மாஞ்சோலை தேயிலைத் தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டம். | 132 சதுரமீட்டர் | தேயிலையை உலர்த்துவதற்குக் காற்றை முன் வெப்பப் படுத்துதல். |
| குறிஞ்சி ஆர்கானிக பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை, வத்தலக்குண்டு. | 50 சதுரமீட்டர் | பழங்களை உலர்த்துதல் |
| கோல்டன் கில்ஸ் தொழிற்சாலை, குன்னூர். | 212 சதுரமீட்டர் | |
| உபாசி முன்மாதிரிப் பண்ணை, குன்னூர். | 100 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| ஹாவுகல் தேயிலைத் தொழிற்சாலை | 220 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| கில்-கோத்தகிரி தேயிலைத் தொழிற்சாலை கில்-கோத்தகிரி | 250 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| பார்க்சைடு தேயிலைத் தொழிற்சாலை, குன்னூர். | 320 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| பாண்டியார் டான்டீ தொழிற்சாலை, கூடலூர். | 516 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |
| ப்ருக்லேண்டு தேயிலைத் தொழிற்சாலை, குன்னூர். | 290 சதுரமீட்டர் | தேயிலை உலர்த்துதல் |

மேலே கடைசியாகக் குறிப்பிட்டுள்ள இரண்டு தொழிற்சாலைகளிலும் சூரிய வெப்பக் காற்றுச் சாதனங்களை நிறுவும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

## அரசுச் சலுகைகள்

சூரிய வெப்பக்காற்று ஆற்றல்







தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு மத்திய, மாநில அரசுகள் பலவிதச் சலுகைகளை அறிவித்துள்ளன. அவைகளாவன:

1. முதலீட்டில் 25 சதவிகிதக் கழிவு மத்திய அரசால் தரப்படுகிறது.

2. 100 சதவிகிதத் தேய்மானம்.

3. இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், டெல்லியிலிருந்து குறைந்த வட்டியில் 10.5 கடன் கொடுத்தல்.

4. தமிழ்நாடு அரசு சிறு தொழில்களுக்கு 10 சதவிகித முதலீட்டில் சலுகை.

சூரிய வெப்ப ஆற்றல் தொழில் நுட்பத்தை மத்திய அரசு முக்கியமாகக் கருதுவதால் மற்ற சூரிய உபகரணங்களுக்கு உள்ள சலுகைகளை நீக்கினாலும், இதற்குமட்டும் தொடர்ந்து அளிக்கின்றது.

## தொழில்நுட்பக் குறிப்புகள்

சாதாரண தொழிற்சாலைகளில் வெப்பக் காற்றை உண்டாக்குவதற்கு எண்ணெய், கரி அல்லது விறகு முதலியன பயன்படும். ஆனால், சூரிய ஆற்றலையும் இதனோடு சேர்த்துப் பயன்படுத்தினால் இந்த ஆற்றல் மூலகங்களின் அளவு குறைந்தே பயன்படும். உதாரணமாக 212 சதுரமீட்டர் அளவு



கொண்ட சூரிய வெப்பச் சாதனம் தேயிலைத் தொழிற்சாலைகளில் சுமார் 1.8 இலட்சம் ரூபாய் மதிப்பிற்குச் சேமிப்பு கொடுக்கிறது. இதனால் 1/3 பங்கு எரிபொருள் மிச்சமாகிறது.

.பொருளாதாரக் கணிப்புகள்

கடந்த 3 ஆண்டுகளாக சூரிய வெப்பச் சாதனங்களைப் பயன்படுத்தி எடுத்த ஒரு கணிப்பின்படி இதற்காக நாம் போடும் முதல் 2 /3 ஆண்டிற்குள் திரும்பப் பெற முடியும். இந்தச் சாதனக் கருவிகள் 12 ஆண்டுகளுக்குக் குறையாமல் இயங்கும்.



வெப்பக் காற்றுச் சாதனங்களுக்கு உள்ள எதிர்காலம் தேயிலைத் தொழிற்சாலையில் இந்தத் தொழில் நுட்பம் நிறுவப்பட்டாலும் மற்ற தொழிற்களுக்கு இதன்பயன் இனிதான் ஆரம்பிக்கவேண்டும். இதற்குக் காரணம் செய்தி பரிமாற்றமின்மையும் வேறு சில குறைபாடுகளும் ஆகும். குறிப்பாக பழங்கள், காளான்கள், வத்தல்கள், கடற் பொருள்கள் முதலியன பதப்படுத்துவதற்கு இதன்மூலம் நல்ல வாய்ப்புகள் உள்ளன. சுமார் 2.5 மில்லியன் சதுரமீட்டர் அளவிற்கு இந்தச் சாதனங்களை நிறுவ வாய்ப்பு இப்போது உள்ளது. தவிரவும் ஆராய்ச்சிகள் மூலம் பிளாஸ்டிக் தகடுகள் வெப்பச் சேகரிப்பு முதலியவைகளை இதனோடு சேர்த்தால் வெப்பநிலை இல்லாத நேரங் களிலும் உலர வைத்துப் பயன்பெற முடியும். அதனால் வருங்காலத்தில் இந்தத் தொழில் நுட்பத்திற்குச் சிறந்த வாய்ப்புள்ளது. பத்திரிகைகள் இந்தத் தொழில் நுட்பத்தைப் பரப்ப பெரும் தொண்டு செயயலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

### கனிமங்கள்

★ இயற்கைச் செல்வங்களான கனிம உற்பத்தியில் நாடு முன்னேறி வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1,924 கோடி மதிப்புள்ள கனிமங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அதற்கு முந் தைய மாதமான அக்டோபரில் ரூ.1,863 கோடிக்கு கனிம உற்பத்தி இருந்தது. இதில் நிலக்கரியின் பங்கு மட்டும் ரூ.833 கோடி.

### கதரும் கைத்தறியும்

● கதருக்கும் கைத்தறிக்கும், எப் போதுமே மவுசுதான். உலகில் நூற்றுக் கும் அதிகமான நாடுகளுக்கு இந்தியா விலிருந்து கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அமெரிக்கா, ஐரோப்பா பொருளாதாரச் சமூகம், ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகள்தான் அதிக அளவில் கைத்தறித் துணிகளை இறக்குமதி செய்கின்றன. 1993-94-இல், இவ்வாண்டு ஜனவரி வரை ரூ.1,052 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

### புதுவாழ்வு

● மனிதக் கழிவினை அகற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை, துப்புரவுத் இருந்து விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தினை அரசு 1991-92-லிருந்து அமலாக்கி வருகிறது. மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளிடமிருந்து கிடைத்த தகவலின்படி நடப்பாண்டில் 15,592 துப்புரவுத் தொழிலாளர் களுக்குப் பயிற்சியும், 19,189 தொழி லாளர்களுக்கு மறுவாழ்வும் அளிக்கப் பட்டுள்ளது.





# கண்கள் பாதுகாப்பு

2 முதல் 5 வயதான குழந்தைகளிடையே காணப்படும் பொதுவான நோய் கண்நோய். இது வைட்டமின்'ஏ' பற்றாக்குறையால் ஏற்படுகிறது. தொடக்கத்திலேயே கண் டறிந்து சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், இது குழந்தையின் பார்வையைப் பறித்து விடும்.

**நீங்கள் மாலைக்கண் நோயைஎவ்வாறு கண்டறிய முடியும் (வைட்டமின் 'ஏ'பற்றாக்குறை)**

- ☐ முதலில், குழந்தைக்கு மாலைக்கண் நோய்ஏற்படலாம்.இரவில் மற்றவர்களால் பார்க்கக் கூடியவற்றை, குழந்தையால் பார்க்கமுடியாது.
- ☐ பிறகு, கண்கள் ஈரத்தன்மையை இழந்து வறண்டு போகத் தொடங்கும். கண் களின் வெண்மைப் பகுதி ஒளி இழந்து, சுருங்க ஆரம்பிக்கும்.
- ☐ கண்களில் சிறிய சாம்பல் நிறக் கட்டிகள் ஏற்படலாம்.
- ☐ நோய் தீவிரமானதும், கருவிழிப் படல மும் வறண்டு, மங்கிப் போகும். அதில் சிறு குழிகளும் ஏற்படலாம்.
- ☐ பிறகு, கருவிழிப் படலம் விரைவிலேயே மிருதுவாகி,புடைத்துக்காணப்படும். அல்லது வெடிக்கவும் கூடும். சாதாரண மாக அப்பொழுது வலி எதுவும் இருக் காது.

தொற்று, புண் அல்லது இதர சேதத்தால் பார்வையிழப்பு நேரிடலாம்.

குழந்தை வயிற்றுப்போக்கு, கக்குவான் அல்லது எலும்புருக்கி நோயால் பாதிக்கப் பட்டிருக்கும் போது, கண்களின் நிலைமை மேலும் மோசமாகிவிடும்.

**என்ன செய்ய வேண்டும்?**

- ☐ குழந்தைக்கு 2 வயது ஆகும் வரை தாய்ப் பால் ஊட்டவேண்டும்.
- ☐ முதல் 6 மாதங்களுக்குப் பிறகு, குழந்தைக்கு வைட்டமின்'ஏ' செறிந்த குழந்தை உணவு வகைகளை, அதாவது பச்சைக் கீரைகள், மஞ்சள் அல்லது சிவப்புப் பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றைக் கொடுக்கவும். பால், முட்டைகள், ஈரல் மற்றும் இறைச்சி ஆகியவற்றிலும் வைட்டமின் 'ஏ' நிறைந் துள்ளது.
- ☐ குழந்தைக்குப் பின்வருமாறு வைட்டமின் 'ஏ' ஊட்டச்சத்தை வழங்க ஆரம்பச் சுகாதார மையம், துணை மையத்திற்குக் குழந்தையை எடுத்துச் செல்லவும்.

| மருந்தளவு | வயது | |
|---|---|---|
| 1வது மருந்தளவு | 9 மாதங்கள் (தட்டம்மை தடுப்பு மருந்துடன் | 1,00,000 ஐயூ |
| 2வது மருந்தளவு | 16-18 மாதங்களுக்கு இடையில் (டிபிடி/ போலியோ பூஸ்டர் மருந்துடன்) | 2,00,000 ஐயூ |
| 3வது முதல் 5வது மருந்தளவுகள் | 3முதல் 5 வயதுக்கு இடையில் (ஒவ்வொரு ஆறுமாதக்கால இடைவெளிக்குப் பின்னரும்) | 2,00,000 ஐயூ |





**கண்களை நல்லமுறையில் காப்பதற்கான சிறந்த பழக்கங்கள்**

- ☐ குழந்தைகள் தினமும் குறைந்தது மூன்று முறை கண்க்ளைக் கழுவ வேண்டும்.
- ☐ போதிய ஒளியின் கீழ் குழந்தைகள் படிக்க வேண்டும்.
- ☐ குழந்தைகள் தொலைக்காட்சியிலிருந்து குறைந்தது மூன்று மீட்டர்கள் தள்ளி அமர்ந்தே நிகழ்ச்சிகளைப் பார்க்கவேண்டும்.

**உங்கள் கண்களை விபத்துக்களிலிருந்து காப்பீர்!**

- ☐ குழந்தைகள் அம்பு, கில்லி மற்றும் கற்களுடன் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- ☐ குழந்தைகள் பட்டாசுகளுடன் விளையாடுவதை அல்லது அவற்றை வெடிப்பதைத் தவிர்க்கவேண்டும்.
- ☐ குழந்தைகள் கூரிய பொருட்களான கத்தி, கத்தரிக்கோல், பேனா, பென்சில், போன்றவற்றைக் கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.

குழந்தைக்குப் பார்வை மங்கி இருந்தாலோ, கண் இமைகள் சிவந்து, வீங்கி இருந்தாலோ, அல்லது படிக்கும்போது குழந்தை கண்களைக் கசக்கினாலோ, அல்லது நிறங்களை அறிவதில் குழந்தை சிரமப் பட்டாலோ, உடனடியாகக் குழந்தையை மருத்துவமனை அல்லது ஆரம்பச் சுகாதார மையம் / துணை மையத்திற்கு நிபுணரின் ஆலோசனை மற்றும் சிகிச்சையைப் பெறுவதற்காகக் கொண்டு செல்ல வேண்டும்.

## எண்ணிக்கைக் கூடுமா?

### செப்டம்பர் 27 . உலகச் சுற்றுலா தினம்

'தரம்' அனைத்துத் துறைகளின் தாரக மந்திரமாகத் திகழ்கிறது. தரம் கூடினால், தேவையும் தானாகவே அதிகரிக்கும். இது சுற்றுலாத் துறைக்கும் பொருந்தும்.

சுற்றுலாப் பயணியரை ஈர்க்கும் இடங்களும், அம்சங்களும், இதர வசதிகளும் இருந்தால் மட்டும் போதாது. புன்னகை தவழும் முகத்துடன், பணிவான, சுமுகமான, விரைவான சேவையே பெரிதும் அவசியம்.

இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில், உலகச் சுற்றுலா தினமான செப்டம்பர் 27 -ந் தேதி, "தரமான பணியாளர்கள், தரமான சுற்றுலா" என்ற கருத்துக் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். தரமான பணியாளர்களை உருவாக்க முறையான கல்வியும், பயிற்சியும் தேவை என்பதும் உணரப்பட்டுள்ளது.

தென்னிந்தியா ஒரு முக்கியச் சுற்றுலா இடமாக நிலைபெற்றுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு ஆகஸ்ட் வரையில் தென்னிந்தியாவிற்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிரின் எண்ணிக்கை 27 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

தென்னிந்தியாவில் தற்போது நட்சத்திரத் தகுதி பெற்ற 1200 விடுதி அறைகள் உள்ளன. நட்சத்திரத் தகுதி உள்ள 215 விடுதிகள் உருவாகி வருகின்றன.

உலகச் சுற்றுலா தினத்தை ஒட்டி, மத்திய அரசின் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் மற்றும் சுற்றுலாத் தொழில்துறை இணைந்த நான்கு நாள் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன. கலாச்சார நிகழ்ச்சிகள், சுற்றுலா ஓட்டம், வினாடி வினாப் போட்டி ஆகியவை நடைபெறும்.

சேவையின் தரம் கூடினால், சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கையும். கூடும்!



## சுற்றுப்புறச் சூழல் காத்திடுவோம்!

ஆசியக் கண்டத்திலேயே இந்தியா மக்கள்தொகை வளர்ச்சியில் 2-வது இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் நிலம் உலகப் பரப்பளவில் 2.4 சதவிகிதமாக உள்ளது. இந்தியாவின் மக்கள்தொகை உலக மக்கள்தொகையில் 15.4 சதவிகிதமாக உள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் 2.48 சதவிகித மக்கள்தொகை உற்பத்தி பெருகி வருகிறது. இந்தியாவின் வருமானம் உலக வருமானத்தில் 1.5 சதவிகிதம். இந்தியாவில் 1 1/2 நொடிக்கு ஒரு குழந்தை பிறப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். ஆனால் சாவு எண்ணிக்கையோ 1.4 சதவிகிதமாக உள்ளது.

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. பஞ்சபூதங்களும் சுத்தமாக இருந்தால்தான் உலகத்தில் உயிர்கள் உயிர்வாழ முடியும். குறிப்பாக நமது இந்தியா 3,20,88,250 சதுர கி.மீ. நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதில் மக்கள்தொகை 95 கோடியைத் தாண்டியுள்ளது. இந்நிலையில் 0.14 எக்டேர் நிலம் ஒரு ஆளுக்கு என்று உள்ளது. நாளுக்கு நாள் மக்கள்தொகை கூடிக்கொண்டிருக்கிறது. நாளுக்குநாள் வாகனங்களும் தொழிற்சாலைகளும், பெருகிவருகின்றன. அதுவல்லாமல் பிறப்புகள் அதிகம், இறப்பு குறைவு.

நவீன மருந்து கண்டுபிடிப்பும், விஞ்ஞான முன்னேற்றமும் தான் இதற்குக் காரணம். ஆதிகாலத்தில் நவீன மருந்து, மருத்துவ நிலையங்கள் இல்லாததால் 'காலரா', 'பிளேக்', 'அம்மை' போன்ற கொடிய நோய்களால் மனித இனம் அழிந்து வந்தது. இருநாட்டாரிடையே போர் மூள்வதால் மக்கள் அழிந்து வந்தனர். மேலும் இயற்கையின் மாறுபாடுகளைக் கண்டறியும் நுட்பத்திறன், அவற்றை மக்களுக்கு அறிவிக்கும் திறமை இல்லாத காரணத்தால் புயல், வறட்சி, பஞ்சம் போன்றவைகளால் மக்கள் அழிந்து வந்தனர். ஆனால் தற்சமயம் எவ்வித நோய் வந்தாலும் தடுத்து நிறுத்த மருந்துகள் ஏராளம் உள்ளதாலும், இன்ன தேதியில் இன்ன திசையில் புயல் சூறாவளிக்காற்று வீசி சேதம் ஏற்படுத்த உள்ளது என முன்னதாகத் தெரிவித்து அதனால் பாதுகாப்பான இடங்களைச் சென்றடைவதற்கான கண்டுபிடிப்புக் கருவிகளும், அடையாளக் கருவிகளும் அறிவிக்கும் கருவிகளும், கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையிலிருப்பதாலும், மக்கள் தொகை குறைய வழியில்லை.

நாளுக்குநாள் வாகனங்கள் பெருகியும் தொழிற்சாலைகள் வளர்ந்தும் வருவதால் அவைகள் வெளியிடும் அசுத்தக் காற்று, மக்கள் வெளியிடும் அசுத்தக்காற்று ஆகாயத்தில் கலந்து சூடுதலாகி, பிராண வாயு குறைவாகி சுற்றுப்புறச் சூழல் கெடுவதால் உயிர்வாழ் இனங்கள் விரைவில் அழியவுள்ளன. இவைகளை விஞ்ஞான ரீதியில் சுத்தப்படுத்த வேண்டுமென்றால் எத்தனைக் கோடிப் பணம் செலவிடப்பட வேண்டும் என்று எளிதில் கணக்கிட முடியாது.

குறுகிய செலவில் பஞ்சபூதங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள நம்மிடம் வழியுண்டு. அதுதான் வளம் பெருக்கும் வழி. மரங்கள் நடப்படவேண்டும். நட்ட மரங்களையும் இருக்கும் மரங்களையும் வெட்டாமல் பாதுகாக்க வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சி நம்மிடம் ஏற்படவேண்டும். செடி, கொடி மரம் இவைகள் நட்டு வளம் பெருக்குவதால் நிலம், நீர், காற்று, ஆகாயம் நன்கு தூய்மை பெறுகின்றன.



மரங்களை நடுவதால்-

1. மரங்களின் இலைகளும் கிளைகளும் நமக்கு நிழலைத் தருகின்றன.

2. மரத்தின் அடியில் உள்ள வெப்பநிலை பக்கத்தில் மைதானத்தில் உள்ள வெப்பநிலையைவிடக் குறைவாக உள்ளது.

3. மரத்தின் கீழ் மண்ணின் ஈரம் காக்கப்படுகிறது.

4. மரத்தின் வேர்கள் அதிகத் தண்ணீரைத் தன்னுள்ளே சேமிக்கிறது. அதனால் நிலத்தடி நீர் பெருகுகிறது.

5. ஆலைகள், தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களால் சுற்றுப்புறத்தில் கலந்துவிடும் நச்சுப் பொருட்களை உட்கொண்டு சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மை ஆக்குகிறது.

6. விஷ வாயுவான கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிப்படுத்துகிறது.

7. ஒரு எக்டேர் நிலத்தில் உள்ள மரங்கள் சுமார் 3 டன் கரியமில வாயுவை உட்கொண்டு 2 டன் பிராண வாயுவை வெளியிடுகிறது.

8. ஒரு எக்டேர் பரப்பளவில் உள்ள காடுகள் சுமார் 20 முதல் 30 டன் துகளைத் தேக்கி வைத்துக் கொள்கிறது.

எனவே நிலத்தைத் தூய்மையடையச் செய்வதும், மரங்களே காற்றைச் சுத்தப்படுத்தி நல்ல காற்றை வழங்குவதும் மரங்களே. நீரில் இருக்கும் அசுத்தங்களை உண்டு நீரைச் சுத்தப்படுத்துவதும் தாவரங்களே எனபதை நீங்கள் உணரவேண்டும்.

ஆகாரம் இல்லாமல் சிலகாலம் வாழலாம். நீர் இல்லாமலும் சில காலம் வாழலாம். ஆனால் காற்று இல்லாமல் யாராலும் உயிர் வாழ முடியாது. பஞ்ச பூதங்களிலே மிக முக்கியமானது காற்றுத்தான். காற்றுத்தான் சுத்தமாக இருக்க வேண்டும். காற்றில் பிராணவாயு, கரியமிலவாயு, ஹைட்ரஜன் வாயு போன்றவைகள் உள்ளன. சுத்தமான பிராணவாயுவும் ஹைட்ரஜன் வாயுவும் சேர்ந்துதான் நீர் உண்டாகிறது. இந்நீர் உறைந்தால் அது திடப்பொருளாகிறது. ஆகையால் மூலப்பொருள் காற்றிலிருந்து திரவம் கிடைக்கிறது. பின் அதிலிருந்து திடப்பொருள் கிடைக்கிறது. (காற்று-திரவம்-திடப்பொருள்) ஆகையால் சுற்றுப்புறச் சூழல் தூய்மை பெற அதிக மரங்கள்- தாவரங்கள் நட்டு காற்றையும், நீரையும், நிலத்தையும் தூய்மையடையச் செய்வதால் உலகில் உயிரினம் நோய் நொடியின்றி வாழமுடியும்.

இதனை நன்குணர்ந்த அறிஞர்கள் உலகத்தில் உயிரினம் நோய் நொடியின்றி வாழ சுற்றுப்புறச் சூழ்நிலை எப்போதும் தூய்மையுடன் இருக்க வேண்டும் என்று மக்களுக்கு உணர்த்த மரம் நடுவிழா, மற்றும் வன விலங்கு வார விழா, உலக வன நாள் விழா மற்றும் உலகச் சுற்றுப்புறச்சூழல் தின விழா எனப் பல விழாக்கள் மூலம் மக்களுக்கு மரத்தின் மகிமையை நினைவூட்டி, விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி மரம் நடுவதன் அவசியம், பாதுகாப்பதன் முக்கியத்துவம் உணர்த்தி எதிர்காலச் சந்ததியினர்களுக்கு நன்மை பயக்கப் பெருவாரியான மரங்கள் நடவும் மரங்களை வெட்டாமல் பாதுகாக்கவும் எப்போதும் மக்களிடையே ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க உலகச் சுற்றுப்புறச் சூழல் தினவிழா ஆண்டுதோறும் ஜூன் மாதம் வந்து கொண்டிருக்கிறது. இதைச் சிறப்புறக் கொண்டாடுவதில் யாரும் அலட்சியம் காட்டுதல் நன்றல்ல.

-டி. பாண்டியன்
ஆராய்ச்சி அலுவலர்
'ஈகோ டெவலப்மென்ட்
அலுவலர்,
அம்பாசமுத்திரம்.

## குண்டடிபட்ட காவலருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

தென்னார்காடு வள்ளலார் மாவட்டத்தைச் சேர்ந்த காவலர்கள் கடந்த 21.12.1992 அன்று கடலூர் வட்டத்திலுள்ள, ராமாபுரம் கிராமத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, திரு.சண்முகம் என்ற காவலருக்கு தற்செயலாகக் குண்டடிப்பட்டது. குண்டடிப்பட்ட காவலர் திரு. சண்முகம், தனது மருத்துவச் செலவிற்காக நிதி உதவிக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

காவலர் திரு. சண்முகத்தின் கோரிக்கை மனுவினைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவருக்கு மருத்துவச் சிகிச்சைக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 5,000/ 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ' வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.



# கணியான் கூத்து

-டாக்டர் அ.கா. பெருமாள்
அறிஞர் அண்ணா கல்லூரி
ஆரல்வாய்மொழி

தமிழகத்தின் தென்மாவட்டங்களான சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், குமரி மாவட்டங்களில் நாட்டார் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் 'கொடை' விழாக்களில் சடங்கியலாக நிகழ்த்தப்படும் கலை வடிவமே கணியான் கூத்தாகும். 'கணியான் ஆட்டம்', 'மகுடாட்டம்' எனும் பெயர்களும் இக் கலையைக் குறிப்பனவே.

'கணியான்' என்ற சாதியைச் சார்ந்தவர்களாலேயே இக்கலை நிகழ்த்தப்படுகிறது. வில்லுப் பாட்டைப் போன்றே இதிலும் கதைப் பாடலையே நிகழ்த்துகின்றனர்.

மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் நாட்டார் தெய்வக் கோயில்களில் வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகவே கணியான் கூத்து வழக்கிலுள்ளது. சுடுகாட்டிலுள்ள சுடலைமாடச் சுவாமி வழிபாட்டில்! கணியானாட்டம் இல்லையென்றால், கொடை விழாவே நடைபெறாது.

கணியான் சாதியினர் தங்களைத் தெய்வக் க்ணியான் என்றே அழைக்கின்றனர். இச்சாதியின் தோற்றத்தைப் பற்றிய கதை இக்கலையோடு தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத்தை ஆளுவதற்காக, தட்சன் செய்த யாகத்திலிருந்து கிடைத்த அதூர்பதத்தைத் தனக்குக் கொடுக்காததால் கோபமுற்ற சிவபெருமான், தட்சனின் கூட்டத்தை அழித்தார். தட்சன் சிவனை அடிபணிந்து மீண்டும் தவம் செய்ய அனுமதி கேட்க, சிவன் சுடலை மாடனையும் பிரம்மராக்குச் சக்தியையும் உற்பத்தி செய்யின் அனுமதி தருவதாகக் கூறினார். யாகம் நடந்தது. யாகத்திலிருந்து முதலில் பிரம்மராக்கு தோன்றினாள். அவளைத் தொடர்ந்து சுடலை மாடன் தோன்றி "எனக்குப் பெரிய பூசை போட்டால்தான் வருவேன்" என்றதால், அவர்களும் ஒத்துக் கொண்டனர். உடனே மாடன்,

"மகுடச் சத்தம் கேட்டால் ஒழிய
மாடன் பூசை கொள்வானோ
நாக்கு வெட்டினைக் கண்டால்
ஒழிய
நானே பூசை கொள்வேனோ
பேய்க்கு முகத்தைக் கண்டால் ஒழிய
பெருகப் பூசை கொள்வேனோ
பெரிய கணியான் வந்தால் ஒழிய
பூசை கொள்ளுமோ மாடனும்"

என்று கணியானை உற்பத்தி செய்து தனக்குப் பூசை செய்யக் கூறினான். தட்சனும் தேவர்களும் கணியானை எவ்வாறு தோன்றச் செய்வது எனக் கேட்க, சிவன் தெய்வப் பெண்கள் ஏழுபேரும் இந்திராணி தலைமையில் தம் முன் ஆடவேண்டும் என்று கூறினார். சிவன் முன் அவர்கள் ஆடினர். இந்திராணியின் சிலம்பு தெறித்து, ஒரு மணியிலிருந்து கணியான் மகுடத்தோடு தோன்றினான். சிவன் அவனிடம் சுடலை மாடசாமி விழாக் கொள்ளுமாறு ஆடவேண்டும் என்று கூற, அவனும் அவ்வாறு செய்தான். இந்தக் கணியானின் வழிவந்தவர்களாகையால் கணியான் சாதியினர் தங்களைத் தெய்வக் கணியான் என்று அழைக்கின்றனர்.

கணியான் கூத்து நிகழ்த்துபோது பெரும்பாலும் ஆறு கலைஞர்கள் பங்கேற்பர். தலைமைப்பாடகர் ஒருவரும், உதவிப் பாடகர் ஒருவரும், மகுடக்காரர்கள் இருவரும், பெண் வேடதாரிகள் இருவரும் ஒன்று சேரக் கூத்தினை நிகழ்த்துவர்.

கணியான் கூத்தினை நடத்திச் செல்பவர் தலைமைப் பாடகரே. இவரை 'அண்ணாவி' என்று அழைப்பர். கூத்து நிகழ்த்தும்போது தலைமைப்பாடகர் நின்றுகொண்டு தான் பாடவேண்டும். தெய்வத்தின் எதிரே அரங்கின் ஓரத்தில் நின்று கொண்டு அவர் பாடுவார். தலைமைப்பாடகருக்கும் தெய்வப் படிமத்திற்கும் உள்ள இடைவெளி பெரிதாக இருக்கும். கூத்தின்போது அவர் பார்வையாளர்களாலும், கோவில் நிர்வாகிகளாலும் பெரிதும் மதிக்கப்படுவார். ஒற்றைக்காதை கரத்தால் பொத்திக்கொண்டு மறு கையை நீட்டி இசைக்குத் தகுந்தவாறு அசைத்துக் கொண்டு அவர் பாடலைப் பாடுவார். கதையை நீட்டுவதற்காக அவர் வசனங்களையும் சொல்வதுண்டு.

தலைமைப்பாடகர் பாடுவதை உதவிப்பாடகர் இழுத்துப் பாடுவார். கணியான் கூத்துப் பயிற்சி பெறுபவர்கள் இவ்வாறு உதவிப்பாடகராக இருப்பதுண்டு.

மகுடம் கணியான் கூத்தில் மிக முக்கியமான இசைக் கருவியாகும். மகுடத்தை வைத்து இக்கூத்தினை மகுடாட்டம் என்று அழைக்கின்றனர். பூவரசு, வேப்பமரம் ஆகியவற்றின் கட்டைகளைப் பயன்படுத்தி மகுடத்தின் வட்டமான சட்டகத்தினைச் செய்வர். மகுடத்தில் எருமை மாட்டுக்கன்றுக் குட்டியின் தோல் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கூத்துக்கு இரண்டுவகையான மகுடங்கள் பயன்படுத்தப்படும். ஒன்றை 'மந்தம்' என்றும், மற்றொன்றை 'உச்சம்' என்றும் அழைப்பர். மந்தமும், உச்சமும் சேர்ந்து இசைக்கும் பொழுது கூத்து உச்ச நிலையை அடையும். தலைமைப்பாடகருக்கு வலப்புறம் உச்சத்தை இசைப்பவரும், இடப்புறம் மந்தத்தை இசைப்பவரும் நிற்பர். மகுடங்களை இசைப்பவர்களும் நின்றுகொண்டேதான் இசைக்கவேண்டும்.

தலைமைப்பாடகரின் பாட்டுக்குத்

தகுந்தவாறே மகுடக்காரர்கள் தாளம் அடிப்பர். மகுடத்தின் ஒலி தவுலின் ஒலியைவிட அதிகமாக இருக்கும். மகுடத்தை அடித்துக் கொண்டே தலைமைப்பாடகர் பாடும் பாடல் வரிகளை எடுத்துப் பாடுவார்.

கணியான் கூத்து நிகழ்வில் இரண்டு பேர் பெண் வேடம் தரித்து ஆடுவர். 25 ஆண்டுகளுக்கு முன்பு வரை கணியான், ஆட்டக்காரர் களுக்குத் தேவையான சேலை, சம்பர் போன்றவைகளைப் புரத வண்ணார் (தாழ்த்தப்பட்டவர் களுக்கு மட்டுமே வெளுக்கும் வண்ணான்) மாத்தாகக் கொடுக்க வேண்டும் என்னும் நியதி இருந்தது. இப்போது ஆட்டக்காரர்கள் தங் களுக்குரிய ஆடைகளை வாங்கி வைத்துக் கொள்ளுகின்றனர். ஆட்டக்காரர்கள் தலை முடியை வட்டமாகச் சுற்றி வட்டுக்கொண்டை போட்டிருப்பர். பெண் வேடத்தில் அவர்கள் ஆடுவதால் பெரும்பாலும் நீளமாய் முடி வளர்த்துக் கொண் டிருப்பர். காலில் சப்தமாக ஒலிக்கும் சலங்கைகளைக் கட்டியிருப்பர்.

சிறு தெய்வக் கோவில்களில் கோவிலுக்கு முன் பகுதியில் கணி யான் கூத்து நடைபெறும். கோவி லின் முன் பகுதியில் இருபுறமும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பர். விழாக்காலங்களில் கோவிலின் முற் பகுதியில் ஓலைப் பந்தல் போடுவர். ஆட்டக்காரர்கள் ஆடுவதற்கு வசதியாக நீள் வட்ட அமைப்பில் ஆடுகளம் அமைந்திருக்கும். தலை மைப்பாடகர், பின்பாட்டுக் காரர்கள். மகுடக்காரர்கள் ஆகி யோர் அரை வட்ட வடிவமாகவும் பெண் வேடதாரிகள் இயங்கும் விதம் அரை வட்ட வடிவமாகவும் அமைந்திருக்கும்.

நாட்டார் வழக்காற்றியலின் ஆட்டப் பாடல்களில், ஆட்டத்திற்கு ஏற்றபடி இசைக்கருவிகளின் ஓசை தொடக்கம் முதல் முடிவு வரை அமைந்து ஆட்ட அசைவுகளை நிகழ்த்தும் வண்ணம் இடம் பெறு வது தாள நடை என்று கூறப் படுகிறது. மகுடாட்ட இசைக்கும், பெண் வேடதாரிகளின் ஆட்டத் திற்கும் பெரும்பாலும் ஒற்றுமை காணப்படுகிறது. ஆனால், சில இடங்களில் ஆட்டத்திற்கும், தாளத் திற்கும் சம்பந்தம் இல்லாமல் போவதுமுண்டு.

கணியான் கூத்துக் கலைஞர்கள் மரபு வழிக் கலைஞர்கள் ஆவர். இவர்கள் இசைபயில்வதற்குத் தனி ஆசிரியரிடம் செல்வதில்லை. சிறு வயது முதல் பெரியவர்களுடன் இணைந்து கச்சேரிக்குச் செல்லும் போது தானாகவே பழகிக் கொள் ளும் வாய்ப்பைப் பெறுவர். கதை களைத் தலைமைப்பாடகர் நிகழ்த் தும்போதே அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்வர். எனவே பாட்டுக்கட்டும் வாய்ப்பாடுகளும் (Formula) அடிக்கருத்துக்களும் (Theme) அவர்களுக்குப் பழக்கத்தில் வந்துவிடுகின்றன. சிறு வயதிலேயே தலைமைப்பாடகருடன் செல்லும் அனுபவம் தான் அவர்களின் பயிற்சி. ஆட்டக்காரர்களுக்கும், மகுடக் காரர்களுக்கும், துணைப்பாடகர் களுக்கும் தலைமைப்பாடகர் பாடும் கதைகள் எல்லாம் தெரியும்.



தலைமைப்பாடகர் பாடும் வரி களைத் துணைப்பாடகரும், மகுடம் அடிப்பவர்களும் எடுத்துப்பாடுவர். தலைமைப்பாடகரின் இசைக்கு ஏற்றமுறையில் மெதுவாக அடிக்கப் படும் மகுடம் குழுவாகப் பாடும் போது உச்ச நிலையில் அடிக்கப் படும். அப்போது பெண்வேட தாரிகள் ஆடுகளத்தில் மிக வேக மாகச் சுற்றிசுற்றி ஆடிவருவர். கதை வசன நடையில் விளக்கப்படும் போதுகூ மகுடம் மந்த ஒலியில் இசைக்கப்படும். மகுடம் அடிப்ப வர்கள் அதை முறையாகப் படிக் கின்றனர். அதற்கும் குறிப்பிட்ட குரு யாருமில்லை. தந்தையிடமோ, வேறு உறவினர்களிடமோ முறையாகப் பழகுகின்றனர்.

கணியான் கூத்து இசையும் ஆட்டமும், கலந்த கலை என்றாலும் தெருக்கூத்திலும் ஒயிலாட்டத்திலும், கழியல் ஆட்டத்திலும் அடவு களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத் துவம் கணியான் ஆட்டத்தில் இல்லை. முறையாகப் பயிற்சி பெற்று கணியான் கூத்தில் ஆட்டம் நிகழ்த்தப்படுவதில்லை. மகுடத்தின் ஓசைக்கும், பெண்வேடதாரிகளின் காலில் கட்டப்பட்ட சலங்கை ஒலிக்கும் இணைவு இருக்குமே தவிர அடவுகளுக்கும், இசைக்கும் இணைவு இருப்பதில்லை. கணியான் கூத்தில் இடையிடையே நகைச் சுவைத் துணுக்குகள் இடம்பெறு வதுண்டு. கோவிலில் சடங்குகள் நடைபெறாதபோது பார்வையாளர் களிடையே சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக நகைச்சுவையைப் பயன்படுத்துகின்றனர்.

பார்வையாளர்களில் தூங்கியவர் களைப் பெண்வேடதாரிகள் எழுப்பி விடுதல், கேலி செய்தல் போன்றவை கூத்தின்போது இடம்பெறும்.

கணியான் கூத்து, சடங்கியலானது என்பதால் கோவிலின் தலைமைத் தெய்வத்தின் கதை பாடப்படும் பொழுது பார்வையாளர்கள் பெரும் பாலும் கதையை மிக உன்னிப்பாகக் கேட்பார்கள். சாமி ஆட்டம் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வர்க்கு வரவில்லை என்றால் கணியான் பாட்டு பாடினால் சாமி வரும் என்று நம்புகின்றனர். கோவி லின் முக்கிய தெய்வத்திற்குரிய சாமியாடியும், ஆட்டக்காரர்களு டன் சேர்ந்து ஆடுவதுண்டு.

சுடலை மாடன் கோவிலில் கொடையின்போது 'கணியான் கைவெட்டு' நடைபெறும். கணியான் ஆட்டத்தின் நிகழ்த்துதல் பற்றி இக்கட்டுரை குறிப்பிட்டதால் கணியான் கல்வெட்டு இவ்விடத்தில் குறிப்பிடப்படவில்லை.

(நன்றி: 'இளைஞர் கலை விழா மலர்' - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் - திருநெல்வேலி)

## 1993-ஆம் ஆண்டு சிறுசேமிப்பு சிறந்த சொற்றொடர் போட்டியில் பங்கு பெற்று பரிசு பெற்ற தமிழ்ச் சொற்றொடர்கள் கீழே தரப்படுகின்றன.

1. வறுமையை அகற்றுவது சேமிப்பு
   பெருமையைக் கொடுப்பது சேமிப்பு

2. வரவுக்கேற்ற சிறு சேமிப்பு
   வாழ்வுக்கேற்ற பாதுகாப்பு

3. தன்மானத்தைக் காக்க
   வருமானத்தில் சேமிப்பீர்

4. சிக்கனம் உயர்வுக்கு கைகொடுக்கும்
   சேமிப்பு வாழ்வுக்கு உயிர் கொடுக்கும்

5. வாழ்வில் வரும் பல சோதனை
   சேமிப்பு கொண்டு படைப்போம் சாதனை

6. சிதறுவதால் நமக்குள்ளே தாழ்வு
   சேமிப்பதால் சிறப்பாகும் வாழ்வு

7. சிக்கனம் இல்லத்தின் சொத்தாகும்
   சேமிப்பு இன்பத்தின் வித்தாகும்.

8. சிக்கனம் காப்பவர் வாழ்வின் மேதை
   சேமிப்பொன்றே செழிப்பின் பாதை

9. கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேமி
   கொஞ்சி வாழ்த்தும் இந்த பூமி
   நாளைக்குச் சேமிக்கலாம் என்பது மடமை
   நாளும் சேர்ப்பது உன் கடமை

10. மூத்தோர் சொல்லை மறக்க வேண்டா
    முதல் தேதி சேமிப்பை நிறுத்த வேண்டா.

11. நாட்டுக்குப் பாதுகாப்பு இராணுவம்
    வீட்டுக்குப் பாதுகாப்பு சேமிப்பு

12. ஊதாரிச் செலவுகள் தாழ்வினைக் கொடுக்கும்
    ஊக்கமுள்ள சேமிப்பு வாழ்வினைக் கொடுக்கும்

13. உரம் வயலுக்கு வளம் தரும்
    சேமிப்பு வாழ்வுக்கு நலந்தரும்

14. ராகமும் தாளமும் இசைக்கு விழியாகும்
    சேமிப்பும் சிக்கனமும் வாழ்வுக்கு வழியாகும்

15. செலவினைச் சுருக்கிடுவோம்
    சேமிப்பைப் பெருக்கிடுவோம்

# நூல் நயம்

## இக்கால இலக்கியப் படைப்பாளர்கள்-சிறுகுறிப்புகள்

தொகுப்பாசிரியர்: பி.வி. கிரி

வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
பூங்காநகர்,
சென்னை 3

பக்கம்.152 விலை ரூ.55

'தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?" என்னும் தலைப்பில் பல தொகுப்பு நூல்கள் வெளிவந்துள் ளன. அந்த வரிசையில் இந்த நூல், இக்கால இலக்கியப் படைப்பாளர் களைக் குறித்த விவரங்களைச் சற்று விரிவாகவே கூறுகின்றது. ஏறக்குறைய 480 எழுத்தாளர் களைப் பற்றிய தகவல்களை, அவர்களது முழு முகவரியுடன் தரப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட வாரியாக, எழுத்தாளர் களைப் பற்றிய குறிப்புகளைக் கொடுத்திருப்பது, இந்நூலின் சிறப்பம்சமாகும்.

தமிழகம் தவிர புதுவை, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம், கல்கத்தா, புது டெல்லி ஆகிய மாநிலங்கள் மற்றும் மலேசிய எழுத்தாளர்கள் குறித்தும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் குறித்து எழுத் தாளர்களே அறிந்து கொள்ளவும், பொதுவாக எல்லோரும் அவர் களைப் பற்றித் தெரிந்து கொள் ளவும், இந்த நூல் மிகவும் பயன் படும். வெளியிட்ட கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தாரைப் பாராட்ட வேண்டும்.

-மறைமலை

## நீதி நூல்கள்

உரையாசிரியர்:
திரை
தண்டபாணி

வெளியீடு: உமா பதிப்பகம்.
58, ஐயப்ப
செட்டித் தெரு
சென்னை 600 001

விலை: ரூ 15 பக்: 216

பள்ளிக் கல்வி என்கிறபோது, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, வாக் குண்டாம், நல்வழி, நன்னெறி இவை இன்றி இல்லையென்பது நாம் அறிந்ததே.

வாழ்க்கை நெறி முறைகளைக் கூறி, மனிதன் மனிதனாக வாழ வழிகோலும் நீதி நூல்கள் இவை. இந்நூல்களை அழகுறத் தொகுத்து, இனிய எளிய உரையுடன் பகுத்துத் தந்துள்ளார் உரையாசிரியர். இல் லந்தோறும் இருக்க வேண்டிய இனிய நூல்.

–பி.வி.ஜி.

## எம்.ஜி.ஆர். நினைவுகள் (நிழற்படத் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்:
அருள்மொழி பதிப்பகம்
12 பி.1, ஆற்காடு சாலை,
சந்தோஷிமாதா
கோயில் எதிரில்,
விருகம்பாக்கம்,
சென்னை 600 092

பக்கம்: 124

படங்கள்:319 விலை ரூ 30/

ஆரவாரமான சொல்லடுக்கு இல்லை, ஆடம்பரமான வார்த் தைக்கட்டிடங்கள் இல்லை, அலங் காரமான வர்ணனைகளோ, அளவுக்கு மீறிய பிரசங்கமோ கிடையாது. இருந்தாலும் கண் ணுக்கு விருந்தளித்து கருத்துக்குச் செறிவூட்டும் வகையில் படைக்கப் பட்டிருக்கின்றது 'எம்.ஜி.ஆர். நினைவுகள்' என்னும் நிழற்படத் தொகுப்பு நூல்.

மக்கள் திலகம் என்று மதிக்கப் பட்டவர்; புரட்சிநடிகர் எனப் புகழப்பட்டவர்; புரட்சித் தலைவர் என்று போற்றப்பட்டவர்; இதய தெய்வம் என்று ஏற்றப்பட்டவர்; பாரத ரத்னா என்று பாராட்டப் பட்டவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர் நடித்த படங்களிலிருந்து நாம் பார்த்த காட்சிகள் மட்டு மல்ல; பார்க்கமுடியாத - அதாவது படம் பிடிக்கப்பட்டு திரைப் படத்திலே இடம் பெறாத காட்சிகளும் இப்புத்தகத்திலே இடம் பெற்றிருப்பதும் திரைப் படக் காட்சிகள் மட்டுமல்லாது, அவர் பங்குபெற்ற படவிழா, நிகழ்ச்சி என்று செய்திப்படங்கள் வெகுவாக இடம் பெற்றிருப்பதும் இந்நூலின் தனிச் சிறப்பாக உள்ளது.

வெறும் படங்களுடன் நிறுத்தி விடாமல், எம்.ஜி.ஆரைப் பார்த்துப் பிரமித்தவர்கள், பழகிப் புரிந்த வர்கள் .எனப் பலரது கட்டுரை களும் இடையிடையே வழங்கப் பட்டுள்ளன.

பார்க்கின்ற பக்கமெல்லாம் படங்களாய் நிறைந்திருக்கும் இந்நூல் பார்த்து ரசிக்க மட்டு மல்ல; படித்து மகிழ மட்டுமல்ல; பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய நூலும் கூட!

## சின்ன நதிகள்

ஆசிரியர்: கவிஞர் பல்லவன்

வெளியீடு: குமணன் பதிப்பகம்
தமிழ்க்குரல்
76, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்
603 109

பக்கங்கள்: 84 விலை: ரூ.15/

முதல் வரிக்கு முற்றிலும் மாறுபட்ட திருப்பத்தை மூன்றாம் வரியில் கொடுத்து முடிக்கப்படும் ஜப்பானிய ஐக்கூ வடிவில் தமிழில் எழுதப்பட்ட கவிதைகள். கவின் மிகு காட்சியைக் காட்டி படிப் போரை அர்த்தங்கள் தேட வைக்கும் தலைப்புச் செய்தி வடிவான மடக்கு வரிகள்; பல வரிகள் மிடுக்கு. படித்து மகிழலாம்.

–சாரதி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்








STERLITE INDUSTRIES (INDIA) LTD


தமிழரசு
16-11-1994


SRI RAMACHANDRA HOSPITAL
CARDIAC CARE CENTRE
AND
SPECIALITY SERVICES
INAUGURATED BY
HON'BLE CHIEF MINISTER OF TAMIL NADU
PURATCHI THALAIVI
Dr. J. JAYALALITHA
ON
3RD NOVEMBER 1994




தமிழரசு
திருவள்ளுவராண்டு: 2025
கார்த்திகைத் திங்கள்: 1
மலர்:25 இதழ்:10
16.11.1994
விலை: ரூ. 3

# இந்த இதழில்...

தூத்துக்குடியில் செம்பு உருக்காலை - மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 2

முதல் துணை மதிப்பீடுகள்: 1994-95 மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . . . . 8

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் . . . . . . . . . 13

கூட்டுறவே நாட்டுயர்வு! . . . . . . . . . 17

படமும்-செய்தியும் . . . . . . . . . . 18

'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு' - நூல் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 20

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு மாண்புமிகு முதல்வர் அஞ்சலி . . . . . . . 25

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா . . . . . . . . . 27

"ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி" விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 29

ஆர். எஸ். மனோகருக்கு 'நாடகச் செம்மல்' பட்டம் வழங்கி மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 33

தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - சிறப்பு ஏற்பாடுகளும் வளர்ச்சிப் பணிகளும் . . . . . 38



## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று (11)

* மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.

196103



# இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த தொழில்வளம் மிகுந்த மாநிலமாகும்!

## தூத்துக்குடியில் 'செம்பு உருக்காலை' – 'மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை' அடிக்கல் நாட்டும் விழா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உரை

"**து**றைமுக நகராம், தமிழகத்தின் நல்முத்து நகரமான, தூத்துக்குடி நகரில், Sterlite Industries நிறுவனத்தின், செம்பு உருக்காலை Copper Smelting ·Unit மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை Lube Oil Refinery, ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, மலர்ந்த முகங்களுடன் வீற்றிருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்ந்து வரும் துறைமுகத்தைத் தன்னகத்தே கொண்ட தூத்துக்குடி நகரில், SIPCOT தொழிற்பேட்டை வளாகத்தில், 1,300 கோடி ரூபாய் மதிப்பில், என்னால் இன்று அடிக்கல் நாட்டப்பட்ட, 2 புதிய தொழில் திட்டங்கள், தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சிப் பாதையில், மேலும் ஒரு புதிய மைல் கல், என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த 3. ஆண்டுகளுக்கு முன்னால், தமிழக மக்கள் அனைவருடைய ஏகோபித்த ஆதரவோடு, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சி பெற்ற, ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்க, அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறி








அட்டை சொல்லும் செய்தி

வீர்கள்.

ஒரு மாநிலம், விரைந்த தொழில் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், அங்கே அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டும்; சட்டம் ஒழுங்கை நன்முறையில் பராமரிக்கின்ற, ஓர் உறுதியான அரசு அமைய வேண்டும்; உயர் அழுத்த மின்சாரம், தங்கு தடையின்றிக் கிடைத்திட வேண்டும்; தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர் உறவில், அமைதி நிலவ வேண்டும்; தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க, அரசின் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, 1992-ஆம் ஆண்டில், 'புதிய தொழில் கொள்கை' ஒன்றினை அறிவித்தது. கடந்த 2 ஆண்டுகளில், இந்தப் புதிய தொழில் கொள்கையினைத் தமிழக அரசு, சீரிய முறையில் செயல்படுத்தி வந்ததால் வெளி மாநிலங்களில் இருந்து மட்டுமின்றி, வெளி நாடுகளில் இருந்தும், பெரிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, இன்று அவை தமிழ்நாட்டை நோக்கி, வந்து கொண்டிருக்கின்றன.

பெருந்தொழில்கள் வளருவதற்கு, மிகப் பெரிய அளவிலான முதலீடுகள், நிச்சயமாகத் தேவைப்படுகின்றன. அதே நேரத்தில், முதலீடு செய்ய விரும்புவோர், தங்கள் முதலீட்டிற்கு இணக்கமான, உகந்த சூழ்நிலைகள் நிலவுகின்ற இடத்தைத் தான், தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த வகையில், இன்று பல்வேறு முதலீடுகளை, நமது மாநிலம், தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கின்றது, என்பதை அறியும்போது, இங்கே குழுமியுள்ள தொழில் முனைவோர்களும், தொழில் அதிபர்களும், பொதுமக்களும், மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகின்றேன்.

பெருந்தொழில்களும், சிறு தொழில்களும் வளருவதற்கு, எங்கள் அரசு, அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும், எடுத்து வருகின்றது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலைகளை, உருவாக்கித் தருவதோடு, தொழில் முனைவோருக்குச் சலுகைகளையும், ஒரே அலுவலகம் மூலம், தொழில் முனைவோரின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், தீர்வு காணும் Single Window முறையையும், செயல்படுத்தி வருவதால் இன்று பல புதிய தொழில்கள், உருவாகி வருகின்றன. தொழில் அமைதி நிலவுகின்றது. வேலை வாய்ப்பு அதிகரித்து, பொருளாதார முன்னேற்றம் பெருகி வருகின்றது.

நமது மாநிலத்தில் நிலவும், இணக்கமான சூழ்நிலைகளின் காரணமாக, மின் உற்பத்தித் துறையில், தனியார் நிறுவனங்கள், அதிக ஈடுபாட்டைக் காட்டி வருகின்றார்கள். 3,800 Mega Watt மின் உற்பத்தி செய்வதற்குரிய, பல்வேறு திட்டங்களை முனைப்புடன் தீட்டி, செயல்படுத்தி வருகின்ற, தொலைநோக்குப் பார்வை கொண்ட அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த, இந்த அரசு ஆகும். 1,500 Mega Watt திறன் கொண்ட, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம்; 200 Mega Watt திறன் கொண்ட, பிள்ளை பெருமாநல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டம்; 100 Mega Watt திறன் கொண்ட, குலசேகரப்பட்டினம் கடல் வெப்பத்திலிருந்து, மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஆகியவை நமது மாநிலம் மின் உற்பத்தியில், ஓர் உயர்ந்த இலக்கினை அடைய வழி வகுக்கும் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சுதந்திரம் என்பது நழுவிவிடும் இயல்பு டையது. கையில் இருப்பதுபோலத் தோன்றும். பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசைகாட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும்.



தமிழ்நாட்டில், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், 28,000 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டில், 69 புதிய தொழிற்சாலைகளுக்கும், தொழில்களுக்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்று அவை, பல்வேறு நிலைகளில் வளர்ந்து கொண்டிருப்பது, தமிழகத்தின் தொழில் துறையில், ஒரு புதிய சகாப்தம் உருவாகி வருவதைத் தான் காட்டுகின்றது.

பெரிய முதலீடுகளைக் கொண்ட, புதிய தொழிற்சாலைகள், தமிழ்நாட்டில் விரைவில் அமைக்கப்பட உள்ளன. குறிப்பாக, சென்னையை அடுத்த சோளிங்கநல்லூரில் 800 ஏக்கர் நிலப் பரப்பில், SPIC மற்றும் பாலாஜி நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு அமைய உள்ள "சென்னைத் தொழில் பூங்கா", Madras Industrial Park, தமிழகத்தி[illegible] தொழில் வளர்ச்சி வரலாற்றில், ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி, உலகத் தொழில் வரைபடத்தில், தமிழகத்திற்கென்று ஓர் உறுதியான இடத்தைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்- Tamil Nadu Industrial Development Corporation - TIDCO, 2,376 கோடி ரூபாய் முதலீட்டினை, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் உள்ள, தொழில் முன்னோடிகளிடமிருந்து பெற்று, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மேலும், 1,286 கோடி ரூபாய், முதலீட்டினைக் கொண்ட, புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்க, பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்து முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தூத்துக்குடி நகரத்தில் அமைவதற்கு, நான் அடிக்கல் நாட்டிய இந்த இரண்டு திட்டங்கள், இந்த நகரத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, அடிப்படையாக அமையும் என்று, உறுதியாக நம்புகின்றேன். அனைத்து வசதிகளையும் கொண்ட, ஒரு சிறப்பான துறைமுகத்தைக் கொண்டிருந்தாலும், SPIC நிறுவனத்திற்குப் பிறகு, வேறு மிகப் பெரிய தொழிற்சாலை, இந்தப் பகுதியில் வர இயலாத காரணத்தினால் தான், இந்தத் துறைமுக நகரம், மேலும் வளர்ச்சி அடை[illegible] இருக்கிறது, என்பதை நான் உணர்ந்தேன்.

தூத்துக்குடி பகுதியின் மேம்பாட்டிற்கு, ஒரு பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வர வேண்டும் என்று தீவிரமாக நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது தான், Sterlite Industries நிறுவனத்தினர், இந்த இரண்டு தொழில் திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு, தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். வெளி மாநிலங்களில் இருந்து கிடைக்கின்ற, மிகப் பெரிய தனியார் முதலீட்டைத் தூத்துக்குடியின் வளர்ச்சிக்கு, உபயோகப் படுத்த வேண்டும் என்று கருதி, இந்தத் தொழிற்சாலைகளை இங்கே நிறுவுவதற்குத் தேவையான இடம், மின் வசதி, தண்ணீர் வசதி உட்பட, அனைத்து அடிப்படை வசதிகளையும், SIPCOT நிறுவனத்தின் மூலமாகச் செய்து கொடுக்க, நான் ஆணையிட்டேன்.

தூத்துக்குடிக்கு மேலும் ஒரு, பெரிய தொழில் நிறுவனத்தைக் கொண்டுவரவேண்டும், என்ற எனது எண்ணம், இன்று நிறைவேறி, இந்த விழாவில் இவ்விரண்டு தொழிற்சாலைகளுக்கு, வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது, எனக்கு மிகுந்த மன நிறைவை அளிக்கின்றது.

தூத்துக்குடியின் தொழில் வளர்ச்சியை, மேலும் விரிவுபடுத்துவதற்குத் தனியார் துறையில், Titanium Dioxide தொழிற்சாலை ஒன்றையும், புதிய எண்ணெய் சுத்திகரிப்பு Refinery யையும் நிறுவுவதற்குப் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை, இந்த நேரத்தில், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட புதிய தொழிற்சாலைகள், தூத்துக்குடிப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, வேலை வாய்ப்[illegible]பையும், பொருளாதார மேம்பாட்டினையும் வழங்கும் என்று, பூரணமாக நம்புகின்றேன்.

மேலும், இத்தொழிற்சாலைகளைச் சார்ந்த உப தொழில்கள், பல்லாயிரக் கணக்கானோரின் வாழ்வில், ஒரு புதிய வசந்தத்தை ஏற்படுத்தும், என்பதில் ஐயமில்லை.

உலோகத் தொழில் துறை, மின் துறை, இரசாயனத் துறை, ஆகியவற்றின் விரைந்த முன்னேற்றத்திற்கும், இந்தத் தொழிற்சாலைகள் வழி வகுக்கும், என்று நான் நம்புகிறேன்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், அசுர கதியில் வளர்ந்து வருகின்ற ஒரு சூழ்நிலையில், புதிய தொழிற்சாலைகளை, நாம் உருவாக்கியே தீர வேண்டும். அதே நேரத்தில், அந்தப் புதிய தொழிற்சாலைகளினால், சுற்றுப்புறச் சூழல் கெடாமல் இருப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், எடுத்தாக வேண்டும்.

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கும், மக்கள் நல்வாழ்விற்கும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போதே, அந்தத் தொழிற்சாலையினுடைய மாசுபட்ட கழிவுகள், நன்முறையில் சுத்திகரிப்புச் செய்வதற்கும் அதன் மாசுகளை நீக்குவதற்கும் தொழிற்சாலைகளை மேற்கொண்டால் தான் அனுமதி வழங்குகிறோம். அதேபோல தான், இந்தத் தொழிற்சாலைகளுக்கு, அனுமதி வழங்கும்போதும், இதன் கழிவுகள், சுற்றுப்புறச் சூழலுக்குக் குந்தகம் விளைவிக்காத அளவிற்குக் கழிவு சுத்திகரிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், என்று கேட்டுக் கொண்டோம்.

செம்பு உருக்காலையில் இருந்து, வெளியாகும் வாயுக்கள், காற்றை மாசுபடுத்தாத வகையில், அவற்றைப் பயனுடைய உப பொருட்களாக, மாற்றுவதற்கான ஒரு திட்டத்தையும், இந்த நிறுவனத்தினர் செயல்படுத்த ஏற்பாடு செய்துள்ளார்கள். இருப்பினும், இந்தத் தொழிற்சாலைகளை அமைத்துச் செயல்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, செயல்பட வேண்டும், என்று, Sterlite Industries நிறுவனத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு, வழி வகுக்கும் தொழிற்சாலை ஒன்றை, உருவாகாமல் தடுப்பதற்கு, எடுக்கப்படும் பிற்போக்கு நடவடிக்கைகளுக்கு, யாரும் ஆதரவு தர வேண்டாம் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

சமூகம் எப்பொழுதும் பழமையைப் பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது, தான் போகிற போக்கிலேயே போய்க் கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்குதான் சரியான போக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.

- பண்டித நேரு

இந்த நிறுவனத்தின் தலைவர், மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு Anil Agarwal அவர்கள், இந்த விழாவிற்கான அழைப்பிதழை, என்னிடம் கொடுப்பதற்கு வந்த போது, இப்பகுதி வாழ் மக்களின், நலனைக் கருத்தில் கொண்டு, தனது தொழில் நிறுவனத்தின் சார்பாக, 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு மருத்துவ மனைக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். மேலும், இந்த விவரத்தை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக, நான் அறிவிக்க வேண்டும் என்றும், என்னைக் கேட்டுக் கொண்டார்.

தொழில் நிறுவனங்கள், சமுதாயத்தின் சொத்துக்கள், சமுதாயத்தின் வளர்ச்சியிலும் மக்களின் நல்வாழ்க்கையிலும், உண்மையான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம், எல்லாத் தொழில் நிறுவனங்களுக்கும் உண்டு. அந்த வகையில், Sterlite Industries நிறுவனத்தின் தலைவர், மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு. Anil Agarwal அவர்களின், பொது நல எண்ணத்தையும், மக்கள் நல்வாழ்க்கையில் தொழில் நிறுவனங்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்கின்ற உணர்வையும், மனம் திறந்து பாராட்டுகிறேன்.

இந்த நிறுவனத்தைப் போலவே, மற்ற பெரிய தொழில் நிறுவனங்களும், மக்கள் நல்வாழ்க்கைக்குரிய சமுதாயப் பணிகளில், தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று, இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு தொழில் நிறுவனங்கள், சமுதாய நலப் பணிகளில் ஈடுபடும்போது, ஒரு புதிய விழிப்புணர்ச்சியும், ஒட்டுமொத்த மக்கள் நலனில், அனைவரும் அக்கறை காட்ட வேண்டும் என்ற உணர்வும், பெருகும் என்று உறுதியாக நம்புகிறேன். மற்ற தொழில் நிறுவனங்களும், தொழில் அதிபர்களும், எனது கோரிக்கையை ஏற்று, சமுதாயப் பணிகளை, மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

Sterlite Industries நிறுவனத்தின் சார்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில், மருத்துவமனை ஒன்றை, அமைத்துத் தர உள்ளார்கள், என்பதை அறிவிப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிறுவனம், இந்தப் பகுதி வாழ் மக்களின், நலனைக் கருத்தில் கொண்டு, மேலும் இது போன்ற, சமுதாய நலப் பணிகளை, மேற்கொள்ள வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வந்துள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தூத்துக்குடி நகரம் மேலும் பல சிறப்புக்களை, வெகு விரைவில் பெறும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ரூ.1,300 கோடி முதலீட்டில் செம்பு உருக்கு - மசகு எண்ணெய்த் தொழிற்சாலை



தூத்துக்குடி சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தார் ரூ.1,300 கோடி முதலீட்டில் அமைக்கவிருக்கும் செம்பு உருக்கு மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதற்கான விழா 31.10.94 திங்கட்கிழமை காலை 11.30 மணிக்குத் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரித் திடலில் கோலாகலமாக நடைபெற்றது.

அன்றைய தினம் தூத்துக்குடி நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. விழாப் பந்தல் ஒரு மாநாட்டுப் பந்தலை நினைவுப்படுத்தும் வகையில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. காலை 7.30 மணியிலிருந்தே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக இன்னிசை நிகழ்ச்சி அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இன்னிசை விருந்தளித்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விழா மேடைக்கு 11.30 மணிக்கு வந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் அவரை அன்புடன் வரவேற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும் விழா தொடங்கியது.

சீர்காழி சிவசிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். விழாவுக்குச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. அனில் அகர்வால் வரவேற்புரை ஆற்றினார். அவர் பேசுகையில், இங்கிலாந்து, கனடா நாடுகளின் ஒத்துழைப்புடன் ரூ.1,300 கோடி முதலீட்டில் தொடங்க இருக்கும் இத்தொழிற்சாலையில் 3,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 350 மில்லியன் டாலர் அந்நியச் செலாவணியை இந்த நிறுவனம் ஈட்டும். தூத்துக்குடியில் அமையவுள்ள இத்தொழிற்சாலையில் 30 சதவிகித இடம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ஒதுக்கப்படும் என்று கூறினார். அதைத் தொடர்ந்து திரு. அனில் அகர்வால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.

ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் திட்ட அறிக்கையைக் கவியரசர் இளந்தேவன் அவர்கள் சமர்ப்பித்தார். இந்தத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் செம்பு கெத்தோடும் ஒரு மில்லியன் டன் மசகு எண்ணெயும் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

அடுத்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. சின்னசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

அவர் உரையை அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் செம்பு உருக்கு மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேடையிலிருந்தவாறே ஒரு பொத்தானை அழுத்தியதும் சுமார் 20 அடி தூரத்தில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த செம்புத் தகடு தொழிற்சாலையின் மாதிரி மற்றும் அடிக்கல்லை, மூடி இருந்த வண்ணத்திரை விலகியது. தொழிற்சாலையின் மாதிரி, அந்த மேடையில் அழகுறச் சுழன்று அனைவரையும் கவர்ந்தது.

பிறகு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. இராமச்சந்திரன், இ.ஆ.ப., நன்றி நவில, விழா இனிதே நிறைவுற்றது.

விழாவில் அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புதிய தொழில் கொள்கை

புதுமையான நோக்கும் புரட்சித் தலைமையும் ஒருங்கு சேர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசின் புதிய தொழிற்கொள்கை தமிழகத்தைத் தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலமாக மின்னி மிளிரச் செய்கிறது. வளர்ச்சியடைந்த கட்டமைப்பு வசதிகள், தகுதியும் உற்பத்தித்திறனும் வாய்ந்த தொழிலாளர்கள், இணக்கமான தொழிற்சாலை உறவுகள் மற்றும் அமைதியான சட்ட ஒழுங்கு நிலை முதலிய மேன்மைகள் நிரம்பிய அமைதிச் சோலையாகிய தமிழகத்தில் மிகப்பெரும் நிறுவனங்களும் முதலீடு செய்ய விரும்புகின்றன. அதனால் இந்தியாவில் ஒரு சிறந்த தொழிற் பூங்காவாகத் தமிழகத்துக்குத் தன்னேரில்லாத புகழைப் பெற்றுத் தருகின்றன.

புதிய தொழிற் கொள்கையின் சீரிய மேன்மைகளும், தொழில் வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கும் அரசு உதவிகளும், ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தாமிர உருக்கு மற்றும் உயவு எண்ணெய்ப் பிரிப்பு ஆகிய இரண்டு தனிப் பெரும் திட்டங்களைத் தமிழகத்திற்குத்தந்துள்ளன.

வளமிகு எதிர்காலத்தை எதிர் நோக்கி ஸ்டெர்லைட் நிறுவனத்தின் திட்டங்களான, இறக்குமதி மாற்றுத் திட்டமாய் ஆண்டொன்றுக்கு 1,00,000 டன் திறன் கொண்ட தாமிர உருக்காலை மற்றும் ஒரு மில்லியன் டன் திறன் கொண்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தூத்துக்குடி நகரின் தோள்களுக்கு அழகிய முத்தாரமாய் அமைகின்றன.

இந்த இருபெருந் திட்டங்களும் எல்லாத் தட்ப வெட்ப நிலைக்கும் ஏற்ற எழில் வாய்ந்த துறைமுக நகரான தூத்துக்குடியில் சிப்காட் தொழில் வளாகத்தில் அமையவிருக்கின்றன. தேவையான, நிலம், மின்வசதி மற்றும் நீர் போன்ற அனைத்து அமைவு வசதிகளும் சிப்காட் மூலம் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி துறைமுகத்தின் அருகில் இருப்பதால் மூலப் பொருள் இறக்குமதி மற்றும் உற்பத்திப் பொருள் போக்குவரத்து மிக எளிதாக இருக்கும். மேலும், தூத்துக்குடி (SPIC, TAC, TTPS, ZIRCONIUM) போன்ற திட்டங்களினால் வளர்ச்சி பெற்ற தொழில் நகரமாகத் திகழ்கிறது.

ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மற்றொரு திட்டம் ரூ.300 கோடி முதலீட்டில் தொடங்கப்பெறும் உயவு-மின்மாற்றி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையாகும். இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 3,80,000 டன் உயவு எண்ணெய் மற்றும் 260,000 டன் மின் மாற்றி எண்ணெய் உற்பத்தித்திறன் கொண்டு விளங்கும். மேலும் சில உதிரிப் பொருட்களையும் இவ்வாலை தயாரிக்கும்.

ஆண்டொன்றுக்கு 1.00 இலட்சம் டன் தாமிரக் கெத்தோடுகள் (Copper Cathodes) உற்பத்தித் திறன் கொண்ட தாமிர உருக்காலை இந்தியாவிலேயே தனியார் துறையில் ரூ.1000 கோடி முதலீட்டில் முதன் முதலாக நிறுவப்படுகிறது. சுற்றுச் சூழல் மாசு நிர்ணயத்தைக் கட்டுப்படுத்தவும், கழிவுகளைப் பயன்படுத்தவும், ஸ்டெர்லைட் நிறுவனம் 3,50,000 டன் ஆண்டு உற்பத்தித் திறன் கொண்ட சல்பூரிக் அமில ஆலையையும், நாளொன்றுக்கு 350 டன் திறன் கொண்ட பாஸ்போரிக் ஆலையையும் நிறுவ உள்ளது. இதன் மூலம் உருக்காலைக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் பயன்படுத்தப்படும்.

இத்திட்டங்கள் சுமார் 3000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பைத் தரும் கற்பகத் தருவாகும். மேலும் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் இத்திட்டங்கள் உள்ளூர்த் தொழில் முதலீட்டு வளர்ச்சிக்கும் மற்றும் உதிரித் தொழிற்சாலைகள் வளர்ச்சிக்கும் வித்திட்டு, உள்ளூர் மற்றும் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமையும்.

இறக்குமதி மாற்றுத் திட்டமாக உள்ள இந்தத் தாமிர உருக்குத் திட்டம், ஆண்டொன்றுக்கு 350 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய அயல்நாட்டுப் பொருள்களைச் சேமிக்கும் திறன் கொண்டது. மேலும் ஸ்டெர்லைட் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டம், நாட்டின் எண்ணெய் இறக்குமதியைக் கணிசமான அளவு குறைத்து, அயல்நாட்டுப் பணத்தையும் சேமிக்கும்.



# ஊராட்சிகளின் பொருளாதாரத்தைச் செப்பனிட மாநில நிதி ஆணையம் அமைப்பு!

## முதல் துணை மதிப்பீடுகள் 1994-95

மாண்புமிகு நிதி அமைச்சர்

**டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

அவர்கள் ஆற்றிய உரை

(தமிழ்நாடு அரசு, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1994-95ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று ஆற்றிய உரை:)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994-95 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன்வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ.494.15 கோடி நிதியொதுக்கத்திற்கு வகைசெய்கிறது. இதில், ரூ.251.72 கோடி வருவாய்க்கணக்கிலும், எஞ்சியுள்ள தொகையான ரூபாய் 242.43 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. 1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், அவசரச் செலவுகள் குறித்த சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதி வழங்கப்படவேண்டியிருந்தது. எதிர்பாராச் செலவு நிதியில், இத்தொகைகளை மீண்டும் ஈடுசெய்வதற்காகவே, முக்கியமாக இத்துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமானதிட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தஞ்சாவூரில், நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக, புதிய சாலைகள், பாலங்கள் மற்றும் நினைவுக்கோபுரம் அமைத்தல், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்காக , எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மொத்தம் ரூ.33.84 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இதில், தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக்கழகத்திற்கான மானியம் ரூ.1.42 கோடியும் அடங்கும். இத் தொகை துணை மதிப்பீடுகளில், சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. ஊராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் நடத்துதல் தொடர்பாக, இந்த அரசு, மாநில தேர்தல் ஆணையம் ஒன்றை அமைத்துள்ளது. இதற்காக, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளின் நிதிநிலையை மறு ஆய்வு செய்து, பல்வேறு வரிகள், தீர்வைகள் போன்றவை மூலம் கிடைக்கக்கூடிய நிகரத் தொகையை ஊராட்சி முதலியவற்றுக்குப் பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்ய வேண்டி மாநில நிதி ஆணையம் ஒன்றையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணையம் செயல்படுவதற்கு உடனடியாக தொடக்கச் செலவுகளை மேற்கொள்ளவேண்டி, தற்காலிகமாகத் தேவைப்படுகின்ற ரூ.18.12 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதியில் நிரந்தர கண்காணிப்புப் பணிபுரிவதற்காகத் தேவையான வசதிகளுடன்

கரையோரப்பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைகளில் நடக்கும் வழிப்பறிக் கொள்ளைகள் போன்றவற்றைத் தடுப்பதற்கு "நெடுஞ்சாலை சுற்றுக் காவல் படைப் பிரிவு" ஒன்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக தொடக்கச் செலவைச் செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூ.8.84 கோடி "மானியக் கோரிக்கை 15 – காவல் துறை" என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்" தொடர்பாக, சென்னையிலுள்ள சிறார் நல நிலையம் – குழந்தை நல மருத்துவமனைக்கு ரூ.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக "மானியக் கோரிக்கை 18 – மருத்துவம்" என்பதன் கீழ், துணை மதிப்பீடுகளில், அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு ரூ.1 கோடியை, அரசு மானியமாக அனுமதித்துள்ளது. இதற்கென எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முதலில் அனுமதிக்கப்பட்ட ரூ. 25 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

7. 30.4.1993 ஆம் நாள் வரையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் செய்தது தொடர்பாக, காவிரி கழிமுகப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு, உற்பத்தி ஊக்கத்தொகை வழங்கிய வகையில் கூடுதலாக ரூ. 11.90 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில்



சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் சலுகை விலையிலான உரங்கள் விற்பனை செய்வது 1993–94 ஆம் ஆண்டு ராபி பருவத்தின் போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான தொடக்கச் செலவு ரூ.5.93 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. இந்த ஆண்டில், பெரிய அளவிலான வேளாண் உற்பத்தித் திட்டத்தின் கீழ், சிறு பாசனத் திட்டங்கள் சிலவற்றைச் செயல்படுத்துவதற்காக, அரசு ரூ.5.88 கோடி அனுமதித்துள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வழங்கியதன் மூலம் முதற்கண் செலவிடப்பட்டுள்ள இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. தொழில்நுட்ப மேம்பாட்டிற்காகவும், சிறுதொழில்களை நவீனமயமாக்குவதற்காகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்காகத்தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியை ஏற்படுத்த,

அரசு ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. சதர்ன் ஸ்டசுரல்ஸ் நிறுவனத்திடமிருந்து 31.3.1992 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையிலுள்ள வழிவகை முன்பணமான ரூ.17.50 கோடியை, அரசு தள்ளுபடி செய்துள்ளது. இத்தொகைகள் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

10. திருவான்மியூரில், சென்னை பத்திரிக்கையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அதன் உறுப்பினர்களுக்கு அடுக்ககங்கள் கட்டுவதற்காக அரசு உதவித்தொகையாக ரூ.51.82 இலட்சம் வழங்க அனுமதித்துள்ளது. ஊரகப் பகுதிகளில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசு, மாநில அரசின் உதவித் தொகையாக ரூ.1.50 கோடி வழங்கவும் அனுமதித்துள்ளது. இத்தொகைகள், துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

11. சேது சமுத்திரம் கால்வாய் திட்ட அறிக்கையை நாளதுவரையிலானதாக்குவதற்கான ஆய்வுப்பணியை மொத்தம் ரூ.4 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.




பத்திரிகையாளர்கள்

இதற்காக, முதற்கண் அனுமதிக்கப்பட்ட ரூ.2 இலட்சம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெறப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் நிலுவைகளைத் தீர்க்கவும், அதன் நிருவாகச் செலவுகளுக்காகவும், மானியங்களாக அரசு ரூ.1 கோடி அனுமதித்துள்ளது. இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கிய முன்பணத்தை ஈடுசெய்ய இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் துப்புரவுத் திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டில் செயற்படுத்தும் வகையில் தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்ட வழிவகை முன்பணத்தில், ஒரு பகுதியை மானியமாகவும் மற்றொரு பகுதியைக் கடனாகவும் மாற்றுவதற்கு, அவ்வாரியத்திற்குக் கூடுதல் தொகையாக ரூ.25 கோடி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை முறையே "மானியங்கள் 48 – குடிநீர் வழங்கல்" மற்றும் "61 – மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்கிற கோரிக்கைத் தலைப்புகளின் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

14. சென்னையில், புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாக ரூ.1 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இந்த

நிதியுதவிக்காக, தொடக்கத்தில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.1 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேர வேண்டிய கடன் நிலுவைகளில் ஒரு பகுதியைப் பங்குத் தொகையாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென, துணை மதிப்பீடுகளில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேரவேண்டிய வழி–வகை முன்பணங்கள், வட்டித் தொகை மற்றும் கடன் நிலுவைகள் ஆகியவற்றை, இவ்வாரியத்திற்கு அரசு செலுத்தவேண்டிய மின்கட்டண இழப்பீட்டு உதவித் தொகையான ரூ.143.86 கோடிக் கெதிராக சரிக்கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகையும் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

16. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்களும், இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994–95 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்

சென்னை,
1994 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள்.3 ஆம் நாள்,
பவ ஆண்டு.ஐப்பசித் திங்கள் 18 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2025.

## கல்விச் செல்வம்



*இன்று குழந்தைகள் தினம். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம்.*

*ஒரு சில நல்ல உள்ளங்களினால் உங்கள் வாழ்க்கையை வழிப்படுத்த முற்பட்டுள்ள நீங்கள், உங்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். உலகத்திலேயே தலை சிறந்த செல்வம் கல்விதான். ஏனென்றால் ஒருவரிடத்தில் உள்ள உடைமைகளையும், உரிமைகளையும், பணத்தையும், பொருளையும், சொத்துக்களையும் ஏனைய பிற செல்வங்களையும் சந்தர்ப்பச் சூழ்நிலையால் இழக்க நேரிடலாம். அல்லது பிறர் பறிக்க நேரிடலாம். ஆனால் எவராலும் பறிக்கமுடியாத செல்வம், உங்களால் இழக்க முடியாத செல்வம் ஒன்று உண்டென்றால், அது உங்களின் கல்விச் செல்வம்தான்.*




# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

*சட்டமன்றப் பேரவையில் நவம்பர் 3-ஆம் தேதியிலிருந்து 10-ஆம் தேதி வரை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆற்றிய உரைகளி லிருந்து தொகுக்கப்பட்டவை.*

'தால்சார்' பகுதியிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும். அந்நியச் செலாவணி ரூ.307.58 கோடியுடன், ரூ.593.9 கோடி செலவில் எண்ணூரில் துணைத் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. (4.11.94)

**- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு எஸ். கண்ணப்பன்**

தமிழ்நாட்டில் தனியார் முதலீட்டில் 4000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தித் திறன் கொண்ட எட்டு அனல் மின் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 1994-ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில், மின் உற்பத்தித் திறன் 228.02 மெகாவாட் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 13.57 இலட்சம் மின் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டன.

இத் திட்டத்தின் முதல் நிலையில், செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் உள்ள எண்ணூர் கிராமத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் திறனுள்ள மூன்று பிரிவுகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

வட சென்னை அனல் மின் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலக்கரி ஒரிசா மாநிலத்திலுள்ள

காய்கறிகளைப் பாதுகாக்க, நடப்பாண்டில் மூன்று இடத்தில் குளிர்சாதனக் கூடம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மூன்று கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம், கிருஷ்ணகிரி, திருச்சி ஆகிய இடங்களில் முதல்கட்டமாக மூன்று குளிர்சாதனக் கூடம் அமைக்கப் படுகிறது. (4.11.94)

**- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு கு.ப. கிருஷ்ணன்**

தமிழ்நாட்டில் கடந்த 91-ஆம் ஆண்டு முதல் நீதிபதி நேரடி நியமனத்தில் 30 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 758 நீதிபதிகள் உள்ளனர். இதில் 81 பேர் பெண்கள். சுதந்திரம் பெற்ற 45 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் 49 பெண் நீதிபதிகள்தான் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில்

32 பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (4.11.94)

—மாண்புமிகு சட்ட அமைச்சர்
திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர், பேரவைத்தலைவர் ஆகியோரின் சம்பளம் ரூ.3,500-லிருந்து ரூ.4,500 ஆக உயர்த்தப்படும். பேரவைத் துணைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமைக் கொறடா ஆகியோருக்குச் சம்பளம் ரூ.3,200-லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தப்படும். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் ரூ.1,250-லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்படும். (4.11.94)

மாண்புமிகு நிதியமைச்சர்
நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

அண்மையில் தமிழகத்தில் புயல் பெருமழையால் 54 பேர் உயிர் இழந்துள்ளனர். இதில் 53 பேர்களின் குடும்பத்துக்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 32 ஆயிரத்து 692 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கு ஒரு கோடியே 8 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.61.22 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று மத்திய அரசுக்கு விளக்கமாக இரண்டு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. (7.11.94)

- மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு எஸ்.டி. சோமசுந்தரம்

நமது முதல் அமைச்சர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் 30 சதவிகித மின்சார வெட்டு இருந்தது. ஆனால், அவர் நிறைவேற்றியுள்ள பல்வேறு திட்டங்களால் 30 சதவிகித மின்சார உற்பத்தி உயர்ந்து இருக்கிறது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியில் 5,500 கலோரியிலிருந்து 6 ஆயிரம் கலோரி வரை இருப்பதால் பல கோடி ரூபாய் மிச்சமாகிறது.

புரட்சித்தலைவியின் சிந்தையில் உதித்த மற்றொரு திட்டத்தின் விளைவாகப் புவனேசுவரம் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் அமைக்க இடம் கேட்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளித்தால் கூட்டு முயற்சியில் நாமே நிலக்கரியைத் தோண்டி எடுத்துச் சுத்தப்படுத்திக் கொண்டு வரலாம். (7.11.94)

—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு எஸ். கண்ணப்பன்

இட ஒதுக்கீடு பிரச்சினையில் 69 சதவிகிதத்தைத் தமிழக அரசு விட்டுக் கொடுக்கவில்லை. (7.11.94)

- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு எஸ். முத்துசாமி

தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களிடம் சிக்கனப் பண்பையும், சேமிப்புப் பழக்கத்தையும் ஊக்குவிக்கும் நோக்குடன் 'சஞ்சாயிகா' சேமிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 1993-94-ஆம் ஆண்டில் ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாய் சேமிப்பு மூலம் திரட்டப்பட்டது. (7.11.94)

- மாண்புமிகு நிதியமைச்சர்
நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

எய்ட்ஸ் நோய் குறித்து இரத்த வங்கிகளில் சோதனை செய்யப்படுகிறது. இந்தச் சோதனை முறை பற்றி மாவட்ட வாரியாக டாக்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எய்ட்ஸ் கொடுமையான நோய். இதற்கு பிரச்சாரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் நோயை ஒழிக்க முடியும். (7.11.94)

- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு எஸ். முத்துசாமி

மதுரை, கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர் போன்ற நகரங்களில் மின் விநியோகப் பொறுப்பை மின் வாரியமே நேரடியாக ஏற்றுக் கொள்ள இருக்கிறது. சென்னை நகர மின் விநியோகத்தைச் சீர்படுத்த மயிலாப்பூரில் 52 கோடி ரூபாய் செலவில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. மதுரை, கோவை, திருச்சி நகர மின் விநியோகத்தைச் சீரமைக்க 80 கோடி ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. (7.11.94)

- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு எஸ். கண்ணப்பன்



தமிழ்நாட்டில், 15 ஆண்டுகளுக்குக் கருங்காலி மரங்களை வெட்டத் தடை விதிக்கப் படுகிறது. அவற்றை வைத்திருத்தல், ஏற்றிச் செல்லுதல், மற்றும் விற்பனை செய்தல் ஆகிய செயல்களைப் பதினைந்து ஆண்டுக்கால அளவிற்குத் தடை செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (8.11.94)

- மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு கு. லாரன்ஸ்

ரூபாய் 60 கோடி செலவில் வீராணம் ஏரியைச் சீரமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இத்திட்டத்தால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாது. (8.11.94)

- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு எஸ். கண்ணப்பன்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சார்பில் புதிதாக 200 சொகுசுப் பேருந்துகள் விடப்படும். மேலும் சாலையோர உணவு விடுதிகள் உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8.11.94)

- மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு கே.ஏ. செங்கோட்டையன்

தமிழக அரசு அனைத்து ஊராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1995-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை நீடிக்கவும், அதற்கிணங்க 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தைத் திருத்தி அமைப்பதெனவும் முடிவு செய்துள்ளது. (8.11.94)

- மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு டி.எம். செல்வகணபதி

1995-96-ஆம் ஆண்டில் வேளாண் பாடத் திட்டங்கள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படும். (8.11.94)

- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு கு.ப. கிருஷ்ணன்

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் உரிமையாளர்கள் அக்குடியிருப்புகளைப் பயனுள்ள முறையில் அடமானம் வைக்கவும், உரிமை மாற்றம் செய்யவும் வகை செய்யும் புதிய சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகப்படுத்த



★ இலக்கியம் என்பது நாகரீகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.

அரசு முடிவு செய்துள்ளது. (8.11.94)

- மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு எஸ். ரகுபதி

நிலமனைப் பட்டா உள்ள நரிக்குறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக இந்த ஆண்டு ரூ.3.5 கோடி செலவில் 1,533 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். (8.11.94)

- மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்
திரு டி. ஜெயக்குமார்

தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் பிற மொழிகளில் இருந்து மாற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் படங்களுக்குத் தற்போது உள்ள வரி விதிப்பில் 10 புள்ளிகள் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இந்த முறை கடந்த 1.9.94 முதல் அமலுக்கு வந்துள்ளது. தமிழ்த் திரைப்பட அதிபர்களை ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (9.11.94)

- மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு வி. சத்தியமூர்த்தி

தஞ்சாவூரில் உலகத் தமிழ் மாநாட்டை, பிரம்மாண்டமாகப் பெரிய அளவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பொது அரங்கத்தில் கலை, கண்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறும். இதில் 25 இலட்சம் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. தஞ்சை நகரில் நூலகம், மாநாட்டுக் கூடம், நினைவுக் கோபுரம், ராஜராஜசோழன் சிலை, திருவள்ளுவர் சிலை, ஏழு தோரணவாயில்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. மாநாட்டுக்கு 54 கோடியே

56 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 33 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (9.11.94)

**- மாண்புமிகு நிதியமைச்சர்**
**நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ், தகுதியுள்ளவர்கள் சம்பந்தப்பட்ட அரசு அலுவலருக்கு உரிய கால அவகாசத்துடன் மனுச் செய்தால் திருமண நாளன்றே உதவித் தொகையைப் பரிசாக வழங்க அரசு ஆவன செய்யும். 1994-95-ஆம் ஆண்டிற்கு 1,050 பெண்களுக்கு 21 இலட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்க சமூகநலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்**
**புலவர் திருமதி இந்திரகுமாரி**

திருச்சி மாவட்டத்தில், மூளைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும், தனியாக நிதி ஒதுக்கி உரிய பணி மேற்கொள்ளவும் மாண்புமிகு முதல்வர் உத்தரவிட்டார். சென்னை மாநகராட்சியில் இருந்து பெரிய அளவில் மருந்து தெளிப்பதற்காக இயந்திரம் எடுத்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக இந்நோயினால் ஏற்படும் இறப்பு குறைந்துள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு எஸ். முத்துசாமி**

திருச்சியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள விராலிமலையில் சுப்பிரமணியசாமி கோயில் சுற்றியுள்ள இடங்களில் மயில்கள் அதிக அளவில் உள்ளன. இம் மயில்களைப் பாதுகாக்க 25 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு வனத்துறை அமைச்சர்**
**திரு கு. லாரன்ஸ்**

தமிழ்நாட்டில் எட்டு மத்திய சிறைச்சாலையும், 200-க்கும் மேற்பட்ட கிளைச் சிறைச்சாலைகளும் உள்ளன. இவற்றில் 3 ஆயிரத்து 276 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 793 பேருக்கு வீட்டுவசதி செய்து தரப்பட்டு உள்ளது. மற்றவர்களுக்கு வீடு இல்லை. இவர்களுக்கு வீடு கட்ட உதவ வேண்டும் என்று 10-வது நிதிக் கமிஷனைக் கேட்டு உள்ளோம். இதற்கிடையே தமிழ்நாடு காவல் துறை வீட்டுவசதிக் கழகம் சார்பில் இவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு சட்ட அமைச்சர்**
**திரு கே.ஏ. கிருஷ்ணசாமி**

உச்சநீதி மன்றத்தின் ஆணை காரணமாக 13,088 ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் தேர்வு எழுத முடியவில்லை. இவர்கள் தேர்வு எழுத அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. (10.11.94)

**- மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**திரு கே. பொன்னுசாமி**

## தமிழ்ப் பண்பாடு



"தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும். ஆனால், தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

—பேரறிஞர் அண்ணா



# கூட்டுறவே நாட்டுயர்வு!

*அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், ஒரு நாள் (12.11.94) பத்திரிகையாளர் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.*

*சென்னையில் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் சிலவற்றைப் பார்வையிடுகிறோம்.*

**டான்பெட்**

*தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்,) விவசாயிகளுக்கு நியாயமான விலையில் இரசாயன உரங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.*

*பூச்சி மருந்துகள் விற்பனை கடந்த ஆண்டைவிட அதிக முன்னேற்றம் கண்டுள்ளது. 1992-93-இல், ரூ.16 இலட்சத்திற்கு விதைகளும், ரூ.500 இலட்சத்திற்கு பூச்சி மருந்துகளும், ரூ.10 இலட்சத்திற்கு விவசாயக் கருவிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.*

*1993-94-இல் ரூ.45 இலட்சத்திற்கு விதைகளும், ரூ.589 இலட்சத்திற்கு பூச்சி மருந்துகளும், ரூ.2 இலட்சத்திற்கு விவசாயக் கருவிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

**மாம்பலம் காசிவிசுவநாதர் கூட்டுறவு கட்டடச் சங்கம்**

*இந்தச் சங்கம் 1927-இல் தொடங்கப்பட்டது. இச்சங்கம் இவ்வாண்டு ரூ.4.61 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இது, இதுவரை 2,500 வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. சென்னை, பள்ளிக்கரணையில் ஐந்து ஏக்கரில் 104 வீட்டுமனைகளை இச்சங்கம் விற்பனை செய்து வருகிறது. ஒரு கிரவுண்ட் விலை ரூ.80 ஆயிரம் ஆகும். அத்துடன் அங்கு வீடு கட்ட ரூ.2 இலட்சம் கடனுதவியையும் இது வழங்குகிறது.*

**காமதேனு சிறப்பங்காடி**

*சென்னை அகரம் பெரியார் நகரில் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியின், புதிய சுயசேவைப் பிரிவு திறப்பதற்காக 15 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு உள்ளது. ஓராண்டுக்குள் இந்த அங்காடி கட்டி முடிக்கப்படும்.*

*1993-94-இல் ரூ.5,064 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1994-95 அக்டோபர் முடிய ரூ.3,243 இலட்சம் விற்பனை ஆகியுள்ளது.*

**டி.என்.எஸ்.சி. வங்கி**

*கடந்த 88 ஆண்டுகளாக இந்த வங்கி இயங்கி வருகின்றது. இது வேளாண்மைக் கடன் வசதி செய்து, பசுமைப் புரட்சிக்குத் துணை புரிகின்றது.*

*கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவற்றின் நடைமுறை மூலதனத்திற்கு மறு நிதி உதவி செய்து அதன் வளர்ச்சிக்கு உதவி புரிகின்றது. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்துக்கும் மறு நிதி உதவி புரிந்து வருகின்றது.*

**எம்.சி.சி. வங்கி**

*சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, கடந்த 64 ஆண்டுகளாகச் சிறு தொழில்கள் தொடங்கவும், நடைபாதை வியாபாரிகள், பூ, காய்கறி வியாபாரிகள், மருத்துவர்கள், ஏழை எளியவர்கள் சுய தொழில்கள் செய்யவும் கடன் வசதி அளித்து வருகிறது. சென்னையில் மட்டும் இந்த வங்கிக்கு 52 கிளைகள் உள்ளன.*

**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்**

*நடப்பு நிதியாண்டில் (1994-95) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பத்தாயிரம் வீடுகளும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 54,500 வீடுகளும் ஆக மொத்தம் 64,500 வீடுகள் கட்டி முடிக்கவும், 30 ஆயிரம் வீடுகள் மேம்படுத்தவும் ரூ.200 கோடி அளவுக்குக் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*குறைந்த செலவில், வீடுகளைக் கட்டியதற்காக, இந்த இணையத்திற்குத் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

**கோ ஆப்டெக்ஸ்**

*தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 1993-94-இல் ரூ.225 கோடிக்குக் கைத்தறித் துணிகளையும், ரூ.50 கோடிக்கு நூல்களையும் விற்பனை செய்துள்ளது. இதில் பட்டு மட்டும் ரூ.50 கோடி என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் இது, ரூ.2 கோடிக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறது.*

***இவ்வாறு 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!***



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, இந்திய நாட்டிற்கான அமெரிக்கத் தூதர் திரு பிராங். ஜி. வைசனர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, அமெரிக்காவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். (8.11.94)

# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில், தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் நடிகர்கள் சந்தித்தார்கள் . (10.11.94)





ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமாவில் நடைபெற்ற கபடிப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியக் கபடி அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு எஸ்.ராஜரத்தினம் குழுவின் கேப்டன், திரு பி.கணேசன், திரு கே.பாஸ்கரன் ஆகிய மூன்று விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (9.11.94)

பண்டித ஜவகர்லால் நேருவின் 106-வது பிறந்த நாளையொட்டி, சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் உள்ள நேரு சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (14.11.1994)



# “நாவலர் அவர்களின் தமிழ்த்தொண்டு இன்றுபோல் என்றும் தொடர வேண்டும்!”

## “புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு” - நூலை வெளியிட்டு மாண்புமிகு முதலமைச்சர் புகழாரம்

அட்டை சொல்லும் செய்தி

*“எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று, சங்கே முழங்கு!”*

—என்று, அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழியைத் தனது ஊனிலும், உயிரிலும், உணர்விலும், உள்ளத்திலும் இரண்டறக் கலந்து, தனது வாழ்நாள் முழுவதும் நீங்கா இடம் பெற்றவர், புதுமைக் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆவார்! இருபதாம் நூற்றாண்டு நமக்களித்த, அந்தப் புரட்சிக் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றினை, பைந் தமிழில், பழகு நடையில், பாங்கோடு படைத் திட்ட, டாக்டர் நாவலர் அவர்களின் நயத்தகு நூலை வெளியிட்டு, அரங்கு நிறைய அமர்ந்திருக்கும், ஆன்றோர்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரியவராய் விளங்குகின்ற, நடமாடும் பல்கலைக் கழகமாம், டாக்டர் நாவலர் அவர்கள், பொது வாழ்க்கைப் பணியிலும், தமிழ் இலக்கியப் பணியை, மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, ஆற்றி வருகின்ற பாங்கு, பாராட்டத் தக்கதாகும். டாக்டர் நாவலரின் நாவன்மை, உலகறிந்த ஒன்று. அவரது பேனாவின் திறமையையும், எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. பல்கலைத் திறனைத் தன்னகத்தே கொண்டவர், டாக்டர் நாவலர் அவர்கள்.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, டாக்டர் நாவலர் அவர்கள், இயற்றிய, ‘திருக்குறள் தெளிவுரை’ என்ற நூலை வெளியிட்டு, நான் உரையாற்றிய நிகழ்ச்சி, இன்றும் எனது நினைவில், பசுமையாக இருக்கின்றது. அவரது மற்றொரு முக்கியமான புத்தகத்தையும், இன்று நான் வெளியிடுவதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழின் மேன்மைக்கும், தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாற்றை, இனிய தமிழில் வடித்து, தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்துள்ள டாக்டர் நாவலர் அவர்களுக்கு, உங்கள் அனைவரின் சார்பிலும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருடைய அளப்பரிய தமிழ்ப் பற்றின் விளைவாலும், ஆழ்ந்த இலக்கியச் செறிவின் எழுச்சியாலும், பாவேந்தர்பால் கொண்டிருந்த கெழுதகை நட்பினாலும், நீங்கா அன்பின் நினைவுப் பரிசாகப் படைக்கப்பட்டுள்ள, இந்த அருமையான நூலினை, நான் வெளியிட வேண்டும் என்று, டாக்டர் நாவலர் எனக்கு வேண்டுகோள் விடுத்த போது, நான் மகிழ்ச்சியோடு, அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டேன். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.




ஒன்று, நாவலருடைய நூலை வெளியிடுவதன் மூலம், தமிழன்னைக்குத் தொண்டாற்றிய மாபெரும் கவிஞருக்கு, அஞ்சலி செலுத்த அருமையான வாய்ப்புக் கிடைக்கும்.

இரண்டாவது, பாவேந்தர் பாரதிதாசனுடைய, புரட்சிகரமான சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை, மீண்டும் ஒரு முறை, இந்தச் சமுதாயத்திற்கு நினைவு படுத்துகிற நல் வாய்ப்புக் கிடைக்கும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய, வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு, டாக்டர் நாவலரைவிடத் தகுதி படைத்தவர், வேறு எவரும் இருக்கமுடியாது என்பதை, என்னால் உறுதியாகக் கூற முடியும். பாரதிதாசனின் கருத்தாழமிக்க கவிதைகளை, மேடைதோறும் முழங்கியதோடு, அவரது கவிதை வரிகளுக்குத் தனது விளக்கங்களின் மூலம், ஒரு அமரத்துவத்தைப் பெற்றுத் தந்தவர், டாக்டர் நாவலர் என்றால், அது மிகையாகாது. அவர்கள் இருவரிடையே இருந்த நட்பின் ஆழம், எத்தன்மை வாய்ந்தது என்பதையும், இந்த வாழ்க்கை வரலாறு எழுதப்பட வேண்டிய அவசியம் குறித்தும், டாக்டர் நாவலர் அவர்களே, இந்தப் புத்தகத்தின் முகவுரையில், சில இடங்களில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அழகுமிளிர் கவிதைகளில், தமிழன்னையை ஆராதித்த, புரட்சிக் கவிஞரின் வாழ்க்கையைப் பற்றி, எதிர்காலத் தலைமுறையினரும், அறிந்துகொள்ள வேண்டும், போற்றிப் பாராட்ட வேண்டும், என்ற எண்ணத்தின் அடிப்படையில், இந்த நூலைத் தான் படைத்ததாக, நாவலர் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். தனது புரட்சிக் கவிதைகள் மூலமாகச் சொல்லிலும், பொருளிலும், கவிதை அமைப்பிலும், கருத்து விளக்கத்திலும், தனது கொள்கை, குறிக்கோள், கோட்பாடு, ஆகிய ஒவ்வொன்றிலும், பாவேந்தர் புதுமையை எங்ஙனம் நிலை நாட்டினார் என்பதைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும், தவறாமல் உணரவேண்டும். என்பதற்காகவும், இந்த நூல் இயற்றப்பட்டது என்று, இன்னொரு விளக்கத்தையும், டாக்டர் நாவலர் அவர்கள், மற்றுமொரு இடத்தில் தந்துள்ளார்.

சமுதாயத்தில் நிலவுகின்ற பழமைவாதத்தை, கண்மூடித்தனமான நம்பிக்கைகளை, குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களை, சாதித்துவேஷங்களை, முழு மூச்சோடு எதிர்த்தவர் பாவேந்தர் பாரதிதாசன் என்பதை, உலகிற்கு உணர்த்திடவும் “கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்துப், புதியதோர் உலகத்தை” உருவாக்க முயன்றவர், புரட்சிக் கவிஞர் என்பதை, ‘தமிழ் கூறு நல்லுலகத்தை’ என்றென்றும் உணர வைக்க வேண்டும் என்பது, தனது அவா என்றும், டாக்டர் நாவலர் அவர்கள் தனது நோக்கத்தை விளக்கிக் கூறி இருக்கிறார்.

சில நேரங்களில், கவிதை ஆக்கியோனை விட, உரையாசிரியர்கள், அந்தக் கவிதைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்து, சிறப்புச் சேர்த்து விடுவார்கள், இன்று நாவலரும், அதே உணர்வினால் உந்தப்பட்டு, பாரதிதாசனின் சிந்தனையில் உதித்த மலர்

களுக்கு, ஒரு புதிய மணத்தையும், ஒரு புதிய நிறத்தையும் அளிக்கப் பாங்குற எடுத்துள்ள முயற்சி, உண்மையில் வியந்து பாராட்டத்தக்க அம்சம் ஆகும்.

நாவலர் அவர்கள் பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரால் புகழப்பட்டவர்; பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் போற்றப்பட்டவர்; இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் மதிக்கப்பட்டவர்.

நமது இதய தெய்வம் புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர், நாவலரைப்பற்றிக் கூறுகையில், "எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலாளர்; சொல்லாற்றல் மிக்கவர்" என்று, மனதாரப் புகழ்ந்தார்கள்.

நீடுதுயில் நீக்கப், பாடி வந்த நிலவாகத் தோன்றிய, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் எழுச்சிமிகு வாழ்க்கையை, நாற்பது அத்தியாயங்களில், இலக்கிய நயத்துடன், கவிஞரின் மனங்கவர் கவிதை மேற்கோள்களுடன், சுவைபட, நீண்டதோர் காவியமாகப் புனைந்துள்ளார், நாவலர் அவர்கள்.

"மலர்களின் அழகு மிளிர் வண்ணங்களை வெளிப்படுத்த, கதிரவனின் கதிர்கள் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்குக் கவிதைகளின் பொலிவை வெளிப்படுத்த, கவிஞரின் கற்பனைத் திறன் முக்கியம்" என்று நாவலர் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாளராக ஆரம்பித்த டாக்டர் நாவலர் அவர்கள், சில இடங்களில், ஒரு கவிஞராக மாறியுள்ளார். பாரதிதாசன் படைப்புகளால் ஏற்பட்ட தாக்கமா? அல்லது பாரதிதாசனின் அளப்பரிய நட்பினால் ஏற்பட்ட மாற்றமா? புரியவில்லை.

கனக சுப்புரத்தினம் என்ற துடிப்புள்ள இளைஞர், சுப்பிரமணிய பாரதியாரால் ஈர்க்கப்பட்டு, பின்னர் புரட்சிக் கவிஞராக மாறினார் என்பதையும் இளமைப் பருவத்திலேயே, அவர் பாரதியார் மேல் கொண்டிருந்த தீவிர பக்தியையும், அபாரப் பற்றையும், தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

பாரதியாரின் புதுமைக் கருத்துக்களும், விடுதலை வேட்கைக் கருத்துக்களும், பாரதிதாசனின் எண்ணங்களையும் உணர்வுகளையும் ஆக்கிரமித்ததையும் கனக சுப்புரத்தினம், பாரதிதாசனாக மாறியதையும் பின்னர் தந்தை பெரியாரின், சுயமரியாதைக் கருத்துக்களின்பால் ஈர்க்கப்பட்டு, சமுதாயத்தையே மாற்றியமைக்கக் கூடிய வகையில், புரட்சிக் கவிதைகளைப் பாடி, புரட்சிக் கவிஞராக மாறியதையும் தெளிவாகக் கூறியுள்ளார் நாவலர் அவர்கள்.

புதியதோர் உலகினைப் படைக்க, தமிழ்ச்





சமுதாயத்தினருக்கு அறைகூவல் விடுக்க, பாவேந்தர் கையாண்ட முறையே, தனி அழகு. "பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியே வா!" என்று, பாவேந்தரின் புரட்சிக் கனல் வெடிக்கும் கவிதையை, நாவலர் அவர்கள், முதன் முதலாக, **1945**-ஆம் ஆண்டு கோவை சூலூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், எழுச்சியும் உணர்ச்சியும் மிகுந்த குரலில், முழங்கியதைக் கண்டு பாவேந்தர் அவர்களே மகிழ்ந்து, நாவலர் அவர்களை மெச்சினார் என்ற அரிய செய்தியை, இந்த நூலில் காணும் போது நம் மனம் மகிழ்ச்சி அடைகிறது. அதுமுதற் கொண்டு, நாவலர், தான் உரையாற்றும் கூட்டங்களில் எல்லாம், பாரதிதாசனின் கவிதைகளை, தமிழ் நெஞ்சங்கள் கொள்ளை கொள்ளும் வண்ணம் பாடிப்பாடி, இன்று தமிழ் நாட்டில், பாவேந்தரின் பாடல்களை, பாமரரும் அறியும் வண்ணம், மேற்கொண்ட அரிய தமிழ்த்தொண்டு, போற்றுதற்கு உரியதாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழ் வெறும் மொழி மட்டும் அன்று, அது நமது உடம்பில் ஒன்றியிருக்கும், உயிர் போன்றது என்று, அதனை உயர்த்திப் போற்றினார்.

பாவேந்தர் இயற்றிய, 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற புகழ் பெற்ற பாடல் மூலம், தமிழ் மொழி பற்றிப் பாரதிதாசன் கொண்டிருந்த உணர்வுகளை, நாம் தெளிவாக அறிய முடிகின்றது. இந்தத் தமிழ் மொழியானது, அமுதினைப் போன்றது, என்று கூறி, நாவலர் அவர்கள், பாவேந்தரின் தமிழ் உணர்வுகளை, வெகு சிறப்பாக விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழ் தழைக்க, பாவேந்தர் கண்ட கனவு, நனவாகும் வகையில், நமது பைந்தமிழ் மொழியின் மாட்சியை, உலகெலாம் உணரும் வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினைத் தஞ்சைத் தரணியில், வருகின்ற ஜனவரித் திங்களில், உலகெலாம் உள்ள தமிழ் நெஞ்சங்கள், மகிழும் வண்ணம் நடத்திட, உரிய ஏற்பாடுகளை, எங்களது அரசு, எழுச்சியோடு செய்துவருவதை, இந்த இனிய நேரத்தில் சுட்டிக் காட்டுவதில், பெருமிதம் கொள்கிறேன்.

ஆன்றோரின் கனவுகளையும், சான்றோர்களின் உணர்வுகளையும், நனவாக்குகின்ற பணியில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எழுச்சியோடு செய்துவருவதை, இந்த இனிய நேரத்தில் சுட்டிக் காட்டுவதில், பெருமிதம் கொள்கிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின், சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை, கனவுகளை, நனவாக்கும் வகையில், எங்களது அரசு, தொய்வின்றிப் பாடுபட்டு வருகிறது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள, நான் விரும்புகிறேன்.



பேராசிரியர் பாலசுப்ரமணியம் அவர்கள், சற்று முன்பு இங்கே உரையாற்றும்போது, பாரதியார் பெயரில், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளை நிறுவப்பட்டதுபோல், பாவேந்தர் பாரதிதாசன் பெயரிலும், அவரது பெயரையும், புகழையும் பரப்ப, அறக்கட்டளைகள் நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை என்முன் வைத்தார்கள்.

**1991**-ஆம் ஆண்டு, நமது ஆட்சி உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, தமிழகத்தில் மலருவதற்கு முன்பு, இந்தக் கோரிக்கை, பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை ஒட்டி விடப்பட்ட தென்றும், அன்று அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பதையும், சுட்டிக் காட்டினார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பெயரில், ஒரு இலட்சம் ரூபாயில், அறக்கட்டளைகள் நிறுவப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு இலட்சம் ரூபாயில் தொடங்கப்படும் இந்த அறக்கட்டளைகள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழையும், இலக்கியச் சிறப்பையும், உலகெலாம் பரப்பும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதர்சன் அவர்களைப் பற்றி, டாக்டர் நாவலர் அவர்கள் படைத்துள்ள, இந்த வாழ்க்கை வரலாற்று நூல், தமிழ் மொழியிலும், தமிழ்க் கவிதைகளிலும், பொதுவாகத் தமிழ் இலக்கியத்திலும், ஆர்வம் படைத்த அனைவருக்கும், நல் விருந்து படைக்கும் கருத்துப் பெட்டகமாய், என்றென்றும் விளங்கும் என்ற எனது நம்பிக்கையை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் நாவலர் அவர்களின், தமிழ் மொழித் தொண்டு, இன்று போல் என்றும் தொடர வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து அவாவினையும், இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும், டாக்டர் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***- 11.11.1994 அன்று சென்னையில் நடைபெற்ற டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இயற்றிய 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' (வாழ்க்கை வரலாறு) நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.***

# மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலரின் "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள்

**மா**ண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதிய "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" எனும் நூல் வெளியீட்டு விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 11.11.1994 அன்று சிறப்பாக நடைபெற்றது.

"டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை"யின் தலைவர் திரு. சை.வே. சிட்டிபாபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இந்த இனிய விழாவிற்கு, மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமைத் தாங்கினார்.

"டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை"யின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலின் முதல் பிரதியை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலை வெளியிட்ட பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில், நூலாசிரியர் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகையில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்அவர்கள் தமிழுக்கும், நாட்டின் விடுதலைக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய அரிய தொண்டைப் பலபடப் பாராட்டினார். செந்தமிழைத் திறம்படக் கையாண்டு, இதுவரை வேறு எந்தக் கவிஞனின் சிந்தனையிலும் உதிக்காத புதியதொரு கண்ணோட்டத்தில், தென்றலைப் பாராட்டி புரட்சிக் கவிஞர் புனைந்த கவிதை வியப்புக்குரியது என்பதை மிகவும் போற்றிப் புகழ்ந்த டாக்டர் நாவலர் அவர்கள்,

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!...'

என்ற புரட்சிக் கவிஞரின் எழுச்சிமிகு கவிதையைக் கூறி தன் உரையை முடித்தார்.

விழாவில் கலந்துகொண்ட சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் நூலின் அருமை பெருமைகளை நயம்பட எடுத்துக்கூறினார். செந்தமிழில் நாவலருக்குள்ள புலமையை உளமார வியந்து பாராட்டினார்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்களும், வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" நூலை வெகுவாகப் பாராட்டிப் பேசினர்.

இறுதியில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவேறியது.

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு மாண்புமிகு முதல்வர் அஞ்சலி!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 30. 10. 94 அன்று காலை தனி விமானம் மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு மதுரை வந்து அடைந்தார். பின்னர், மதுரையிலிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூலம், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, பசும்பொன் கிராமத்திற்குச் சென்றார். அங்கே, ஹெலிகாப்டர் விமானதளத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சிப் பிரமுகர்களும், பொதுமக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வரவேற்றார்கள்.

அங்கிருந்து, நேராகப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று, புதுப்பிக்கப்பட்டுள்ள அவருடைய சமாதிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். புதுப்பிக்கப்பட்டுள்ள சமாதியின் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பின்னர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் வாழ்ந்து மறைந்த இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு முன்னால் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அந்த இல்லத்தில் இருப்பவர்களிடமும், சமாதியைப் பராமரித்து வருபவர்களிடமும்,

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவாலயத்தில் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.**





**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவகம் சென்று அவர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாடினார்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய தியான அறைக்குச் சென்று பார்வையிட்டு, தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியில் குழுமியிருந்த பொது மக்களைப் பார்த்துக் கையசைத்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட பின்பு, ஹெலிகாப்டர் விமானதளத்திற்கு வந்தடைந்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மற்றவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.



சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.

அன்பு என்பது ஒருபோதும் கேட்பதில்லை; எப்போதுமே கொடுக்கும்.



ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு பிற்பகல் 1.00 மணி அளவில் மதுரை வந்து அடைந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேவர் பேரவையைச் சேர்ந்தவர்கள், கட்சிப் பிரமுகர்கள், தேவர் அறக்கட்டளைக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தனி அலுவலர் திரு தியானேசுவரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. கிருட்டிணன், காவல் துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் மற்றும் உயர் காவல்துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தார்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களின் சமாதி கிட்டத்தட்ட 6 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு இருந்தது. உடைந்து போன தரை சீர் செய்யப்பட்டும், சமாதிக்குப் புதிதாகப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டும், சுதை வேலைகள் சீர் செய்யப்பட்டும், புதிதாக வண்ணம் அடிக்கப்பட்டும், பூங்காக்கள் சுற்றி அமைக்கப்பட்டும், ஒரு திருக்கோயிலைப் போலச் சீர் செய்யப்பட்டிருந்தது.

# அரசு சார்பில் எடுக்கப்பட்ட தேவர் பிறந்தநாள் விழா



'தென்னாட்டு நேதாஜி' என்ற புகழ்பெற்ற தியாகசீலர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா, அவர் பிறந்த 'பசும்பொன்' கிராமத்தில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

அவர் பிறந்த நாளான 30.10.94 அன்று காலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், அன்னாரது நினைவில்லத்திற்கு வருகை புரிந்தார். அவர் சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் தேவர் திருமகனார் வாழ்ந்த இல்லத்தையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு, மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் வந்திருந்தார்கள்.

## பசும்பொன் விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் 30.10.94 அன்று மாலை இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரான இராமநாதபுரம் அரண்மனை முன் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழாத் தலைமை ஏற்றார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், பங்கேற்ற அக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. கிருட்டிணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

## செய்தித்துறை இயக்குநர்

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன் அவர்கள், விழா எடுக்கப்படுவது பற்றி விளக்கிப் பேசும்போது தெரிவித்ததாவது:

"செயற்கரிய செய்வர் பெரியார்' என்ற வகையிலே, தமிழ்ச் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த காரியங்களைச் செய்தவர் ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள். அந்தப் பெரியாராலேயே, 'பெரியார்' என்று பாராட்டப்பட்டவர்தான் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். சிறந்த ராஜதந்திரியான ராஜாஜி, இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில், "தென்புலத்திற்கு நான் பார்த்தன் என்றால், இந்தப் பார்த்தனுக்குச் சாரதியாக இருந்து சுதந்திரப் போரை வெற்றி பெறும் விதத்தில் நடத்தியவர் தேவர்தான்" என்றார். சத்தியமூர்த்தி அவர்களும் 'காங்கிரஸ் காத்தான்' என்று மிகப் பொருத்தமான ஒரு பட்டத்தைத் தேவருக்குச் சூட்டினார். தேவர் நாவில் என் தமிழன்னையே அமர்ந்து பேசுகிறாள் என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. சொல்லியிருக்கிறார். அத்தனைப் பெருமைக்குரிய தேவர் அவர்களை இப்பகுதி மக்கள் தெய்வமாகவே மதித்து வழிபடுகிறார்கள். அத்தகையவருக்கு தமிழ்நாடு அரசே எடுக்கும் முதலாவது விழா இது."

## திரு. அ.மா. பரமசிவன் அவர்கள்

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள், கட்டுரைப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"புரட்சித்தலைவர் அவர்கள் தான் தமது ஆட்சிக் காலத்தில் தேவர் அவர்களின் பிறந்தநாளைத் தேசியத் தலைவர்களின் பிறந்த நாள் பட்டியலில் சேர்த்து, மதுரை முகவை மாவட்டத்தினராகிய நாமெல்லாம் கொண்டாடச் செய்தார். இவ்விழாவை மாநில அளவில் கொண்டாடச் செய்த பெருமை நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையே சேரும். எந்த முதலமைச்சரும் செய்திராத நற்காரியம் ஆகும் இது. சென்னையில், முக்கியமான இடத்தில் நம் தேவர் அவர்களின் சிலையைத் தம் திருக்கரத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார். அந்தச் சிலை செய்யும் பணிக்கு ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய் கொடுத்த சிறப்பும் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்."

## திரு. மு. தென்னவன் அவர்கள்

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், தமது சிறப்புரையின் போது தெரிவித்ததாவது:

"இந்த மண்ணில் பிறந்தவரும், தியாகசீலராகத் திகழ்ந்தவரும், தனி மனித ஒழுக்கத்தில் எவராலும் குறை சொல்ல முடியாத அளவிற்கு அற்புத மனிதராக- மங்காப் புகழ்பெற்ற மாணிக்கத் தலைவராகத் திகழ்ந்தவர் பசும்பொன் தேவர் திருமகன் அவர்கள்.

ஆதிதிராவிடப் பெருமக்களையும் சகோதரப் பாசத்தோடு கொண்டாடிய அவர் பிறந்த நாள் விழாவை மாநில அளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதன் முறையாக நடத்தப்பட வேண்டுமென நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், விடுத்த கட்டளையின் பெயரில், செய்தித்துறை சார்பிலே இந்த விழா இங்கே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாரெல்லாம் போற்றப்பட வேண்டுமோ, யாரெல்லாம் புகழப்பட வேண்டுமோ அவர்களையெல்லாம் தவறாமல் போற்றிவருகிற புகழ்ந்து பாராட்டுகிற அரசு நமது புரட்சித்தலைவி அவர்களின் அரசு என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

முக்குலத்தோர் 18 ஆயிரம் பேர்களே இருந்த முதுகுளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தேவர் அவர்கள் தேர்தலில் நின்றபோது பெற்ற வாக்குகள் இரண்டு இலட்சம் ஆகும்; சாதிமதப் பேதங்களைக் கடந்து பெருமை பெற்றிருந்தார் அவர்.

### திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள், நலிவுற்ற குடும்பத்தார் ஐம்பது பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:

"பசும்பொன் தேவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த முதுகுளத்தூர் தொகுதிதான், என்னுடைய சட்டமன்றத் தொகுதியான கடலாடித் தொகுதி. ஆகவே, இந்த விழா இங்கே கொண்டாடப்பட முழுமுதல் காரணமான இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பில் குறிப்பாக, முக்குலத்துப் பெருமக்களின் சார்பில் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். எது நியாயமோ, எது தர்மமோ அதைத் துணிவோடும் தாமதமின்றியும், இலாப நட்டக் கணக்குப் பார்க்காமல் செய்து முடிக்கக் கூடியவர் நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதற்கு இந்த இனிய விழாவே சான்றாகும். தேவரின் நினைவில்லத்தை அரசுடைமையாக்கி, புதுப்பித்துப் பெருமை பெற்றிருக்கிறார், நமது புரட்சித்தலைவி அவர்கள்.

காந்தியார் ஆலயப் பிரவேசம் பற்றி அறிவித்தபோது, மதுரையில் ஆதிதிராவிடர்களோடு கோயிலில் புகமுடியாத நிலை வைத்தியநாத ஐயருக்கு ஏற்பட்டது. 'நானிருக்க பயமேன்' என்று துணிவோடு அவர்களை அழைத்துக் கொண்டு கம்பீரமாகக் கோயிலுக்குள் புகுந்த வீரத் திருமகனே தேவர் அவர்கள்.

'எந்த ஒரு ஆதிதிராவிடரின் இரத்தம் மண்ணில் சிந்தினாலும், அது என் இரத்தத்திற்குச் சமம்' என்றவர் அவர்.

### திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள்

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தம் தலைமையுரையில் தெரிவித்ததாவது:

"பசும்பொன் சிங்கம், பத்தரை மாற்றுத் தங்கம் தேவர் முத்துராமலிங்கம் பிறந்த நாள் எழுச்சிமிகு நிகழ்ச்சி இது. ஒரு முப்பத்தியோராண்டுக் காலம், ஒரு தலைசிறந்த தலைவனை முறையாகப் போற்றப்படாதிருந்த ஒரு குறை, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாலே நீக்கப் பட்டிருக்கிறது. இதற்காகவே, அவர்களிருக்கும் திக்கு நோக்கி வணங்கி நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் இந்தப் பசும்பொன்னுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, உலகளாவிய அளவில் போற்றப்பட வேண்டியவர் என்பதைச் செய்துகாட்டியிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களாவார்."

### திரு. எஸ்.டி.எஸ். அவர்கள்

தேவர் திருமகனின் படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

"தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சாதிமத பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உணர்வுடையவர்கள். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் அப்படிப்பட்ட ஆசாபாசங்களையெல்லாம் கடந்து இந்த நாடு விடுதலையடைய வேண்டும் என்பதற்காகத்தான் பாடுபட்டார். அதனால், தமிழ் நாட்டுச் சிறைச்சாலைகளிலெல்லாம் அடைக்கப்பட்டார். பாலகங்காதர திலகர், சுபாஸ் சந்திர போஸ், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மூன்று பேரும் தான் அந்நாளில் விடுதலைப் போரில் குறிப்பிட்டுப் பேசப்பட்டவர்களாவர். மிதவாதத்தால் நாடு விடுதலை அடையாது; தீவிரவாதம் வேண்டும் என்று இந்த மூன்று பேரும் தான் இளைஞர்களைத் தட்டி எழுப்பி அஞ்சாமல் முன் நின்றவர்களாவர். அப்படிப்பட்ட நல்லவருக்கு, வல்லவருக்கு, தியாக சீலருக்குப் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக முதலமைச்சராக வராமலிருந்திருந்தால், சென்னையில் திருவுருவச் சிலையே வைக்கப் பட்டிருக்காது என்பது நிச்சயம். எவ்விதத் தியாகத்திற்கும் தயாரானவர் என்பதாலேதான் தேவர் அவர்களின் தியாகத்தை மதித்துப் போற்றி வருகிறார் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்".

-விழா முடிவில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர் திரு. துரை. ராஜ்குமார் நன்றி கூறினார்.






# 'தேசிய உடல்நலக் கொள்கையைச் செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழகம் வழிகாட்டியாக இருக்கும்'

## 'ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி' விழாவில் முதலமைச்சர் பெருமிதம்

**ஸ்ரீ** இராமச்சந்திரா மருத்துவமனையில் புதிய இருதயச் சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவப் பிரிவுகளின் என்றும் நினைவில் நிற்கக் கூடிய துவக்க விழாவில் கலந்து கொள்வதிலும், புகழ் பெற்ற மருத்துவர்கள் அர்ப்பணிப் புள்ளம் கொண்ட பேராசிரியர்கள், உற்சாகம் மிக்க மாணவர்கள், பணியாளர்கள் நடுவே உரையாற்றுவதிலும்பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கடந்த பல ஆண்டுகளாகப் போற்றத்தகுந்த பணிக்குப் பிறகு, தமிழ்நாட்டு மருத்துவக் கல்வியிலும், மருத்துவப் பணியிலும், தனக்கென ஒரு சிறப்பான இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சென்னை நகருக்கு வெளியே அமைந்துள்ள முக்கியமான இந்த மருத்துவ நிறுவனம், தன்னுடைய கடுமையான உழைப்பினாலும், நமது மாநில மக்களின் நல்வாழ்வில் தான் ஏற்படுத்தியுள்ள அர்த்தமுள்ள தாக்கத்தினாலும், மேன்மையும் புகழும் அடைந்துள்ளது.

நாட்டின் கட்டுமானப்பணியில் தனியார் முயற்சி இருக்கவேண்டும் என உறுதிபட நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். மறுகூட்டமைப்பு நிலையில் உள்ள நம் நாட்டைப் போன்ற நாடுகளுக்கு, எல்லைப் பகுதிகளிலிருந்தும் அதிக அளவில் திறமைகள் தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் ஒரு வலிமையான நாடாக வெளிப்பட முடியும். வறுமை இல்லாத' இந்தியாவாக, எழுத்தறிவில்லாத, நோய் மற்றும் அறியாமை இல்லாத இந்தியாவாக முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில், உடல்நலக் கேடுகளால் பாதிக்கப்பட்டு வாடும் மக்களை நலப்படுத்த, ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, சமுதாயத்திற்கு நீண்ட பங்கை அளிக்கும், ஸ்ரீ இராமச்சந்திரா கல்வி மற்றும் நல அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் திரு. இராமசாமி உடையார் அவர்களின் சீரிய முயற்சிகளை, நாம் முழுமனதோடு பாராட்ட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், புதிய எண்ணங்களுடனும், மனிதாபிமான அணுகுமுறையுடனும், இந்தப் புகழ் வாய்ந்த மருத்துவ நிறுவனத்தை ஏற்படுத்திய கொடையுள்ளம் கொண்ட தொழிலதிபர் திரு. இராமசாமி உடையார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, இந்தக் குறிப்பிடத்தகுந்த நிறுவனத்தில் இருக்கின்ற வசதிகளுடன், புதிய இருதயச் சிகிச்சைப்



## அட்டை சொல்லும் செய்தி

பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் சேர்க்கப்படுகின்றன. நகரத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ள நிறுவனங்களின், அதுவும் குறிப்பாக மருத்துவ நிறுவனங்களின் வெற்றிகளைக் குறித்து வெளிப்படுத்தப்பட்ட சந்தேக நாட்களெல்லாம் முடிவடைந்து விட்டன. ஆனால் இன்று, சுற்றுப்புறச் சூழல்களை முதன்மையாகக் கொண்டு, வியாபார நிறுவனங்கள் புறநகர்ப் பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் வளர்ந்து—விடுதலை, பாராட்டுதலுடன் வரவேற்க வேண்டும்.

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனை உடல் நலத்தின் முக்கியத்துவத்தைச் சரியான தொலைநோக்கு உணர்வில் புரிந்துகொண்டு சமுதாயத்தின் கீழ்த்தட்டிலுள்ள மக்கள் எதிர்கொள்கின்ற - பிரச்சினைகளுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை, சிறப்பாக, இருதயச் சீர்கேடுகளைப் பொறுத்தவரையில் ஈடுபடுத்திக் கொள்வதை உணர்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

தற்காலத்தில், இந்தியாவில், பல குழந்தைகள் பிறக்கும் போதே இதயக் கோளாறுகளுடன் பிறக்கின்றன. அவைகள் சரியாகக் கண்டு பிடிக்கப்பட்டு, மருத்துவம் அளிக்கப்பட்டாலொழிய, அந்தக் குழந்தைகள் தங்களுடைய இளமைப் பருவத்தைக் காண உயிரோடு இருக்க மாட்டார்கள். இதயக் கோளாறுடன், குழந்தைப் பருவத்தில் வாத ஜுரம் ஏற்பட்டு, இதயக் குழாய் அடைப்பினால் பாதிக்கப்பட்டு, இளைஞர் பருவத்தில் இதயக் கோளாறுகள் ஏற்படுகிறது. இந்த இரண்டு காரணங்களல்லாமல், சமீப காலமாய், மாரடைப்பு ஏற்படுவது குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து அதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும், ஆயிரக்கணக்கான மக்கள் செயலிழந்தும், இறந்தும் விடுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுடன், தீர்க்கக்கூடிய தீர்வுகளை எண்ணி, இந்தப் புதிய இதயச் சிகிச்சைப் பிரிவு இந்த மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. குழந்தைகளும், பெரிய வயதினர்களும் பாதிக்கப்படுகின்ற நோய்களைத் தீர்க்கும் முயற்சிகள் எடுக்கப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த மையம், சமுதாயத்தின் கீழ்த்தட்டிலுள்ள மக்களின்— குறிப்பாக வறியவர்களுடைய தேவைகளைத் தீர்ப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்பது எனது உண்மையான விருப்பமாகும்.

அரசுத் தரப்பில், கடந்த மூன்று ஆண்டுகளாகக் குறிப்பிடத்தகுந்த பிரச்சினையான இதய நோய்ப் பிரச்சினையில் உண்மையான பெருமைப்படத்தக்க வகையில் அக்கறை காட்டப்பட்டு வருகிறது. இப்படி, பரவலாகப் பரவியிருக்கின்ற, பிறப்போடு ஏற்படுகின்ற இதயக் கோளாறுகள் கொண்ட குழந்தைகளுக்கு உடனடியாகச் சிகிச்சை தர "திறந்த இதய அறுவை இலவசச் சிகிச்சை" என்ற திட்டம் கொண்டு வந்தேன். இத்திட்டம் '15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்' என்று என்னால் 1993 நவம்பரில் தீட்டப்பட்ட திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

அனைத்து இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் இதயக் கோளாறுடைய குழந்தைகளுக்கு அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் மருத்துவச் சிகிச்சை, அதுவும் திறந்த இதய அறுவை இலவச் சிகிச்சை அளிக்கும் திட்டம் செயல்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் பெருமை கொள்கிறேன்.

அதேபோல, பெரியவர்களுக்கு ஏற்படும் இதயக் கோளாறுகளும், குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ முக்கியத்துவம் அளவிலேயே அளித்துக் கவனிக்கப்படுகின்றன. நம் அரசு பொறுப்பேற்றதிலிருந்து, உயிர்வாழத் தேவைப்படும் அறுவைச் சிகிச்சை— குறிப்பாக, திறந்த இதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை ஆகியவற்றைச் செய்து கொள்ளும் ஏழைகளுக்குப் பொருளாதார உதவி அளிப்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகிறது. திறந்த இதய அறுவைச் சிகிச்சைக்கு



ரூ.15,000 உதவிப் பணமும், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு ரூ.20,000 உதவிப் பணமும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயர்த்தி அளிக்கப்படுவதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுள்ளதாகும் எனக் கருதுகிறேன். இதுவரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 1,650 பேர் பலனடைய ரூ.1.75 கோடி அளிக்கப்பட்டுள்ளது என்பது மகிழத்தக்கது. பண உதவி அளிப்பதும், உயர்த்துவதும் தவிர, இந்தத் திட்டம், பாதிக்கப்பட்டோர் உடனடி சிகிச்சை பெறும் வகையில் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உடனடி அறுவைச் சிகிச்சைக்காகப் பல மருத்துவமனைகள் பட்டியலிடப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனையும் அடங்கும்.

தமிழகத்தில் முக்கிய நகரங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கும் இதயச் சிகிச்சைப் பிரிவில் குறிப்பாக, சென்னை நகரிலுள்ள சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் மிக்ச் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது எனக் குறிப்பிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நமது அரசு மருத்துவமனைகள் தங்களது வசதிகளையும், திறமைகளையும் சர்வதேசத் தரத்திற்கு ஏற்றாற்போல் கொண்டு பலன்களும் உயர்ந்த தரத்தில், வெளிநாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சமமாக ஒப்பு நோக்குடன் இருப்பதைக் கூறுவதில் பெருமை கொள்கிறேன். அரசு மருத்துவமனைகளால் எதிர் நோக்கப்படுகின்ற வசதிக் குறைவுகளையும் பல பிரச்சினைகளையும் பரிசீலித்தால் கூட, அவைகளின் சாதனைகள் போற்றத்தகுந்தவைதான்.

இதயச் சிகிச்சைப் பிரிவுடன், சிறப்புச் சிகிச்சைப் பிரிவையும் இந்த மருத்துவமனையில் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தச் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு பல சிறப்புச் சிகிச்சைகளைப் பலவிதங்களில் முறைப்படுத்தி, நோயாளிகளின் பலதரப்பட்ட பிரச்சினைகளை ஒரே இடத்தில் கவனிப்பதாக இருக்கும் என என்னிடம் கூறப்பட்டது.

சிறப்புச் சிகிச்சை என்பது தனித்தனிப் பிரிவாக இருக்கும் காலத்தில், ஒருவருக்கு மற்ற சிறப்பு மருத்துவர்களின் மருத்துவம் கிடைக்காமல் போகும் ஆபத்து உண்டு. அந்த உணர்வில் பலவிதப் பிரிவுகளாக முறைப்படுத்துவது என்பது தொழில் வல்லுநர்கள், குறிப்பாக மருத்துவர்கள் ஒருசேரத் திறமைகளைப் பயன்படுத்த ஏதுவாகும். நரம்புச் சிகிச்சை மையம், காயங்கள் சிகிச்சை மையம், சிறுநீரகச் சிகிச்சை மையம், உறுப்புமாற்றுப் பிரிவுகள் எனச் சிறப்புப் பிரிவுகள் இன்று தொடங்கப்பட்டுள்ளன. இதனுடன் துணைப் பணிமையங்களாகப் பல பிரிவுகள் இன்று சேர்க்கப்படுகின்றன என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மருத்துவப் பரிசோதனை நிலையம் புதிய அறுவைச் சிகிச்சை அரங்கங்கள், அறை வசதிகள்- இப்படிப் பல இன்று சேர்க்கப்படுகின்றன. இந்த மதிப்புள்ள சேர்க்கைகள் மருத்துவநலக் கவனிப்பில் உயர்ந்த தரத்தை உருவாக்கும் என நம்புகிறேன். இந்த அறக்கட்டளை 'தொட்டில் குழந்தைகள்' திட்டத்தின் கீழ், அரசினால் தத்தெடுக்கப்படும் தொட்டில் குழந்தைகளுக்கு, இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கும் என அறிவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையிலேயே, இது போன்ற பெரிய செயல்கள் மற்றவர்களாலும் பின்பற்றப்பட வேண்டியவை.

இப்படிப்பட்ட பெருந்தன்மை மிக்க சேவைக்காக, திரு. இராமசாமி உடையாருக்குத் தமிழக அரசின் சார்பாக என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள வசதிகளைப் பெருக்குவதில் தமிழக அரசு எடுத்துவரும் சில முக்கிய நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் 11 கோடி ரூபாய் செலவில் கட்டட வசதிகள், பழுதுபார்த்துச் சீரமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று உள்ளன. இதய சிகிச்சைத் துறைக்கு ரூ.72 இலட்சம் செலவில் 9 நவீன வேன்கள் வாங்கப்படவுள்ளன. ரூ.30 இலட்சம் செலவில் மருத்துவமனைகளில் கணிப்பொறி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவ மனைகளிலும் தாராளமாக, தட்டுப்பாடின்றி மருந்து கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை முறைப்படுத்தும் பணியைத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் செய்யும்.



தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதில் 14 வயதுக்கு உட்பட்ட 48.5 இலட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நமது அரசு எடுத்துவரும் புதிய நடவடிக்கைகள் மிகச் சிறப்பான

பலனைத் தருகின்றன எனத் தெரியும்போது மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் இப்போது குறைந்து உள்ளது. 1000 பேருக்கு 19.2 பேர் என்ற அளவில் பிறப்பு விகிதம் உள்ளது. தேசிய அளவில் அது 1000 பேருக்கு 28.5. இதே வழியில் தமிழ்நாடு 2000 ஆண்டில், 1000 பேருக்கு 15 பேர் என்று தேசிய குடும்ப நலக் குறிக்கோளை அடைந்துவிடும் என நினைக்கும் போது பெருமிதம் கொள்கிறேன். தேசிய உடல்நலக் கொள்கையைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயல் படுத்தி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது எனது உண்மையான நம்பிக்கை யாகும்.



எனது தலைவரும், எனது ஆசானு மான புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பெயரில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை விழாவின் போது, அவருக்கு இந்தச் சந்தர்ப் பத்தில் எனது வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களுக்காகப் புரட்சித்தலைவர் பாடுபட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள இந்த மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்கு மேலும் சேவை செய்திட வேண்டும்.

இந்த நிறுவனத்துடன் தொடர்பு டையவர்கள் ஒவ்வொருவரும் பல் கலைக்கழக மானியக்குழு, சமீபத் தில் இக்கல்லூரியைக் கருதப்பட்ட பல்கலைக் கழகமாக அறிவித்த வுடன் மகிழ்ச்சியும், பெருமிதமும், உண்மையான நியாய உணர்வும் அடைந்திருப்பார்கள். இந்நிறுவனம், மென்மேலும் வளர்ந்து வலிமை பெற்று உலகிலேயே மிகச் சிறந்த மருத்துவ நிறுவனமாக விளங்கும் என நம்புகிறேன். திரு. இராமசாமி உடையார், மருத்துவமனையின் தலைவர், பல்வேறு துறைகளின் தலைவர்கள், பணியாளர்கள், என்னுடைய அன்பான மாண வர்கள் ஆகியோர்க்கு இந்த நினை வில் நிற்கும் நாளில் எனது நெஞ் சார்ந்த பாராட்டுதல்களைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஸ்ரீ இராமச் சந்திரா மருத்துவக் கல்லூரியில் இந்த இதயச் சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவச் சிகிச் சைப் பிரிவு ஆகியவற்றைத் திறந்து வைத்து, நல்ல ஒளிமயமான எதிர் காலம் பெற வாழ்த்துகிறேன்.

**—மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 3.11.1994ல்-'போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் இதயச் சிகிச்சைப் பிரிவுகளைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.**



## மருத்துவ நலத் திட்டம்

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 'சத்துணவுத் திட்டம்' இந்திய நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டது. அனைத்து நாட்டு மக்களும் இத்திட்டத்தின் பயனைக் கண்டு, நாம் பெருமைப்படும் வகையில் வியந்து போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் தொலை நோக்கினைப் பாராட்டுகின்றனர்.

அதேபோல், மருத்துவ நலத் திட்டமும் தமிழ்நாட்டில் குறிப்பாகக் கிராமங்களில் வாழும் மக்களுக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் நல்வாழ்வினை அளித்து, எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உரிய, திடகாத்திரமான உடல் வலிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழ உதவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

**-புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1-லிருந்து**






அட்டை சொல்லும் செய்தி

# ஆர்.எஸ். மனோகருக்கு 'நாடகச் செம்மல்' பட்டம்

## "திருநாவுக்கரசர்" மேடை நாடகம் 50-வது காட்சி: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பாராட்டு விழாப் பேருரை

"தமிழ் நாடக உலகிற்கு அரும் பணியாற்றி, தமிழ் நாடகத்தின் தலைமகனாய்த் திகழும், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், கலைச் சேவையைப் போற்றும் முகத்தான், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த இனிய பாராட்டு விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரை யும் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தின் கலை வடிவங் களிலேயே, மிகத் தொன்மையும், சிறப்பும் வாய்ந்த ஒரு கலை, நாடகக் கலையாகும். மொழியை இயல், இசை, நாடகம், என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்த சிறப்பை உடையவர்கள் நாம். நாடகத் தமிழ் வாயிலாகத் தமிழ் மொழி உணர்வு வளர்ந்தது; நாட்டுப் பற்று வளர்ந்தது; தேசிய உணர்வு வளர்ந்தது.

ஆரம்ப காலத்தில் சங்கரதாஸ் ஸ்வாமிகள், தமிழ் நாடகக் கலையை வளர்த்தார். பின்னர் Boys Company, T.K. சண்முகம் சகோதரர்கள், நவாப் ராஜ மாணிக்கம் ஆகிய நாடகக் குழுக்கள், நாடகக் கலையை அரும்பாடுபட்டு வளர்த்தன. மக்கள் மத்தியில், நாடகக் கலை மீது, ஒரு ஈடுபாடு ஏற்பட, இந்த நாடகக் குழுக்கள், ஒரு காரண மாக இருந்தன.

அந்த காலக் கட்டத்திற்குப் பின்பு, நாடகக் கலை நசியத் தொடங்கியது. அந்தச் சூழ்நிலை யில், நாடகக் கலைக்கு மீண்டும், ஒரு புத்துயிர் ஊட்டியவர், நாட



கக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் என்றால், அது மிகையாகாது.

திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள், நாடகத் துறையை மேற்கொள்ளாமல் மட்டும் இருந்திருந்தால், என்னுடைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு, எத்தகைய நல்லதொரு கலை, இந்த நாடகக் கலை என்பது, தெரியாமலேயே போய் விட்டிருக்கும்.

எனது சிறு வயது முதலே, திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்களைக் காண்பது என்றால், எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி. இன்னும் சொல்லப்போனால், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களின் நாடகங்கள், எனது வாழ்க்கையின், ஒரு நிலையான அம்சமாக மாறி விட்டது, என்று கூட என்னால் கூற முடியும். ஏன் என்றால் - குழந்தைப் பருவம், பள்ளிப் படிப்பு, இளமைப் பருவம், பின்பு திரைப்பட உலகக் கலைச் சேவை, திரைப்பட உலகில் இருந்து ஓய்வு, எழுத்தாளராகப் பணியாற்றுதல், அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபாடு என்று பல்வேறு வித்தியாசமான காலக் கட்டங்களை, எனது வாழ்க்கையில் நான் சந்தித்த போதிலும் திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்கள்மீது, சிறு வயது முதலே, எனக்கு இருந்த ஈடுபாடும், பிடிப்பும், இன்றும் சற்று கூட குறையவில்லை. இன்றைய தலைமுறையினர், வரலாற்று நாடகங்களைக் கண்டு களிப்பதற்கு, வாய்ப்பை ஏற்படுத்தியவர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் என்பதில், சந்தேகம் இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக, அவர் நாடகத்தில் தொடர்ந்து நடிக்க, இயலாத ஒரு சூழ்நிலை உண்டானபோது, நான் உண்மையில் மிகவும் வருத்தம் அடைந்தேன். திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், அற்புதமான சரித்திர நாடகங்களை, இனி மேல் நம்மால் காண முடியாதே என்ற ஆதங்கம் என் மனதில் ஏற்பட்டது.

நான் முதலமைச்சராகப் பதவி ஏற்ற உடன், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களது கலைத் திறமையை, எப்படியாவது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், அவரைத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளராக நியமனம் செய்தேன். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை நன்கு உணர்ந்து, தமிழக அரசின் எண்ணங்களுக்கு, இயல், இசை, நாடக மன்றத்தின் மூலமாக, திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள், செயல் வடிவம் கொடுத்து, சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள்.

ஒரு முறை தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர், திரு. T.V. வெங்கட்ராமன் அவர்களுடன், நாடகக் கலை நசிந்து விடாமல், பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து, நான் பேசிக் கொண்டிருந்த போது திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களின், வரலாற்றுச் சிறப்பு மிக்க சரித்திர நாடகங்கள் வீடியோ படம் எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்படவில்லையே என்ற ஆதங்கத்தையும், வருங்காலத் தலைமுறையினர், இந்த நாடகக் கலையின் சிறப்பினை, உணர்கின்ற வாய்ப்பை இழந்து விடுவார்களே, என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

தமிழக அரசின் சார்பில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்று எண்ணினேன். அதன் முதல் கட்டமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில், சமயக் குரவர் நால்வரில் ஒருவரான, திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை, திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களைக் கொண்டு, மேடை நாடகமாகத் தயாரிக்கலாம், என்று முடிவு செய்து, முன்னாள் தலைமைச் செயலாளர் மூலமாக திரு. ஆர்.எஸ். மனோகருக்குத் தெரிவித்தேன்.

அதன்படி திருநாவுக்கரசர் நாடகத்தை உருவாக்குகின்ற பொறுப்பை, திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைத்தபோது, எனது எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற, ஒரு உந்துதலின் காரணமாக, தனது பிரச்சினைகள் எதையும் என்னிடத்தில் தெரிவிக்காமல், எனது விருப்பத்தை எப்படியேனும் நிறைவேற்றித் தருகிறேன் என்று, என்னிடம் உறுதி அளித்தார்.

சற்று முன்பு 50-வது காட்சியாக, நீங்கள் கண்டுகளித்த, திருநாவுக்கரசர் என்ற, இந்த அற்புதமான கலைப் படைப்பு, 24.8.1994 அன்று, எனது முன்னிலையில், முதன் முதலாக அரங்கேற்றம் ஆனது.



★ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.



இரண்டரை மாதத்திற்குள், இந்த இனிய நாடகம், 50 முறை மேடை ஏற்றப்பட்டுள்ளது என்பதிலிருந்து, மக்கள் மத்தியில், எத்தகையதொரு மகத்தான வரவேற்பை, இந்த நாடகம் பெற்றுள்ளது என்பதை, நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த மேடை நாடகம், திரு ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், வெற்றி மகுடத்தில் பதிக்கப்பட்ட, இன்னுமொரு மாணிக்கக் கல். வரலாற்றுக்கதாபாத்திரங்களுக்குப் புது வடிவம்; காட்சிக்குக் காட்சி மாறும், பிரம்மாண்டமான ஜோடனைகள்; பொருள் பொதிந்த, அர்த்தமுள்ள வசனங்கள்; சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவை; சரித்திரக் காலத்து, கண் கவர் ஆடை அணிகலன்கள் ; நேர்த்தியான காட்சி அமைப்பு ; இனிமையான இசை ; இவை எல்லாம், திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்களில், அவரது தனி முத்திரையுடன் விளங்குவதை, இன்றும் நாம் காணலாம்.

தனது நாடகக் குழுவைக் கலைத்து விட்டு, 6 வருடங்களாக மேடை நாடகங்களில் இருந்து ஒதுங்கியவர் ; மீண்டும் அந்த நாடகக் குழுவை ஒன்று சேர்த்து, ஓர் அற்புதமான, கலைத் திறன் மிகுந்த மேடை நாடகத்தை, உருவாக்கிக் காட்டுவது என்பது, மிகவும் கடினமான செயல் ஆகும். 6 வருடங்களாக திரு. ஆர்.எஸ்.மனோகர் மேடையில் நடிக்கவில்லை, என்ற விவரம் தெரிந்தவர்களுக்குத் தான், இது புரியுமே தவிர, இந்த நாடகத்தை மட்டுமே கண்டு களித்தவர்களுக்கு, 6 ஆண்டுளுக்குப் பிறகு, இவர் மேடை நாடகத்தை அமைத்து நடித்திருக்கிறார், என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. அந்த அளவிற்கு இந்த நாடகம், மிகச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும், ஏன் - அவரது பழைய நாடகங்களை விட, மேலும் சிறப்பாகவும் அமைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்ணிமைக்கும் நேரத்தில் காட்சி மாற்றங்கள்- நொடிப் பொழுதில் நேர்த்தியான ஜோடனைகள் தேவை எனில், அது மயிலானாலும், பாம்பானாலும், அல்லது யானையே ஆனாலும், அதனை மேடையில் அரங்கேற்றி, காண்போரை அதிசயிக்கச் செய்து, மனதைக் கவருகின்ற ஆற்றல், திரு. மனோகர் அவர்களுக்கே உரித்தான, தனித் திறமையாகும்.

சற்று முன் இந்த நாடகத்தில், யானையை மேடையில் தோன்றச் செய்த காட்சி, உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும்.

இந்த நாடகத்தின் அரங்கேற்றத்தின்போது, என்னுடன் இந்த நாடகத்தைப் பார்க்க வந்திருந்த சில குடும்பத் தலைவிகள், நாடக மேடையில் யானையை எப்படிக் கொண்டு வர முடிந்தது என்று, ஆச்சரியத்துடன் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மேடையில் தோன்றிய யானையை, உயிருள்ள நிஜ யானை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது, அப்போது தான் எனக்குப் புரிந்தது. அது உண்மையான யானை அல்ல என்பதை நான் அவர்களுக்கு விளக்கிய போது, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த அளவிற்கு அந்தக் காட்சியினைப் பார்ப்பவர்கள் மனதில் பதியும்வண்ணம் தத்ரூபமாகச் செய்து காட்டியுள்ளார், திரு. மனோகர் அவர்கள்.

தமிழ்த் திரையுலகிலும், தமிழ் நாடக மேடையிலும், தனக்கே உரித்தான தனி முத்திரையைப் பதித்த, ஒரு அபூர்வமான கலை வித்தகர், திரு. மனோகர் அவர்கள். பொதுவாக, நாடகங்களை ஏணியாகக் கொண்டு, வெள்ளித் திரை உலகிற்கு வருபவர்கள், தாய் வீடு போன்ற நாடக மேடையை, மறந்துவிடும் சூழ்நிலையைத் தான், நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், முதன் முதலாகத் திரை உலகில் கதாநாயகனாகவே நுழைந்து, கிட்டத்தட்ட 13 படங்களில் நடித்த பின்பு, வில்லன் நடிகராகத் தன்னை மாற்றிக் கொண்டு, தனக்கென்று ஒரு தனி இடத்தைத் தமிழ்த் திரை உலகில் பெற்றுவிட்ட நிலையில் திரு. மனோகர் அவர்கள், நாடகக் கலை வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது, ஒரு வரலாற்றுப் புதுமை என்றே சொல்லலாம்.

நாடகக் கலை நசிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதல் ஒரு புறம்; உள்ளத்தில் பொங்கி எழும், தனது நடிப்பு ஆற்றலுக்கு, நாடக மேடை தான், வடிகால் அமைக்க முடியும் என்ற உணர்வு, மறுபுறம். இந்த இரண்டு உணர்வுகள்தான், திரு. மனோகர் அவர்களை, நாடக உலகிற்கு அழைத்துச் சென்றது.

திரு. மனோகர் அவர்களது, ஈடு இணையற்ற கலைச் சேவையைப் பாராட்டி, நமது புரட்சித்

தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொடுத்த, “நாடகக் காவலர்” என்ற பட்டம், எத்தனைப் பொருத்தமானது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நம் மனம் மகிழ்ச்சி கொள்கிறது.

‘நேஷனல் தியேட்டர்ஸ்’ நாடகக் குழுவினை, அவர் ஏற்படுத்திய பின்பு, இதுவரை, 7807 முறை, மேடை நாடகங்களை நடத்தி உள்ளார். அற்புதமான இந்த ‘திருநாவுக்கரசர்’ மேடை நாடகம் உட்பட, மொத்தம் 29 மேடை நாடகங்களை அரங்கேற்றி, சிறப்புற நடத்திக் காட்டி இருக்கிறார் என்ற உண்மை, நம்மை எல்லாம் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது.

திரு ஆர்எஸ்மனோகர் அவர்கள், இதிகாசக் கதாபாத்திரங்களை மையமாக வைத்து, வரலாற்று நாடகங்களைப் புனைந்து நடத்துகின்ற விதமே, ஓர் அலாதியான தனி அழகு என்பதை, அவருடைய நாடகங்களைக் கண்டு களித்தவர்கள். அனைவரும் ஒப்புக் கொள்வார்கள், நாடகம் பார்க்கின்ற உணர்வு மாறி, பாத்திரத்தின் மீது, ஒரு புதிய வாஞ்சையை ஏற்படுத்தி விடுவார். நாடகங்களின் மூலம், அத்தகைய ஒரு தாக்கத்தை, ரசிகர்கள் மனதில் ஏற்படுத்தக் கூடிய, திறமை படைத்த ஒரு வல்லவர், திரு. மனோகர் அவர்கள்.

அவரது ‘இலங்கேஸ்வரன்.’ நாடகம் மட்டும், 1,700 முறை, மேடை ஏறியுள்ளது. நாடகக் கலை வரலாற்றில், இது ஒரு மாபெரும் சாதனை ஆகும். நமது நாட்டில் மட்டுமல்லாமல், வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்களும், இந்த நாடகத்தைக் கண்டு களித்திருக்கிறார்கள். இராவணனை ஒரு அரக்கனாக, கெட்ட சிந்தை படைத்தவனாகச் சித்திரிக்கப் பட்டு பார்த்துப் பழகிப்போன மக்கள் மத்தியில்- இராவணனின் கதாபாத்திரத்தை, திரு. மனோகர் சித்திரித்துக் காட்டிய விதம், இராவணன் மீது ஒரு ஈடுபாட்டை, பலர் மனதில் ஏற்படுத்தி விட்டது.

வரலாற்றிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும், அனைவராலும் விரும்பப்படும், நல்ல கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய தனித் தன்மைகளை, வெளிக் கொணரும் வகையில், நாடகங்களை அமைப்பது, அவ்வளவு கடினமான காரியம் அல்ல! ஆனால், கொடியவர்கள் என்று, மக்களால் நம்பப்படுகின்ற, சரித்திர மற்றும் புராணக் காலத்து கதாபாத்திரங்களில் மறைந்துள்ள சிறப்புத் தன்மைகளை வெளிப்படுத்தும் வகையில், மேடை நாடகங்களைத் தந்திரக் காட்சிகளுடன், தத்ரூபமாக அமைத்துக் காட்டி, மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெறும், வெற்றி நாடகங்களாக நடத்திக் காட்டுவது, எளிதான செயல் அல்ல.

திரு. ஆர்.எஸ்.மனோகர் ஒருவரால் மட்டுமே, அதைச் செய்து காட்ட இயலும் என்பதுதான், வரலாறு காட்டும் உண்மை.

இவர் மேடையில் உருவாக்கி, உயிர் பெறச் செய்த கதாபாத்திரங்களை எண்ணிப் பார்த்தால், ஒரு பிரமிப்பு தான் ஏற்படுகின்றது. இலங்கேஸ்வரன், சூரபத்மன், இந்திரஜித், விஸ்வாமித்திரர், சுக்கிராச்சாரியார், துரோணர், சாணக்கியர், சிசுபாலன், மாலிக் காபூர் என்று பல கதாப்பாத்திரங்களை, நாயகர்களாக மாற்றிக் காட்டி, நாடக ரசிகர்களை மகிழ்வித்துள்ளார்.

## திருக்குறள்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங் காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும் என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர்
ச. சோமசுந்தர பாரதியார்

ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் உரிய, ஒப்பனையையும், ஆடை அணிகலன்களையும் வழங்கி, அந்தக் கதாப்பாத்திரமே, மீண்டும் ஒரு முறை உயிர் பெற்று, நம் கண் முன்னே வாழ்வதைப் போன்ற, ஒரு அற்புதமான பிரமையை ஏற்படுத்துவதில் வல்லவர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள்.

பொதுவாக, நாடகத்தில் நேர்த்தியாகக் காட்சிகளை அமைப்பது என்பது, மிகவும் கடினமான பணி ஆகும். அதிலும், குறிப்பிட்ட காட்சிக்குத் தகுந்தாற்போல, இதிகாச வரலாற்றுப் பின்னணியோடு, ஜோடனைகளையும், அரங்கப் பொருட்களையும் நிர்மாணிப்பது என்பது, இன்னும் கடினமான பணி என்பது, நாடகத் துறையைப் பற்றி அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால், திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்குக் கண் இமைக்கும் பொழுதில், காட்சிகளை மாற்றிக் காட்டுவது, கை வந்த கலையாகும்.

திரைப்படங்களிலும், நாடகங்களிலும், கொடியோரின் வேடங்களை, பெரும்பாலும் இவர் ஏற்றிருந்தாலும், உண்மை வாழ்க்கையில், அன்பு நெஞ்சம் கொண்ட ஒரு நல்லவர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள். அவரது நற்குணங்களும், நல்ல பழக்க வழக்கங்களும், இன்றும் அவரைப் பலருக்கு, நண்பராக்கி இருக்கிறது என்பதை, நான் நன்கு அறிவேன்.

இந்த அற்புதமான நாடகத்திற்கு, ‘இசை அமைத்தவர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், இசை மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்; அவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்த நாடகத்திற்கு வசனம் எழுதிய, திரு. கே.பி. அறிவானந்தம் அவர்களுக்கும், பின்னணி இசை அமைத்த, திரு. சி. சிகாமணி அவர்களுக்கும் மேடை நிர்வாகப் பொறுப்பு ஏற்றுள்ள, திரு. ஆர். நாகராசன் அவர்களுக்கும் நகைச்சுவைப் பகுதிகளை, அனைவரும் ரசிக்கும் வண்ணம் அமைத்துத் தந்த, திரு. என்.எஸ். ரவிசங்கர் அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாடக உலகத்திற்கு, ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியுள்ள இந்த நாடகத்தில் பங்கு கொண்டு, சிறப்பாக நடித்த அனைத்துக் கலைஞர்களுக்கும், பின்னணியில் இருந்து நாடகத்தை வெற்றிகரமாக இயக்கிய, அனைத்துத் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், ஒப்பனைக் கலைஞர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அற்புதமான நாடகக் கலையை அதன் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு, திரு. மனோகர் அவர்கள் ஆற்றிய அரிய கலைச் சேவையையும், தனது சரித்திர மேடை நாடகங்கள் மூலம், மேடை நாடகக் கலைக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்த அவரது படைப்புத் திறனையும் பாராட்டி, உங்கள் அனைவரின் சார்பில், திரு. மனோகர் அவர்களுக்கு, “நாடகச் செம்மல்” என்ற பட்டத்தை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

“நாடகச் செம்மல்” என்ற பட்டம், திரு ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்கு, எல்லா விதத்திலும் பொருத்தமாக இருக்கும் என்பதில், சற்றும் ஐயமில்லை.

“நாடகச் செம்மல்” திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்கள், மேலும் பல புதிய நாடகங்களைப் படைத்து, நாடக்க் கலைக்குத் தொண்டாற்ற வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் நீண்ட ஆயுளுடன், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, மேலும் புகழ் பெற்று வாழ வேண்டும் என்று, உங்கள் அனைவரின் சார்பிலும், மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## நேருவின் மணி மொழிகள்

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம் தான், நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயல வேண்டும்.

சாமானிய மக்களின் நலந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப்பலரைப் பலி கொடுக்க முடியாது.

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை, யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டு, அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

# தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

## சிறப்பு ஏற்பாடுகளும் வளர்ச்சிப் பணிகளும்

தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்புக்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்ட தமிழகம் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தும் பேறு பெற்றுள்ளது, தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது உலகமெங்குமுள்ள தமிழர்கள் பெருமைப்படத் தக்க தொன்றாகும்.

1968-இல் சென்னை மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடும், 1981-இல் மதுரை மாநகரில் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடும் கண்ட தமிழகம், 1995-இல் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

"உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்" எனும் பன்னாட்டு அறிஞர்கள் குழுமியதொரு அமைப்பு இலண்டன் மாநகரில் நடத்த விருந்த இம்மாநாட்டினைத் தமிழகத்திற்குக் கொணர்ந்த பெருமை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களையே சாரும்.

### எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகள் மாநாட்டு ஊர்வலம் மற்றும் துவக்க விழா

1995-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளன்று பிற்பகல் 3 மணியளவில் தொடங்கும் மாபெரும் மாநாட்டு ஊர்வலத்திற்குப் பின்னர், மாலையில் தமிழக முதலமைச்சரவர்கள் தலைமையில் துவக்க விழா கோலாகலமாக நடைபெறவும், இவ்விழாவில் மத்திய அரசின் முக்கியப் பிரமுகர் தலைமை விருந்தினராகவும், அயல்நாட்டுத் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், அறிஞர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்து கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென முதலமைச்சரவர்களின் சீரிய தலைமையில் மாநாட்டு வரவேற்புக் குழு, நிதியமைச்சரவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் அமைப்புக் குழு, வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் சிறப்பு மலர்க்குழு, உணவு அமைச்சர் தலைமையில் விருந்தோம்பல் குழு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையில் ஊர்வலக் குழு மற்றும் மருத்துவக் குழு, போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் போக்குவரத்து சுற்றுலாக் குழு, கைத்தறித் துறை அமைச்சர் தலைமையில் விளம்பரக் குழு, பொதுப்பணித் துறை அமைச்சர் தலைமையில் அரங்க அமைப்புக் குழு, வீட்டு வசதித் துறை அமைச்சர் தலைமையில் தங்குமிட வசதி வாய்ப்புக் குழு, சமூக நலத் துறை அமைச்சர் தலைமையில் கண்காட்சிக் குழு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் தலைமையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புக் குழு, கல்வியமைச்சர் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் குழு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நகர் மேம்பாட்டுக் குழு, பேரவைத் தலைவர் தலைமையில் மாநாட்டு நிறைவு விழாக் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துக் குழுக்களின் பணிகளையும் ஒருங்கிணைத்து செயலாற்ற தலைமைச் செயலர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுவும் இயங்கி வருகிறது.

### பொது அரங்க நிகழ்ச்சிகள்

இம்மாநாட்டின் ஐந்து நாட்களிலும் பொது அரங்க நிகழ்ச்சிகளாகக் கருத்தரங்கம், கவியரங்கம்,பட்டிமண்டபம்இன்னிசை, தமிழிசை, நாட்டிய நாடகம், வரலாற்று நாடகம் போன்றவை சிறப்பான முறையில் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கண்காட்சி

மாநாட்டின்போது தஞ்சை நகரில் தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பு, தமிழர் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் அரசுத் துறைகள், நிறுவனங்கள் பங்கு பெறும் கண்காட்சி ஒன்று நடத்தப்படும்.

### ஒலி-ஒளிக் காட்சி

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களின் வீர வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலி-ஒளிக் காட்சியினை அயல் நாட்டறிஞர்கள் கண்டு பிரமிக்கும் வகையில், சிறப்பாகத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாநாட்டு நிறைவு விழா

மாநாட்டு நிறைவு விழாவில் மிகப் பிரம்மாண்டமான அளவில் கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், சாகசங்கள், மாணவ மாணவியரின் ஆடல் பாடல், அணி வகுப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நினைவுக் கோபுரம்

**மாநாட்டிற்கான இதரச் சிறப்பு ஏற்பாடுகள்**

மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகக் கூடுதல் பேருந்து வசதிகளும், பகலில் இளைப்பாறவும், இரவில் தங்கிச் செல்லவும் பெரிய பந்தல்களும் அருகில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளும் அளிக்கப்படவுள்ளன. தஞ்சை ரயில் நிலையத்தைப் புதுப்பிக்கவும், கம்ப்யூட்டர் முன் பதிவு வசதி, கூடுதல் ரயில்கள், குளிர் பதனப் பெட்டிகள் இணைப்பு ஆகிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் தென்னக ரயில்வே ஒப்புக் கொண்டுள்ளது.

பொதுமக்களுக்கு 300 கிராம் அளவிலான இரு வகை உணவுப் பொட்டலங்கள். "ஒரு பொட்டலம் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் (Namesake price) ஆங்காங்கே விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப் படும். அத்துடன் குடிநீர்ப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கப்படும். தனியார் ஓட்டல்களிலும், தரமான பொது உணவு (common meal) தயாரித்து நியாயமான விலையில் உணவுப் பொட்டலங்களாக விற்பனை செய்ய ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

**தஞ்சை நகரில் வளர்ச்சிப் பணிகள்**

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்து கலந்து கொள்ளும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தஞ்சை நகரில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு முன்னுரிமை அடிப்படையில் நிதியொப்பளிப்பு வழங்கியுள்ளது.

**புதிய இரயில்வே மேம்பாலம்**

40 ஆண்டுக் காலமாக தஞ்சை மக்களின் கோரிக்கையாக இருந்து வந்த புதிய இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ரூபாய் 5 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

**இரயில்வே கீழ்ப்பாலம்**

போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் வகையில் இரயில்வே கீழ்ப்பாலத்தை உயர்த்தி சாலை அகலப்படுத்தும் பணிகளை இரயில்வே துறையினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகளை இரயில்வே துறை தயாரித்து அளிக்கும். இது குறித்து தென்னக இரயில்வே பாலங்கள் தலைமைப் பொறியாளர் திரு. ரகுநாதன் அவர்களுடன் நேரில் கலந்து பேசி மதிப்பீடுகளை விரைவில் அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**புறவழிச்சாலை (By Pass Road or Ring Road)**

தஞ்சை நகர எல்லையில் பெரம்பலூர் மானாமதுரை சாலையிலிருந்து நாகப்பட்டினம், கடலூர், மைசூர் சாலை வரை 17.4 கி.மீ. வரையிலான புறவழிச் சாலை அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. ரிங் ரோடு (Ring road) எனும் புதிய பாணியில் அரைவட்டச் சாலையாக அமைக்கப்படும் இச்சாலையின் ஒரு பகுதி (Phase-I) மட்டுமே நடைபெற்று வருகிறது. இரண்டாவது பகுதி (Pase-II) சாலைப் பணிக்கான மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சாலைகள்**

ரூ. 10.5 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைகளை அகலப்படுத்திச் சீரமைக்கும் பணிகளும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் நகராட்சி சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர் வசதி**

தஞ்சை நகரில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் பணி ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**மின்சார வசதி**

மாநாட்டின்போது தஞ்சை நகருக்குத் தேவைப்படும் கூடுதல் மின்சாரத்திற்கும் தங்குதடையின்றி மின்சார விநியோகத்திற்கும் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தஞ்சை அரண்மனையைப் புதுப்பிக்கும் பணிகள்**

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு முன்பணம் தொகையாக ரூ.25 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

தஞ்சை நகரில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவுச் சின்னங்களாக நிலைபெறத் தக்க வகையில் நகரின் நுழைவாயில்களில் 7 அலங்காரத் தோரண வளைவுகள், நினைவுக் கோபுரம், நினைவு மண்டபம், இராசராசசோழன் சிலை ஆகியவை நிறுவப் படவுள்ளன.

**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**





அலங்கார நுழைவு வாயில்

**பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள்**

பெரிய அணைக்கட்டு கால்வாய்க் கரையினை அழகுபடுத்தி மின்விளக்குகளால் அலங்கரித்தல்.

சிவகங்கைப் பூங்கா மற்றும் இராஜப்பா தோட்டம் புதுப்பிக்கும் பணிகள். கண்காட்சி நடைபெறும் புனித பீட்டர்ஸ் பள்ளித் திடலுக்குச் சாலையமைத்தல். கல்லூரி விடுதிகளைப் புதுப்பித்தல். அரசுக் கட்டடங்களைப் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

**மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணிகளும், தஞ்சை நகரின் நுழைவாயில்களில் ஏழு அலங்காரத் தோரண வளைவுகளும்,நினைவுக் கோபுரம், நினைவு மண்டபம் அமைக்கும் பணிகளும், மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

மாநாட்டிற்கு வரும் அயல் நாட்டறிஞர்கள் தங்கும் வசதிக்காக தமிழ்ப் பல்கலைக் கழகவ்ளாகத்தில் 83 உயர் வருமானப் பிரிவினருக்கான வீடுகள் ரூ.3.50

**பரவும் வகை செய்வோம் வாரீர்!**

கோடி மதிப்பீட்டிலும், 304 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ரூ.5.20 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் வல்லம் என்னும் ஊரில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 480 மத்திய வருமானப் பிரிவினருக்கான வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றது. இம் மாநாடு முடிந்த பின்னர், இவ் வீடுகள் வீட்டு வசதி வாரியத்திடம் விதிமுறைகளின்படி பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

**தஞ்சை நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்:**

1. தஞ்சை நகர் முழுவதும் சோடியம் ஒளி விளக்குகள் அமைத்தல்;

2. சாலைச் சந்திப்புகளில் போக்குவரத்துக் கட்டுப்பாடு படுகைகள் - Traffic Islands அமைத்து அவற்றின் பராமரிப்புப் பொறுப்பைத் தனியார் சேவை நிறுவனத்திடம் ஒப்படைத்தல்;

3. பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைத்தல்;

4. நகராட்சி எல்லைக்குள் இணைப்புச் சாலைகள் புதுப்பித்தல்;

5. கூடுதல் தேவைக்கு நகரில் ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்;

6. புதிய பேருந்து நிலையம்;

7. மத்தியப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

8. நகரப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

9. புதிய கழிப்பிடங்கள் அமைத்தல்;

10. தற்போதுள்ள கழிப்பிடங்களைப் புதுப்பித்தல்;

11. கொசு ஒழிப்புப் போன்ற சுகாதாரப் பணிகள்

12. மாநாட்டின்போது நகரின் தூய்மையைப் பாதுகாக்க மிகச் சிறப்பாக மேற்கொள்ளத் தக்க முறையில் துப்புரவுப் பணிகள்.

**பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைப் பணிகள்:**

1. தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய தீவிரச் சிகிச்சைப் பிரிவு (IntensiveCareUnit)மற்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவு (Trauma Ward) ஏற்படுத்துதல்.

2. மாநாட்டின்போது முதலுதவி அவசரச் சிகிச்சை மையங்கள் அமைத்தல்.

3. மாநாட்டின்போது பொது மக்களின் தேவைக்காக 2000 தற்காலிகக் கழிப்பிடங்கள் (RCAP Latrines) அமைத்தல்.

4. நோய்த் தடுப்பு, சுகாதாரப் பணிகள்.

**அஞ்சல் தலை**

இராஜராஜ சோழன் உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலை, திருவள்ளுவர் நாணயம் ஆகியவற்றை, துவக்க நாள் விழாவில் வெளியிட தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

**ஆய்வரங்க நிகழ்ச்சிகள்**

உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் நொபோரு கரஷிமா அவர்கள் தலைமையிலான ஆய்வரங்கக் குழு (Academic Committee) பொறுப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு நிலைக் கருத்தரங்குகள் (Seminars)நடைபெறவிருக்கின்றன. இக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள உலகெங்கிலுமுள்ள 2500 தமிழியல் பேராசிரியர்களும் வருகைதர உள்ளனர். தமிழியலில் கீழ்க்காணும் 42 தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

1. பண்டைய இலக்கியம், 2. பண்டைய இடைக்கால இலக்கியம், 3. பிற்கால இடைக்கால இலக்கியம், 4. தற்கால இலக்கியம், 5. ஒப்பிலக்கியம், 6. குழந்தை இலக்கியம், 7. இலக்கிய நடையியில், 8. இலக்கியத் திறனாய்வு, 9. தத்துவமும் சமயமும், 10. இலக்கணம், 11. மொழியியல், 12. மொழி கற்பித்தல், 13. அகராதியியல், 14. மொழி பெயர்ப்பியல், 15. சுவடியியல், 16. ஆட்சித் தமிழ், 17. அறிவியல் தமிழ், 18. நாட்டுப்புறவியல், 19. வரலாறு, 20. சமூக வரலாறு, 21. வரலாற்றியல், 22. கல்வெட்டியியல், 23. தொல்லியல், 24. பண்பாட்டு மாந்தவியல், 25. சமூகவியல், 26. தமிழர் குடிபெயர்வு, 27. பன்னாட்டு உறவு, 28. அயல் நாடுகளில் தமிழரும், தமிழும், 29. உளவியல், 30. கல்வியியல், 31. தகவல் தொடர்பியல், 32. பண்பாட்டியல், 33. பொருளியல், 34. ஆடலும் இசையும், 35. நாடகமும் திரைப்படமும், 36. ஓவியம், 37. சிற்பம், 38. அரங்கக் கலைகள், 39, தொல்லறிவியல், 40. அறிவியலும், தொழில் நுட்பமும், 41. மருத்துவம், 42. சித்த மருத்துவம் முதலியன.

இதுவரை 700 அறிஞர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளப் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 23 அயல்நாடுகளைச் சேர்ந்த 250 பேராசிரியர்கள் அடங்குவர். இவர்களைத் தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, பின்லாந்து, இஸ்ரேல், ஜப்பான், சுவீடன், மொரிஷியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் 25 அறிஞர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக அரசால் அழைக்கப் பெற்றுள்ளனர். அரசு அழைப்பின் பேரில் இம் மாநாட்டிற்கு





வரும் இவ்வறிஞர்கள் அரசு விருந்தினர்களாகக் கருதப்படுவதால் அவர்தம் நாட்டிலிருந்து தஞ்சை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளை அரசே ஏற்கும்.

**வல்லுநர் குழுக் கூட்டம்**

இம் மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விழையும் அறிஞர்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 650 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கக் குறிப்புகள் (Abstracts) 26.8.94 மற்றும் 27.8.94 ஆகிய இரு நாட்களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த 36 அறிஞர்களடங்கிய வல்லுநர் குழுக் கூட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் வாசிப்பதற்குத் தகுதியுடையதான 447 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும், தகுதியற்றவை என 203 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் வகைப்படுத்தப் பெற்றன. ஆய்வரங்கத்திற்குத் தகுதியானவற்றில் அமர்வுகளின் எண்ணிக்கை ஏற்றவாறு 252 ஆய்வுக் கட்டுரைகள் வல்லுநர் குழு தரப்படுத்தி அளித்துள்ள வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

**சுற்றுலா ஏற்பாடு**

மாநாடு முடிவடைந்தவுடன் தமிழகத்தின் கலை பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிக்கும் வகையில் 150 அயல் நாட்டறிஞர்களுக்கு ஒருவாரக் காலச் சுற்றுலாவிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சிறப்புக் கலை நிகழ்ச்சிகள்**

அயல்நாட்டறிஞர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சிகளுக்கும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளுக்கும் (Classical Programmes) நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கும் சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரில் 1995 சனவரி 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்பு மலர், அறிவியல் மலர், மாணவர் மலர் என்று மூன்று மலர்களை வெளியிட அரசு கருதியுள்ளது.

**1. சிறப்பு மலர்**

சிறப்பு மலரில் தமிழ் இலக்கியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணம், தமிழ் இசை, நாட்டியம், நாடகம், மொழியியல், நிகண்டு, கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியம், சமயம், தொல்லியல், கல்வெட்டியல், காசியல், மானிடவியல், சமுதாய இயல், நாட்டுப்புறக் கலை, மருத்துவம், வரலாறு, கணனியியல், தமிழ்ப் பண்பாடு நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பிற மொழி இலக்கியம், சிறு கதை, புதினங்களின் வளர்ச்சி, கவிதைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் இடம்பெறும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் 127 நபர்களிடமும், பிற மாநிலப் பேரறிஞர்கள் 21 நபர்களிடமும், அயல்நாட்டுப் பேரறிஞர்கள் 82 நபர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

இதுவரை பேரறிஞர்களிடமிருந்து 94 கட்டுரைகளும், 7 கவிதைகளும் வரப்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுப் பேரறிஞர்களிடம் இருந்து 74 கட்டுரைகளும், 7 கவிதைகளும், பிற மாநிலத்தவர்களிடமிருந்து 5 கட்டுரைகளும், அயல் நாட்டினரிடமிருந்து 15 கட்டுரைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக் கட்டுரைகளில் 7 கட்டுரைகள் ஆங்கிலக் கட்டுரைகள் ஆகும்.

இதில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு சிறப்புகளை, வரலாறு, கலை, சமுதாயப் பாரம்பரியங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்படும். மாநாட்டு மலர், மிகச் சிறந்த தாளில் பல வண்ணப் படங்களுடன், என்றும் வைத்துப் பேணும் வகையில் எழில் மலராக வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2. அறிவியல் மலர்**

மாநாட்டில் அறிவியல் கட்டுரை மலர் ஒன்று வெளியிடக் கருதப்பட்டுள்ளது. அம் மலரில் மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை மற்றும் பொறியியல் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களைக் கொண்டு, அறிவியல் கட்டுரை வெளியிட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் உட்குழு அமைக்கப்பட்டுள்ளது. "அறிவியலில் தமிழ் வழிக் கல்வி" என்னும் தலைப்பில் இலக்கிய இலக்கண, நயத்துடன் கட்டுரைகள் வெளியிட கால்நடைத் துறை வல்லுநர்கள் 29 பேர்களிடமும், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் 23 பேர்களிடமும், மருத்துவத்துறை வல்லுநர்கள் 33 பேர்களிடமும், பொறியியல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் 28 பேர்களிடமும் (ஆகக் கூடுதல் 113 வல்லுநர்களிடமும்) கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

தற்போது வேளாண்மைத் துறை வல்லுநர்களிடமிருந்து 10 கட்டுரைகளும், மருத்துவத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், கால்நடைத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், பொறியியல் துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகள் (ஆக, கூடுதல் 22 கட்டு





அலங்கார நுழைவு வாயில்

ரைகள்) அறிவியல் மலருக்கு வரப்பெற்றுள்ளன.

அறிவியல் உட்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் இக் கட்டுரைகள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

**மாணவர் மலர்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாணவர்கள் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தி அதில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தனித்தனியே மாநாட்டில் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகள் நடத்தத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறந்த கட்டுரைகளும், ஓவியங்களும், கவிதைகளும் மலரில் இடம் பெற்று, அது 'மாணவர் மலராக' மலரும்.

**மலர்க் குழுவால் நடத்தப் பெறும் போட்டிகள்**

இம்மாநாட்டில் இளைஞர்களையும், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களை

யும் ஈடுபடுத்தி அவர்களின் கலை, இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், பேச்சாற்றலை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்காணும் போட்டிகளை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

1. பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

2. கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

3. இளைஞர்களுக்கான கவிதைப் போட்டி,

4. கல்லூரிபல்கலைக்கழக மாணவர்களுக்கான கவிதைப் போட்டி,

5. கல்லூரிபல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி,

6. பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி.

7. பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

8. கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி.

இவற்றில், பேச்சுப் போட்டிகள் நீங்கலாக இதரப் போட்டிகளுக்கான விளம்பரங்கள் முக்கிய தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது படைப்புகளைப் பள்ளி–கல்லூரி பல்கலைக்கழகம் மூலமாக மலர்க் குழு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். இப்போட்டிகளில் மிகச் சிறந்த மூன்று படைப்புகள் அரசால் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாநாட்டு நிறைவு விழாவில் நினைவுப் பரிசுகள் வழங்கப்படும். மிகச் சிறந்த படைப்புக்கள் மாணவர் மலரில் இடம் பெறும்.



முதல் பரிசு பெறும் ஓவியம் மாணவர் மலர் முகப்பு அட்டையில் இடம் பெறும்.

"இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி" எனும் தலைப்பில் நடைபெறும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் பள்ளிக் கல்வி இயக்குநராலும், கல்லூரிக் கல்வி இயக்குநராலும் மாவட்ட ஆட்சித்தலைவரிகளின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு சுற்றுகளாக நடத்தப் பெற்று, இறுதிச் சுற்று மலர்க் குழுத் தலைவரான வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெறும்.

மாநில அளவில் நடைபெறும் இறுதிச் சுற்றில் கலந்து கொள்ளும் ஐந்து மாணவர்களில் மிகச் சிறந்தவர்களாக மூவர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாநாட்டு நிறைவு விழாவில் நினைவுப் பரிசுகள் வழங்கப் பெறும்.

### மாநாட்டுச் செய்தி – மக்கள் தொடர்புப் பணிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள்

மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து நாளிதழ்கள், திரையரங்குகள், தனியார் தொலைக்காட்சி அமைப்புகளில் விளம்பரமாக வெளியிடவும், மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்தல், தொலைக்காட்சி, வானொலி மூலம் நேர்முக ஒளி, ஒலிபரப்ப ஏற்பாடு செய்யவும், மாநாட்டின் போது சென்னை, தஞ்சை நகரங்களில் தகவல் மையங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மாநாட்டின்போது சிறப்பு மருத்துவ ஏற்பாடுகள்

தஞ்சை நகருக்கு வரும் அனைத்து முக்கிய நெடுஞ்சாலைகளிலும் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவவும், அவற்றில் முதலுதவி சிகிச்சைக்கான வசதிகளும், ஆம்புலன்ஸ் வசதியும் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை நகரில் பல்வேறு இடங்களிலும் மருத்துவ மையங்கள் நிறுவவும் இரத்தச் சேமிப்பு வங்கி மூலம் அவசரத் தேவைக்காக உடனுக்குடன் சமாளிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.39 இலட்சம் செலவில் 24 படுக்கைகள் கொண்ட விபத்து சிகிச்சைப் பிரிவும், ரூ.10 இலட்சம் செலவில் 100 KVA ஜெனரேட்டர் வசதியும் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.



### உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் திரு நோபோரு கரஷிமா அவர்கள் தஞ்சை வருகை

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வரங்கக் குழுத் தலைவராக இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் (International Association of Tamil Research) தலைவர் பேராசிரியர் திரு நோபோரு கரஷிமா பொறுப்பேற்றுள்ளார். இம்மாநாட்டின் ஆய்வரங்க ஏற்பாடுகளை நேரில் பார்வையிட 23.9.94 அன்று தஞ்சைக்கு வருகை புரிந்த பேராசிரியர் திரு கரஷிமா, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் சந்தித்துப் பேசுகையில், இம்மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சிறப்புப் பணிகளையும், மாநாட்டில் கலந்துகொள்ள வரும் பேராளர்கள், பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோருக்காகத் தங்குமிட வசதி, விருந்தோம்பல், போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் விளக்கிக் கூறினார். இப்பணிகள் நடைபெறும் இடங்களை நேரில் சுற்றிப் பார்த்த பேராசிரியர் திரு. கரஷிமா அவர்கள், இதுவரை நடைபெற்ற மாநாடுகளைவிட எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தமக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



## கலைவாணர் ஒரு சகாப்தம்!

- பேரறிஞர் அண்ணா

கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு 'சகாப்தம்'!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும். மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும். நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது, புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர். உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக 'மட்டும் வாழவில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக, தாமும் நல்லவராக மற்றவர்களையும் திருத்துபவராக, கருத்து கருவூலமாக வாழ்ந்தவர்.

மக்களின் மன அழுக்கு நீங்க - மூட நம்பிக்கை அகல - குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒழிய - தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சி பெற - இதுவரை, இந் நாட்டில் எந்த நடிகரும் கலைவாணரைப் போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்நாட்டில் மட்டும் அல்ல, வேறு எந்த நாட்டிலும் கூட இப்படிப்பட்ட நடிகர் ஒருவர் இருந்தது இல்லை; இனி இருக்கப்போவதும் இல்லை.

நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்ந்து, 'எங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறுவது போல, கலைவாணர் வாரி வாரி வழங்கினார். பணத்தை மட்டும் அல்ல, கருத்துக்களையும் வழங்கினார்.

**கலைவாணர் என்.எஸ்.கே. பிறந்த நாள் நவம்பர்-29.**

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

## செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.



தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

ஆணையர்,

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய பட்டு

தூய சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்








இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-34



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108


# இந்த இதழில...


| | |
|---|---|
| ராஷ்ட்ரீய பீஷமாச்சாரிய விருதினைப் பெற்றுக் கொண்டு மாண்புமிகு முதலவர் ஆற்றிய உரை | 2 |
| படமும்-செய்தியும் | 9 |
| மாசுக் கட்டுப்பாடு வாரியப் புதிய கட்டடம்: மாண்புமிகு முதல்வர் திறந்து வைத்தார் | 10 |
| மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால தஞ்சை அரண்மனை வளாகம் புதுப்பொலிவு பெறுகிறது! | 13 |
| பாரதி - சில நினைவுகள் | 15 |
| அறநெறி முதற்று –நீதிபதி மு.மு. இஸ்மாயீல் | 17 |
| நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 23 |
| தஞ்சை தயாராகிறது! | 24 |
| எட்டாவது உலகத் தமிழ் மாநாடு: மாணவர் மலர் - பொது மலர், கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் முடிவுகள் | 26 |
| தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள் | 35 |
| அண்ணல் அம்பேத்கர் | 41 |
| மூதறிஞர் இராஜாஜி | 45 |
| மாணவர் பக்கம் | 47 |


## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.


**தமிழரசு**
திருவள்ளுவராண்டு: 2025
கார்த்திகைத் திங்கள்: 16
மலர்:25 இதழ்:11
1.12.1994
விலை: ரூ. 3



தமிழ் கொஞ்சும் தஞ்சைத் தரணியில்
புகழ் விஞ்சும் தமிழ் மாநாடு
புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா
அழைக்கிறார்

1995
சனவரி
1 முதல்
5 வரை

# "மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் இயக்கத்தில் பணிபுரிய நான் தயாராக உள்ளேன்!"





## ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினைப் பெற்றுக் கொண்டு முதல்வர் ஆற்றிய உரை

முதல் அட்டை சொல்லும் செய்தி

கேரளத்திலுள்ள திருவனந்தபுரத்தைச் சார்ந்த 'பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை' எனக்கு இன்று 'ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய' விருது வழங்கும் இந்த இனிய விழாவில் பங்கேற்று, விருதைப் பெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை பாசத்தோடும் நேசத்தோடும் எனக்கு வழங்கும் இந்த விருதினைப் பெறுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

கேரளத்தைச் சேர்ந்த பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை இந்த விருதுக்காக என்னைத் தேர்ந்தெடுத்ததைப் பத்திரிக்கை வாயிலாக அறிந்தபோது ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தேன்.

பொன்னார ஸ்ரீதர் அறக் கட்டளையின் சிறப்பியல்புகளையும், அது பின்பற்றும் உன்னத குறிக்கோள்களையும் நான் அறிந்தபோது, இந்த விருதை ஏற்றுக் கொள்வதாக அறக்கட்டளையிடம் தெரிவித்ததில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். 1994-ஆம் ஆண்டிற்கான 'ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய' விருதினை எனக்கு வழங்கத் தேர்வு செய்தமைக்கான பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை யின் நிர்வாகிகளுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில், முதலில் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழ்ந்த சிந்தனையோடு, கனிவான பரிசாக இதை எனக்கு வழங்கியமைக்காக உங்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இந்த விருது வழங்குகையில் மாநில, மொழித் தடைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கருத்தில் கொண்டே வழங்கி இருக்கிறீர்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விருதைப் பெற என்னைத் தேர்ந்தெடுக்கையில், இதன் அமைப்பாளர்கள் காட்டிய பரந்த மனப்பான்மையினையும், தேசியக் கண்ணோட்டத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த காவியமாகிய மகாபாரதத்தை நன்கறிந்த நமக்கு, இந்திய இதிகாசங்களிலேயே புகழ்மிக்க ஒரு மாபெரும் பாத்திரமாக பீஷ்மாச்சாரியர் இருப்பது தெரியும்; அந்த அற்புதப் பெயரைத்தான் இந்த விருது தாங்கி நிற்கிறது. உன்னதமான குணங்களின் உறைவிடமாகவும், வாழும் போதே வரலாறு ஆகவும் திகழ்ந்து உறுதியான மனத்துடன் இலட்சியங்களை அடைய விரும்புபவர்களுக்கு மகத்தான உதாரணமாகவும் திகழ்ந்த பீஷ்மாச்சாரியார் அனைவரும் வியந்து போற்றப்பட்ட மாமனிதர் ஆவார்.

உயர்ந்த இலட்சியங்களையும், உன்னத குறிக்கோள்களையும் மனதில் கொண்டு தளராத மன உறுதியுடனும், விடா முயற்சியுடனும் அவைகளைக் கடைப்பிடித்து வந்த புராணக் காலத்து ஜாம்பவான்கள் இதிகாசங்களில் நிறைய உண்டு. ஆனால், அத்தகைய ஜாம்பவான்கள் அனைவருக்கும் மேலாக, சுயநலமின்மை, கடமையுணர்வு, மகத்தான தியாகம், வீரம், ஒழுக்கத்தைக் காப்பாற்றுவதில் உறுதிப்பாடு ஆகியவற்றை அற்புதமாக வெளிப்படுத்தியதால், உயர்ந்து நின்றவர் பீஷ்மாச்சாரியார். என்னுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே, இராமாயணம், மகாபாரதம்



ஆகிய இரு பெரும் இதிகாசங்களை ஆர்வ மாகப் படித்து வந்திருக்கிறேன். அவற்றில் பீஷ்மாச்சாரியர் போன்றவர்களை மிகுந்த மரியாதையோடு போற்றி வந்தேன். அந்த உணர்விலே தான், இன்று, நமது கலாச்சார வரலாற்றில் மிகவும் பிரபலமான ஒருவரின் பெயரால் வழங்கப்படும் விருதினைப் பெறு வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறந்த தேச பக்தரும், தீவிர விடுதலை வீரரும், உன்னதமான சமுதாயப் புரட்சி யாளரும் கேரளத்தின் மாமனிதருமான பொன்னார ஸ்ரீதர் சேவையை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பெற்றதொரு நிறு வனத்தால் நடத்தப்படும் இவ்விழாவில் பங்கு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பல துறைகளில் சிறந்து விளங்கி, சமுதாயப் பணியாளராகத் திகழ்ந்த பொன்னார ஸ்ரீதர் அவர்களின் நினைவைக் கூறும் இந்த நிறு வனத்தில் இருந்து இந்த விருதினைப் பெறு வதில் நான் மிகவும் திருப்தியடைகிறேன். மிகுந்த செல்வம் செழிக்கும் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அவர் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை ஒதுக்கி. விட்டு, ஒரு சமுதாய புரட்சியாளராகவே வாழ்ந்தார் என்பதையே, அவருடைய பரபரப்பான வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது. தொழிற்சங்க இயக்கத்தில் தலைமையேற்று, கேரளத்து விவசாயிகளை யும், உழைப்பாளரையும், ஆங்கிலேய ஏகாதி பத்தியத்தை எதிர்த்து ஒன்று திரட்டினார். சமூக நீதிகளைத் தைரியமாக, தனக்கு ஆங் கிலேய காவல்துறையால் இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் பற்றிக் கவலை கொள்ளாமல், 25 ஆண்டுக்கால சிறைவாசம் அனுபவித்த பொன்னார ஸ்ரீதர் அவர்களை நினைக்கும்போது அவர் மீது இருந்த மரி யாதை மென்மேலும் கூடுகிறது. பதவிகளைப் பற்றிக் கவலைப்படாமல் தன்னலமற்ற வாழ்க்கை வாழ்ந்து எண்ணற்ற தியாகங் களைப் புரிந்தவர் பொன்னார ஸ்ரீதர் ஆவார்.

நமது பெருமதிப்பிற்குரிய, திராவிட இயக்கத் தலைவர் தந்தை பெரியார் அவர்களுடன் ஒரு தொண்டனாக, பொன்னார ஸ்ரீதர் அவர்கள், வைக்கம் சத்தியாகிரகத்தில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னார ஸ்ரீதர் போன்ற மிகச் சிறந்த சமுதாயப் புரட்சி யாளரின் சாதனைகளை நினைவு கூரும் ஒரு நிறுவனத்தினால் மதிக்கப்படுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். மாபெரும் தலைவர் பொன்னார ஸ்ரீதர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உன்னதமான அவரது வாழ்க்கை, பொதுவாழ்வில் ஈடு பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் தூண்டு கோலாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வறுமை, கள்ளாமை, அறியாமை ஆகியவை களை அகற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நான் கொண்டுள்ள உறுதிப்பாட்டை





இந்த விருது மேலும் வலியுறுத்துகிறது.

பூகோளத்தைப் பொறுத்தவரை கேரளாவும், தமிழ்நாடும் வெவ்வேறு பகுதிகள் என்றாலும், இவ்விரு கலாச்சாரம், மனப்பான்மை, மொழி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பொது வான கருத்து நிலவுகிறது. தமிழ்நாட்டிற்கும், கேரளாவிற்கும், தமிழுக்கும் மலையாளத் துக்கும் இடையே உள்ள மொழி மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் பல நூற்றாண்டு களுக்கு முன்பே துவங்கியவை. இந்த விரு தினை எனக்கு வழங்கியதன் மூலம் கேரளத்து மக்கள், தமிழ்நாட்டின் மீதும், அதன் செழிப் பான கலாச்சாரத்தின் மீதும் கொண்டுள்ள அன்பையும், பாராட்டையும் வெளிப்படுத்து கிறது.

தமிழ்நாட்டைத் தங்களது இரண்டாவது வீடாக ஆக்கிக் கொண்ட ஆயிரக்கணக்கான மலையாளிகளுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் கேரளத்து மக்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விருதி னையும், விழாவினையும் என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன். மாண்புமிகு கேரள அமைச்சர்கள் திரு டி.எம்.ஜேக்கப், திரு ஆர். பாலகிருஷ்ணப்பிள்ளை, திரு பி.கே. குஞ்சாலிகுட்டி, திரு எம்.ஆர். ரகுசந்திரபால் ஆகியோர் தங்களது ஏராளமான பணிகளுக் கிடையேயும், சென்னைக்கு வந்து என்னைப் பெருமைபடுத்தியமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு கூடியிருப்போர் அனைவரும் செல்வச் செழிப்பும், வெற்றியும், மகிழ்ச்சியும் பெற வாழ்த்துகிறேன்.

இந்த விருதுடன் ரூபாய் 25 ஆயிரம் இன்று எனக்கு வழங்கப்பட்டது. இந்த மகிழ்ச்சிகர மான விழாவில் இந்த ரூபாய் 25 ஆயிரத்தை திருவனந்தபுரத்தில் உள்ள 'ஸ்ரீ சித்ரா ஏழை விடுதி' என்னும் அனாதை இல்லத்திற்கு நன் கொடையாக வழங்குகிறேன்.

மாண்புமிகு கேரள அமைச்சர் திரு ஜேக்கப் தனது உரையில் சிந்தனையைத் தூண்டும் சில எண்ணங்களை வெளியிட்டார். மாநில அரசுகள் நிறைய அதிகாரங்களைப் பெற வேண்டும் என்றும், மைய அரசு மாநில அரசு களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண் டும் என்றும் அவர் கூறியதை முழுவதும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த விருதை எனக்கு வழங்கிய, இதுபோன்ற நல்லெண்ண வெளிப்பாட்டின் விளைவாக தமிழ்நாட்டிற் கும் கேரளாவிற்கும் இடையே அதிக ஒத் துழைப்பு ஏற்படும். உங்கள் முதலமைச்ச ரோடும், உங்கள் மாநிலத் தலைவர்களோடும் இணைந்து, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும் என் பதை வலியுறுத்தும் இயக்கத்தில் பணிபுரிய நான் தயாராக உள்ளேன், என்பதை திரு ஜேக்கப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னர் கேரளத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் என் வாழ்த்துக்களையும், நன்றியையும் மலையாளத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"ஈ சந்தோஷ அவசரத்தில் எல்லா கேரளீயருக்கும் என்டெ நன்னி ஞான் பிரகட பிச்சுக் கொள்ளுன்னு – எல்லா கேரளீய ருக்கும் என்டெ மங்களா சம்ஸகள்".

'பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினை, இன்று இந்தியாவிலிருக்கும் ஒரே பெண் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கும் இவ்வினிய விழாவில் பாராட்டிதழைப் படிப்பதில் பெருமையடைகிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களின் முன்னணித் தலைவராகவும்,' ஏழை எளியவர்களின் இதயங் கவர்ந்தவருமான அமரர் பொன்னார ஸ்ரீதர் அவர்களின் நினைவை நிலைநிறுத்தும் வகையில் அமைக்கப்பெற்ற இந்த ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதைப் பெறும் முதல் பெண்மணி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களே என்னும் முக்கியத்துவமும் இந்த விழாவிற்கு உண்டு.

தமிழக மக்களால் "புரட்சித் தலைவி" என்று அன்போடு சரியாக அழைக்கப்படும் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வாழும்போதே வரலாறான சாதனையாளர் என்னும் அதிசயப் பிரிவைச் சார்ந்தவர். அவர், இலட்சக்கணக்கான தமிழர்களுக்கு மட்டும் தலைவர் அல்லர். அவர் உயர்ந்த நிலையில் போற்றப்படும் தேசியத் தலைவரும் ஆவார். 24.2.1948-இல் சிறந்த கலாச்சாரமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் பள்ளிப் பருவம் முழுவதிலும் நிறைய விருதுகளைப் பெற்றுள்ளார். வாழ்க்கையெனும் பல்கலைக் கழகத்தில் பயிலும்போதே கலைத் துறையில் தன்னிகரற்ற தலைமையை நிரூபித்துக் காட்டினார். அப்போதைய தமிழக முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், பலவிதத் திறமைகளைப் பெற்றிருந்த டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சிறப்பியல்புகளைக் கவனித்து, தன் முதிர்ந்த வழிகாட்டுதலினால், அவரை ஒரு



## அறக்கட்டளையின் பாராட்டிதழ்

மக்கள் தலைவராக மாற்றினார். டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1991-இல் நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி இதுவரை வேறு எவரும் சாதிக்காதது மட்டுமல்லாமல், அவரை ஒரு தலைசிறந்த மேன்மையான தலைவராகவும் காட்டியது.

இவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலந்தொட்டுப் பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரது வழியிலேயே நடந்து வருகிறார். தமிழகத்தில் ஒரு புரட்சிகரமான சகாப்தத்தை உருவாக்கினார். தேசிய மற்றும் உலகளாவிய கண்ணோட்டம் கொண்ட ஒரு மாநில முதல்வர் என்பதை நிரூபித்தார்.

ஒரு தலைசிறந்த திறமையான நிர்வாகி என்ற முறையில், ஏழை எளியோரின் நலனில் அக்கறை காட்டும் தலைவியாக, நாடு முழுமைக்கும் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்து வருகிறார். இன்று இலட்சக்கணக்கான மக்களின் வாழக்கைக்கு இவர் வழிகாட்டிக் கொண்டிருப்பினும், அவர் கடந்து வந்த பாதை கடும் தடைகளைக் கொண்டது.

அவரது உறுதியான எண்ணங்களின் மீது அவருக்கிருந்த தைரியம், அவரது அறிவுக் கூர்மை ஆகியவை அவரை நல்ல நிலையில் நிறுத்தியது. தன்னுடைய மனதுக்குப் பிடித்த கொள்கைகளை விட்டுக் கொடுக்கும் தன்மை உடையவரல்ல இவர். மனித சமுதாயம் முழுமைக்கும் ஒரு தெளிவான சிந்தனை உடையவர். முதல்வராகப் பதவியேற்றதற்குப் பின்னர் தன் பொறுப்புகளைத் தீர்க்க தரிசனத்துடனும், உறுதியோடும் நிறைவேற்றி வந்தார். தமிழகத்தின் அனைத்துத் துறைகளின் மேம்பாட்டிலும் மகத்தான வெற்றியைக் கண்டார்.

சமூக நலம், பெண்கள் முன்னேற்றம், தொழில்மயமாக்கல், வறுமை ஒழிப்பு, விளையாட்டு, சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு, குழந்தைகள் நலன் போன்ற






துறைகளில் அவரது பங்கு தேசிய மட்டத்திலும் உலக அளவிலும் பாராட்டப் பெற்றது. சென்னையில் மிகக் குறுகிய காலத்தில் உலகத் தரம் வாய்ந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், அவர் விளையாட்டுத் துறையில் கொண்டிருந்த ஆர்வத்திற்குச் சிறந்த எடுத்தக்காட்டு. இந்தத் துறையில் அவரது முயற்சிக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துவிட்டது. கலை, கலாச்சாரத் துறைகளில் தமிழகம் மிக உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற அவரது ஆர்வத்தைத் தரமணியில் உள்ள ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் எடுத்துக்காட்டுகிறது. பெண் சிசுவதையைத் தடுக்க அவர் அறிமுகப்படுத்திய தொட்டில் குழந்தைகள் திட்டம் அனைவராலும் பாராட்டப் பெற்ற ஈடு இணையற்ற திட்டமாகும். குழந்தைகளின் நலனில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை அவர் தொடங்கிவைத்த "டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்" கோடிட்டுக் காட்டுகிறது. யுனிசெப் போன்ற பல உலக நிறுவனங்களின் கவனத்தை இத் திட்டம் வெகுவாக ஈர்த்துள்ளது.

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மலையாளமும் நன்கு அறிந்தவர். மிக ஆழ்ந்த படிப்பாளியான அவர், தன் அறிவைத் தொடர்ந்து பெருக்கிக் கொண்டே செல்கின்றார். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கும் அவரது தனிச் சிறப்பு அவருக்கு வெற்றி மீது வெற்றியைப் பெற்றுத் தருகிறது. உயர் கல்விக்கான மாநிலக்குழு மற்றும் கல்விக்குழு, மாநில ஆலோசனைக்குழு உருவாவதில் இவர் மிகவும் காரணமாக இருந்தார்.

தனது விடா முயற்சியால், தமிழகத்தின் கல்வி, வேலை வாய்ப்பு நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கும் தமிழகச் சட்டத்திற்கு அரசியல் நிர்ணயச் சட்டப் பாதுகாப்பைப் பெற்றதன் மூலம், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்திய அரசியலில் ஒரு உன்னத இடத்தை அடைந்தது மட்டுமல்லாமல், "சமூகநீதி காத்த வீராங்கனை" என்று போற்றப்படுகிறார்.

டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பல்வேறு சாதனைகளை அங்கீரிக்கும் வகையில், சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும், அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கின.

திராவிடக் கலாச்சாரத்தையும் தமிழ் மொழியினையும் பேணிப் பாதுகாத்து மேம்படுத்துவதில் அவர் காட்டும் ஆர்வம் போற்றுதலுக்குரியது. இருப்பினும் அவரது புகழ் தமிழக எல்லைகளைக் கடந்து செல்கிறது. அவரது புத்திக் கூர்மையும், மகத்தான மனிதாபிமானமும், மன உறுதியும் இலட்சக்கணக்கான இந்தியர்களின் இதயங்களில் அவருக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. தன்னிகரற்ற அவரது சாதனைகள் இந்த இளம் வயதில், அவரை நிர்வாகத் துறையில் ஒரு கதாநாயகியாக உயர்த்தியுள்ளது.

நிகரற்ற முற்போக்கு எண்ணங்கள், ஏராளமான தீர்க்க தரிசனம், மகத்தான அர்ப்பணிப்பு, ஏழை எளியோரின்



ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை தேவை மகிழ்ச்சி தேவை இந்தத் தேவைகளுக்கு அடிப்படை வளரவும் வாழவும் தடையில்லாமல் இருப்பது தான்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின் நலன்களைக் காப்பாற்றி அவர்களை மேம்படுத்தப் பாடுபடுவோம்.

முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்யும் உள்ளம், அதிசயிக்கத் தக்க 'அளவிலுள்ள கிரகித்துக் கொள்ளும் தன்மை ஆகியவற்றால் பிரம்மிக்கத்தக்க உன்னத நிலையை அடைந்தார். இந்தக் காரணங்களுக்காக, பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை, இவ்வாண்டுக்கான ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்க, ஒருமனதாக தீர்மானித்தது.

**விழா நிகழ்ச்சிகள்**

தமிழக அரசியல், பொருளாதார, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கி, சிறந்த சேவை புரிந்தமைக்காக, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, கேரள மாநில திருவனந்தபுரத்தில் உள்ள பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய ராஷ்டிரிய பீஷ்மாச்சாரிய விருது வழங்கும் விழா 21.11.94 அன்று மாலை 6 மணிக்கு சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இரண்டு கிலோ எடையுள்ள இவ்விருது தங்கமுலாம் பூசப்பட்டது. அத்துடன் ரூ.25,000 ரொக்கப் பரிசும் கொண்டது.

இவ்விருதினைப் பெறுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மாலை 6 மணிக்குக் கலைவாணர் அரங்கத்திற்கு வந்தார். கேரள மாநில வழக்கப்படி, கேரளத்துப் பெண்கள் கைகளில் தீபம் ஏந்தியும், வண்ணக் குடைகளைப் பிடித்தும், மாண்புமிகு முதலமைச்சரை வரவேற்றனர். கலைவாணர் அரங்கின் வாயிலில் நான்கு யானைகள் அவரை வரவேற்றன.

பலத்த கரகோஷத்திற்கும், வாழ்த்தொலிகளுக்கும் இடையே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேடைக்கு வந்தார்.

தமிழ்நாடு மலையாளிகள் சங்கத் தலைவரும் அறக்கட்டளையின் ஆயுள்கால உறுப்பினருமான திரு. புருஷோத்தமன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுவதற்கான காரணங்களை விளக்கும் பாராட்டிதன்,ழ, அறக்கட்டளையின் உறுப்பினர் டாக்டர் சி.வி. மோகன் போஸ் படித்தார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு கேரள கலாச்சார மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு டி.எம். ஜேக்கப் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் 1994-ஆம் ஆண்டுக்கான "ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய விருதை வழங்கினார்.

மாண்புமிகு கேரள மாநில உற்பத்தி வரித்துறை அமைச்சர் திரு எம்.ஆர். ரகு சந்திரபால் மாண்புமிகு முதலமைச்சரிடம் "ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரிய" விருதுடன் கூடிய பரிசுத் தொகை ரூ.25,000-ஐ வழங்கினார். அதையடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

விருதுடன் வழங்கப்பட்ட ரூ.25,000-ஐ, கேரளாவிலுள்ள அநாதைக் குழந்தைகள் இல்லமான "ஸ்ரீசித்ரா ஏழைக் குழந்தைகள் இல்லத்துக்கு" நன்கொடையாக வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

இவ்விழாவிற்குப் பொன்னார ஸ்ரீதர் அறக்கட்டளை செயல் தலைவர் திரு பி. மாதவன் நாயர் முன்னிலை வகித்தார். இந்த அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் திரு கே.சி. கோபால கிருஷ்ணன் நாயர் அறிக்கை படித்தார். அறக்கட்டளை இயக்குநர் திரு தாமோதரன் பொட்டி, பொதுச்செயலாளர் திரு கே.வி. நாயர் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். பேராசிரியர் முரளிதரன் நாயர் நன்றி நவில, நாட்டுப்பண் இசைக்க, விழா இனிது நிறைவுற்றது.





## படமும் செய்தியும்

ஆந்திர மாநிலத்திலிருந்து டெல்லி செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பூச்செண்டு அளித்து வரவேற்று அன்புடன் வழியனுப்பி வைத்தார். (22.11.94)

மறைந்த அன்னை இந்திராகாந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், "தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி"யைப் படிக்க, தலைமைச் செயலக ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். (19.11.94)







## தமிழகம் முழுவதும் மாசுத் தடுப்புப் பகுதியாக அறிவிப்பு — 36 இடங்களில் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

# மாசுக் கட்டுப்பாடு வாரியப் புதிய கட்டடம்: மாண்புமிகு முதல்வர் திறந்துவைத்தார்

**சென்னையில்** ஏழரைக் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியக் கட்டடத்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை கிண்டி அண்ணா சாலையில் ஸ்பிக் நிறுவனம் அருகே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைமை அலுவலகக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடம் 6 மாடிகள் கொண்டது. கட்டுமானச் செலவு 7 கோடியே 56 இலட்சம் ரூபாய்.

இந்தப் புதிய கட்டடத்தின் திறப்பு விழா 30.11.94 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் திரு. சி. தங்கராசு, உறுப்பினர்செயலாளர் திரு ரங்கசாமி, கட்டடத் தலைவர் திரு நாராயணராவ் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை வரவேற்றனர்.

புதிய கட்டடத்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்தார்.

திறப்பு விழா முடிந்ததும், விழாவுக்கு வந்த பிரமுகர்கள் இருந்த பக்கம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்



வந்தார். மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்ததும் அவர்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கையை அசைத்து அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

விழாவில், மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. எஸ்டி. சோமசுந்தரம், திரு ஆர்.எம். வீரப்பன், திரு இ. மதுசூதனன், திரு டி. ஜனார்த்தனன், திரு சத்தியமூர்த்தி, திரு எம். சின்னசாமி, திரு அமா. பரமசிவன், திரு டிஎம். செல்வகணபதி, திரு டி. ஜெயக்குமார் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு அரிபாஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இந்த வாரியம் கீழ்க்கண்ட முக்கியப் பணிகளைச் செய்கிறது.

- ☆ நீர் மற்றும் காற்று மாசுபடுதலைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் நீக்குவது பற்றி விரிவாகத் திட்டம் தீட்டுதல்.
- ☆ நீர், நிலம் மற்றும் காற்று மாசுபடுவது பற்றிய பிரச்சினைகள் மற்றும் அதனைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் நீக்குவது சம்பந்தமான ஆய்வு மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவித்தல், மேற்கொள்ளுதல் மற்றும் கலந்து கொள்ளுதல்.
- ☆ வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு செய்யவும் மற்றும் வரைபடங்கள் விளக்கக் குறிப்புகளை மேம்படுத்தும் பொருட்டு மறுபரிசீலனை செய்தல்.
- ☆ வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரத்திலிருந்து வெளிமண்டலத்தில் விடப்படும் வாயுக் கழிவுகள் ஆகியவற்றிற்கு வரைமுறைகளை விதித்தல், மாற்றியமைத்தல் மற்றும் நீக்குதல்.
- ☆ தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களைச் சேமிக்க மற்றும் வெளியேற்ற இடங்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணித்தல்.
- ☆ வடிகால் கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளின் மாதிரிகளைச் சேகரித்து குறிப்பிட்ட தன்மைகளைப் பரிசோதனை செய்தல்.

தொழிற்சாலைகள் — அவைகளின் மாசுபடுத்தும் அளவைப் பொருத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. புதிய மற்றும் ஏற்கெனவே இயங்கும் தொழிற்சாலை நீர் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சட்டங்களின் கீழ் வாரியத்திடம் இசைவு பெற வேண்டும். அபாயகரமான கழிவு



களை உண்டாக்கும் தொழிற்சாலைகள் போக்குவரத்து, கையாளுதல், சேமிப்பு மற்றும் வெளியேற்றுவதற்கு வாரியத்திடம் இருந்து அங்கீகாரம் பெற வேண்டும்.

**தமிழகம் முதுவதும் மாசுத் தடுப்புப் பகுதி**

வாரியம் கழிவுநீர், வெளிக் காற்றின் தரம் மற்றும் வாயுக் கழிவுகளின் வரையறைகளை நிர்ணயித்துள்ளது. தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுத் தடுப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரியம் தனது பணிகளைப் பகிர்ந்தளித்து, மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு அதிகாரங்களை ஒப்படைத்துள்ளது. வாரியத்தின் இசைவைக் கோரும் தொழில் முனைவர்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். அவை அங்கு பரிசீலனை செய்யப்பட்டு, தலைமை அலுவலகத்திற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகிறது. வாரிய இசைவு காலமுறைப்படி புதுப்பிக்கப்பட வேண்டும். அரஞ்சு மற்றும் பச்சைப்பிரிவுத் தொழிற்சாலைகளின் இசைவை புதுப்பிக்கும் அதிகாரத்தை மண்டல அலுவலகத்திலுள்ள இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கட்கு வாரியம் பகிர்ந்தளித்துள்ளது.

வாரியம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சாதனங்களை அமைக்குமாறு எல்லாவகைத் தொழிற்சாலைகளையும் இடைவிடாது மிகக் கண்டிப்பாக வலியுறுத்தி வருகிறது.

**பொது சுத்திகரிப்பு நிலையங்கள்**

தோல் பதனிடும் மற்றும் சாயத் தொழில் பிரிவில் உள்ள சிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை இவ்வகைத் தொழிற்சாலைகள் தொகுதியாக இருக்கும் இடங்களில் இவைகள் உண்டாக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மிகப் பெரிய அளவில் திட்டங்களை அமைக்கும் புது முயற்சியில் வாரியம் ஈடுபட்டுள்ளது. மேற்கூறியுள்ள இரண்டு தொழிற்பிரிவுகளுக்கு மாநிலத்தில் 36 மையங்களில் இதுபோன்ற பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும்.

சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.



. டாக்டர் எம்.ஜி.ஆர்.



# மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரிய முயற்சியால் தஞ்சை அரண்மனை வளாகம் புதுப் பொலிவு பெறுகிறது!



16-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட தஞ்சாவூர் அரண்மனை பின்னர் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் சில மாறுதல்கள் அடைந்து தமிழகத்திலேயே சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் இதுநாள்வரை பழங்காலக் கட்டடக் கலையை நினைவுகூரப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற ஒரு நினைவுச் சின்னமாகும். இதில் 1980-ஆம் ஆண்டு முதல் பல்வேறு பகுதிகள் சிதைந்து அரண்மனையின் அழகு அழிந்து விடுமோ என்று தஞ்சை மக்களும், தமிழக மக்களும் அஞ்சிய நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1992-ஆம் ஆண்டு கட்டடக் கலை வல்லுநர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக்குழு அமைத்து தஞ்சாவூர் அரண்மனையில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கவும், அதன் சிறப்பைப் பாதுகாக்கவும், என்ன செய்ய வேண்டுமென்று, உயர்மட்டக்குழுவின் அறிக்கையைப் பெற்று, அரண்மனையின் பல்வேறு பகுதிகளையும் எவ்வளவு செலவு ஆனாலும் புதுப்பிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில், தற்பொழுது ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பில் அரண்மனை புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

தஞ்சாவூர் அரண்மனை புதுப்பிக்கும் பணியின் முதல் கட்டமாக ஆயுதக் கோபுரம், மணி மண்டபம், சார்ஜா மாடி மற்றும் மராட்டியர் தர்பார்ஹால் ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றைப் புதுப்பிக்கும் பணியில் இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையும், லக்னோவில் உள்ள இன்டாக் கலை நுட்ப நிறுவனமும் மிகச் சிறப்பாகப் பணியில் ஈடுபட்டுள்ளன.

அரண்மனை வளாகத்தில் மிகச் சிறப்பான பகுதியாக விளங்கும் நாயக்கர் கால இந்திரா மந்திரம் எனும் அழகுக் கோபுரம் (ஆயுதக் கோபுரம்) புதுப்பிக்கும் பணி ரூபாய் 15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, கோபுரத்தின் வெளிப்பகுதி முழுவதும் இரசாயன முறைப்படிச் சுத்தம் செய்யப்பட்டு, பழங்கால முறைப்படி அம்மியில் அறைத்த கலவையை, மிக நுண்ணிய அளவில் தகுந்த வண்ணப்படி வெளிப்பகுதி முழுவதும் பூசப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் எவ்வித வெடிப்புகளும் ஏற்படுவது தடுக்கப்படுவதுடன் அழகும் கூடியுள்ளது.

இதேபோல் இக்கோபுரத்தின் உட்பகுதியிலும், வெளியிலும் இருந்த சிதைந்த சுதை உருவங்கள் வல்லுநர்களைக் கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஆயுதக் கோபுரத்தின் உட்பகுதியில் இருந்த மர உத்திரங்கள் புதிதாக மாற்றப்பட்டுள்ளன. கோபுரத்தின் மேல் பகுதி

யில் அமைக்கப்பட்டுள்ள கலசம் இரசாயன முறைப்படிச் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் கவிழ்ந்த தாமரைப் பூ போன்ற வடிவமும் சிதைந்திருந்தது சீர மைக்கப்பட்டு அழகுப்படுத்தப்பட்டுள்ளது. கோபுரத்தின் பல்வேறு அடுக்குகளில் இருந்த கதவு ஜன்னல்களும், மரவேலைப்பாடுகளும், பழங்கால அலங்காரங்களும் அதே முறையில் அமைக்கப்பட்டு, ஆயுதக் கோபுரத்தின் அழகிய தோற்றம் அனைவரையும் கவரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஏழு மாடிகளைக் கொண்ட "தொள்ளக் காது" மண்டபம் என்று அழைக்கப்பட்டு வந்த 'மணிமண்டபம்' ரூபாய் 10 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மேற்கொள்ளும்போது - இம்மண்ட பத்தின் கீழ்த்தளம் 15 அடி ஆழத்திற்கு மண் ணால் மூடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, கீழ்த்தளத்திலிருந்து மண் நீக்கப்பட்டு அதன் தூண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அந்த மண்ணை நீக்கும்பொழுது பழங்காலப் பல்வேறு பீங்கான் கலைப்பொருட்கள் கிடைத்துள்ளன. மற்றும் இந்த மண்டபத்தின் மேல் பகுதியில் முளைத்திருந்த செடி கொடிகள் அகற்றப்பட்டு, சிதைந்த சுவர்க்காறைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

அரண்மனை வளாகத்தில் மற்றுமோர் சிறப்புடைய சார்ஜா மாடி எனப்படும் ஐந்து மாடிக் கட்டடமும் ரூபாய் 44 இலட்சம் மதிப் பீட்டில் புதுப்பிக்கத் திட்டமிட்டு முதற்கட்டப் பணியாக அவற்றின் குறுக்காக இருந்த தேவையற்ற தடுப்புச் சுவர்கள் அகற்றப் பட்டுள்ளன. சுவர்க் காறைகள் முழுவதும் அகற்றப்பட்டு அவற்றைப் புதுப்பிக்கும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கலையழகுடன் கூடிய மராட்டா தர்பார் மண்டபமும் சீரமைக்க ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிட்டு, அவற்றில் உள்ள அழகிய சுதை உருவங்கள், தொன்மையான ஓவியங்கள் முதலியவை லக்னோவில் உள்ள இன்டாக் நிறுவனம் மூலம் இரசாயன முறைப் படிப் புதுப்பிக்கப்படுகின்றன.

இந்த மண்டபத்தில் உள்ள பழுதடைந்த தூண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மேல் தளத்தில் இருந்த செடி, கொடிகள் அகற்றப்பட்டுள்ளன. மேற்கண்ட அனைத்துப் பணிகளுக்கும் ரூபாய் 85 இலட்சம் மதிப்பில் தேக்கு மரங்கள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும், வருங்காலத்தில் அரண் மனை வளாகம் தூய்மை காக்கப்பட நவீன முறையில் வடிகால் வசதி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் யாவும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளதை யொட்டி, கூடுதலான பணியாளர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும், வெளி மாவட்டங்களிலிருந்து வரவழைத்து இரவு பகலாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சைக்கு உலக அளவில் பெருமை சேர்க்கும் பெரிய கோவிலைப்போல், தஞ்சாவூர் அரண்மனையும் புகழ்பெற்று இந்தியாவுக்குப் பெருமை சேர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்டுள்ள மாபெரும் பணியாகப் பழம்பெருமை வாய்ந்த தஞ்சை அரண்மனை பொலிவு பெறுகிறது.



**கவிதை**

*கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து - இலக்கியம் வளர்ந்து - அதை மக்கள் உணருகின்ற நேரத்தில் தான் தோன்றும்.*

*எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போது தான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக - கவிதையாக அது திகழும்.*

*-பேரறிஞர் அண்ணா.*







# பாரதி சில நினைவுகள்

## "சாதி மதங்களைப் பாரோம்"!

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேண்டும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராயப் பேதப்படுவார். வீட்டின் சமையலறையில் செல்லம்மா 'மடி'யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து கை, கால் கழுவி நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டு விடுவார். 'பத்து' தொட வேண்டாம்! என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில் இவரது பேச்சே உயர்ந்து நிற்கும். செல்லம்மா பேசாமல் இருந்துவிடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறு மொழியில்லாமல் ஒப்பி விடுவார். சாதி, மதம் ஒன்றையும் பார்க்க மாட்டார். வாயால் பாடுவதைப் போலவே, நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும் காட்டி விடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார். யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

- 'பாரதி நினைவுகள்' என்னும் நூலில் திருமதி யதுகிரி அம்மாள்.

## காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒரு சமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். 'நகைத்துப் பயனில்லை, உங்களால் முடியு மானால் இயற்றுங்கள் பார்க்கலாம்' என்றார் ஒரு புலவர். 'இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்' என்று கூறி, அப்படியே மாலையில் கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப்பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றி னர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் கிடைத் துள்ளது.

இப்பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி.விசுவநாதன் 1920-இல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரித்திரத்திலும், திஜ.ர. அவர்கள் 1940-இல் வெளியிட்ட 'புதுமைக் கவி பாரதியார்' என்ற நூலிலும் காண்கிறோம்.

"பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன், கௌ மாரன் ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பர் நூர்க் கெளியசிங் காரன் எழில்
பண்ணு மருணாசலத் தூரன்."

- ஆதாரம்: திரு ரா.அ.பத்மநாபன் தொகுத்த 'பாரதி புதையல்' என்னும் நூலிலிருந்து.

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

கிசான் விகாஸ் பத்திரம்

உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

2%

சிறப்பு ஊக்கத்தொகை.







தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DTS/94

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு




# அறநெறி முதற்று!

–நீதிபதி மு.மு. இஸ்மாயில்

**1995-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில், தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதையொட்டி, புலவர் பெருமக்கள் குறித்த கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகின்றது. அந்த வகையில், அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டும் வகையில் 'அறநெறி முதற்று' என்னும் கட்டுரை இங்கே இடம் பெறுகின்றது.**

உலகில் உள்ள நாடுகள் ஆளப் பெறும் முறைகளால் பல்வேறு பட்டனவாக இருக்கின்றன. சில நாடுகளில் ஜனநாயக முறை நிலவுகின்றது; வேறு சிலவற்றில் முடிமன்னராட்சி நடைபெறுகின்றது; இன்னும் சில நாடுகளில் சர்வாதிகார ஆட்சி முறை கோலோச்சுகின்றது.

இத்தகைய வேறுபட்ட ஆட்சி முறை காரணமாக நாட்டு மக்களுக்கும், ஆட்சி பீடத்தில் இருப்பவர்கட்கும் இடையே உள்ள உறவு முறைகள் வேறுபட்டுக் காணப்படுகிறது; இவ்வாறு பரவலான மூன்று ஆட்சி முறைகளைக் குறிப்பிட்ட போதிலும் ஒரே ஆட்சி முறை நடைபெறும் பல நாடுகட்கும் இடையே கூட வேறுபாடுகள் இருப்பதனைக் காண்கிறோம்.

இவை அனைத்துக்கும் காரணம் அந்தந்த நாட்டின் சரித்திரமே கால ஓட்டத்தில் சரித்திர வரலாற்றில் என்னென்ன மாறுதல்கள் அவ்வப் பொழுது தோன்றின என்பதனை உலக அறிவு விசாலமாகப் பரந்திருக்கும் இன்றைய நிலையில் நாம் புரிந்து கொள்கிறோம். எனினும் ஒவ்வொரு நாட்டிலும் இன்று அமைந்திருக்கும் ஆட்சி முறையின் சரித்திரம் வெவ்வேறானதாகத்தான் அமைந்திருக்கின்றது.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியால், உலகில் உள்ள பல நாடுகளுக்கும், இடையே உள்ள இடைவெளி குறுகி விட்டது. உலகின் ஒரு பகுதியில் இருந்து வேறொரு பகுதியை விரைவிலேயே சென்று அடைந்துவிட முடியும், என்னும் செய்தி ஒருபுறம் இருக்க உலகின் ஒரு பகுதியில் நடக்கும் நிகழ்ச்சியை, அதே சமயத்தில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பவர்களும் பார்க்க முடியும் என்றும் அறிகிறோம். இவ்வளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற நிலையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னால் ஒவ்வொரு நாட்டிலும் அரசாட்சி முறை எப்படி இருந்தது? அது கால ஓட்டத்தில் எத்தகைய மாறுதல்களை எல்லாம் அடைந்து இன்றைய நிலையை எய்தி உள்ளது என்பதனை எண்ணிப் பார்ப்பது கூட மிக இலகுவாக இருக்க முடியாது. எனினும் ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்திலும், பொதுவாக உலக சரித்திரத்தில் பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை படிப் படியாகவே பலமுள்ள ஒருவன், ஒன்று சேராமல் இருந்த ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆட்படுத்தி, இறுதியாக அவர்கள் அனைவர்க்கும் தானே தலைவன் அல்லது அரசன் என்று ஆனதைக் காண முடியும்.

மிகச் சுருக்கமாகப் பார்க்கப் போனால் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் சேர்ந்து வாழ்கின்ற பலர் ஒவ்வொருவரும் தம்தம் நலனிலேயே கருத்துச் செலுத்திக் கொண்டிருந்த காலத்தில், ஒருவருடைய நலனுக்கு மற்றவர்கள் முரணாக அமைய, அவ்விருவரும் தங்களுக்குள் அமைந்த இம் முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு வழியைத் தேடிக்கொள்ள நேரிட்டது. எல்லாற்றுக்கும் முதன்மையாக அமைந்திருப்பது ஒவ்வொருவரும் தம் நலனைக் காத்துக் கொண்டு வாழவேண்டும் என்பதே ஆகும்.

இவ்வாறு இயற்கையாகவே அமைந்த முதன்மைத் தேவையின் கர்ரணமாக முரண்பாடு உடைய இருவர்க்கு இடையே, பலப் பரீட்சை தோன்றும் என்பதும் இயல்பானதே. இருவரில் ஒருவன் மற்றவனை விட பலசாலியாக இருப்பானேயானால், அவன் அம் மற்றவனை ஒழித்துவிட, அவன் மட்டில் தனித்து நிலைத்து

நிற்கும் வாய்ப்பு உண்டாகி விடுகிறது.

இருவர் மட்டுமே இருக்கிற சூழ்நிலையில் இப்படி நிகழுமென்றால் பலபேர் இருக்கும் சூழ்நிலையில் எப்படி மாறுபடும் என்பதனை உணர்ந்து கொள்வது இலகுவே ஆகும்.

அவர்கள் அனைவர்க்கும் ஏதோ ஒன்றுதான் முக்கியம் என்று படுமானால் அவர்கள் அனைவரும் முரண்படுதல் இன்றி ஒன்றுபட்டு வாழ இடம் உண்டு. மாறாக எது முக்கியம் என்பதில் அவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுமானால் அவர்களில் ஒத்த கருத்துடையவர்கள் ஒரு குழுவாக, பிறர் பிறிதொரு குழுவாகப் பிரிய நேரிடும்; அதுபோலவே பல குழுக்களாலான பிரிவுகள் தோன்றவும் கூடும்.

இப்பிரிவினர்க்கிடையில் மோதல் உண்டாக, எப்பொழுதுமே இறுதியாக, வெற்றிப் பெருமிதத்தில் தலை நிமிர்ந்து நிற்பது ஒரு பிரிவு ஆகத்தான் இருக்கும் என்று சொல்வதற்கும் இல்லை.

எனவே, பிரிவினர்களுடைய பலத்திற்கேற்ப இவர்களே கூட்டணிகளாகச் சேர்ந்து இரண்டு அல்லது மூன்று அணிகளாகித் தம்மிடையே உள்ள முரண்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். இதன் முடிவு ஒரு குழுவோ அல்லது அணியோ பலம் பெற்று மற்றதனை மற்றவற்றை அடக்கி ஆளக் கூடிய நிலைமை உண்டாகக் கூடும்.

இதன்றியும், இத்தகைய சூழ்நிலையில், ஒரு தனி மனிதன் அசாதாரணமான உடல்வன்மையும் அறிவுக் கூர்மையும் பெற்றவனாக இருக்க முடியும். அத்தகையவன் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கும் பிரிவினரில் ஒருவரை, மேற்பட்டவரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு மாறுபட்டவரை அடக்க முயல, இவனுடைய கை ஓங்கவும் கூடும்.

அவனே அக் கூட்டத்தார் அனைவர்க்கும் தலைவனாகி அவர்கள் அனைவரையும் ஆள்பவனாக ஆகிவிடலாம். அவனுடைய ஆட்சி நீதியின் அடிப்படையில் நடப்பது அன்றா என்பது எந்த அளவிற்கு அவன் தன் கீழ் வாழும் மக்களின் நன்மை தீமைகளைத் தன்னுடையதாகவே கருதி அவர்களோடு, நெருங்கிப் பழகி அவர்களது நன்மை தீமைகளில் முழுப்பங்கு எடுத்துக் கொள்வதைப் பொறுத்தது. அத்தகையவன்தான் அவர்களுக்குத் தலைவன் ஆக முடியும்.

★ குறள் ஓர் அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.



பண்டைக்கால பழக்கப்படி அவன் அக் கூட்டத்தின் அரசனாகவோ, மன்னனாகவோ ஆகிறான்.

பூவுலகின் நெடும் பரப்பின் காரணமாகவும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதால் உண்டான இடர்ப்பாட்டின் காரணமாகவும் இத்தகைய மன்னராட்சிகள் ஆங்காங்கு தோன்றலாயின.

எந்த அரசு வன்மையில் உயர்ந்து நிற்கிறதோ, அது அருகில் உள்ள நலிந்த அரசைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயலும். இது முடியக் கூடியதே. சாதாரண மனித இயல்பும் இதுவே.

இவ்வாறாக வீரத்திலும், மக்களுடைய அன்பைப் பெறுவதிலும் வெற்றி கண்ட ஒருவன் தன்னை விட நலிந்த அண்டை அரசினைத் தன்னுடையதாக்கிக் கொண்டு இரண்டினுக்கும் தானே அரசன் ஆதலும் உண்டு. அன்றி அம் மெலிந்த அரசினைத் தன் வயப்படுத்தி அதன் அரசனைத் தன் கீழ் அடங்கி வாழும் சிற்றரசனாக விடுத்து, அவனிடமிருந்து கப்பம் பெறும் சக்கரவர்த்தி ஆவதும் இயல்வதே.

இவ்வாறாக, ஒரு ஆட்சி, அரசநெறி என்பது எப்படி உண்டாயிற்று என்பதனைக் கடந்தகால நிகழ்ச்சிகளை, சரித்திர நூல்கள் படிப்பதன் மூலமாக, யூகத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. முடியாட்சி என்பது வரவேற்கத் தக்கதாகப் பெரும்பாலான உலக மக்களால் கருதப் பெறுவதில்லை.

மாறாக, தங்களை ஆள்பவர்கள் தங்கள் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர்.

எனவேதான் முடியாட்சி, மக்களாட்சி என்ற பிரிவினையில், மக்களாட்சி நிலவும் நாடுகள் தாம் உலகில் பேரெண்ணிக்கையில் இருக்கின்றன.

மக்களாட்சி என்ற கருத்து ஆணிவேராக இருக்க அத்தகைய ஆட்சி எப்படிச் செயல்பட வேண்டும் என்பதும், அந்த ஆட்சி நடைபெறுவதற்கு எவ்வெவ் அங்கங்கள் அமைய வேண்டும் என்பதும் அவ்வந் நாட்டு மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைவனவே ஆகும்.

இவை பற்றிய விரிவான செய்திகள் நாம் யாவரும் இன்று நன்கு அறிந்தனவே. காரணம் என்னவெனில் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக உலகம் மிகவும் சுருங்கிப்போக, உலகம் முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் உடனுக்குடன் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் மிகுதியும் இருப்பதே.

எனவே அவற்றை நாம் விட்டு, பண்டைத் தமிழகத்தில் நம்முடைய முடி மன்னர்கள், தம் ஆட்சியை எப்படி நடத்தினர். அவர்களால் பாராட்டப்பெற்ற, தன்னலமற்ற, உலகின் நன்மைகளையே தனி



தமிழ் நலன், தமிழின் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

. டாக்டர் எம்.ஜி.ஆர்.

நோக்கமாகக் கொண்ட தமிழ்ப் பெருங் கவிஞர்கள், தம்முடைய படைப்புகளின் மூலம் தமிழ் மன்னர்களின் ஆட்சியின் இலக்கணம் யாது என்று அறிவுறுத்தினார்கள் என்றும் அறிய வேண்டும்.

அத்தகைய புலவர் பெருமக்களை அரசர் பெருமக்கள் எவ்வாறு மதித்தனர். எவ்வாறு அவர்களுடைய அறிவுரைகளுக்குச் செவி சாய்த்தனர் என்பனவற்றை எல்லாம் காண்பதுதான் இக்கட்டுரைக்குப் பொருத்தமான கருத்தாக அமைகிறது.

அரசர் உறுதிச் சுற்றம் என்ற பெயரில் ஒரு குழு இருந்தது. இக்குழுவினர் பெரும்பாலும் அரசனுடைய சொந்தப் பணிகளுக்கு உதவுபவர்களேயாம்.

இக்குழு நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலாளர், மருத்துவர், நிமித்திகர் என ஐவகையினரைக் கொண்டது.

உறுதிச் சுற்றம் என்ற தொடர்ச் சிறப்பு நோக்கத் தக்கது. இவ்வனைவரும் மன்னனை நெருங்கி இருப்பவர்கள். உண்மையில் அரசனுடைய அந்தரங்கங்களை முழுமையுமாய் அறிந்தவராகவே இருப்பர்.

மடைத் தொழிலாளர் அரசனுக்கு உணவு தயாரித்துப் பரிமாறுபவர்கள். அரசனுடைய முழு நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆனவர்களாக அவர்கள் இருந்தாலன்றி, அத்தகையோர் அரசனுடைய இறுதிக்கும் காரணமாதல் கூடும்.

மருத்துவர் இவர் நிலையும் அத்தகையதே. அரசனுடைய உடற்கூறு நன்கு அறிந்தவர். வந்த நோய் இன்னது என நாடி, அது வந்த விதம் நாடி, அது தணிக்கும் வாய்ப்புகளை நாடி நன்கு பரிகாரம் செய்வார். அரசன் உறு நோய் இன்னதென்றும் பலரறிய வெளிப்படுத்தாமை வேண்டும். மக்கள அறிய நேரின் தகாத ஆசைக்கும், முறையில்லா நோக்கங்களுக்கும், பெரும்பொருள் பெறும் அவாவிற்கும் இடம் ஏற்பட்டுவிடும்.

அந்தணாளர் • ஜோதிடம் நன்கு கற்றவர் நாள்கோள் நிலை அறிந்து நல்லன கெட்டன நிகழும் என முன் கூட்டியே கூறத்தக்க கடப்பாட்டினர், நிமித்திகர் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகள், சகுனங்கள் பலன் அறிந்து கூறுபவர்.

அரசியலவையில் அரசர்க்கு உறு துணையாய், அமைபவர் ஐம்பெருங் குழுவினர் (மணிமேகலை (1-17) ஆட்சி, நன்கு நடைபெறப் பெரிதும் துணை நிற்பவர் இக்குழுவில் மந்திரியார், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் சாரணர் ஆகியோர் இடம் பெறுவர்.

உறுதிச் சுற்றத்தில் நிமித்திகன் இடம் பெறுவதையும், ஐம்பெருங் குழுவில் புரோகிதர் இடம் பெறுவதனையும் சற்று கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இவை அன்றியும் அரசர் பக்கம் என்றொரு தொடர் காணப் பெறுகிறது.

'ஓதல், வேட்டல், ஈதல், காத்தல்
தண்டம் செய்தல்'
(தொல். பொருள் 75)

இங்கும் கூட ஒவ்வொரு' சொல்லும் கருத்துச் செறிவுடன் இருப்பதைக் காணலாம். ஓதல் என்ற சொல் பெரும்பாலும் கல்வி பயிலுகையையே குறிக்கும். இளஞ் சிறுவனாக இருக்கும்போது குருகுலத்தில் கற்பதனை பொழுதுபோக்குக்காகப் படிப்பதனை, பின்னர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்க இருப்பதனால் ஆட்சி முறை, நீதி வழங்கல் முதலானவற்றில் பயிற்சி பெற அவ்வத் துறை நூல்களைக் கற்பதனையும் குறிக்கும். பிறநாடுகள் குறித்த செய்தி அறிவும் இதனுள் அடங்குவதே.

வேட்டல் - வேள்வி செய்தல்.

முற்காலத்து அரசர்கள் ராஜசூயம், அசுவமேதம் முதலிய வேள்விகள் நடத்தினர் என நூல்கள் வழி அறிகிறோம்.

. காத்தல் என்ற சொல், நாட்டு மக்களையும் நாட்டையும் காக்கும் தொழிலில் கண்ணாக இருப்பதனைக் குறிக்கும். தண்டம் செய்தல் என்ற சொல்லோ, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கேடு சூழ்வாரைச் சிறையிட்டு, அவர் செய்த தீமை அவற்றின் விளைவு இவைகட்கேற்ப விதிக்கும் தண்டனையைக் குறிக்கும்.

அரசர்களுக்கு அறுகுணங்கள் இருக்க வேண்டும் என்று கூறப் பெற்றுள்ளது. இரகு வம்ச நூற்படி அவை-

'சந்தி, விக்ரகம், யானம், ஆசனம்
துவைதம், ஆசரயம் என்பனவாம்'

(சர்க்கம் 8, ஸ்லோகம் 21)

தமிழ் நூல்களில் நட்பு, பகை, செலவு, இருக்கை, கூடினாரைப் பிரித்தல், பிரிந்தாரைக் கூட்டல் என்பன அரசர்க்குரியன என்று காணப் பெறுகின்றது.

ஓதல், வேட்டல், ஈதல், பல்லுயிரோம்பல், படைக்கலம் பயிறல், பகைத் திறம் தேறுதல் என்னும் ஆறும் அரசர்க்குரியன என்று திருக்குறள் 384-ன் பரிமேலழகர் உரை கூறும்.

முனை முகத்து, போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கி, முன் நின்று நடத்திச் செல்லும் பொறுப்பு தானைத் தலைவர்க்கு உள்ளதேனும், அரசனும் அப்பொறுப்பை ஏற்பான் என்று பகிற்றுப் பத்து கூறும். அதனாலேயே அவன் சான்றோர் மெய்ம்மறை எனப்படுவான் என்பர்.

'ஆக அரசுப் பொறுப்பு ஏற்பான்

யானையும் இரதமும், இவுளியும்,
முதலா

ஏனைய பிறவும், அவ்
இயல்பினில் அடையுற்று
ஊன் உறு படை சிலையொடு
பயிலா...'

நிற்க வேண்டும்எனக்கம்பன் (304) கூறுவான்.

முன் கூறப்பெற்ற ஐம்பெருங்குழு வினரேயன்றி எண்பேராயத்தர்என் பாரும் அரசன் ஆட்சியின் அங்க மாக உடன் இருந்தனர் என்று அறிகிறோம்.

அவ்வெண்மர்-

கரணத்தியலவர் - அரசாங்கத்தின் பல்வேறு துறைகள். அவற்றின் வருவாய், செலவீடு இவற்றைக் கண் காணிக்கும் பொறுப்பினர்.

கருமகாரர் - கரும விதிகள் அர சாங்கத்தின் பல்வேறு துறைகள், அவற்றின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்.

கனகச் சுற்றம் - அரசாங்கத்தின் மூல பண்டாரம் Treasury- முன் குறிப்பிட்ட 'கரணத்தியலவர் யாவர்க்கும் தலைமைப் பொறுப் பினர்.

கடை காப்பாளர் - அரண்மனை நாடு இவற்றின் காவல் பொறுப்பில் உள்ளவர் - Police watch and ward.

படைத்தலைவர், காலாட் படை, தேர்ப்படை இவற்றின் பொறுப் பாளர் யானை வீரர்.

இவுளி வீரர் - குதிரைப் படை

நகர மாந்தர் - குடி மக்கள் சார்பாக, அரசரால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு சிலர் வயது, அனு பவம், கல்வி அறிவு சான்றவர்

என்போர் ஆவார்.

இவை அனைத்தையும் கூர்ந்து நோக்கும்பொழுது நம் முன் னோர்கள் ஒரு நாட்டின் ஆட்சிக்கு அவசியமானவை எவை என்று நுண்ணிதின் ஆய்ந்து அதற்கு ஏற்ப, தமக்குத் துணையாக வேண்டற் பாலனர், பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர், கீழ்நிலைப் பணியாளர் ஆகிய அனைவரது

**உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவை குறைய வேண்டும். தேவையும் அவசியம் குறைய வேண்டும். அதிகமாக அவசியமும் அதிகமாக நாணயக்கேடும் ஒழுக்கக்கேடும் வளர்ந்து கொண்டுதான் போகும்.**

**-தந்தை பெரியார்**

பொறுப்பையும் வரையறுத்தனர் என்று அறிகிறோம்.

முடியாட்சி என்ற ஒன்று அக்காலத்தில் இருந்தது என்பது தவிர நாட்டின் ஆட்சிக்கு வேண் டிய பல்வேறு முறைகள், அம் முறைகளில், துறைகளில் பொறுப் பேற்று அதற்கேற்பத் தங்கள் கடமை களை நடத்திச் செல்பவர்கள் இன் றைய நடைமுறையில் இருப்பவர் களிலிருந்து பெருத்த அளவிற்கு வேறுபட்டு இருந்தனர் என்று சொல்வதற்கு இல்லை.

இவ்வாறெல்லாம் மிக நுணுக்கமா கவும் மனித இயற்கைக்கு ஏற்பவும் ஒரு வழி முறையை வகுத்துச் சென்ற நம் முன்னோரின் ஆழ்ந்த அறிவு, கூர்த்த மதி முன் எச் சரிக்கை, தவறுகள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பாது காப்பு முறைகள் நூல்கள் வழி அறி யும் நம்மை வியப்பில் மூழ்க வைக் கின்றன.

இன்று முடியாட்சிக்குப் பதிலாக மக்களாட்சி என்ற ஒன்றை வகுத் துக் கொண்டிருக்கின்றோம், என் பது தவிர பொதுவான ஆட்சி முறையின் அங்கங்களில் பெருத்த வேறுபாடு இருப்பதாகத் தோன்ற வில்லை.

இவ்வளவு விரிவான வழி முறைகள் வகுக்கப் பெற்றதன் அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்.

அதுதான் ஆட்சி அறநெறி முதற்று எல்லா நிலைகளிலும் அறம் நிலவ வேண்டும். அரசனுக்கும் பொது மக்களுக்கும் இடையே அன்பின் அடிப்படையில் மதிப்பு மிக்க ஓர் இணைப்பு இருக்க வேண் டும் என்பது.

மக்களுடைய நன்மையே மன்னனு டைய நன்மை; அதாவது அரசினு டைய ஸ்திரத்தன்மை ஆகும். இத்தகு பெருமைக்குரிய அசைக்க முடியாத நிலைக்க அறநெறியே அடிப்படை ஆகும்.

இந்தக் குறிக்கோள் நிறைவேறா மற் போகுமாயின், முன்னர் எடுத்துக்காட்டிய அத்துணைக் குழுக்களும், ஆயங்களும், முன்னேற் பாடுகளும் வீண் என்றுதான் முடியும்.

எனவே இவ்வளவு விரிவான ஒரு ஆட்சி முறையை வகுப்பதன் நோக் கமாகவும், ஆணி வேராகவும் அமைந்திருப்பது அறத்தின் அடிப் படையில்தான் அரசு மக்களுக்கு நன்மை, நீதி வழங்க வேண்டும் என்பது.

இக்கருத்தினை நமக்கு இப்போது கிடைத்திருக்கும் எல்லாப் பழந்தமிழ் நூல்களிலும் மிகத் தொன்மை யதான புறநானூற்றில் உள்ள ஒரு பாடல் மிக அருமையாக எடுத்து உணர்த்தும்-

'வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!
கடுஞ் சினத்த கொல் களிறும் கதழ்
பரிய கலிமாவும்,
நெடுங் கொடிய நிமிர் தேரும்,
நெஞ்சு உடைய புகல் மறவரும்
என
நான்குடன் மாண்டது ஆயினும்,
மாண்ட
அறநெறி முதற்றே, அரசின்
கொற்றம்
அதனால் 'நமர்' எனக் கோல்
கோடாது
'பிறர்' எனக் குணம் கொல்லாது,
ஞாயிற்று அன்ன வெந்திறல்
ஆண்மையும்,
திங்கள் அன்ன தண் பெருஞ்
சாயலும்,
வானத்து அன்ன வண்மையும்,
மூன்றும்
உடையை ஆகி...
நீ நீடு வாழிய நெடு வந்தை!'
(புறநானூறு: 55 (7-18)

(சினத்த - சினம்மிக்க; கதழ் விரைவு; பரிய நடை உடைய

கலி - செருக்கு; நெஞ்சு - ஆண் மைத் தருக்கு

புகல் - போர் விரும்பும்; மாண் டது - மாட்சிமைப் பட்டது

கொற்றம் - வெற்றி

நமர் - அரசின் உறுப்பினரான பரிசனத்தார்

கோல் கோடல் - நீதி தவறுதல்

பிறர் - பரிசனங்கள் அல்லாத பிறர் - நாட்டு மக்கள்

குணம் - அவர்கள் வழக்கில் உள்ள நியாயங்கள்; கொல்லல்- புறக்கணித்தல்)

இப்பன்னிரண்டு அடிகளில் அருமையில் சிறந்த பல கருத்துக் களைக் காண்கிறோம்.

அரசனுடைய படைமாட்சியைப் பெரிதும் விதந்து பாடும் புலவர் அவ்வன்மை எவ்வளவுதான் உயர்ந் ததாக மாட்சிமைப் பட்டதாக இருப் பினும் அரசற்கு வெற்றி அமைவது என்பது பிற நாடுகளின் மீது போர் தொடுத்து அவற்றை அகப்படுத்து வதில் இல்லை.

வெற்றி அமையும் விதம், அரசன் மேற்கொள்ளும் முயற்சிகளில் அறத்திற்கு முதலிடம் கொடுப்பதில் தான் அமையும்.

மக்களுக்கு அச்சம் எழாதவாறு காத்தல் காவலன் கடன் எனப் பெரிய புராணம் கூறும். அவற்றுள் ஒன்று பரிசனத்தார்.

இப்பரிசனத்தார் அரசனின் உறவுச் சுற்றமாக ஆட்சிப் பொறுப் பில் அமைந்துள்ள அலுவலாளர் களாக இருக்கலாம். அவர்களையே நமர் என்று இங்கு குறிக்கின்றார்.

தம்மவர் என்பதற்காகத் தவறு இழைத்த அவர்களைத் தண்டிக் காது விடுவது கோல் கோடுவ தாகும்.

'தெருளும் நல் அறமும்,
மனச்செம்மையும்
அருளும் நீத்தபின் ஆவது
உண்டாகுமோ?'
(கம்பன் 1417)

**மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.**

**- தந்தை பெரியார்**

'அறத்தினால் அன்றி அமரர்க்கும்
அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது...'
(கம்பன் 7267)

அறநெறி ஒழுகாப் பரிசனத்தால், அவர்களைத் தண்டிக்காத அர சனால் அல்லல் படும் மக்கள் அழுத கண்ணீர் அரசன் செல்வத் தைத் தேய்க்கும் படை என்று வள்ளுவர் கூறுவார்.

மேலும் 'அறநெறி முதற்றே என்று கொண்டு, கோல் ஓச்சும் அரசன், பகைவரை, தீயவரைத் தெறுதலில் ஞாயிறு போன்று வெய்யவனாக நாட்டு மக்களிடத்துப் பரிவு காட்டு தலில் திங்கள் போன்று தண்ணிய சாயலனாக, கடப்பாடு வேண்டாது, மக்கட்கு நலமே விளைவிப்பதில் பொழிவதில் வானம் போன்ற வண்மையனாக விளங்க வேண்டும் என்பார்.

இவ்வாறு அரசிற்குக் குறியீடாக விளங்கும் காரணத்தால் தான் ஞாயிறும், திங்களும் வானமும் (மழை) இளங்கோ அடிகளால் மங்கல வாழ்த்தில் சிறப்பு இடம் பெற்றன.

இவற்றை எல்லாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் பழங்காலத் திற்குத்தான் இவை பொருந்துவன, இக்காலத்திற்கு ஏலா என்று சொல்ல முடியாது என்பது விளங் கும்.

கொற்றவன் வெற்றிக்கு ஆணி வேராக இருப்பது நடுவு நிலைமை தான்; ஆட்சியின் இருக்கும் அரசன் தன் குடிமக்களுடைய நலத்திற்காகத் தாகத்தான் அரசப் பொறுப்பில் உள்ளான். அவன் தன் கடமை ஆற்றும் பொழுது, வேண்டியவர் வேண்டாதவர் என்பது இன்றி அனைவர்க்கும் நன்மை செய்ய வேண்டும். அப்படிப்பட்டவன் தான் அரசனாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவன்.

புறநானூற்றுக் காலக் கருத்து

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு' என்பது. இதன்படி மக்கள் உடம்பு ஆக மன்னன் உயிர் ஆகிறான். கம்பனோ புரட்சிகர மான கருத்து ஒன்றை அமைக்கின் றான்.

'செயிரிலா உலகினில் சென்று
நின்று வாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும்
ஆயினான்.'
(கம்பன் - 177)

என்பதுதான் அது. மக்களின் ஒருமித்த கருத்தின்படி தான் அரசு இயங்க வேண்டும் என்பது எத் துணைப் புரட்சிகரமானது என்பது முடியாட்சிக் காலத்தில் தோன்றிய கம்பன் தொடரால் நன்கு விளங் கும்.

முடியாட்சி நடைபெறும் காலத்து அமைச்சர்கள் முதலானோர் அர சனை மகிழ்விப்பதற்காக அவனுக்கு எது பிடிக்குமோ, அதனை மட்டுமே சொல்பவர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்கும் இல்லை.

மாறாக அரசனுக்குப் பிடிக் குமோ, பிடிக்காதோ என்று கரு தாது நாட்டிற்கு நாட்டு மக்களுக்கு எது நல்லதோ, அறத்தின் வழாது எதனைச் செய்ய வேண்டுமோ அதனைக் கூறி செயல்படுத்துபவர் களாகவே இருந்தனர்.

'தம் உயிர்க்கு இறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்,
வெம்மையைத் தாங்கி, நீதி
விடாது நின்று, உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார்
ஒருமையே மொழியும் நீரார்'

'நல்லவும் தீயவும், நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவன் இயல்பின்
எண்ணுவார்,
ஒல்லை வந்து உறுவன உற்ற
பெற்றியின்

தொல்லை நல்வினை என உதவும்
சூழ்ச்சியார்'
(கம்பன் - 1321, 22)

என்பனவற்றால் தெளிவாகும்.

இராமனுக்கு முடி சூட்டக் கருதி, மந்திரக் கிழவரது கருத்தையும் அறிய அவாவி அவை கூட்டிய பொழுது வருகை தந்த அமைச்சர்கள் மாண்பினைக் கம்பன் இவ்வாறு கூறுவான்.

ஆலோசனைக் கூட்டத்தில்,

"......... இராமனுக்கு அரசை நல்கி
பேதமைத்தாய் வரு பிறப்பை
நீக்குறு
மாதவம் தொடங்குவான் வனத்தை
நண்ணுவேன்
யாதுறும் கருத்து?".........
(கம்பன் 1343)

என வினவுகின்றான். இராமன் முடிசூடப் பெறுவான் என்பதனால் புரண்டு மீதிடப் பொங்கிய உவகையும், மன்னவன் பிரிவானே என்று விம்முறு நிலையும் எய்திய அமைச்சர்களுக்கு-

"இரண்டு கன்றினுக்கு இரங்கும்
ஓர் ஆ......

உவமை ஆகக் கூறப் பெறுகிறது.

மன்னும் மன்னுயிர்க்கு
இராமனின் மன்னவர் இல்லை

என்று உன்னி அவன் கருத்துக்கு இசைவு தெரிவித்தனர்.

இராமனுக்கு முடி சூட்டக் கருதிய தயாரதன் அரசர்களுக்கு ஓலை போக்கி வந்த அவர்களை விரும்பி வரவேற்று, ஆதனத் திருத்தி அவரிடை அமர்ந்து தன் கருத்தைத் தெரிவிக்கின்றான். அவன் மொழிந்தனவற்றை, அமுது என விரும்பி ஏற்றனர் அரசர்கள்; 'அத்த' 'நன்று' என்று அன்போடு அறிவித்தனர்.

"மூ எழு முறைமை நம் குலங்களை முற்று உறப் போக்கிய அப்பூ எழு மழுவாளனைப் பொழுது போக்கிய சேவகனுக்கு ஆவது இவ் உலகம். இது அறனே ஆம்" என்றனர்.

ஆனால் தயரதனோ அவர்களை நோக்கி

'மகன் வயின் அன்பினால் மயங்கி,
யான் இது
புகல, நீர் புகன்ற இப் பொம்மல்
வாசகம்
உவகையின் மொழிந்ததோ?
உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்தது
எத்தன்மையால்'
(கம்பன் 1391)

என்று வினவுகிறான்.

வேத்தவையோர் விடையாக,

'மனுக் குலத்தில் தோன்றியவனே' நின் மகனிடத்தில் மேன்மை பொருந்திய மெய்யுணர்வு, பெரியோர்ப் போற்றும் நற்பண்பு, தானம், தருமம், தகவு, ஞானம் என்றும் நிலை பெற்றுள்ளன. மேலும் அவன் சிறந்த ஒப்புரவாளன். உயிர்களிடத்து அவன் எவ்வாறு அன்புடையவானய் இருக்கின்றானோ, அவ்வாறே அவையும் அவனிடம் மிக்க அன்புடையன. ஆக அவன் அரசன் ஆதலே அறம்' எனக் கூறினர்.

அரசுப் பொறுப்பினர் இவ்வாறு அமைச்சரிடை, சார்ந்தார் இடைத் தம் கருத்தைக் கூறி அவர் கருத்தை அறிய அவாவுதல் உண்டு என்று அறியலாம்.

"தீய்ந்த திரு நகரினை முற்றும் புதுப்பிக்க ஆணை ஏவி, முன்னையினும் அழகு உடையதாக இலங்கை மாநகர் அமைத்த தச்சற்கு உதவி, 'பண்டையர், பண்டிதர், கிழவர், பண்பினர் சார்க' என ஏவி அவை கூட்டுகிறான் இராவணன்.

பின் சூழ்ச்சியின் கிழவரை நோக்கி 'இனி, செய்யத் தருவது எது' என வினவுகிறான்.

கூடி இருந்தார் தம்தம் கருத்துக்களைக் கூறுகின்றனர். இராவணன் அடுத்த போர் யாவற்றிலும் உடன் இருந்து வெற்றி ஈட்டித் தந்த, வீரத்தில் சிறந்த கும்ப கருணன் "சிட்டர் செயல் செய்கிலை. ஒருத்தன் மனை உற்றாளை மறை துறந்து சிறை வைத்தாய். புன் தொழிலால் இசை பெறல் இயலுமா? காமம் பேணும் நாம் பெற விரும்புவது கொற்றம்" என்றெல்லாம் இடித்துரைக்கின்றான். எனினும் அவன் போரிடை இராவணற்குப் பெரிதும் உதவியாக இருந்தான். அற வேட்கை வேறு பாசப் பிணைப்பு வேறு என்பதற்கு இலக்காகி நின்றான்.

இதேபோல்,

அரக்கற்கு இளையான் அடைக்கலம் வேண்டி வருகிறான் என்பதனை அறம் வளர்த்த அண்ணல் அறிகிறான்.

பின் அருகில் இருந்த நண்பரை 'இப்பொருள் கேட்ட நீர் இயம்புவீர். சரண் புக வந்துள்ள அரக்கன் நம் கைப்புகல் பாலனோ? கழியற் பாலனோ?' என்று வினவுகிறான். அவரவர்தம் கருத்துக்களை அறியப் பெரிதும் அலாவுகின்றான்.

இராமன் கருத்துக்கு இயையக் கூறுபவன் அனுமன் ஒருவன் மட்டுமே. பிறர் அவன் வரவை விரும்ப இல்லர்; அடைக்கலம் கொடுத்தல் ஆகாது எனவும் விளம்புகின்றனர். தலைவன் கருத்துக்கு மாறாகவே கூறுகின்றனர்.

எனினும் இராமன் அடைக்கலம் ஈதலின் சிறப்பைப் பெரிதும் பாராட்டிக் கூறி, பகைவனுக்கும் இரக்கம் காட்டிய புறவு ஒன்றன் கதை கூறி, 'துன்னினான் சூழ்ச்சியால் உயிர் துறக்க நேரினும் அதுவே விழுமிது என்றும், புகல் புகுவோர் பூரியர் ஆயினும் ஆர் உயிர் கொடுத்துக் காத்தலே அறநெறி' என்றும் கூறுகிறான்.

"ஈதலே கடப்பாடு" என்று இறுதியாக உறுதியாக அவன் கூறிய பின்னரே வீடணன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றான்.

ஆக அரசு பீடம் ஏறியார் அமைச்சர் பெரியோர் கருத்தினைக் கேட்டறியாது தன்னிச்சையாகச் செயல் மேவினர் இலர் என்று அறிகிறோம்.

எடுக்கும் முடிவுகள் யாவும் அறச் சார்பின ஆகவே அமைந்தன என்று நூல் வழி தெளிகிறோம்.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் அறநெறி முதற்று என்று அமையக் காண்கிறோம்.





# நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

## - மாண்புமிகு முதல்வர் ஆணை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், வேளாண்மைக்குப் பயன்படாத பாழ்பட்ட நிலங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவைகள் விவசாயத்திற்கு உகந்த நிலங்களாக மாற்றி அமைப்பதற்குத் திட்டம் ஒன்று தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்று ஏற்கெனவே கருத்து தெரிவித்து இருந்தார்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்திற்கேற்ப, தமிழக வேளாண் துறை ஏற்கெனவே திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட 'நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்' ஒன்றினையும் Danida நிறுவன உதவியோடு விரிவுபடுத்தி, நடப்பு ஆண்டு முதலாகக் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், 11,000 எக்டேர் நிலப்பரப்பினை 13.56 கோடி ரூபாய் செலவில் சீர்செய்யும் பணியினை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.**



நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக்கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை.

இன்று நமக்கு வேண்டியது அறிவு வளர்ச்சி. அறிவு வளர்ச்சி பெற்று, ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும். அறிவு ஆட்சி செய்தல் வேண்டும்.

மனிதன் உலகில் தன் சமமரியாதையை தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.

**இந்தத் திட்டத்தின்படி, DANIDA நிறுவனத்தின் உதவியுடன் 3 மாவட்டங்களில் அமைந்துள்ள 83 கிராமங்களில் செயல்படுத்தப் படவுள்ள இந்தத் திட்டம் காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டையையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரையையும், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தையும் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்படும்.**

**இம்மாவட்டங்களில், மண் அரிப்பு நிலத்தின் பயன்பாடு குறைந்து போதல் ஆகியவை வேகமாக வீசும் காற்றின் விளைவாக அதிக அளவில் நிகழ்ந்துள்ளன. புதிதாக மேற்கொள்ளப்பட இருக்கும் 'ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (Integrated Catchment Development Scheme) மூலமாக, இப்பகுதிகளில் வேகமான காற்றின் காரணமாக, மண் அரிப்பு மற்றும் நிலம் பாழ்படுதல் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தி, இந்நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல், கிணறு வெட்டுதல், மரக்கன்றுகள் வளர்த்தல் போன்ற பயன் அளிக்கக்கூடிய வேளாண் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் படும்.**

**விவசாயிகளுக்குப் பெருமளவில் பயன் தரும் இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.**

# உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தஞ்சை தயாராகிறது



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்படும் கலையழகுடன் கூடிய கட்டடம்.





தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தின் முகப்பில் திருவள்ளுவர் மண்டபம் அமைக்கும் பணி.



உலகத் தமிழ் மாநாடு தொடக்க விழா மற்றும் நிறைவு விழா நடைபெறும் தஞ்சாவூர் அன்னை சத்தியா விளையாட்டரங்கில் நவீன முறையில் விழா மேடை அமைக்கப்படுகிறது.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவு வாயிலின் ஒரு பகுதியில், மகரத் தோரணவாயில் அமைப்பதற்கான கருங்கல் சிற்பங்கள் வடிவமைக்கப்படுகின்றன.



தஞ்சாவூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது.





# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

# மாணவர் மலர் - பொதுமலர் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள்-முடிவுகள்

தமிழ்நாடு அரசு, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை 1.1.95 முதல் 5.1.95 வரை தஞ்சாவூரில் சிறப்புற நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதுவரை இல்லாத வகையில் இம்மாநாட்டில் தமிழகத்தின் எதிர்காலச் சமுதாயச் சிற்பிகளான மாணவச் செல்வங்களை முழுமையாக ஈடுபடுத்தும் வகையிலும், அவர்களது ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிக்கொணரும் வகையிலும் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் நடத்தப்பெற்றன.

இப்போட்டிகளில் பரிசு பெறும் கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டு திக்கெட்டும் மணம் பரப்பும் வண்ண மலராக ஓர் அரிய மலரை "எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மாணவர் மலராக" வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

### பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டி

பள்ளி இறுதி வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டனர். தமிழர் தம் பண்பாடு, கலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலை நயத்தை உணர்த்தும் வகையில், ஓவியங்கள் அமைய வேண்டுமென அறிவிக்கப்பெற்றது. அதற்கொப்பத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 2768 ஓவியங்கள் வரப்பெற்றன.

அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால், பட்டியலில் கண்ட மாணவர்களின் ஓவியங்கள் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை அன்றியும் பன்னிரண்டு சிறந்த ஓவியங்கள் மலரில் இடம் பெறுவதற்கெனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

கல்லூரி மாணவர்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்துகொண்டனர். தமிழர் தம் பண்பாடு, கலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, கலைநயத்தை உணர்த்தும் வகையில், ஓவியங்கள் அமைய வேண்டுமென அறிவிக்கப்பெற்றது. அதற்கொப்பத் தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 270 ஓவியங்கள் பெறப்பட்டன.

அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால், பட்டியலில் கண்ட மாணவர்களின் ஓவியங்கள் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை அன்றியும் பன்னிரண்டு சிறந்த ஓவியங்கள் மலரில் இடம் பெறுவதற்கெனவும் தெரிவு செய்யப் பெற்றன.

கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசுக்குரியதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓவியமும், பள்ளி மாணவருக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசுக்குரியதெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓவியமும், முறையே மாணவர் மலரின் மேலட்டையையும், பின்பக்க அட்டையையும் அலங்கரிக்கவுள்ளன.

### கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் முதுகலை வரை பயிலும் மாணவர்களுக்கெனக் கட்டுரைப் போட்டி அறிவிக்கப் பெற்றது. மாணவர் கட்டுரை எழுதுவதற்கென 10 பொருண்மைகள் அளிக்கப்பட்டன. தமிழகத்திலுள்ள கல்லூரிகளிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 195 கட்டுரைகள் வரப்பெற்றன. ஒவ்வொரு பொருண்மையிலும் மிகச் சிறந்த இரண்டு கட்டுரைகள், அரசு இதற்கென நியமனம் செய்த நடுவர் குழுவால், முதலாம், இரண்டாம் பரிசுக்குரியவையாகத் தெரிவு செய்யப்பெற்றன.

இக்கட்டுரைகள் அனைத்தும் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளிவரும் மாணவர் மலரில் இடம் பெறுகின்றன.

### கல்லூரி மாணவர்கள் கவிதைப் போட்டி

கல்லூரி மாணவர்களுக்கென மரபுக் கவிதை, புதுக்கவிதை எனும் தலைப்புகளில் கவிதைப் போட்டி அறிவிக்கப் பெற்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் தலைப்பில் மரபுக் கவிதைகளையும், "இனி ஒரு விதி செய்வோம்" எனும் தலைப்பில் புதுக் கவிதைகளையும், 48 வரிகளில் அமையுமாறு அழுதி அனுப்ப வேண்டுமென மாணவர்கள் அறிவிக்கப்பெற்றனர்.

மரபுக் கவிதையின் கீழ் 30 கவிதைகளும்,

## புதுப்பொலிவு பெறும் தஞ்சாவூர்க் கலைக்கூடம்

தஞ்சாவூரில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சை அரண்மனை வளாகத்தில் உள்ள கலைக் கூடத்தை அழகுபடுத்த தமிழக அரசு ரூ.12 இலட்சத்து 54 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கலைக்கூடம் அழகுபடுத்தப்படும் பணிகள் தற்பொழுது விரைவாகச் செயல்பட்டு வருகின்றன.

இதில் கலைக்கூடத்தில் உள்ள செப்புத் திருமேனிகளுக்குக் கண்ணாடிக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்க ரூ.3 இலட்சத்து 2 ஆயிரமும், கலைக்கூடம் மற்றும் சங்கீத மகால் கட்டடங்களில் புதிய மின் விளக்கு அமைக்க ரூ.3 இலட்சத்து 21 ஆயிரமும், நாயக்கர் தர்பார் ஹாலில் உள்ள ஓவியச் சிற்பங்களை அழகுபடுத்த ரூ.3 இலட்சத்து 81 ஆயிரமும், கலைக்கூடம் மற்றும் சங்கீத மகால் கட்டடத்திற்குப் புதிய வண்ணம் தீட்ட ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களும், வெளிநாட்டவரும் தஞ்சைக் கலைக்கூடத்தைப் பார்த்து மகிழும் வகையில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை மாமல்லபுரம் கலைப் பயிற்சிக் கல்லூரி வல்லுநர்கள் செய்து வருகிறார்கள்.

மேலும், கலைக்கூடக் காட்சியரங்கில் தஞ்சாவூர் பெரியகோவில், நாகூர் தர்கா, வேளாங்கன்னி மாதாகோவில் ஆகியவை நெட்டியால் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்டு பிரம்மாண்ட அளவில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது.

புதுக்கவிதையின் கீழ் 129 கவிதைகளும் வரப்பெற்றன.

அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால் பட்டியலில் கண்டவாறு ஒவ்வொரு தலைப்பிலும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரியவையாக, மும்மூன்று கவிதைகள் தெரிவு செய்யப்பெற்றன.

இவை அனைத்தும் உலகத் தமிழ் மாநாட்டு மாணவர் மலரில் இடம் பெறவுள்ளன.

**பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் கட்டுரைப் போட்டி**

தமிழகத்தின் பல்கலைக் கழகங்களில் எம்.பில், பிஎச்டி., பயிலும் ஆராய்ச்சி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பெற்றது. இம்மாணவர்கள் கட்டுரை எழுதுவதற்கென 6 பொருண்மைகள் அறிவிக்கப்பெற்றன.

தமிழகத்திலுள்ள கல்லூரிகளிலிருந்தும், புதுவை மாநிலத்திலிருந்தும் 36 கட்டுரைகள் வரப்பெற்றன. ஒவ்வொரு பொருண்மையிலும் மிகச் சிறந்த இரண்டு கட்டுரைகள், அரசு இதற்கென நியமனம் செய்த நடுவர் குழுவால், முதலாம், இரண்டாம் பரிசுக்குரியவையாகத் தெரிவு செய்யப்பெற்றன.

பரிசு பெற்ற கட்டுரைகள் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிடப்படும் மாணவர் மலரில் இடம் பெறவுள்ளன.

**சிறப்பு மலர்**

தஞ்சைத் தரணியில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், பொதுமக்களும் பங்கேற்க வேண்டும், அவர் தம் சிந்தனைகளும், கருத்துக் கருவூலங்களும் அணி செய்ய வேண்டும் என்னும் உயரிய நோக்கில் அரசு சிறப்பு மலரொன்றை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்நோக்கில் பொதுமக்களுக்கான கவிதைப் போட்டி அறிவிக்கப்பெற்றது. மரபுக் கவிதையின் கீழ் "உலகமெலாம் தமிழோசை" என்னும் தலைப்பும், புதுக் கவிதையின் கீழ் இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்னும் தலைப்பும் அளிக்கப்பெற்றன. அத்துடன் கவிதைகள் 48 வரிகளில் அமைய வேண்டுமெனவும் அறிவிக்கப்பெற்றது.

"உலகமெலாம் தமிழோசை" எனும் மரபுக் கவிதைத் தலைப்பில் 400 கவிதைகளும், "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" எனும் புதுக் கவிதைத் தலைப்பில் 609 கவிதைகளும் வரப்பெற்றன. அரசு இதற்கென அமைத்த நடுவர் குழுவால், ஒவ்வொரு தலைப்பிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரியனவாக மும்மூன்று கவிதைகள் தெரிவு செய்யப்பெற்றன.

பரிசு பெற்ற கவிதைகள் அனைத்தும் சிறப்பு மலரில் இடம் பெறவுள்ளன.

அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலாளர் மறறும சிறப்பு மலர்க்குழு உறுப்பினர் செயலர் திரு சா.பா. இளங்கோவன் அவர்கள், மேற்கண்ட போட்டிகளில் பரிசு பெற்றோர் பற்றி அறிவித்துள்ளார். அதன்விவரம் வருமாறு:

## தஞ்சை நகர் கல்லணைக் கால்வாய் அழகுபடுத்தும் திட்டம்

தஞ்சை நகரில் வருகின்ற 1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சை நகரில் செல்லும் கல்லணைக் கால்வாயை அழகுப்படுத்த தமிழ்நாடு அரசால் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை கல்லணைக் கால்வாய் கோட்டத்தால் மேற்காணும் நிதியைக் கொண்டு தஞ்சை நகரில் எல்லைக்குட்பட்ட கல்லணைக் கால்வாயின் கரைகளைச் சுத்தப்படுத்தி படித்துறைகள் சீர் செய்யப்பட்டு அழகுபடுத்தப் பட்டுள்ளன.

படித்துறைகளில் பாதுகாப்பைக் கருதி பாதுகாப்புத் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கரைகளில் தேவையான இடங்களில் கைப்பிடிச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன. கைப்பிடிச்சுவர் மற்றும் கால்வாயின் இடைப்பட்ட பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்க கைப்பிடிச் சுவரின் மேல் முள்வேலி அமைக்கப்பட்டு வருகின்றது. தவிர நகரின் எல்லைக்குள் கரையின் இரு ஓரங்களிலும் தேவையான இடங்களில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, வண்ண விளக்குகளால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.





அலங்கார நுழைவு வாயில்

**பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி முடிவுகள்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையிலும், மாணவர்களையும், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் ஈடுபடுத்தி அவர்களிடமுள்ள பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையிலும் பள்ளி மாணவர்களுக்கு ஓவியம், பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பெற்றன.

பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் 'இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி' என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்றன. பள்ளிக்கல்வி இயக்குநரும், கல்லூரிக் கல்வி இயக்குநரும் இப்பேச்சுப் போட்டிகளை இரண்டாம் சுற்று வரையில் நடத்தி முறையே பள்ளி மாணவர்கள் ஐவரையும் இறுதிச் சுற்றுப் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வதற்காகத் தெரிவு செய்து அனுப்பினார்கள்.

**போட்டி நடுவர்கள்**

பேச்சுப் போட்டியின் இறுதிச் சுற்று 21.11.94 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், சென்னை இராணி மேரி கல்லூரியின் பொன் விழாக் கலையரங்கில் நடைபெற்றது. இராணிமேரி கல்லூரி முதல்வர் அனைவரையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தனி அலுவலர், பேச்சுப்போட்டியின் விதிமுறைகளை விளக்கி உரை நிகழ்த்தினார்.

இறுதிச் சுற்றுப் பேச்சுப் போட்டிக்கு,

1. திரு கிருஸ்துதாஸ்காந்தி, இ.ஆ.ப.,
2. கவிஞர் புலமைப்பித்தன்
3. முனைவர் தி. இராச கோபாலன்
4. முனைவர் சாரதா நம்பி ஆரூரன்

ஆகியோர் நடுவர்களாக அமர்ந்தனர்.

இறுதிச்சுற்றுப் பேச்சுப் போட்டியில் கீழ்க்குறிப்பிட்ட மாணவர்கள் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். போட்டி முடிவுகளைக் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் அறிவித்தார்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் குறித்து தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் திரு சா.பா. இளங்கோவன் அவர்கள் தெரிவித்ததாவது:

**பள்ளி மாணவர்கள்**

**முதற் பரிசு**

**செல்வன் கே. கமலக்கண்ணன்**
அரசு ஆண்கள் மேநிலைப் பள்ளி, திருச்செங்கோடு.

இரண்டாம் பரிசு

செல்வி சுல்தானா தில்ரஷ்
விஜய வித்தியாலயா
மேநிலைப்பள்ளி
தருமபுரி

மூன்றாம் பரிசு

செல்வன் எஸ். சிராஜ்தீன்
தேசிய மேநிலைப்பள்ளி,
மன்னார்குடி

கல்லூரி மாணவர்கள்

முதற் பரிசு

செல்வன் கே. கற்பகராஜ்
குற்றவியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

இரண்டாம் பரிசு

செல்வி கற்பகம்
எப்பி.சி. மகாலட்சுமி கல்லூரி,
தூத்துக்குடி

மூன்றாம் பரிசு

செல்வன் எம். சத்தியன்
அரசினர் கலைக் கல்லூரி,
வேலூர்.

சிறப்பு மலர் கவிதைப் போட்டி

மரபுக் கவிதைகள் (பொதுமக்கள்)

'உலகமெலாம் தமிழோசை' என்ற தலைப்பில் கவிதை எழுதிப் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

முதற் பரிசு

கவிராஜ யோகி.
கபிலவாணன், எம்.ஏ.
சென்னை - 600 021

இரண்டாம் பரிசு

கவிஞர் இளமாறன்
புதுக்கோட்டை - 622 001

மூன்றாம் பரிசு

திரு வீ.ம. இளங்கோவன்
இராமநாதபுரம் - 623 535

புதுக் கவிதை (பொதுமக்கள்)

'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்னும் தலைப்பில் எழுதிப் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

முதற் பரிசு

கவிஞர் இலா.
மோகனபரியன்
மதுரை - 10

இரண்டாம் பரிசு

திரு வாசவன்
தஞ்சாவூர் - 613 001

மூன்றாம் பரிசு

கவிமாமணி ஆரூர்
தமிழ்நாடன்
திருவாரூர்

மாணவர் மலர் கவிதைப் போட்டி

மரபுக் கவிதை

பரிசு பெற்ற மாணவர்கள்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னுந் தலைப்பில் எழுதியதில் பரிசு பெற்றோர்:

முதற் பரிசு

தி. தமிழ்க்கொடி, பி.லிட்.,
மயிலம்

இரண்டாம் பரிசு

ஆ. காமராசு
திருச்செங்கோடு - 637 207

மூன்றாம் பரிசு

தி. பண்பழகி
நாகப்பட்டினம் - 611 001

மாணவர் மலர் கவிதைப் போட்டி

புதுக்கவிதை

## தஞ்சாவூருக்குக் கூடுதலான மின்சாரம்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சைக்குத் தேவைப்படும் அளவிற்குக் கூடுதலாக மின்சாரம் கிடைக்க அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மின்சாரம் வாரியம் செய்து வருகிறது. மாநாட்டின்போது தஞ்சைக்குத் தேவைப்படும் கூடுதல் மின்சாரப் பளுவினைத் தாங்கும் விதத்தில் இங்கு செயல்பட்டு வரும் உயர் அழுத்த மின் மாற்றிகள் மாற்றப்பட்டு வருகின்றன.

உலகத் தமிழ் மாநாடு நடைபெறவுள்ள தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம், குடியிருப்புப் பகுதிகளில் இரண்டு கிலோமீட்டர், குறைந்த அழுத்த மின்பாதை மாற்றப்பட்டு, கூடுதல் திறன் கொண்ட மின்பாதை 19 கிலோமீட்டர் மற்றும் ஏழு கிலோமீட்டர் தூரத்திலும் புதிய மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின்பாதையில் தடை ஏற்படும்போது மாற்று மின்பாதைகளில் மின்சாரம் வழங்க உயரழுத்தக் காற்றுத் தடைத்திறப்பான்கள் அமைக்கப்படுகின்றன. மேலும் 15 கிலோமீட்டர் தூரம் மின் அழுத்தக் குறைவுப் பாதை மாற்றப்பட்டுள்ளது.

தஞ்சை புறநகர்ச் சாலையில் புதிய பேருந்து நிலையம் அமையும் இடம் வரையில் புதிய மின்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைத் தெரு விளக்குகள் பராமரிப்புக் குறையற்ற மாவட்டமென அறிவிக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.




அலங்கார நுழைவு வாயில்

பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

[illegible] பரிசு பெற்றோர் விவரம்

முதற் பரிசு

செ. முத்தரசப்பன்
மதுரை - 1

இரண்டாம் பரிசு

ந. சுந்தரமூர்த்தி
மயிலம்

மூன்றாம் பரிசு

கோ. மணிவண்ணன்
வேலூர் - 632 006

மாணவர் மலர் ஓவியப்போட்டி

ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற பள்ளி மாணவர்கள் விவரம்:

முதற் பரிசு

ஜெ. உம்முசலீனா பேகம்
தஞ்சாவூர்

இரண்டாம் பரிசு

ச. சித்தார்த்தன்
[illegible] - 621 211

மூன்றாம் பரிசு

க. இராமஜெயம்
[illegible]

மாணவர் மலர் ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற கல்லூரி மாணவர்கள் விவரம்:

முதற் பரிசு

பா. பாரிவள்ளல்
[illegible]

இரண்டாம் பரிசு

ஆர். செந்தில் குமார்
கும்பகோணம் - 2

மூன்றாம் பரிசு

ஜே. சத்தியநாராயணன்
கும்பகோணம் - 2

மாணவர் மலர் கட்டுரைப் போட்டி

பரிசு பெற்ற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் விவரம்:

தமிழிலக்கியத்தில் வரலாற்றுக்கூறுகள்

முதற் பரிசு

ஆ. மேரி இமாகுலேட்
தஞ்சாவூர் - 613 007

இரண்டாம் பரிசு
இல்லை

தமிழிலக்கியத்தில் சமயப்பொறை

முதற் பரிசு

மா.கு. விநாயகம்
தருமபுரம் - 669 001

இரண்டாம் பரிசு

அ. செந்தில்குமரன்
மைலம்

நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் சமுதாய நிலை

முதற் பரிசு

எஸ். செல்வசுந்தரி
மதுரை

தமிழரசு

**1.1.1995 இதழ் அதிகப் பக்கங்களுடன்**

**உலகத் தமிழ் மாநாட்டுச்
சிறப்பிதழாக மலர்கின்றது!**

★எண்ணம் கவரும் எழில்மிகு கட்டுரைகள்

★கண்ணைக் கவரும் வண்ணப் படங்கள்

★கருத்துக்கு விருந்தூட்டும் கவின்மிகு கவிதைகள்

★பக்கத்துக்குப் பக்கம் தமிழ் மணம் கமழும் இலக்கியத் துளிகள்

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க


இரண்டாம் பரிசு

இல்லை

**பழமொழிகள் காட்டும் பண்பாடு**

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு

இல்லை

**திரைப்படப் பாடல்களில் இலக்கியப்பாங்கு**

முதற் பரிசு

ஆ. கோதண்டபாணி
மயிலம்

இரண்டாம் பரிசு

ஆர். ஸ்ரீதர்
திண்டுக்கல்

**புதுக்கவிதைகளில் சமுதாய நோக்கு**

முதற் பரிசு

ச. மகாதேவன்
பாளையங்கோட்டை

இரண்டாம் பரிசு

இல்லை

**தமிழில் 'ஐக்கூ' கவிதைகள்**

முதற் பரிசு

மு. சண்முகராசன்
கும்பகோணம்

இரண்டாம் பரிசு

இல்லை

**தமிழும் கலைகளும்**

முதற் பரிசு

க. தமிழ்ச்செல்வன்
தருமபுரம்

இரண்டாம் பரிசு

இல்லை

**இன்றைய உரைநடை வளர்ச்சி**

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு



இல்லை

**இன்றைய நாடக வளர்ச்சி**

முதற் பரிசு

பா. அருண்குமார்
கடலூர்

இரண்டாம் பரிசு

இல்லை

**மாணவர் மலர்**

**ஆராய்ச்சி மாணவர்கள் கட்டுரைப் போட்டி**

**பரிசு பெற்றோர் விவரம்**

**"தமிழும் அறிவியலும்"**

முதற் பரிசு
சௌ. கீதா
காந்திகிராமம் - 624 302

இரண்டாம் பரிசு

ம. கண்ணம்மாள்
தஞ்சாவூர் - 613 204

**"தமிழ்ப் பயிற்று மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும்"**

முதற் பரிசு

சே. செந்தமிழ்ப்பாவை
காரைக்குடி

இரண்டாம் பரிசு

அ. மாதவி
புதுச்சேரி - 14

**"இக்காலப் புதினங்கள் கவிதைகள், நாடகங்களில் (ஏதேனும் ஒன்றில்) உணர்த்தப்பெறும் சமுதாயச் சிந்தனைகள்"**

முதற் பரிசு

இராம. இரவிச்சந்திரன்
திருச்சி - 620 019

இரண்டாம் பரிசு

இரா. பெ. 'செயலெட்சுமி
தஞ்சாவூர்

**"ஆன்மீகமும் அறிவியலும்"**

முதற் பரிசு
இ. சேனாவரையன்
கோவை - 46

'வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராகப்பள்ளிப்பிள்ளைகள் இருக்கிறார்கள்.



இரண்டாம் பரிசு

இல்லை

**"துறைதோறும் தமிழ் வளர்ப்போம்"**

முதற் பரிசு

இல்லை

இரண்டாம் பரிசு

இல்லை

**"தமிழிலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்"**

முதற் பரிசு

த. இளஞ்செழியன்
தஞ்சாவூர் - 613 005

இரண்டாம் பரிசு
ந. தேவி
சென்னை - 5

சிறப்பு மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற மரபுக் கவிதைகள் (பொதுமக்கள்) விவரம்:

**"உலகமெலாம் தமிழோசை"**

கவிக்கோ. ஞானச்செல்வன், எம்.ஏ., எம்.எட்.,
திருவாரூர் - 610 002

நல்லாசிரியர்
மு.கோவிந்தராசன், எம்.ஏ.,பி.எட்.,
பாலக்கோடு - 636 808

திரு சிவகுமாரன்
ஆலங்குடி - 622 301

கவிஞர் கே.ஏ. தியாகன்
திருவாரூர் - 610 002

திரு சிலம்பூர்க்கிழான் (செயராமன்)
சிலம்பூர் அஞ்சல் நிலையம் - 608 901

திரு இரா. தனிக்கொடி
புதுக்கோட்டை - 622 001

திரு இரா. பொற்கைப் பாண்டியன்
மதுரை - 625 011

**"உலகமெலாம் தமிழோசை"**

திரு செவ்வேள்
புதுச்சேரி - 605 003

கவிஞர் இதயசந்திரன்
விக்கிரமசிங்கபுரம் - 627 425

செல்வி மங்கையர்க்கரசி
கோபாலசமுத்திரம்.

சிறப்பு மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற புதுக் கவிதைகள் (பொதுமக்கள்) விவரம்:

**"இன்று புதிதாய்ப் பிறந்தோம்"**

திரு நா.இர. தென்னன்
திருப்பத்தூர் - 635 601

திரு சூரிய மித்திரன்
காஞ்சிபுரம் - 631 501

திரு ஆர். சுக்கிரன்
சட்டக்காரன்பட்டி

திரு பாஸ்கர தேவேந்திர பூபதி
குபேரபட்டினம், பழனி.

திரு எஸ். அமலதாஸ் (தஞ்சை அமலன்)
தஞ்சாவூர் - 613 006

**"இன்று புதியதாய்ப் பிறந்தோம்"**

திரு அன்னம் பாலன் (மா.வே. பாலசுப்பிரமணியன்)
கடையநல்லூர்

புலவர் உதயை மு.வீரையன்,எம்.ஏ.,
சென்னை - 600 005

திரு செ. சத்யானந்தன்
சாத்தூர் - 626 203

திருமதி சுசீலா கோவிந்தராஜ், பி.எஸ்ஸி.,
காஜாமலை

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**

தெரிவு செய்யப்பெற்ற மரபுக் கவிதைகள் (மாணவர்கள்) விவரம்:

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

**மு. அம்பிகா**
மணப்பாறை - 621 306

**மு. இளங்கோவன்**
திருச்சிராப்பள்ளி - 620 024

**தி. திருநாவுக்கரசு**
தஞ்சாவூர் - 613 005

**க. ஹேமந்தகுமார்**
சேலம் - 8

**மு. சுரேசு**
தஞ்சாவூர்

**மாணவர் மலர் கவிதைப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற புதுக் கவிதைகள் (மாணவர்கள்) விவரம்:

**"இனி ஒரு விதி செய்வோம்"**

**என்.கே. குமரேசன் ராஜா**
கடலூர்

**இரா. சுப்பிரமணி, பி.ஏ.,**
சேலம் - 7

**ச. குமரேசன்**
ஒரத்தநாடு

**ச. புகழேந்தி**
மதுரை - 625 001

**செல்வி வீ. விஜயலட்சுமி**
ஒரத்தநாடு

**ரெ. சுப்பிரமணியன்**
பண்டி

**எம். முருககுமார்**
பொள்ளாச்சி

**செல்வி த. இரமணி தேவி,**
மதுரை - 625 021

**செல்வி பி. பிரதிமா**
சென்னை - 7

**சி. மருதுபாண்டியன்**
அருப்புக்கோட்டை

**மாணவர் மலர் ஓவியப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற பள்ளி மாணவர்களின் ஓவியங்கள் விவரம்:

**சி.எஸ். இரவிக்குமார்**
புதுக்கோட்டை - 622 001

**எஸ். லாவண்யா**
கும்பகோணம்

**எஸ். பாலாஜி**
மதுரை - 1

**ஜெ. ஜோசப் செல்வராஜா**
கோவில்பட்டி

**சி. ஹெலினா சாந்தகுமாரி**
தஞ்சாவூர்

**கே. உமாதேவி**
சேலூர்

**ஆர். இராதா**
தஞ்சாவூர்

**எம். இராமேஸ்வரன்**
மதுகூடிப்பட்டு

**ஆர். மோகன்**
பவானி - 638 302

**மீ. சண்முக கணபதி**
வில்லுக்குறி

**அனில் லயோனல்**
நாரத்

**மா. வினோத்**
ஏழாயிரம்பண்ணை

**மாணவர் மலர் ஓவியப் போட்டி**

மாணவர் மலரில் வெளியிடத் தெரிவு செய்யப்பெற்ற கல்லூரி மாணவர்களின் ஓவியங்கள் விவரம்:

**ஜெ. ஞானகணபதி**
புதுச்சேரி

**எம். ஆரோக்கியராஜ்**
கும்பகோணம்

**E. சக்திவேல்**
புதுச்சேரி

**விஜயபரமேஸ்வரன்**
மணப்பாறை

**வெ. செந்தில்குமார்**
மதுரை - 9

**வி. வெங்கட்ராமன்**
சிவகங்கை

**செ. சரவணானந்தன்**
பொள்ளாச்சி

**கு. எம். லதாராணி**
பாளையங்கோட்டை

**க. உதயகுமார்**
கோவை

**எம். அறிவழகன்**
கும்பகோணம்

**. செங்கோட்டுவேல்**
திருச்செங்கோடு

**பி. ஸ்ரீவெங்கடேஸ்வரன்**
பொள்ளாச்சி

**கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புக்கிடைக்கச் செய்யவேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் அறிவுக் கண்களைத் திறந்துவைக்கிறார்கள்.**

மலரிடம் மங்கையர்க்கும் தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகின்றது



# தமிழ் இலக்கியங்களில் உலகச் சிந்தனைகள்

**டாக்டர் இரா. செல்வக்கணபதி**
முதல்வர்
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி
தருமபுரம், மயிலாடுதுறை

**த**மிழ் இலக்கியம் படைத்தளித்த பலரும் மனிதநேயம் மிக்கவர்கள். உயிர்க் குலத்தின் பால் அன்பு பூண்டவர்கள். பண்பாட்டுச் செல்வர்கள்: குறுகிய எண்ணங்களுக்குள், தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ளாது, உலக வானில், சிறகடித்துப் பறந்தவர்கள், தொகுத்து உரைப்பதானால் அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் ஒருங்கே நிறைந்த சான்றாண்மைச் செல்வர்கள். அவர்கள் தங்கள் படைப்புகளைத் தமிழ் மொழியில் படைத்தார்கள், ஆனால், தமிழ் பேசும் மக்களுக்காக மட்டும் படைத்தவர்கள் அல்லர்; உலகில் வாழும் மனிதகுலம் அனைத்திற்கும் ஒருசேரப் பயன்படும் கருத்துக்களை எடுத்துரைப்பதிலேயே அவர்கள் நெஞ்சம் தோய்ந்திருந்தது. தான், தன் பெண்டு, தன் பிள்ளை, தன் மொழி, தன் நாடு என்ற சிற்றெல்லைகள் தகர்க்கப்படும்போது, தாமே உலகச் சிந்தனைகள் அரும்பத் தொடங்குகின்றன. உலகச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் ஒன்றல்ல இரண்டல்ல, ஓராயிரத்திற்கு மேலும் உண்டு. அவற்றை விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சும்.

மொழி, இனம், நாடு என்ற பெயரில் உலகம் சிதறுண்டு விடுமோ என்ற அச்சத்தின் விளிம்பில் மனித குலம் நிற்கும் காலம் இது. மொழி வழி ஒருமை, தேசிய ஒருமை, உலக ஒருமை என்ற சிந்தனைகளின் இன்றியமையாமை உணரப்படும் நேரம் இது! இத்தகு நேரத்தில் தமிழ் இலக்கியங்களை முன்னிறுத்தி உலகச் சிந்தனைகளைத் திரட்டி, மனித குலத்திற்கு வழங்குவது பெரிதும் பயன்பாடு உடையது. இன்றுபோல் விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியல் அறிவு நம் முன்னோர்களிடம் நிறைவாக இல்லாதிருக்கலாம். ஆனால், மனிதநேயம் மானுடப் பண்பு. மனித குல ஒருமையில் நம்மினும் அவர்கள் மேம்பட்டிருந்தனர் என்பது மறக்க இயலாதது.

அறிவாவது யாது? இந்த வினாவிற்கு விடை தருவோர் பலர் கல்வியோடு, அறிவை இணைத்தே விடை தருவர். அறிவு, கல்வியால் உருவாக்கப்படுவது அன்று, கல்வி, அறிவைக் கூர் தீட்டி ஒளிவிடச் செய்யும் ஒரு கருவி. அறிவு என்பது, உயிர்க்குணம் எல்லா உயிர்களிடத்திலும் பிறப்பு வகையால் தாமே அமைந்து கிடப்பது. இந்த விளக்கங்களை நினைவில் வைத்துக்கொண்டு உலகப் பொதுமறை படைத்த தமிழ்ச் சான்றோர், திருவள்ளுவரிடம் செல்கிறோம். வினவுகின்றோம், அறிவாவது யாது?

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உலகளாவிய தமிழுக்குத் தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு எடுத்துச் சிறப்பிக்கும் வேளையில், தமிழ் இலக்கியங்களில் காணலாகும் உலகச் சிந்தனைகளைத் தொகுத்து இக்கட்டுரையை ஆசிரியர் வழங்குகின்றார்.**

அறிவு என்பது, அற்றங்காக்கும் கருவி, மனத்தை நன்றின் பால் உய்ப்பது. மெய்ப்பொருள் காணத் துணை நிற்பது. நுண்பொருள் காண உதவவல்லது. நான்கு விளக்கம் கூறிய வள்ளுவர், ஐந்தாவதாக அறிவிற்கு நாம் சற்றும் எதிர்பாராத உலகில் எந்த ஒரு கவிஞரும் சிந்திக்காத புதிய விளக்கம் ஒன்றைத் தருகிறார்.



"உலகில் தழீ இயது ஒட்டம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு"

ஒட்பம் என்ற சொல் அறிவைக் குறிப்பது. எது அறிவு? 'உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுவது அறிவு' 'ஊரோடு ஒத்துவாழ்; 'ஊரோடு பகைக்கின் வேரொடும் கெடும்' என்பன தமிழர் வழங்கும் பழமொழி. உறவொடு ஒத்துப்போதல், ஊரோடு ஒத்துவாழ்தல், நாட்டொடு நட்புச் செய்தல் என்ற எல்லைகளைத் தாண்டி உலகத்தை எல்லாம் நட்பாக்கிக் கொள்ளுதல் அறிவு என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உண்மை தான், நமக்குச் சந்திரமண்டிலத்தில் குடி யேறும் விஞ்ஞான அறிவு உண்டு. ஆனால், அடுத்த வீட்டுக்காரன் நெஞ்சில் இடம் பிடிக்கும் பண்பாட்டு அறிவு உண்டா? இல்லையே! மனித குலத்தை நேசிக்கத் தெரியாத அறிவு அறிவே அல்ல. என்ன இப்படிக் கூறுகிறீர்கள்? நான் எத்தனை ஆண்டு படித்திருக்கிறேன்! எவ்வளவு பட்டம் பெற்றிருக்கிறேன்! எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறேன்! எனக்கா அறிவு இல்லை என்ற கோபம் நமக்கு வருகிறது! வள்ளுவப் பெருந்தகை மேலும் ஆத்திரம் ஊட்டுகின்றார்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்".

எவ்வளவு அழுத்தமான சிந்தனை? உலகத் தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் பல கற்றும் அறிவிலாதார் என்கிறார். இது வள்ளுவர் பெரிதாகப் போற்றும் ஒழுக்கத்தின் இலக்கணம் கூறும் திருக்குறள். உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லார் பல நூல்களையும் கற்றாராயினும் அறிவிலா தவரே என்கின்றது குறள்!

'தமிழ் இலக்கியத்தில் உலகச் சிந்தனை' என்பதை உலகம் பற்றிய பொதுச் சிந்தனை என்றும், உலகத்தார்க்கெல்லாம் பொது வாகிய சிறப்புச் சிந்தனை என்றும் பகுத்து அறியலாம். 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல் உலகம்' எனத் தொல்காப்பியப் பாயிரம் தமிழ் வழங்கும் நிலப்பகுதிக்கு எல்லை வரையறுக்கிறது. தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை தமிழ் இலக்கிய வாதிகளுக்குத் தமிழகம், பாரதம், உலகம் என்ற பாகுபாடு நன்கு தெரிந்தே வந்திருக்கிறது.

"திங்களைப் போற்றுதும் திங்களைப்
போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்
குடைபோன்றுஇவ்
வங்கண் உலகளித்த லான்"

எனத் தமிழகம், பாரதம் இவற்றை உள்ளடக்கிய உலகத்தை இளங்கோவடிகள் குறியிட்டுக் காட்டிப் போற்றுகின்றார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என் வள்ளுவர் உலகுக்கு முதல்வன் ஒருவன் உளன் என பிரமாணப்படுத்துகின்றார்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"

எனத் திருமுருகாற்றுப் படையைத் தொடங்கும் நக்கீரர் உலகத்தை வலமாக ஞாயிறு சுற்றி வருதல் போல் உலகத்தை அடையாளம் காட்டுகிறார்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்"

என்று திருமாலைக் காப்பிய நாயகனாக முன்னிருத்தும் கம்பர் படைத்தலும், காத் தலும், அழித்தலும் ஆகிய முத்தொழில் விளை யாட்டாகச் செய்பவன் எவனோ அவன் தலைவன் என நாம் வாழும் நிலவுலகை இனங்காட்டிப் பேசுகின்றார்.

தமிழ் மக்கள் போற்றி வழிபடும் நடராஜப் பெருமானைத் தெய்வச் சேக்கிழார், பெரிய புராணக் கடவுள் வாழ்த்தில்,

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்"

எனப்பேசி உலகத்து வாழ்வரால் உணரவோ ஓதவோ மாட்டாத பெரும் பொருள் சிவன் எனப் பெருமிதம் கொள்ளுவார்.

நாம் வாழும் இம்மண்ணுலகம் அல்லாத வேறு உலகங்கள் பற்றியும் தமிழ் இலக்கியச் சான்றோர்களுக்குத் தெளிவான கருத்து உண்டு.

"எல்லா உலகமும் ஆனான் கண்டாய்"

என உலகம் பல என்கிறார் நாவுக்கரசர். மேலே பல படிகடந்து மாணிக்கவாசகர் தம் திருவாசகத் திருவண்டப் பகுதியில்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொருகோடியின் மேற்பட விரிந்தன"

என வானவெளியில் நிலைபெற்றிருக்கும் பல்வேறு உலகங்களையும் அவற்றின் பரப்புக் களையும், சைவ ஆகமநெறி நின்று பேசி வியப்பூட்டுகின்றார்.

வள்ளலார், சித்தர்கள் முதலியோர் உலகம் பற்றித் தரும் செய்திகள் மிகப்பல. இவை மேலெழுந்த வாரியான ஒரு மதிப்பீடே அன்றி முழுமை உடையது அன்று, இதனை ஓரளவில் நிறைவித்துக் கொண்டு தமிழ் இலக்கிய வாதிகளின் உலகளாவிய மனித குல நலச் சிந்தனைகளில் நாம் கண்ணோட்டம் செலுத்த லாம். இவை பெரிதும் பயன்பாடு உடையன.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்ற மகாகவி பாரதியின் மதிப்பீடு போற்றத்தக்கது. நரிவெரூஉத் தலையார் என்ற புறநானூற்றுக் கவிஞர் திருவள்ளுவ மாலையில்,

"இன்பம் பொருள் அறம் வீடு என்னும்
இந்நான்கும்
முன்பு அறியச்சொன்ன முதுமொழிநூல்-
மன்பதைகட்கு
உள்ள அரிதென்று அவை வள்ளுவர்
உலகம்
கொள்ள மொழிந்தார் குறள்"

என வள்ளுவர் உலகம் கொள்ள குறள் மொழிந்த உண்மையைப் பறைசாற்றுகின்றார்.

"வள்ளுவன் செய்திருக்குறளை மருவறநன்
குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனு ஆதி ஒரு குலத்திற்கு
ஒருநீதி"

நூலாசிரியர்கள் பலர், ஒரு குலத்திற்கு ஒரு நீதி சொன்னார்கள். ஒரு மொழிக்கு ஒரு இயல்பு கற்பித்தார்கள்; ஆனால், வள்ளு வரோ மனித குலம் அனைத்திற்கும் ஒரே நீதி உரைத்தார் என மகுடம் சூட்டுகின்றார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது. தமிழ ருக்காக மட்டுமா அது எழுதப்பட்டது இல் லையே! தமிழர் மொழி, நாடு, ஊர், அரசு, எல்லை, ஏன் தமிழ் என்ற சொற்கூட வள்ளுவத்தில் இல்லை, உலக மக்களுக்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிந்தித்த ஓர் பேரறிஞரின் சிந்தனைத் தொகுப் பல்லவா திருக்குறள்? நாம் பெருமிதம் கொள்ளலாம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

எவ்வளவு அரிய சிந்தனை, எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அவர்தம் முன் பிறப்பால் வேறுபாடு ஏதும் இல்லை என்று கூறும் துணிவு வள்ளுவருக்கு இருந்திருப்பது கண்டுவியக்கிறோம். அவர் பாடிய காலத் திலேயே நடைமுறைச் சமுதாயத்தில் சாதி, வருணம், இனம் என்ற பேதம் நிலவி இருந் ததைச் சங்க நூல்கள் விளக்குகின்றன. வள்ளுவர் தம் நிகழ்காலச் சமுகத்தோடு ஒத்துப்போகாது, எதிர்நீச்சல் இட்டு உலக நலம் பேண உரிமை முழக்கம் இடுகிறார்.

இல்லற வாழ்வின் நிறைபயன் புகழ், மனிதன் பிறப்பான், இறப்பான், இறவாது உலகில் நிலைபெறுவது எது? புகழ் மட்டுமே என்கிறார் வள்ளுவர். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை அளித்த பேகன், கல்லணை கட்டிய கரிகாலன், தஞ்சைப் பெரியகோவில் கட்டிய இராசராசன் ஆகி யோர் இன்று இல்லை. ஆனால், அவர்கள் புகழில் அழியாது வாழ்கிறார்கள். இதனை,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

எனப் பதிவு செய்கிறார் வள்ளுவர், உலகுக்கு எல்லாம் ஒத்த அரிய சிந்தனை இது. இதனையே புறநானூறு.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என விரித்துரைக்கிறது.

கடைச் சங்க இலக்கியங்களைச் சான்றோர் செய்யுள் என்றும், புலவர்களைச் சங்கச் சான்றோர் என்றும் பிற்கால உரைகாரர்கள் போற்றி நின்றனர். சங்க நூல்களுள் ஒன்றாகிய புறநானூறு வியப்பூட்டும் அறப் பாட்டை இட்டுக் காட்டுவது உலகளாவிய உன்னதச் சிந்தனைகள் அங்கே ஏராளம் உண்டு. தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் இவ்வாறு வாழ்க என வற்புறுத்தி வழி காட்டிய சான்றோர்கள் சங்கப் புலவர்கள். புறநானூறு கூறும் உலகச் சிந்தனைகள் தமிழ் மக்களின் நாகரிக வரலாற்றிற்குப் பொன் வண்ணம் பூசுவன, சிலவற்றைப் பார்க்கலாம்.

குடபுலவியனார் உலகியல் அறிந்த பெருஞ் சான்றோர். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு



அறிவுரை கூற வந்தவர் உலக மன்னவர்களுக்கெல்லாம் பொதுவாய் கடமைப் பண்புகளை அழுத்தம் திருத்தமாகப் பேசுகின்றார். நீர் இல்லாவிடின் உடல்வாடிவிடும். உயிர்க்குலத்திற்கு உணவு தருவோன் உயிர் தருவோன் ஆகின்றான். உணவு எப்படி வரும்? நிலமும் நீரும் சேர்ந்தால் தானே வரும்? எனவே, எவன் ஒருவன் நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்க்கிறானோ அவனே உலகில் உடலையும் உயிரையும் படைத்தவன் ஆகிறான். ஆதலின் குழிந்து கிடக்கும் நிலப்பரப்பில் எல்லாம் தண்ணீரை நிரப்ப உடனே ஏற்பாடு செய் என்கிறார் கவிஞர்.

"நீர் இன்றி அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருக
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளா தார் இவண் தள்ளா தோரே"

அணைக்கட்டுகளும், ஏரிகளும், குளங்களும், பிற நீர் நிலைகளுமே உயிர் வாழ்க்கையின் ஆதாரம் என்ற உயர் சிந்தனை உலகளாவிய பொது நோக்கில் மலர்ந்து நம் நெஞ்சில் நிறைகிறது.

கணியன் பூங்குன்றனாரின் சிந்தனைகளை அறியாத தமிழர் இலர். தமிழ் இலக்கிய உலகச் சிந்தனைத் தடத்தில் அழிக்கவியலாத ஒரு கல் எழுத்து இது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகில் எல்லா ஊரும் எமதே, உலகவர் அனைவரும் என் உறவினரே! என்ற சிந்தனை உன்னதமானது! உலகவர் அனைவரும் நெஞ்சில் பதித்து வைத்துப் போற்ற வேண்டிய அருமைப்பாடு உடைய வரி இது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்ற தெளிவு பட்டறிவால் செழிப்பது.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

நடுநிலை நின்று வாழ்வை உற்று நோக்கித் தெளிந்த சான்றோர்களின் உன்னத மன வெளிப்பாடு இங்கே பதிவாகியுள்ளது. விதிக் கோட்பாட்டை முன்னிறுத்திப் பேசப்பட்ட அரிய பாடல் வரிகள் இவை என்றாலும், இத்தகு தெளிவு அறநெஞ்சத்தார்க்கு அன்றி வாராது என்பதைக் கவிதை உறுதிபடக் கூறுகிறது. கணியன் பூங்குன்றன் உலகத்தார் நெஞ்சில் எல்லாம் சிம்மாசனம் போட்டு அமர்கின்றார். அவரை உருவாக்கிய தமிழ்நாடு உலகவர்முன்





தலை நிமிர்கிறது. இம்மண்ணில் பிறந்த நாமும் இப்பெருமிதத்தில் பங்கேற்று மகிழ்கிறோம்.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற நரிவெரூஉத் தலையாரின் உயரிய சிந்தனையும்,

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்ற கழைதின் யானையாரின் அற்புதச் சிந்தனையும், இவை போல்வன பிறவும் மனித குலத்திற்கெல்லாம் புறநானூறு வழங்கிய அறக்கொடைகளாக அமைகின்றன.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்ற திருமூலர் சிந்தனை சமய உலகம் தந்த அரிய கொடைகளுள் ஒன்று. சைவ வைணவப் பேரிலக்கியம் படைத்த அருளாளர்கள் தத்தம் வழிபடு தெய்வத்தை முன்னிறுத்தி வாழ்த்தினர். ஆயினும் அங்கேயும் உலகச் சிந்தனைகள் பல உண்டு.

அறம்வெல்லும் பாவம்தோற்கும் என்ற சீரிய கருத்தைச் சொல்வதற்காகவே இராமகாதை பாடினார் கம்பர் என்பது அறிஞர் கருத்து. இராமன் அவதரித்த கோசல நாட்டை வருணிக்கும் கம்பர், உலகில் நாடுகள் எவ்வாறு சிறந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தம் கவிதை ஒன்றில் பதிவு செய்கிறார். கோசலம் எவ்வாறு இருந்தது என்பதை நாம் அறியோம். கம்பரும் முற்றாக அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கம்பர் தாம் காண விரும்பிய ஒரு பெருமிதம் மிக்க நாட்டை கோசலத்தின் மீது ஏற்றிப் புனைகின்றார். உலகில் மக்கள் வாழும் எந்த ஒரு நாட்டிலும் மக்களின்பால் வறுமை இருத்தல் கூடாது. உடல் நொய்மை இருத்தல் கூடாது. பொய்மை இருத்தல் கூடாது. அறியாமை இருத்தல் கூடாது என்று கவிதை நெஞ்சம் ஆசைப்படுகிறது. இந்த அவலங்கள் இங்கே இல்லை என்று கோசலத்தைப் படைக்கின்றார்.

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செருநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரையிலாமையால்
வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்"

இத்தகு நாடு உருவாக்க வேண்டும் உலகம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் கவிஞன் கண்ட கனவு உலகளாவிய உயர் சிந்தனைகளில் ஒன்றாகிறது.

கம்பரைத் தொடர்ந்து உலகளாவிய சிந்தனை கொண்ட கவிஞர் மரபு பெரிதும் வளரலாயிற்று. பின் வந்தோரில் மனித நேயத்தையும், உயிர் இரக்கத்தையும் முன்னிறுத்தி உலகளாவிய ஒருமைப்பாடு காண விழைந்தவர் வடலூர் இராமலிங்க அடிகளார். சமயசாதியாகத் தோட்டியில் சமுதாய ஒருமைக்காகச் சிந்தித்த பரிணாம வளர்ச்சியை அவர் கவிதைகளில் காணலாம். அவர் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம் உலகளாவிய மனிதநேயத்தை மையமாகக் கொண்டது.

"பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
பலநெறி இதுவரை பரவியது இதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர்
செறியிருள் அடைந்தனர். ஆதலின் இனி நீ
புன்னெறி தவிர்த்து ஒருபொது நெறியெனும்வான்
புத்தமுதுஅருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக"

என்று இறைவன் தமக்கு ஆணையிட்டதாக அவரே குறிக்கின்றார். உயிர்க்குலம் அனைத்தும் ஒன்று. இறைவன் ஒருவனே! அவன் ஒளி வடிவானவன். அவன் இயல்பு கருணை, புலால் மறுத்து உயிர்க்கொலை தவிர்த்து, ஆண் பெண் பேதமின்றி வாழ முனைவோர் சன்மார்க்கிகள். இவர்களுக்கு மதம் சாதி வருணம் ஏதும் இல்லை என்பன அவர் அருளிய உலக ஒருமைச் சிந்தனைகளின் சாரமாகக் கொள்ளத் தக்கன, என வள்ளலாரே தம் தமிழ் இலக்கியத்தில் உலகச் சிந்தனைகள் குறித்த ஆய்வில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைத் தடத்தில் புரட்சியை விதைத்து பெரும்மாற்றத்தைச் செய்த அமரகவி பாரதியாரைப் புறக்கணித்தல் இயலாது. உலகம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் நன்கு அறியப்பட்ட காலம் அவருடையது. நாடு, மொழி, இனம் என்ற ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் அவர் காலத்தில் மனிதகுலத்தை ஆட்டிப்படைத்தன. உளம் வெதும்பிய பாரதியார் உலகம் பற்றி விரிவான சிந்தனைகள் பலவற்றைத் தம் கவிதைகளில் குறிப்பித்தார்.



"மானுடர் உழாவிடினும் வித்துநடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர்
பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள்
மலிந்திருக்குமன்றே".

"யான் எதற்கும் அஞ்சுகிலேன் மானுடரே நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்பாடுபடல் வேண்டா!
ஊன்உடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்!

ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய பாரதி அவர் தம் ஆதிக்க உணர்வை வெறுத்தாரே அன்றி ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. பகைவனுக்கும் அருளும் பண்பில் ஒரு கவிதை அமைகிறது!

பாரதியாரை அடியொற்றிவந்தவராயினும் உலகச் சிந்தனைகளில் பாவேந்தர் பாரதிதாசன் வேறுபட்டுத் தனி முத்திரைகளைப் பதித்துள்ளார்.

பாவேந்தரின் உலகப் பண்பாடு பிரசித்தமானது. உலகம் உன்னுடையது என்ற அவர் கவிதை உணர்ச்சிமயமானது. உலகில் அஞ்சிக் கிடந்த கோழை மனிதர்களை ஆத்திரத்தோடு தட்டி எழுப்பி வீறுகொள்ள விடிவெள்ளி ஆகிறார்.

"மனிதரில் நீயுமோர் மனிதன் மண்ணன்று
இமைதிற! எழுது நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்
நகைப்பை முழக்கு நடத்து உலகத்தை!"

என்று வீழ்ந்து கிடந்த உலகவரை உலகம் நடந்த நெருக்மென அறைகூவல் விடுகிறார்! மேலும் கூறுவார்.

“உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே ஏறு
ஏறுவிடாமல் ஏறு மேல்மேல்”

ஏறி என்செய்வது என்று திகைத்து நிற்கும் உலகவர்களுக்கு அரிய காட்சிகளைக் காட்டுகின்றார்.

“ஏறி நின்று பாரடா எங்கும்
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
என் குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து
மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைத்துக் கொள்! உனைச் சங்கமம் ஆக்கு!
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!”

மனித குலத்திற்கு எத்துணைப் பெரிய நம்பிக்கை ஊட்டுகின்றார் பாவேந்தர். மேலும் அறிவுறுத்துகின்றார்.

“பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடைமை மக்களுக்குப்பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!

என்று உலகத்தை எல்லாம் ஒன்றாக நடத்தும் உன்னத நெறி பேசி ஒளியூட்டுகின்றார் பாரதிதாசனார். கூர்த்த அவர்தம் ஆவேசக் கவிதைகளில் முடங்கிக் கிடந்த மனித இனம் மேலே நிமிர்ந்து விஸ்வரூபம் கொள்கிறது!

பாவேந்தர் வழியில் வந்த கவிஞர் சுரதாவும், பட்டுக்கோட்டையாரும், கவியரசர் கண்ணதாசனும், உரைநடை இலக்கிய வாதிகளும் விரிவாகவே சிந்தித்தனர்.

உலகம் ஒன்றாக வேண்டும். உயிர்க்குல நேயம் வேண்டும். உலகளாவிய ஒருமை உருவாக வேண்டும் என்பதற்கு மேலாக மானுடக் குறிக்கோள் வேறு இருத்தல் இயலாது. விலங்கும், பறவைகளும் பெறாத வளர்ச்சியையும் உயர்ச்சியையும் மனித குலம் பெற்றிருப்பதற்கு அடிப்படையே கூடி வாழும் சமூகப் பண்பினால்தான். தமிழர்கள் தங்கள் நாகரிகத்தையும், பண்பாட்டையும் போற்றி நிற்பவர்கள். தங்கள் கலாச்சாரங்களில் அழுத்தமான பிடிப்புடையவர்கள். என்றாலும், பிறர் எவராயினும் அவர்கள் நாகரிகங்களுக்கும் மதிப்பளித்து வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர் பண்பினர்.

தேசங்களாலும், இனங்களாலும், மொழியாலும் வேறுபட்டுக் கிடக்கும் உலகவர்களின் அடிப்படைப் பண்புகள் என்றும் மாறாதவை. அவற்றை இனங் கண்டு போற்றி மனிதகுல ஒருமைக்கு நெஞ்சார்ந்த நேசக்கரம் நீட்டிய தமிழ்க் கவிஞர்கள் நமது வணக்கத்துக்குரியவர்கள். இவை தமிழர் செய்த நற்பேற்றின் விளைவுகள்.

தமிழ்க் கவிதைத் தடத்தில் பூத்த உலகச் சிந்தனைகளும், உலகளாவிய மக்கட் சிந்தனைகளும் இங்கே தொகுத்துச் சுட்டப்பட்டன. தமிழ்க் கவிஞர்கள் குறுகிய எல்லைகளுக்கு உள்ளே தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் மொழியையும், நாட்டையும் பெரிதும் நேசித்தனர். இந்த நேசம் இன்னொரு மொழியையோ, நாட்டையோ இகழ இடந்தரவில்லை! தங்கள் சீரிய சிந்தனைகளை உலகவர்க்காகச் சிந்தித்தனர். அவர்களை முன்னிலைப்படுத்திய உரைத்தனர். அன்பால் மனிதகுலம் ஒன்றுபட வேண்டும் என்பதே அவர்கள் பேராசை. இந்த ஆசை நிறைவேறும் நாள் தமிழ்க் கவிஞர்களின் உள்ளம் குளிரும் நாள்! ஒரு குலம் உருவாகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!



திருக்குறள் என்னும் சீரிய நூல் சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறையின்றி, எச்சமயத்தார்க்கும், எக்காலத்திற்கும், எச்சாதியினர்க்கும் எந்நாட்டினர்க்கும் பொதுவாய் உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாகத் திகழுகின்றது.

—டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை



டாக்டர் அம்பேத்கர்
நினைவு நாள்: டிசம்பர் - 6

# அண்ணல் அம்பேத்கர்



முருகப் பெருமான் வள்ளி தெய்வானையோடு உற்சவக் கோலம் பூண்டிருந்தார்.

பல்லக்கில் ஏற, பயபக்தியோடு வந்தார் குருக்கள்.

பல்லக்கின் அருகே விளக்கேந்தி நின்றிருந்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினன் ஒருவன். அந்த இளைஞனின் துணி, காற்றில் அசைந்து குருக்களின்மேல் பட்டுவிட்டது.

அவ்வளவுதான்- எரிமலையானார் குருக்கள். “அடேய் அபிஷ்டு, என்னைத் தொட்டுத் தொலைச்சுட்டியேடா. இன்னொரு தடவையில்லே நான்போய் ஸ்நானம் பண்ணியாகனும்!” என்று கூறித் தன் தலையில் அடித்துக் கொண்டார். எரிச்சலோடு முகஞ்சுளித்து, எரித்து விடுவது போல அவனைப் பார்த்தார்.

பல்லக்கின்மேல் முருகக் கடவுளோடு நின்றிருந்த குறமகள் வள்ளி, அதைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள்! முருகனும் முறுவலித்தான்!

—புகழ்மிக்க எழுத்தாளர் ஒருவரின் கைவண்ணம் இது.

இப்படிக் கடவுளரே கைகொட்டிச் சிரிக்குமளவுக்கு, மனிதன் சாதிமத பேதங்களுக்கு ஆட்பட்டுவிட்டான். இந்த நிலை, மனித சமுதாயத்தையே பீடித்துள்ள பெரும் நோயல்லவா?

உயிருக்கோ உடம்புக்கோ எந்தச் சாதியும் கிடையவே கிடையாது. இந்தக் கருத்தை வலியுறுத்திப் பெருமை கொண்டவர்தான் டாக்டர் அம்பேத்கர்.

ராம்ஜி சக்பால் பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை. ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், *1891*-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்கவதாக ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப்பட்டது, அக்குழந்தைக்கு.

அந்தக் குழந்தைதான் இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர்.

மக்கட் செல்வம் நிறைந்த அக்குடும்பத்தில் ஏனோ அந்தச் செல்வம் அனைத்தும் அப்படியே நிலைத்திருக்கவில்லை. பலராமன், அனந்தராவ் ஆகிய ஆண் பிள்ளைகளும் மஞ்சுளா, துளசி ஆகிய பெண்களும், கடைசியாகப் பிறந்த நம் அம்பேத்கரும் மட்டுமே எஞ்சினார்கள். இந்த ஐவர் போக மற்றவர்களெல்லாம் பல்வேறு கால கட்டங்களில் இளமையிலேயே மாண்டு போனார்கள்.

அம்பேத்கர் இரண்டு வயது சிறுவனாக இருந்தபோது, அவருடைய தந்தை, ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அரிச்சுவடி முதலான பாடங்களைத்

தம் இளைய மகனுக்குக் கற்பிப்பதே அவரது ஓய்வு காலப் பணியாயிற்று.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார்; தேடினார்; கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில்தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர்தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில் அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்துபோவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றி தந்தைக்குத் தகவல் தெரிவித்துவிடுவார்கள். புகைவண்டி நிலையத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப் போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகைவண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

## அறுவைச் சிகிச்சைக்காக

## மாண்புமிகு முதல்வர் உதவி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம், தனது இருதய அறுவைச் சிகிச்சைக்காக நிதி உதவி வழங்க வேண்டும் என திரு என்.எஸ். வர்மா அவர்கள், தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியபோது கேட்டுக் கொண்டார்.**

**அவரது கோரிக்கையை விரைந்து பரிசீலனை செய்யவேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். அதன்படி திரு என்.எஸ். வர்மா அவர்களின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 15,000 ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**சென்னை, வடபழனியைச் சேர்ந்த திருமதி நளினி விஜயராகவன் என்பவர், தான் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாகவும், அந்த அறுவைச் சிகிச்சைக்காக அதிக அளவில் செலவு செய்துள்ளதாகவும் தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்து இருந்தார். அவரது மனுவைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அவருக்கு 20,000 ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.**

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப் போய் நின்றார்கள்.

விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர் வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான் வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப் போய், வசைபாடியபடி வண்டியைவிட்டுக் கீழே குதித்



தான் வண்டியோட்டி. திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. இருந்தாலும் பாதிவழிக்குமேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும்வரை பொறுத்துக் கொண்டிருந்தார் ஆனந்தராவ். பிறகு மெலிதான குரலில், வண்டிக் கூலி- பேசியதைப்போல் இரண்டு பங்கு தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறிவிட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே வண்டி ஓட்டிப் போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்.

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் ஆங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், ஆனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடுமையான நா வறட்சியுடனேயே கடைசிவரை தாகத்தோடு ஊர் போய்ச் சேர்ந்தார்கள், அவர்கள்.

விஷயமறிந்த ராம்ஜி சக்பால், வேதனையால் துடித்துப் போனார். இருந்தாலும், வண்டியோட்டியையோ தாகத்திற்குத் தண்ணீர் தராதவர்களையோ கண்டிக்க அவருக்குத் தைரியம் இல்லை.

ஆனாலும் அவர் ஒரு காரியம் செய்தார். கூடிய சீக்கிரத்தில் தன்னுடைய குடும்பத்தையே சதாராவுக்குக் கொண்டு வந்துவிட்டார். ஓய்வூதியத்தோடு, புதியதாகக் கிடைத்த வேலை மூலம் வந்த வருமானமுமாகச் சேர்ந்து, மகிழ்ச்சிகரமாகக் குடும்பம் நடத்தப் போதுமானதாக இருந்தது.

பெண் பிள்ளைகளான மஞ்சுளாவுக்கும் துளசிக்கும் திருமணம் முடிந்தது.

*1896*-இல், நமது அம்பேத்கருக்கு ஆறு வயதாகும்போது, அவருடைய அன்புத்தாயார் பீமாபாய் இறந்து போனார்.

*1900*-இல், சதாராவில் இருந்த தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். திருமணமாகிவிட்டபோதிலும் சகோதரிகள் இருவரும் கண்ணுங்கருத்துமாகத் தமது தம்பியைப் பார்த்துக் கொண்டார்கள். அத்தை மீராபாய் அரவணைப்பு வேறு.

இதெல்லாமாகச் சேர்ந்து, சிறுவன் அம்பேத்கரைச் சிறப்பாகக் கல்வி பயிலச் செய்தன. தொய்வின்றித் தொடக்கப் பள்ளிக் கல்வி முடிந்தது.

சதாராவில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது.

'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல் வித்து அங்கேதான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது; அனைவரும் சமம் என்ற உணர்வுக்கு அஸ்தி வாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர்களாலும் உதாசீனப்படுத்தப்பட்டதுண்டு. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந்தார்கள்- அதுவும் வெறுந்தரையில். வகுப்பறையில் இருந்த தண்ணீர்ப்பானையில் அவர் தண்ணீர் குடிக்கக் கூடாது; யாராவது தூர நின்று ஊற்றுவார்கள்; இவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற்போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது; சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது.

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படியொரு பேதம் கொண்டிருப்பது தேவை தானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்டுக்கை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால்- அவர் மனநிலை எப்படியிருந்திருக்கும்?

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர்முத்தம் விளையும் என்பதுபோல, சாதி வெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருந்தது உண்டு; இருப்பதும்



**ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம். அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்பட வேண்டும்.**

## கூட்டுறவே நாட்டுயர்வு

பரஸ்பர உதவிக்காக இணையும் கைகள் கூட்டுறவாகப் பரிமளிக்கின்றன. வலிமை அற்றோரை வலிமை உள்ளோர் சுரண்டும் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுகிறது கூட்டுறவு இயக்கம்.

இந்தியக் கூட்டுறவு அமைப்பு, 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு உலகிலேயே மாபெரும் அமைப்பாகத் திகழ்கிறது. இவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 17.51 கோடி நடப்பு முதலீடோ ரூ.76,000 கோடி!

வேளாண் கடனுதவியில் இவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது. 1960-61-இல், குறுகிய, மத்திய, நீண்ட கால வேளாண் கடனுதவித் தொகையாக கூட்டுறவு அமைப்புகள் வழங்கிய தொகை ரூ.21 கோடி. இது, 1992-93-இல் ரூ.6,533 கோடியாக உயர்ந்துள்ளது.

பல்வேறு நிலைகளிலும் அமைப்புகளின் மூலமும் இக்கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாறுள்ள அமைப்புகளில், துவக்க வேளாண் கடன் சங்கங்களின் எண்ணிக்கை 89,000 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 353, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 28 இவை குறுகிய கால கடன் வழங்கு அமைப்புகள், நீண்ட கால கடன் வழங்கு அமைப்பாக 717 துவக்க நிலவள வங்கிகளும், 19 மாநில நிலவள வங்கிகளும் செயல்படுகின்றன.

உண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர் நிலைப் பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நம்முடைய அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் படிப்பே குறியாக இருந் தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.

சதாரா பள்ளியில் அவர் சமஸ் கிருதம் படிக்க முடியாது என்று தடை விதிக்கப்பட்டது. அது தெய்வமொழி என்பதால் அப் படியாம். இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத் கர். ஆனால் வெளியே தனி யாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம் ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறை யில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத்தோடு படித்து வரலா னார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம். அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம் பேத்கர். அந்தத் தெருவிலிருந்த இரண்டொரு சிறுவர்கள் இந்த மழையில் எப்படிப் போவது என்று நின்று விட்டனர். அவர் களிடம் பந்தயம் கட்டிவிட்டு, அந்த அடைமழையிலும்கூட பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார் அம்பேத்கர்.

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டி விட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத் திக் கொள்ளச் செய்தார். இது மட்டுமல்ல; தனக்காக எடுத்து வந்திருந்த சாப்பாட்டை அவருக் கும் தனக்குமாகப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒருநாள் மட்டுமல்ல; பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட் டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத் துடன் நின்றுவிடவில்லை. பீம ராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரை யும் சேர்த்து 'பீமராவ் அம் பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக்கூட வருகைப்பதிவேடு முதலிய ஆவணங்களிலெல்லாம் கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத்கர் என்ற அந்தப் பெயருடையவரே பிற் காலத்தில் இந்தியாவின் சட்டச் சிற்பியாக வரலாற்றில் இடம் பெறப் போகிறார் என்பது அப் போதெல்லாம் அந்த ஆசிரிய ருக்கே தெரிந்திருக்காது!

ஆதிதிராவிடப் பெருமக்கள் தலைநிமிரச் செய்ய அவர் அயராது பட்ட பாட்டுக்குக் காரணம், இளமையில், மேற்கண்டவாறெல்லாம் அம்பேத்கர் சந்திக்க நேர்ந்த துன்ப துயரங்களே ஆகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

–பி.எல். இராசேந்திரன்





## மூதறிஞர் இராஜாஜி

தமிழ்நாட்டில் பிறந்து, அறிவாலும், ஆற்றலாலும், பண்பாலும், இந்திய நாட்டிற்கே பெருமையையும், உயர்வையும் தேடித் தந்த அரசியல் ஞானி மூதறிஞர் இராஜாஜி. 'தமிழ் நாட்டு அறிவு' என்று இவரைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டினார். 'தனது மனச்சாட்சியின் காப்பாளர்' என்று அண்ணல் காந்தியடிகள் போற்றி னார்.

அண்ணல் காந்தியடிகள் தம் சுக போகங்களையும், செல்வம் முதலிய சிறப்புகளையும் தியாகம் செய்து விட்டு, பொதுத் தொண்டிற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்ததைப் போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்களும் தம் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் உதறித் தள்ளி விட்டு, எளிய வாழ்க்கை வாழ்ந்த தோடு, தேச சேவைக்காகவே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித் தார்.

சாதி வேற்றுமைகளையும், சமய வேற்றுமைகளையும் ஒழித்து, சமூகத் தில் ஒற்றுமையையும், சமத்துவத் தையும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தீண்டாமை, மது ஆகிய இரு அரக்கர்களையும் எதிர்த்துப் போராடினார். 'கதர் இயக்கத்தின் தந்தை' என்று போற்றப்படும் வகையில், தமிழ்நாடு கதர் உற்பத்தியில் புகழ் பெற மூலகாரணராக இருந்தார்.

சத்தியம், அகிம்சை என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சுதந்திரப்போரை நடத்திய மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவராக நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார். நடைமுறை வாழ்க்கையில் முழுக்க முழுக்க காந்தியவாதியாக இருந்தார். பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபுராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததோடு, ஆக்கப் பூர்வமான யோசனைகளை நல்கிச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.

அவர் மனச்சாட்சிக்கு எது சரி, எது நியாயம் என்று தோன்றுகிறதோ, அதை யார் எதிர்த்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார். சொந்த வாழ்வில் கண்ட எளிமையையும், சிக்கனத்தையும், பொதுவாழ்விலும் கடைப் பிடித்தார்.

எங்கிருந்தாலும், எத்தகைய உயர்பதவியில் இருந்தாலும், தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும், தமிழ் மக்களின் நன்மைக்காகவும், தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகவும் பாடுபடுவதை இராஜாஜி தம் கடமை யாகக் கருதினார்.

அவர் ஆங்கிலத்தில் பேச வேண் டிய அவசியம் ஏற்பட்டால் ஒழிய, பெரும்பாலும் தமிழிலேயே பேசுவார். எத்தகைய பிரச்சினைகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் நகைச்சுவை ததும்பப் பேசித் தெளிவு படுத்துவார். மாற்றாரும் வியக்கும் வகையில் வாதிடுவார். அவரது சொற் பொழிவு அறிவுக்கு விருந்து.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணி உன்னதமானது. நன்னெறி காட்டிடும் தமிழ் நூல்களைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி இருக்கிறார். இலக்கியத்தைப் பற்றி அவர் கூறும்போது, 'ஒரு புத்தகம் அல்லது சஞ்சிகை திரும்பப் பெற முடியாத சில மணிநேரங்களை உன்னிடமிருந்து அபகரித்துக் கொண்டு விடுகிறது; பதிலுக்கு உனக்கு அது ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும்' என்பார். 'சக்கரவர்த்தி திருமகன்' 'வியாசர் விருந்து' போன்ற நீதிநெறி நூல்களைக் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வு

கருதியே எழுதினார். இவரது சிறு கதைகள், கட்டுரைகள் பெரும்பாலும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் அபிவிருத்தி ஆகிய நிர்மாணத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டவை. திருக்குறளுக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதிய உரை சிறந்த தொண்டாகப் போற்றத்தக்கது.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு, நகராட்சித் தலைவர், காங்கிரஸ் தலைவர், முதலமைச்சர், கவர்னர், மத்திய அரசு அமைச்சர், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்- இப்படிப் பல்வேறு பதவிகளில் நிர்வாகத் திறமையைக் காட்டி 94 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த அறிவுலக மேதை மூதறிஞர் இராஜாஜி நம் உள்ளங்களில் ஒளியாக என்றும் நிறைந்திருப்பார்.


ராஜாஜி பிறந்த இல்லம் (தொரப்பள்ளி)

## நினைவில் இராஜாஜி

1973 - டிசம்பர் 25 அன்று இராஜாஜி நினைவு 20 காசு அஞ்சல் தலையை மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

1975- சென்னை கிண்டி படேல் சாலையில் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜி நினைவாலயம் தமிழக அரசால் கட்டப்பட்டு, 5.5.1975 அன்று திறக்கப்பட்டது. இராஜாஜி வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான படங்களும், இராஜாஜி பற்றிய நூல்களும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் நூலகக் கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



★ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

★ நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

★ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

-மூதறிஞர் இராஜாஜி

## இராஜாஜி நினைவு இல்லம்

1978-தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளியில் இராஜாஜி பிறந்த வீட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசுடைமையாக்கி, 10-12-1978 அன்று நினைவு இல்லமாக மாற்றினார். இராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப் படங்கள் அங்கு நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

அதே நாளில் இராஜாஜி நினைவு 25 காசு அஞ்சல் தலையையும் மைய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.



சென்னை உயர்நீதிமன்றத்துக் கருகில் இராஜாஜி சிலை 24.12.78 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்கரைச் சாலைக்கு இராஜாஜி சாலை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் இராஜாஜி முழு உருவப்படம் அணி செய்கிறது.



# முயற்சி இருந்தால் முன்னேறலாம்!

அந்த மரத்தடியில் தையற்காரர் ஒருவர் துணி தைத்துக் கொண்டிருந்தார்.

பக்கத்துக் குடியிருப்பில் உள்ளவர்கள், கிழிந்த துணிகளைக் கொண்டுவந்து அவரிடம் தைக்கக் கொடுப்பார்கள். சில சமயங்களில் புதுத்துணிகளையும் தருவார்கள்.

தையற்காரருக்கு ஓரளவு வருமானம் வந்தது, என்றாலும் அது அவருக்குப் போதவில்லை. என்ன செய்வதென்று யோசித்தார். அவர் வீட்டுப் பக்கத்தில், மண்பாண்டம் செய்பவர்கள் இருந்தார்கள். அவர்களை அவருக்கு நன்றாகத் தெரியும். அவர்களில் ஒருவர், தையற்காரரிடம், “நீ..., தான்.. கஷ்டப்படுகிறாயே, சில மண்பாண்டங்களையும் அந்த மரத்தடியில் வைத்து விற்கலாமே!” என்று யோசனை கூறினார். தையற்காரருக்கு அது சரி என்று பட்டது.

ஒரு நாள் அந்த மரத்தடியில் சட்டி, பானை, பூந்தொட்டிகள் என்று மண்பாண்டங்கள் சில காணப்பட்டன.

ஒரு பக்கம் தையல் வேலை நடந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் மண்பாண்டங்கள் விற்பனையாயின. இப்போது தையற்காரருக்கு நல்ல வருமானம் கிடைத்தது. அதுவும் மண்பாண்டங்கள் மூலமாகவே அதிக வருமானம் கிடைத்தது.

தையற்காரருக்கு ஒரு யோசனை வந்தது. ‘தையல் வேலையை விட்டுவிட்டு மண்பாண்டங்களையே விற்பனை செய்தால் என்ன?’ என்பதே அது.

உடனே தையற்காரர், தன்னுடைய தையல் இயந்திரத்தை விற்று, நிறைய மண்பாண்டங்களை வாங்கினார். அவற்றை மரத்தடியிலே கொண்டு வந்து குவித்தார். போவோர் வருவோர் அவற்றை வாங்கிச் சென்றனர். வியாபாரம் பெருகியது. என்றாலும் தையற்காரருக்கு ஆசை விடவில்லை. மண்பாண்டங்களோடு வேறு ஏதாவது ஒரு பொருளையும் சேர்த்து விற்பனை செய்ய வேண்டும் என்று எண்ணினார். அதன் விளைவு?

ஒரு நாள் அந்த இடத்தில் அழகிய ரப்பர் செருப்புகள் காணப்பட்டன. பல வண்ணங்களில் ஆண், பெண், குழந்தைகளுக்கான அழகிய செருப்புகள் - அதாவது காலணிகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அத்தோடு வழக்கம் போல மண்பாண்டங்களும் இருந்தன.

மண்பாண்டங்களை விட காலணிகள் அதிக அளவில் விற்பனை ஆயின. தையற்காரருக்கு ஆசை இன்னும் அதிகமாகியது. காலணியோடு வேறு ஏதாவது ஒரு பொருளையும் சேர்த்து விற்றால் இரட்டிப்பு வருமானம் கிடைக்குமல்லவா? என்று பழையபடி எண்ணினார்.

ஒரு நாள் அந்த இடத்தில், காலணிகளோடு ரெடிமேட் சட்டைகள் காட்சியளித்தன. சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கென்று விதவிதமான சட்டைகள் குவிக்கப் பட்டு இருந்தன. சட்டைகள் மூன்று ரூபாய்க்கும், ஐந்து ரூபாய்க்கும் கிடைத்தன. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் அவை இருந்தன. இப்போது அங்கு காலணிகள், சட்டைகள் மட்டுமே இருந்தன. சட்டி பானைகள் இல்லை. சட்டைகள் பெருமளவில் விற்பனையாயின. தையற்காரருக்கு கை நிறையக் காசு கிடைத்தது. என்றாலும் ஆசை யாரை விட்டது?



இன்னும் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், சட்டை வாங்கிச் சென்ற ஒருவர் கோபத்துடன் வந்து, “யோவ்!” இது என்னய்யா? கிழிந்த சட்டையைக் கொடுத்து ஏமாத்திட்டியே......” என்று அந்தப் புதிய சட்டையைப் பிரித்துக் காட்டினார்.

அதற்குத் தையற்காரன் சமாதானம் சொல்வதற்குள், இன்னொருவர், சைக்கிளில் வந்து, “யோவ்! ராத்திரியிலே கண்ணு தெரியாதுன்னு தையல் பிரிஞ்ச சட்டையை என் தலையிலே கட்டிட்டியா?” என்று கத்த ஆரம்பித்தார். அதற்குள் தெருவில் போவோர் வருவோர் கூட்டமாய்க்கூட ஆரம்பித்து விட்டார்கள். அப்போது ஒரு அம்மா தன் குழந்தையுடன் அங்கே வந்தார். “ஏய்யா! இது கவுனாய்யா.. போட்டதும் கிழிஞ்சு போச்சே!” என்று கத்தினார்.

தையற்காரருக்குத் தலையே சுற்றியது.

“இந்நேரம் தையல் மிஷின் இருந்திருந்தா, உங்க சட்டையையெல்லாம் இப்பவே தைச்சித் தாரேன்னு சமாளிச்சிருந்திருக்கலாமே.. புத்தி இல்லாம அந்தத் தையல் மிஷினையும் வித்துட்டேனே. அதிக ஆசை அதிக நஷ்டமுன்னு இப்பத்தானே புரியுது...” என்று தையற்காரர் தலையில் கைவைத்துக் கொண்டு ஏங்கினான்.

எந்தத் தொழிலாக இருந்தால் என்ன? அதைக் கொண்டே முன்னேறலாமே! விடாமுயற்சி, கடின உழைப்பு இருந்தால் வாழ்க்கையில் எவரும் முன்னேறலாம். ஆசை இருக்கலாம்; தப்பில்லை; பேராசைதான் கூடாது. பேராசை பெரு நஷ்டம் அல்லவா?

பி.வி. கிரி

# மாணவர் பக்கம்




- பாவலர் இரா.சுப்பிரமணியன்

அழகாய் நூல்கள் அடுக்கியிருக்கும்
அமர்ந்து படிக்க இடமிருக்கும்
பல்துறை நூல்கள் பலவிருக்கும்
படிப்பவர் கூட்டம் மிகுந்திருக்கும்!
நாட்டின் நிலைமை நாமறிய
நாளிதழ் அங்கு வந்திருக்கும்
கிழமை மாத இதழுண்டு
கேட்டால் கொடுக்க ஆளுண்டு!
நூலகம் நல்ல நண்பன்தான்
நுணுகிப் படிப்பவர்க் கின்பம்தான்
உயர்நிலை அளிக்கும் நூலகமே
ஒளிபெறும் அதனால் நம்மகமே!

# அறிவுச் சுடர்

சர். சி.வி. ராமன் கண்டு பிடித்தது -
ராமன் விளைவு.

ஒரு குதிரைத் திறன் என்பது -
746 வாட்ஸ்.

சாணக்கியர் எழுதிய நூல் எது?
அர்த்தசாஸ்திரம்.

முந்திரி அதிகமாக விளையும் மாநிலம் -
கேரளா.

முதல் உலகமகா யுத்தம் துவங்கிய ஆண்டு -
1914.

புகையிலை அதிகமாக விளையும் மாநிலம் எது?
ஆந்திரா.

'கலிங்கத்துப்பரணி' இயற்றியவர் -
ஜயங்கொண்டார்.

உலகின் மிகப் பெரிய தீவு -
கிரீன்லாந்து.



நெருப்பணைக்கும் வாயு -
கார்பன்-டை ஆக்ஸைடு.

இந்தியாவின் தேசிய மிருகம் -
புலி.

இந்தியாவின் தேசியப் பறவை
- மயில்.

குஜராத்தின் தலைநகரம் -
காந்திநகர்.

பரிணாமக் கொள்கையை உருவாக்கியவர் - டார்வின்.

மிகப் பெரிய பாலூட்டி எது?
திமிங்கிலம்.

மிக மெதுவாகச் செல்லும் பிராணி - நத்தை.

இந்தியாவில் முதல் திரைப் படத்தைத் தயாரித்தவர் -
சாந்தாராம்.





அதிக மக்கள் தொகை உள்ள நாடு - சீனா.

தமிழகத்தின் அணுமின் நிலையம் - கல்பாக்கம்.

மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலம் -
- சிக்கிம்.

கல்லணை கட்டியது யார்?
கரிகால்சோழன்.

மிகப் பெரிய சமுத்திரம் எது?
பசிபிக் மகா சமுத்திரம்.

பீகாரின் தலைநகரம் எது?
பாட்னா.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய பட்டு

தூய சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





